**தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்** சென்னை – 600 097

***இளங்கலை கல்வியியல் (பி.எட்.) முதலாம் ஆண்டு***

*2016 – 2017*

**பாடம் 7(அ) தமிழ் கற்பித்தல் (பகுதி-1 கற்பிக்கும் முறைகள்)**

**பாடங்களைத் தயாரித்து வழங்குவோர்**

அலகு 1 தமிழ் கற்பித்தலின் நோக்கங்களும் குறிக்கோள்களும்

***முனைவர். ஆ.இராஜேஸ்வரி**, உதவிப்பேராசிரியர், கலைத்திட்ட வரைவு மற்றும் மதிப்பீட்டுத்துறை*

அலகு 2 கற்பித்தலுக்கான திட்டமிடல்

***முனைவர். ஆ.இராஜேஸ்வரி**, உதவிப்பேராசிரியர், கலைத்திட்ட வரைவு மற்றும் மதிப்பீட்டுத்துறை*

அலகு 3 கற்பித்தல் திறன்களில் பயிற்சி பெறுதல்

***முனைவர். கு.விஜயா,** உதவிப்பேராசிரியர், கலைத்திட்ட வரைவு மற்றும் மதிப்பீட்டுத்துறை*

அலகு 4 மொழித்திறன்களைக் கற்பித்தலும் மதிப்பிடுதலும்

***முனைவர். கு.விஜயா,** உதவிப்பேராசிரியர், கலைத்திட்ட வரைவு மற்றும் மதிப்பீட்டுத்துறை*

அலகு 5 கற்பிக்கும் முறைகள்

***முனைவர்.கு.ரதீஸ்வரி,** உதவிப்பேராசிரியர், மதிப்பீட்டுக்கல்வித்துறை*

அலகு 6 சோதித்தலும் மதிப்பிடலும்

***முனைவர். து.பொ. சரவணன் ,** உதவிப்பேராசிரியர், கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகத் துறை*

---

**தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்,**

**சென்னை.**

Downloaded From
www.nagaicollege.com

# பாடம் -7 (அ) : தமிழ் கற்பித்தல் (பகுதி-1 கற்பிக்கும் முறைகள்)

## அலகு 1 தமிழ் கற்பித்தலின் நோக்கங்களும் குறிக்கோள்களும்

**நோக்கங்கள்:**

இப்பாடம் முடிவுறும் தருவாயில், மாணவ ஆசிரியர்கள்:

1. தமிழ் மொழி கற்பித்தலின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் புரிந்துகொள்வர்.
2. தமிழ் கற்பித்தலின் பொதுக்கோட்பாடுகளை அறிந்துகொள்வர்.
3. பண்பாட்டிற்கும் மொழிக்குமுள்ள தொடர்பினை உணர்ந்து பயன்படுத்துவர்.

**முன்னுரை**

தமிழகத்தில் தமிழ்மொழி பெரும்பான்மையான மக்களின் தாய்மொழியாக விளங்குவதால் அதுவே முதன்மைமொழியாகவும், ஆட்சிமொழியாகவும் பயன்படுத்தி வரும் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் மட்டுமின்றி உலகளாவிய நிலையில் பரந்து நிற்கின்ற தமிழர்கள் தமிழ்மொழியை கற்கின்றனர். தமிழைக் கற்பிப்பதற்குப் புதிய அணுகுமுறைகளும் கணினி போன்ற கருவிகளின் பயன்பாடும் வளர்ந்து பெருகி வருகிறது. மேலும் தற்பொழுது தமிழ் கற்பித்தல் என்பது கல்வியாளர் கவனத்தைப் பெற்று வருகிறது. தமிழுக்கெனத் தனி இணையதளமும் பல்கலைக்கழகமும் இயங்கி வருகிறது. ‘தமிழ் மொழி கற்பித்தல்’ என்பது பண்டைய கற்பித்தல் முறையிலிருந்து மாறுபட்ட இன்றைய காலப்போக்கிற்கேற்ப வளர்ந்து வர வேண்டியதொரு துறையாகும்.

**தமிழ் மொழி கற்பித்தலின் நோக்கங்கள்**

மனிதன் எண்ணங்களைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளியிடவும், அவனின் சிந்தனைத் தாக்கங்களை உணர்வாக படைக்கவும் மொழி பயன்படுகிறது. தனியொருவர் முயற்சியால் கிடைக்கும் படைப்புகள் யாவும் அழியா இடம் பெறுபவை. அவை தாய்மொழியால் மட்டுமே நிலைத்து நிற்கும் ஆற்றலைப் பெறுகின்றன.

சங்க இலக்கியம் தொட்டு இக்கால இலக்கியங்கள் வரை காணப்படும் இலக்கியச் சுவைகளை உணர்ந்து கொள்ளத் தாய்மொழியான தமிழ்மொழி நமக்கு இன்றியமையாத ஒன்றாகும். எண்ணற்ற உயர் இலக்கியங்களில் உள்ள சொற்சுவை, பொருட்சுவை, எழிலுணர்வு, ஒலியினிமை, கருத்து மதிப்பு, நல்லியல்புகள் ஆகியவற்றினைத் தாய்மொழியான தமிழ்மொழி மூலமே சுவைத்துணர முடியும்.



Downloaded From www.nagaicollege.com

ஓர் தமிழரால் தாய்மொழியான தமிழ்மொழி மூலமாகக் கல்வி கற்கும்போது பல்துறை நூல்களையும் கற்றுத் தெளிய வாய்ப்பு ஏற்படுகிறது. மனிதன் சமுதாயத்துடன் இணைந்து வாழ்வதற்குரிய பண்புகளான ஒத்துழைத்தல், விட்டுக்கொடுத்தல், பிறர்மீது மதிப்பு வைத்தல், குழுக்களில் பணிபுரிதல், பெரியோரை மதித்தல், பிறருக்கு தீங்கு செய்யாமை, வேற்றுமை பாராட்டாமை, கூடிவாழ்தல், இனியவை பேசுதல் போன்ற மனித நேய பண்புகளை தாய்மொழியான தமிழ்மொழியின் மூலமே கற்க இயலும். எனவே மொழியின் அடிப்படைத்திறன்களைப் பெறுதல், ஆக்கப் படைப்புகளை உருவாக்குதல், இலக்கியச் சுவையுணர்தல் பண்பாடுள்ள சமுதாய வாழ்க்கைக்கு உதவுதல் போன்ற உயர் பண்புகளை ஒவ்வொரு தனி மனிதனும் பெற்றுச் சமுதாய உயர்வுக்கு வித்திடப் பயன்படுவதே ஒருவரின் தாய்மொழி. அதுவே தாய்மொழியாகிய தமிழ்மொழி கற்பித்தலின் அடிப்படை நோக்கமுமாகும்.

### தமிழ் மொழி கற்பித்தலின் முக்கியத்துவம்

மனிதர்களின் உடல், உள்ளம், அறிவு ஆகிய மூன்றினையும் வளர்ச்சி பெறச்செய்வதே கல்வி. குழந்தை, தான் பிறந்தது முதல் கேட்டும், பேசியும் வரும் தாய்மொழி அக்குழந்தையின் அக வளர்ச்சிக்கும், புற வளர்ச்சிக்கும் துணை நிற்கிறது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும், கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், பிறரைப் புரிந்து கொள்ளவும் மொழியே அடிப்படைக் காரணியாகிறது.

ஒவ்வொருவருக்கும் அறிவை வளர்க்கவும், மனப்பான்மைகளை உருவாக்கவும், மொழிப்பற்று, இனப்பற்று ஏற்படவும், அழகியல் உணர்வு தோன்றவும் தாய்மொழியே காரணமாகின்றது. எனவே தனிமனிதனின் அகவளர்ச்சிக்கும், புறவளர்ச்சிக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் நம் தாய்மொழியாகிய தமிழே முக்கிய காரணியாகிறது. மாணவர்களின் தெளிவான பேச்சு, எழுத்து, சிந்தனையாற்றல் ஆகியவற்றை மொழியாசிரியர்களே வளர்த்தெடுக்க முடியும். எனவே, தாய்மொழியாகிய தமிழ் கற்பித்தலின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றை வரையறுக்கலாம்.

1. அடிப்படைத்திறன்களை வளர்த்தல்
2. சிந்தனையை வளர்த்தல்
3. எண்ணத்தை வெளியிடல்
4. கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுதல்
5. கற்பனைத்திறன் வளர்த்தல்
6. படைப்பாற்றலை வளர்த்தல்
7. இலக்கிய நயமுணர்ந்து இன்புறல்
8. சமூகப் பண்பாட்டு மரபினை அறிதல்
9. ஒழுக்கப்பண்புகளை வளர்த்தல்
10. மொழிப்பற்று வளர்த்தல் மற்றும் நாட்டுப்பற்றை வளர்த்தல்


Downloaded From www.nagaicollege.com

1. **அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**

தமிழ் மொழியை நுட்பமாகவும், துல்லியமாகவும் கேட்கும் திறனை வளர்த்தல், புரிந்துகொள்ளுதல், ஒலிப்புமுறை, அழுத்தம், உணர்வுகளுடன் பேசும் திறனை வளர்த்தல். மொழியைப் படிக்கும் போது வேகம், பொருளுணர்தல், பிழையின்மை ஆகிய படித்தல் திறன்களை வளர்த்தல், முறையாக எழுதுதல், பிழையின்றி எழுதுதல் ஆகிய எழுத்துத் திறன்களை வளர்த்தல் என மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றை வளர்ப்பதே தமிழ் மொழியின் முதன்மை நோக்கமாகும்.

இந்தியக் குடியரசில் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் அடிப்படை உரிமைகளாயின. மொழிவாரி மாநிலங்கள் அமைந்தமையால் தாய்மொழி ஆட்சி ஏற்பட்டது. பொது வாழ்வுப் பகுதி முழுவதிலும் பேச்சுத்தமிழும், அலுவலகங்களில் எழுத்துத் தமிழும் நடுவிடம் பெற்றுள்ளன. செய்தித் தொடர்புச் சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், இணையம் ஆகியவற்றின் மூலம் தாய்மொழியின் எழுத்துத்தமிழும், பேச்சுத்தமிழும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. எனவே மாணவர்கள் அடிப்படைத் திறன்களில் பயிற்சி பெறத் தாய்மொழியான தமிழ் மொழியே சிறந்த கருவியாக அமைகிறது.

2. **சிந்தனையை வளர்த்தல்**

சிந்தனையை வளர்த்தலுக்குப் பொதுமைக்கருத்து அடிப்படையாகும். பொதுமைக் கருத்தை மொழியினால்தான் உருவாக்க முடியும். எனவே சிந்தனைக்கு மொழி அடிப்படையாகிறது. சிந்தனை வளர்ச்சி தாய்மொழியின் மூலம் சிறப்படைகிறது. அறிவியல் அறிஞர்கள் பலர் தாய்மொழி மூலமே கண்டுபிடிப்புக்களைச் செய்திருக்கின்றனர். படைப்பாளிகள் பலர் தம் தாய்மொழியிலேயே படைத்திருக்கின்றனர். மகான்களும் மகத்துவமான உண்மைகளை தமது தாய்மொழியிலேயே கூறியுள்ளனர். தாய்மொழியறிவைப் பெறுமிடங்கள் பலவாக இருப்பினும் தாய்மொழித் திறனை, அதுவும் சிந்தனை வளர்ச்சிக்கான தாய்மொழித்திறனைப் பெறுமிடங்கள் கல்விக்கூடங்கள் எனலாம்.

**கலையென்றால் உணர்ச்சிகளைக் கவர வேண்டும்**

**களிப்பூட்டி அறிவினைப்போய் கவர வேண்டும்:**

**நிலைகொள்ளார் சிந்தனையை நிற்கச் செய்து**

**நீதிநெறி தெய்வத்தினைப் பூட்டற் கன்றோ?**

**விலையில்லாப் பெருமைபல உடைய தேனும்**

**விளங்காத பாஎயிலே பாட்டைக் கேட்டுத்**



Downloaded From www.nagaicollege.com

**தலையெல்லாம் சுளுக்கேற அசைத்திட் டாலும்**

**தனக்கதுவோர் கலையின்பம் தருவ துண்டோ?** - *நாமக்கல் கவிஞர்.*

எண்ணங்களும் எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற பேச்சுக்களும் ஒன்றிற்கொன்று மிகவும் நெருங்கிய தொடர்புடையன. அவை இரண்டும் ஒன்றாகவே அறியக்கூடியன. ஒன்றைப் பயன்படுத்தாமல் மற்றொன்றைப் பயன்படுத்த முடியாது. எனவே மொழி வளர்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் பள்ளிகளில் தாய்மொழிப் பயிற்சி அளித்தலே முதன்மையான தேவையாகும். மொழி நூல்களைக் கற்பதன் வாயிலாய்க் கருத்துக்கள் பல தோன்றும். சிந்தனைகள் தெளிவு பெறும். தாய்மொழி வாயிலாகவே சிந்தனைகள் விளக்கமடைவதுடன், கற்ற செய்திகளைப் பிறர்க்கும் புலப்படுத்த முடிகின்றது. சிந்தனையற்ற செயல் சிறப்புறுவதில்லை.

மனத்தேயெழும் பல்வகைச் சிந்தனைக்கும் மொழியே அடிப்படையாகும். பழைய நினைவுகளை மீட்டறியவும், திறனாய்வு செய்யவும், கொள்கைகளை ஊகித்து அறிந்து கொள்ளவும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் மொழி பயன்படுகின்றது. இதன்மூலம் சிந்தனையின்றேல் மொழியில்லை, மொழியின்றேல் சிந்தனை இல்லை என்ற கருத்து தெளிவாகும்.

**3. எண்ணத்தை வெளியிடல்**

மொழியின் வாயிலாகத் தான் நம் எண்ணங்கள், கருத்துக்கள், உணர்ச்சிகள் முதலியவற்றைத் தெரிவிக்க முடிகிறது. பேச்சாலும், எழுத்தாலும், பிறர் கருத்துக்களை அறிய முடிகிறது. ஆதலால் தாய்மொழியை மாணாக்கர்கள் திறமையுடன் கையாளக்கூடியவாறு கற்பிக்க வேண்டும். நுண்ணிய எண்ணங்களும் தெளிவான கருத்துக்களும் மாணாக்கர்களிடம் தோன்றுவதற்கு ஆசிரியர் பின்வரும்படி செயல்பட வேண்டும்.

(அ) எளியமுறையில் ஒரு பொருளைக் குறித்துத் தெளிவாகப் பேசுதல் வேண்டும்.

(ஆ) எளியமுறையில் ஒரு பொருளைப் பற்றிக் கேட்கவும், கேட்டுப் பொருளுணர்வும் செய்தல் வேண்டும்.

(இ) ஒரு பொருளைத் தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருள் உணரவும் செய்தல் வேண்டும்.

(ஈ) ஒரு பொருளைப் பற்றித் தெளிவான எளிய முறையில் எழுதுவதற்கு தேவையான ஆற்றல்களை வளர்க்க வேண்டும்.

தாய்மொழியில் படிக்கவும், எழுதவுமான பயிற்சிகளைப் பள்ளியில் அளித்து இவ்வாற்றல்களை வளர்த்தால், அவர்களின் எதிர்காலத்திற்கு பெரிதும் துணையாக இருக்கும். ஒரு சிறந்த குடிமகனாக வாழ்வதற்கு இவ்வாற்றல்கள் மிகவும் இன்றியமையாதனவாகும்.



Downloaded From www.nagaicollege.com

**சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே – அதை**

**தொழுது படித்தடிப் பாப்பா.** - ***பாரதியார்***

**எண்பொருளவாகச் செலச்சொல்லித் தான் பிறர்வாய்**

**நுண்பொருள் காண்ப தறிவு.** - ***வள்ளுவர்***

பிறர் உணரும் வண்ணம் எளிமையாகச் சொல்ல வேண்டும். பிறர் நுட்பமாகக் கூறினாலும் அதனை அறிதல் வேண்டும்.

**எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்**

**துய்த்துணர் வில்லெனி னில்லாகும் - உய்த்துணர்ந்தும்**

**சொல்வன்மை யின்றெனி னென்னா ம.்.துண்டேல்**

**பொன்மலர் நாற்ற முடைத்து.** - ***நீதிநெறி விளக்கம்***

கல்வி , எத்துணைய ஆயினும் - கற்ற கல்வி எவ்வளவு பெரிதேயானாலும், இடம் அறிந்து உய்த்து உணர்வு இல் எனின் இல்லாகும் - நூலின் இடம் தெரிந்து ஆராய்ந்து உணரும் அறிவு இல்லையானால் அக்கல்வி பயனற்றதாகும்.

தாய்மொழியில் நல்ல புலமை பெற்றால் தான் ஒருவர் தம் உணர்ச்சிகளைத் தெளிவாக வெளியிட முடியும். தம் உணர்ச்சிகளை வெளியிடுவதனால் அவர்களுக்குத் தனிப்பட்ட மகிழ்ச்சி ஏற்படுவதுடன், அவர்களுடைய மனம், ஒழுக்கம் முதலியவை பண்பட்டு, ஆளுமை சிறக்கவும் இடமுண்டு. தாய்மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்கள் மனத்தை விரிவடையச் செய்து அவர்களுடைய தனித்தன்மையையும் வளர்க்கும். தமிழில் புத்திலக்கியங்கள் பல படித்து மகிழவும் தாய்மொழியறிவு தேவை. ஆட்சி, நிர்வாகம் போன்ற துறைகளில் பலபணிகள் நடைபெறுவதற்கும் தாய்மொழியறிவு தேவை.

**4. கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுதல்**

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பெறக்கூடிய அனுபவங்களை, சுவைகளை, கருத்துக்களை எடுத்தியம்பும் ஆற்றலைத் தாய்மொழியே அளிக்கவல்லது. இன்பத்தையும், துன்பத்தையும் , பொருட்சுவையும், சொற்சுவையையும் தாய்மொழி மூலமே வெளிப்படுத்த இயலும்.

ஒவ்வொருவரும் வேறுபட்ட வாழ்க்கை நுகர்வுகளை, அனுபவங்களை வெளிப்படுத்த மொழியே உதவுகிறது. உள்ளத்தில் எண்ணும் எண்ணங்களை எடுத்தியம்பும் ஆற்றலைத்



Downloaded From www.nagaicollege.com

தாய்மொழி அளிக்கவல்லது. அதற்கு ஔவையார் விநாயகப் பெருமானை வேண்டிப்பாடும் பாடலையும், பாரதிதாசன் பாடலையும் சான்றாகக் கூறலாம்.

**பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**

**நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்**

**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**

**சங்கத்தமிழ் மூன்றும் தா.** - ***ஔவையார்***

**ஏழை யென்றும் அடிமை யென்றும்**

**எவனும் இல்லை ஜாதியில்**

**இழிவு கொண்ட மனித ரென்பது**

**இந்தி யாவில் இல்லையே.**

**வாழி கல்வி செல்வம் எய்தி**

**மனம கிழ்ந்து கூடியே**

**மனிதர் யாரும் ஒருதி கர்ச**

**மான மாக வாழ்வமே!**

**... விடுதலை விடுதலை** - ***பாரதிதாசன்***

5. **கற்பனைத்திறனை வளர்த்தல்**

**உள்ளத்து உள்ளது கவிதை**
**இன்ப உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில்**
**தெரிந் துரைப்பது கவிதை.**

இலக்கியத்தின் முக்கியக் கூறுகளுள் ஒன்றும் கவிதைக்கு இன்றியமையாததாக வேண்டுவதும் கற்பனையே ஆகும். நமது கற்பனையை நமது தாய்மொழியாம் தமிழில் எடுத்துரைப்பது சிறந்தது. இது கவிதைகளைக் கனிவித்துக் கற்போரின் மனத்தை விரிந்த பார்வையில் செலுத்துவது ஆகும். கவிதையின் பிற பண்புகளுக்கெல்லாம் அடிநிலமாய் அதோடு முடிவாக அமைகிறது.



Downloaded From
www.nagaicollege.com

ரஸ்கின் என்ற கவிஞர் **“கற்பனைத் தத்துவம் அறிவுக்கு எட்டாதது. சொற்களால் உணர்த்த முடியாதது. அது அதன் பலன்களை மட்டும் கொண்டே அறியப் பெறுவதென்பதாகும்”** என்று கூறியுள்ளார்.

நம் முன்னோர்களின் கற்பனைக்குச் சான்றுகளாகவே சிற்பங்களை, சின்னங்களை, ஓவியங்களை, காவியங்களை, மாடங்களை, கூடங்களை, இன்று நாம் கையாளும் பொருள்களை, நம்மை, நம் வரலாற்றை, ஏன் உலகத்தையே காண்கிறோம்.

இலக்கியங்களைப் படிக்கும் போது, எண்ணற்ற கற்பனைக் காட்சிகளைக் காண்கிறோம்.

**காக்கைச் சிறகினிலே நந்தலாலா! – நின்றன்**

**கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா!**

**பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா! – நின்றன்**

**பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா!**

**கேட்கும் மொழியிலெல்லாம் நந்தலாலா! – நின்றன்**

**கீத மிசைக்குதடா நந்தலாலா!**

**தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா! – நின்னைத்**

**தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா!**

என்ற பாரதியாரின் பாடல் வரிகள் மூலம் அவரின் கற்பனைத்திறனை அறியலாம்.

**6. படைப்பாற்றலை வளர்த்தல்**

எத்தகைய திறனும் கற்பிப்பாலும் பழகுதலாலும் பெறவியலும். கற்பிப்புக் காலத்தில் மாணவர்கள் பெறுகின்ற இலக்கிய ஆர்வம், எக்கருத்தையும் எழிலுணர்ச்சியுடன் நுணுகி நோக்கல், படிப்புப் பழக்கம், படித்ததைப் போல ஒன்றனைத் தானும் உருவாக்க வேண்டும் எனும் பெருமித உணர்வு ஆகிய உந்தல்களை ஆசிரியர் மாணவர்க்கு உண்டாக்க வேண்டும்.

தம் இலக்கிய ஆர்வத்தைப் பொருத்தே அவரிடம் கற்கும் மாணவர்க்கு இலக்கிய ஆர்வம் அமையும். ஆசிரியர் தம் இலக்கிய நோக்கில் மாணவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

இலக்கியங்களை அவற்றில் பின்புலத் தகவல், அது வழங்கும் செய்தி, உயர்ந்த பொருள், வகைப்பாடு, மொழித்திறன் வளர்க்கும் கூறுகள் ஆகிய நோக்குடன் படிக்க வேண்டும் என்பதை மாணவர்க்கு உணர்த்த வேண்டும். இவ்வாறு இலக்கியத்தை மாணவர் நுணுகி


Downloaded From www.nagaicollege.com

நோக்கிக் கற்கும்போது உணர்வு மேலோங்கிப் பாராட்டும் மனப்பாங்கு உண்டாகும். பாடுபொருள், மொழிநடை ஆகியவை அவரிடம் தாக்கத்தை விளைவிக்கும். அத்தாக்கம் இலக்கியங்களைப் படிக்கும் எண்ணத்தை தூண்டும். இலக்கியப் படிப்பின்போது காணும் பொருள் மொழிநடையும் மாணவர்தம் உள்ளத்தில் பதிந்து கொண்டதற்கேற்ப புதிய படைப்பு வடிவமாக வெளிப்படும். இது 'போலச் செய்தல்' என்னும் பழக்கத்தால் உண்டாவதாகும்.

**எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ணல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்லறிவு வேண்டும்.** - *பாரதியார்*

என மாணவர்களுக்கு நல்லெண்ணங்களை ஊட்டி, உயர்ந்த எண்ணத்தோடு அவர்களின் கருத்துகளை படைக்க பயிற்சி அளித்தல் வேண்டும்.

படைக்குமாற்றலைக் கட்டுரைகள், சிறுநாடகங்கள், சிறுகதைகள், செய்யுள்கள், சொற்பொழிவுகள் முதலியவற்றை எழுத்துப்பேச்சு வழிகளில் தட்டி எழுப்பி அது வளர்வதற்கான முறையில் அவர்கள் உள்ளத்தைப் பண்படுத்திவிடலாம். இதனால் ஆயிரத்தில் ஒரு மாணாக்கனாவது இங்ஙனம் சிறந்து பிற்காலத்தில் கம்பனாகவோ, பாரதியாராகவோ விளங்கலாம்.

### 7. இலக்கிய நயமுணர்ந்து இன்புறல்

இலக்கியத்தில் வரும் பாடலைப் படித்து அதன் பொருளைப் புரிந்து கொள்வது மட்டும் போதாது. அப்பாடலில் உள்ள பொருள் நயம், சொல் நயம், எதுகை, மோனை, அணிநயம் ஆகியவற்றையும் உணர்ந்து மகிழ்வது இலக்கிய நயமுணர்ந்து இன்புறல்.

**செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே.**

**காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்**
**கண்டதோர் வையைப் பொருணைநதி – என**
**மேவிய யாறு பலவோடத் - திரு**
**மேனி செழித்த தமிழ்நாடு.**



Downloaded From www.nagaicollege.com

**நீலத் திரைகடல் ஓரத்திலே - நின்று**
**நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை – வட**
**மாலவன் குன்றம் இவற்றிற்கிடையே - புகழ்**
**மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.**
**கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு – நல்ல**
**பல்வித மாயின சாத்திரத்தின் - மணம்**
**பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு.** - *பாரதியார்*

**மையக்கருத்து: '**செந்தமிழ் நாடு' என்று பிறர் சொல்லக் கேட்கின்ற போதே செவிக்கு இன்பம் பயக்கின்றது. தந்தையர் நாடு என்று வழங்குகின்றபோது உயிர் மூச்சில் புதிய ஆற்றல் தோன்றுகிறது.

வற்றாத பல ஆறுகள் ஓடி நாட்டை வளப்படுத்துகின்றன. தென்குமரி முதல் வடவேங்கடம்வரை பெருமை மிக்க தமிழ்நாடு.

தமிழ்நாடு கல்வியாளர் பலரால் நிறைந்தது: புகழ்க்கம்பனாலும் பல்வேறு கலைகளாலும் புகழ் பரவியது.

**தொடைநயம்:**

**எதுகை:** அடிதோறும் முதற்சீரின் முதலெழுத்துத் தம்முள் அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது அடிஎதுகையாகும்.

செ**ந்** - த**ந்**, கா**வி**ரி – மே**வி**ய, நீ**ல**ம் -மா**ல**வன், க**ல்**வி – ப**ல்**வித என அடிதோறும் எதுகைகள் வந்துள்ளன.

**இயைபுத் தொடை:**

ஓரடியில் சீர்தோறும் கடைசியில் நின்ற எழுத்தாலும் சொல்லாலும் ஒன்றிவரத் தொடுப்பது சீர் இயைபுத்தொடையாகும்.

கவிதையின் முதலடியில் மூன்றாம் ஏழாம் சீர்களில் **போதினிலே, காதினிலே** என சீர் இயைபுத்தொடை நயம் பெற்று வந்துள்ளது.

**மோனை:** ஓரடியில் சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவருவது சீர்மோனையாகும்.

**செ**ந்தமிழ் - **தே**ன், **த**ந்தையர் - **ச**க்தி, **கா**விரி – **க**ண்ட , **மே**விய – **மே**னி, **நீ**லம் - **நி**த்தம், **மா**லவன் - **ம**ண்டி, **க**ல்வி – **க**ம்பன் , **ப**ல்வித – **பா**ரெங்கும் என முதற்சீரிலும்


Downloaded From www.nagaicollege.com

ஐந்தாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வந்து மோனைத் தொடை அமைந்து இனிய ஓசை தருவதை அறியலாம்.

**அணி:** காவிரி முதலிய ஆறுகள் பாய்ந்து செந்தமிழ் நாட்டைச் செழிக்கச் செய்தலையும், தமிழ்நாட்டின் எல்லைகளையும் உள்ளது உள்ளவாறு இயற்கைத் தன்மைகளைக் கவிஞர் கூறியுள்ளதால் இக்கவிதையில் இயல்புநவிற்சி அணி பயின்றுள்ளது.

**சுவை:** கல்வி, தறுகண்மை, புகழ், கொடை ஆகியவற்றால் மேம்பட்டு நிற்கும் நிலையில் பெருமிதம் தோன்றும். தமிழ் மொழியின் உயர்வு, தமிழ்நாட்டின் செழுமை, தமிழரின் கல்வி ஆகியவற்றால் மேம்பட்டு நிற்கும் தன்மைகளை எடுத்துரைப்பதால் இப்பாடலில் பெருமிதச் சுவை விஞ்சி நிற்கிறது.

**8. சமூகப் பண்பாட்டு மரபினை அறிதல்**

மொழிகள் அனைத்திலுமே அம்மொழி பேசுகிறவர்களின் பண்டையச் சமுதாய வாழ்வையும் பண்பாட்டையும் கற்பதற்குரிய நூல்கள் இருக்கும். பெரும்பாலும் அவை இலக்கிய மரபாகவும் வரலாற்று நூலாகவும் இருக்கும். ஆனால், தமிழில் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட இலக்கண நூலிருப்பது நம் மொழியின் தனிப் பெருஞ்சிறப்பாகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துக்காட்டிய பெருமை தமிழனுடையதாகும். புறநானூறு, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து பண்டைத் தமிழர்களின் சமூக வாழ்க்கையையும், பண்பாட்டையும் தெரிந்து கொள்ளலாம். மேலும் ''இப்படித்தான் குறிக்கோள் வாழ்க்கை வாழவேண்டும்'' என்று தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் திட்டமான குறிப்புகள் உள்ளன. தமிழர்கள் வாழ்க்கையை அகவாழ்க்கை , புறவாழ்க்கை என இரண்டாகப் பிரிப்பர். இன்பம் (அ) காதலைப் பற்றிப் பேசுவது அகப்பொருள், போர், கொடை, நட்பு ஆகியவற்றை விரித்துக் கூறுவது புறம். அகம் குடும்ப வாழ்க்கையாகும். புறம் உலக வாழ்க்கையாகிய பொது வாழ்க்கையாகும். பிறர் புலன்களால் அறியக் கூடிய பொருள்களைப் புறம் என்றும், அனுபவிப்பவர் மட்டும் அறியக்கூடியதும் ஏனையோர் புலன்களுக்கு வசமாகாததுமான சிற்றின்ப உள்ளுணர்ச்சியினை அகப்பொருள் என்றும் பிரித்திருக்கிறார்கள். இவ்விரு பொருள்களையும் விரிக்கும் போது ஒவ்வொரு பொருளையும் ஏழு திணைகளாகப் பிரித்து ஒவ்வொரு திணையிலும் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளையும் விரிவாக கூறியுள்ளனர். பண்டைய காலத்திலிருந்து இன்று வரை தோன்றியுள்ள இலக்கியங்களைப் படிக்கும்போது அவை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் அவ்வக்காலங்களில் வாழ்ந்த மக்களின் சமூக இயலையும் பண்பாட்டு மரபினையும் விளக்குவதை அறியலாம்.

**யாதும் ஊரே யாவரும் கேளீர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா:**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவ தன்றே. -புறம்-192.**

மாங்குடி மருதனார் என்ற புலவர் பாண்டிய நெடுஞ்செழியனை, ''தேவருலகத்திலுள்ள அமிழ்தே கிடைத்தாலும் நீ பொய் கூறமாட்டாய். தேவர்களே பகைவரானாலும் பணியமாட்டார். நேர்வழியில் வரும் பொருளையே விரும்புவாய்'', என்று பாராட்டியுள்ளார்.

பண்பாடு என்பது சமூகத்தோடு ஒட்டி வாழும் உயிரின் நோக்கமாகக் கருதப்படல் வேண்டும். இதனையறிந்து செயல்படுவதற்கு வாயிலாகத் தமிழ்மொழி இலக்கியமே உதவும். தனிமனிதனுக்குத் தேவையான சமுதாய மரபுகளையும், மனப்பான்மையையும் தமிழ் இலக்கியமே அளிக்கிறது.


Downloaded From www.nagaicollege.com

**9.ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தல்**

மொழிப்பாடம் வாயிலாகத்தான் மாணவர்களுக்கு ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்த முடியும். ஏனெனில் வாழ்க்கையும், தமிழ் இலக்கியமும் பின்னிப் பிணைந்தவை, பிரிக்க முடியாதவை. இலக்கியம் வாழ்க்கையிலிருந்தே தோன்றுகிறது. பிற பாடங்களில் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் மட்டுமே மாணவர்கள் கற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால் வாழ்க்கைக்கு தேவையான அன்பு, பண்பு, பொறுமை, விடாமுயற்சி, விருந்தோம்பல், பிறரை மதித்தல், ஏழைகளுக்கு உதவும் அறநெறி, நலிந்தவர்களுக்கு நல்வாழ்வு தருதல், பிற சமயத்தினரை மதித்தல் ஆகிய ஒழுக்கப்பண்புகளை தமிழ்மொழிப் பாடம் மூலமே மாணவர்களுக்குக் கற்றுத்தர முடியும்.

சிறுவகுப்பிலிருந்தே மாணவர்களுக்கு இறைவாழ்த்துப் பகுதி மூலம் இறையுணர்வு ஊட்டப்படுகிறது. சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வியல் நெறிகளை ஒழுக்கப் பண்புகளை வளர்க்கின்றன. சமய, இன, மொழி, சாதி வெறியைத் தூண்டாத வகையில் அனைத்து சமயப் பொதுமைக் கருத்துகளை வலியுறுத்தக்கூடிய நல்லொழுக்கப் பண்புகளை நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி கற்பிக்கிறது.

**ஈதற்குச் செய்க பொருளை அறநெறி**

**சேர்தற்குச் செய்க பெருநூலை – யாதும்**

**அருள்புரிந்து சொல்லுக சொல்லையிம் மூன்றும்**

**இருளுலகஞ் சேராத வாறு.** - ***திரிகடுகம்.***

இல்லார்க்கு ஈதற்காகப் பொருளைத் தேடுதலும், பிறர் அறவழியை அறிந்து நடப்பதற்காகச் சிறந்த நூல்களைச் செய்தலும், பிறரிடம் பேசும்போது இனிமையாகப் பேசுதலும் இன்பந் தருவன என்பதாம். இவை மூன்றும் நல்லொழுக்கமாகும்.

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்**

**எய்துவர் எய்தாப் பழி.** - ***திருக்குறள்***

**10.மொழிப்பற்று மற்றும் நாட்டுப்பற்றை வளர்த்தல்**

மொழிப்பற்றினையும், நாட்டுப்பற்றினையும் தமிழ்செய்யுள்கள் வழி வளர்க்க வேண்டும். இதற்கெனவே பொருத்தமான செய்யுள்கள் பாடப்பகுதியில் இடம் பெறுகின்றன.

**மொழிப்பற்று**

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**

**இனிதாவ தெங்கும் காணோம்,**



Downloaded From www.nagaicollege.com

பாமரராய, விலங்குகளாய், உலகனைத்தும்

*இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு*

*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*

*வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர் !*

*தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*

பரவும்வகை செய்தல் வேண்டும். - *பாரதியார்.*

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்

கழையிடை ஏறிய சாறும்

பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்

பாகிடை ஏறிய சுவையும்

நனிபசு பொழியும் பாலும் - தென்னை

நல்கிய குளிரிள நீரும்,

இனியன என்பேன் எனினும் - தமிழை

என்னுயிர் என்பேன் கண்டீர்! - *பாரதிதாசன்*

என்ற பாரதியார் மற்றும் பாரதிதாசனின் வரிகள் மூலம் அவரறிந்த மொழிகளுள் தமிழே இனிமை பயப்பது. தமிழராக பிறந்த ஒவ்வொருவரும் தமிழ் மொழியை பரப்ப வேண்டும் என்ற மொழிப்பற்றினை உணர்த்துகிறார்.

நாட்டுப்பற்று

அருஞ்சிறப்புகளை அடையப் பெற்ற ஒரு நாடு பாருக்குள்ளே நல்ல நாடாக இருப்பது வியப்புக்குரியதல்லவே! இதனையே வான்புகழ் வள்ளுவர் ஒரு நாட்டிற்கு இலக்கணமாக,

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல

நாட வளந்தரும் நாடு. - *திருக்குறள்*

என்னும் குறள்வழிக் கூறியிருப்பது நினைவில் கொள்ளவேண்டியது.

பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்

வெள்ளிப் பனிமலையின் மீதுலாலுவோம் - அடி

மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் - எங்கள்



Downloaded From www.nagaicollege.com

**பாரத தேச மென்று தோள்கொட்டுவோம்!**

**சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்**

**சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்**

**வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்**

**வையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்**

**காசிநகர்ப் புலவர் பேசும் உரையைக்**

**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்**

**ஆயுதம் செய்வோம் நல்ல காகிகதம் செய்வோம்**

**ஆலைகள் வைப்போம் கல்வி சாலைகள் வைப்போம்!** *-பாரதியார்*

என்று அனைத்து துறையிலும் முன்னேற்றம் கண்டிட காண வழிமுறைகளை பாரதியார் கூறும் மொழியை காணும் பொழுது நாட்டுப்பற்று தெளிவாகும்.

**தன்குல வளர்ப்பும் தமிழ் இன வளர்ப்பு எனும்**

**வன்மொழித் தத்துவம் வழங்குவர்க் குரைப்பேன்**

**என்குல மென்பது இதயத்து இடம்பெறின்**

**தன்மொழி, தன் இனம் தாங்குவார் அவரவர். - குலோத்துங்கன்.**

### மொழி கற்பித்தலின் பொதுக்கோட்பாடுகள்

1963ம் ஆண்டு ஜெரோம் புருனர் முதன் முதலில் கற்பித்தல் கொள்கைகள் என்ற சொல்லை உருவாக்கினார். பின்னர் 1965ல் இச்சொல் பிரபலமடையத் தொடங்கியது. கற்பித்தல் வளர்ச்சிக்குக் கற்பித்தலுக்கான உளவியல் கொள்கைகள் அடித்தளமிட்டுள்ளன. மனிதனின் நடத்தையில் கல்வியால் மட்டுமே மாற்றங்களைக் கொண்டு வரமுடியும். கல்வியும், கற்றலும் பிரிக்க இயலாதவை. எனவே கற்பித்தலுக்கான உளவியல் கொள்கைகளை ஆசிரியர்கள் கடைபிடிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

பேட்டர்சன் என்பவரின் கூற்றுப்படி கற்பித்தலில் ஒருங்கிணைப்பை உளவியல் கொள்கைகளே அளிக்கின்றன. கற்பித்தலுக்குத் தேவையான முறைகளைக் கையாள உதவுகின்றன. ஆராய்ச்சிக்கும் அவையே படிநிலைகளை அமைத்துக் கொடுக்கினறன. ஆசிரியப்பயிற்சி மாணவர்களுக்குக் கற்பித்தல் நுட்பங்களை உளவியல் கொள்கைகளே உணர்த்துகின்றன. பல உளவியலறிஞர்கள் கற்பித்தலுக்கான கொள்கைகளை வகுத்துள்ளார்கள். அவர்களுள் காக்னே, புருணர், பியாஜே ஆகியோருடைய கற்பித்தலுக்கான உளவியல் கொள்கைகள் இங்கு ஆராயப்படுகின்றன.



Downloaded From www.nagaicollege.com

## மொழி கற்பித்தலின் உளவியல் கோட்பாடுகள்

### 1. காக்னேயின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு

காக்னே அவருடைய ''கற்றலுக்கான சூழல்'' என்னும் நூலில், கற்றலில் ஏற்படக்கூடிய எட்டுவகையான கற்றல் மாற்றங்களைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளதையும் கண்டறிந்தார்.

**காக்னேயின் கற்றல் படிநிலைகள்:**

இராபர்ட எம். காக்னே கற்றலை எட்டு வகையாகப் பிரித்துள்ளார். எளிமையான கற்றலில் தொடங்கி சிக்கலான பிரச்சனைகளைத் தீர்க்கக் கற்றுக்கொள்ளுதல் வரை வரிசைக்கிரமத்தில் அமைந்துள்ளன. அவை

1. குறியீட்டு வழிக்கற்றல்
2. தூண்டல்-துலங்கல் மூலம் கற்றல்
3. இணைத்தல்
4. சொற்களின் கூட்டிணைப்பு
5. வேறுபாடறிதல்
6. கருத்துகள் உருவாவதைக் கற்றல்
7. விதியைக் கற்றல்
8. சிக்கலைத் தீர்த்தல்

1. **குறியீட்டு வழிக்கற்றல்:** பாவ்லோவின் ஆக்கநிலையுறுத்தல் கொள்கைப்படி கற்றலில், தனிநபர் ஒரு குறியீட்டுக்குத் துலங்கலை வெளிப்படுத்துவதைக் கற்றுக் கொள்கிறான்.
2. **தூண்டல்-துலங்கல் மூலம் கற்றல்:** தார்ண்டைக்கின் தூண்டல் துலங்கல் மூலம் கற்றல் சோதனையையும், ஸ்கின்னரின் செயல் தொடர்புடைய துலங்கலையும் இக்கற்றல் முறைக்குச் சான்றுகளாகக் கூறலாம்.
3. **இணைப்புக் கற்றல்:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தூண்டல் துலங்கல்களை இணைப்பதன் மூலம் கற்றல் நிகழ்தல்.
4. **சொற்களின் கூட்டிணைப்பு:** சொற்களைப் பொருத்தமாக இணைத்தலைக் கற்றுக் கொள்ளுதல்.
5. **வேறுபாடறிதல்:** ஒரே மாதிரியான பல்வேறு தூண்டல்களைக் கண்டறிந்து, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகையான துலங்கலை வெளிப்படுத்தும் வேறுபாடுகளை அறிதல்.
6. **கருத்துகள் உருவாவதைக் கற்றல்:** தூண்டல் வகைகளுக்கிடையே உள்ள பொதுமைப் பண்புகளை உணர்ந்து, அதனடிப்படையில் பொதுமைக் கருத்துகளைக் கற்றல்.
7. **விதியைக் கற்றல்:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துகளை இணைத்து, விதியைக் கற்கும் பொழுது, கொள்கைகளைக் கற்றலும் நிகழ்கிறது.
8. **சிக்கலைத் தீர்த்தல்:** காரணமறிதல், சிந்தனை, உற்றுநோக்கல், வேறுபடுத்துதல், பொதுமைப்படுத்துதல் போன்ற அறிவுத் திறன்களின் மூலம் சிக்கலைத் தீர்க்கக் கற்றுக் கொள்ளுதல் நிகழ்கிறது.

காக்னே, கற்பித்தலின் நான்கு முக்கியக் கூறுகளையும் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் தன்னுடைய கற்பித்தல் செயலில் இவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளார். அவை:

1. முன்பு கற்ற பாடப் பொருளை நினைவு கூறத் தூண்டுதல்.



Downloaded From www.nagaicollege.com

2. பொருத்தமான தூண்டலை நேரடியாக அளித்தல்.
3. நிர்ணயிக்கப்பட்ட கற்றல் இலக்குகளைச் செயல்படுத்துதல்.
4. பின்னூட்டம் பெறுதல்.

ஆசிரியர்களே கற்பித்தல் பொருளின் வடிவமைப்பாளர்கள், மேலாளர்கள் மற்றும் மாணவர்களின் கற்றலை மதிப்பீடு செய்பவர்கள் என்று காக்னே கருதினார். எனவே கற்பித்தல் என்பது ஆசிரியர்களின் திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தலை உள்ளடக்கியது. கற்பவர்களின் தேவைக்கேற்பக் கற்றல் சூழலை ஒழுங்குப்படுத்துவதே கற்பித்தல் எனலாம். கருத்துகள் உருவாவதைக் கற்றல், விதியைக் கற்றல், சிக்கலைத் தீர்த்தல் ஆகியவைகளுக்கே பெரும்பாலான பள்ளிப்பாடங்கள் முக்கியத்துவம் அளிப்பதை ஆராய்ச்சியின் மூலம் அறிந்தார் காக்னே. எனவே கற்றல் செயலிலும் எட்டு நிலைகளை அவர் விவரிக்கிறார். அவை:

1. ஊக்குவித்தல்
2. புரிந்து கொள்ளுதல்
3. முயன்று அடைதல்
4. விடாது வைத்திருத்தல்
5. நினைவுகூர்தல்
6. பொதுமைப்படுத்துதல்
7. செயல்திறன்
8. பின்னூட்டம்

காக்னே கற்றல் செயல் இயல்பாகவோ அல்லது பின்னூட்டம் பெற்றோ முடிவடைய வேண்டும் என்று கருதினார்.

### 2.புருணரின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு

கற்பித்தல் கொள்கை என்பது அறிவை அடைவதற்குரிய விதிகளையும், திறன்களையும், அளவிடுதல் நுட்பங்களையும் விளக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்று புருணர் சுட்டியுள்ளார். கற்பித்தல் கொள்கை நான்கு கூறுகளைக் கொண்டிருக்க வேண்டுமென்கிறார். அவை:

1. **கற்றலுக்கு முன்பே விரும்பும் நிலை:** ஒரு குழந்தை பள்ளிக்கு வரும்பொழுது அக்குழந்தை தானே கற்கும்படியான ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய பாடப் பொருள்களையும், அனுபவங்களையும் கற்பித்தல் கொண்டிருக்க வேண்டும்.
2. **அறிவு அமைப்பு:** கற்போரால் உட்கிரகித்துக் கொள்ளும் வகையில் கற்பித்தல் கொள்கைகள் குறிப்பிட்ட வகையில் அமைக்கப்பட வேண்டும்.
3. **வரிசைக்கிரமம்:** பாடப்பொருளை அளிக்க வேண்டிய வரிசைமுறை பற்றிக் கற்பித்தல் கொள்கைகள் குறிப்பிட வேண்டும்.
4. **வலுவூட்டுதல்:** கற்பித்தல் கொள்கை மாணவர்களை அறியாதவைகளிலிருந்து அறிந்தவைகளுக்கு இட்டுச் செல்லும் பொழுது எத்தகைய வலுவூட்டம் அளிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும். அறிவு வளர்ச்சி நிலையில் புருணர் மூன்று நிலைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை:
    1. **செயல்படுநிலை:** கற்றல் செயல்களைச் செய்வதன் மூலம் நிகழ்கிறது. இதற்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டிக் கற்றுக் கொள்வதைக் கூறலாம்.
    2. **உருவகநிலை:** புலன்காட்சி வழி, மனதுக்குள்ளேயே சாயல்களைப் பயன்படுத்திக் கற்றல் நடைபெறுகிறது.



Downloaded From www.nagaicollege.com

3. **குறியீட்டு நிலை:** செயல்களை மொழியாக மாற்றி, இணைத்துக் கற்கும் நிலையே குறியீட்டு நிலை, ஒருவரின் தற்கருத்து வளர்ச்சி, அவருடைய உலகிலுள்ள பொருள்களின் சாயல்களைப் பொறுத்தது.

நாம் எவ்வாறு அறிவை அளிக்கிறோம், எவ்வாறு கற்பவரை அவருடைய கற்றல் நிலைக்கேற்ப வழிநடத்துகிறோம் என்பதற்கேற்பவே அறிவு வளர்ச்சி இருக்கும் என்பது புருணரின் கோட்பாடாகும்.

### 3.பியாஜேயின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு

ஜீன் பியாஜே என்னும் சுவட்ஸர்லாந்து உளவியலறிஞர் குழந்தையின் சிந்தனை மற்றும் அறிவு வளர்ச்சி பற்றி பொதுமைக் கருத்துகளை அறிவித்துள்ளார். அவரது கருத்துப்படி, குழந்தையின் வயதுக்கேற்ப, பல்வேறு படிநிலைகளில் அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது. இவருடைய அறிவுக்கோட்பாடு அறிவின் எல்லை மூலம் மரபியல் வழி மனிதனின் அறிவு மூலம் எல்லை, பண்புகளை அறியும் பண்புகளை ஆய்வாகக் கொண்டுள்ளது. அறிவு வளர்ச்சியில் உயிரியல் மரபுக் கூறுகளும், சூழலும் கொண்டுள்ள இடைவினை பற்றி இவரது ஆராய்ச்சி அமைந்தது. பியாஜே, அனைத்து அறிவு வளர்ச்சியும் மூன்று செயல்களால் நிகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார். அவை:

1. தன்வயப்படுத்துதல்
2. பொருந்துதல்
3. சமநிலைப்படுத்துதல்

1. **தன்வயப்படுத்துதல்:** புதியதாகப் பெறும் தகவல்களை, தான் ஏற்கனவே பெற்றுள்ள அறிவு அமைப்புடன் குழந்தை பொருத்திக் கொள்ளுதல்.
2. **பொருந்துதல்:** புதிய தகவல்களுக்கேற்ப ஏற்கனவே உள்ள அறிவு அமைப்பை மாற்றி, அதனோடு இயைந்து செல்லுதல்.
3. **சமநிலைப்படுத்துதல்:** தன் வயப்படுதலுக்கும், பொருந்துதலுக்கும் இடையே அறிவினைச் செயல்படுத்துவதிலே உண்டாகும் சமநிலையே சமநிலைபடுத்தலாகும். ஒரு குழந்தை ஏற்கனவே தான் உள்ள சூழலுக்கும், புதிய கற்றல் சூழலுக்கும் இடையே தன்னைச் சமநிலைப்படுத்திக் கொள்கிறது. மேலே சொன்ன மூன்று செயல்களாலும், குழந்தை தகவமைப்பைப் பெறுகிறது.

பியாஜே குழந்தையின் அறிவு வளர்ச்சி நிலைகளை நான்கு வகையாகப் பிரித்துள்ளார்.

1. புலனியக்கநிலை (பிறப்பு முதல் 2 வயது வரை)
2. செயலுக்கு முந்தைய நிலை ( 2 முதல் 7 வயது வரை)
3. பருப்பொருள் செயல்படும் நிலை (7 முதல் 12 வயது வரை)
4. கருத்தியல் நிலை (12 வயதுக்கு மேல்)

1. **புலனியக்கநிலை:** இந்நிலையில் குழந்தை தனக்கென்று ஓர் உலகத்தை உருவாக்கிக் கொள்கிறது. அதில் அதனுடைய உடல் தேவைகளும், புலன் உணர்வும் குழந்தையின் கற்றலுக்கு வழிவகுக்கிறது. இந்நிலையில் குழந்தை தன்னைச் சுற்றி என்ன நிகழ்கிறது என்று சிந்திப்பதை விட புலன்களைக் கொண்டு இயக்கிக் கற்றுக் கொள்கிறது. எட்டு மாதத்திற்கு பிறகு குழந்தை பொருள்களின் நிலைத்த தன்மை பற்றி அறிகிறது.



Downloaded From www.nagaicollege.com

அடிப்படை நினைவு தோன்ற ஆரம்பித்த உடன் பிறரைப் போலவே தானும் செய்யக் கற்றுக்கொள்கிறது.

2. **செயலுக்கு முந்தைய நிலை:** இந்நிலையில் மொழி வளர்ச்சி உருவாகிறது. பொருட்கள் மற்றும் செயல்கள் பற்றிக் குழந்தை சிந்திக்க ஆரம்பிக்கிறது. இதில் கருத்துக்கு முந்தியநிலை, உள்ளுணர்வு தோன்றும் நிலை என்ற இரண்டு நிலைகளும் அடங்கியுள்ளன. அறிவுநிலை வளர்ச்சி என்பது பெரியவர்களைக் கண்டு போலச்செய்வதாலும், குறியீடுகளைப் பயன்படுத்துவதாலும் நிகழும். குழந்தையின் காரணம் கண்டறிதலில் நெகிழ்ச்சியோ, முன்பின் மாற்றமோ இருக்காது. குழந்தை தன்னை மட்டுமே மையமாகக் கொண்டு சிந்தித்துச் செயல்படும். உயிரற்ற பொருட்களுக்கு, உயிருள்ளதாகக் குழந்தை பாவித்துக்கொண்டு, அவற்றோடு பேசுதல், விளையாடுதல் போன்ற செயல்களைச் செய்யும்.

3. **பருப்பொருள் செயல்படு நிலை:** இந்நிலை 7 வயது முதல் 12 வயது வரை இருப்பதால், இந்நிலையில் குழந்தைகளுக்குக் காரணத்தோடு சிந்தித்தலும், தன்னிலை முனைப்புக் குறைதலும் நிகழும். இந்நிலையின் முக்கியக்கூறுகள்:
    - பகுத்தறிதலும், தொகுத்தறிதலும் நடைபெறும்.
    - சிந்திப்பதில் நெகிழ்ச்சி இருக்கும்.
    - பொருட்களின் பயனைப் புரிந்து கொள்ளும் திறன் வளரும்.
    - வரிசைப்படுத்தலும், வகைப்படுத்தலும் குழந்தையிடம் நிகழும்.
    - ஒரு செயலின் முன் பின் மாற்றங்களைக் குழந்தை உணர ஆரம்பிக்கும்.

4. **கருத்தியல் நிலை:** இந்நிலையில் குழந்தை தன் எதிரில் இல்லாத பொருட்களையும், நடக்காத நிகழ்வுகளையும் பற்றிக் கற்பனையாகச் சிந்திக்கத் தொடங்கும். குழந்தையின் சிந்தனை முறைப்படியும், காரணங்கள் அடிப்படையிலும் ஒருங்கிணையத் தொடங்கும். இந்நிலையில் பின்வரும் கூறுகள் அமைந்துள்ளன:
    - பருப்பொருள் சிந்தனை
    - முறைப்படுத்தப்பட்ட தீர்வுகளைக் கொண்டிருத்தல்
    - சிக்கலைத்தீர்த்தல்
    - அறிவு மாற்றம் பெறுதல்.

**பண்பாட்டிற்கும் மொழிக்குமுள்ள தொடர்பு**

- மொழி என்பது ஆதிகாலத்தில் ஒலியில் தோன்றி சைகை மொழி, ஒலிக்குறியீட்டில் வளர்ந்து மொழி என்ற நிலையில் நின்றது. அதுவே பின் பேச்சுமொழி, எழுத்து மொழி என்று உயர்வு பெற்றது. அந்தந்த வட்டார, இனமக்கள் பேசியது அவர்களுடைய தாய்மொழியாகியது. அதில் தமிழ் மொழி மிகவும் தொன்மையானது. என்பதையே

**“கல்தோன்றி மண்தோன்றா காலத்தே**

**முன்தோன்றிய மூத்தக்குடி”.**

என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகிறது.



Downloaded From www.nagaicollege.com

- பண்பாடு என்பது மக்கள் வாழும் சூழலுக்கேற்ப அவரவர் பின்பற்றக்கூடிய ஒழுக்கநெறியே ஆகும். அதில் குறிப்பாக மொழி இலக்கியங்களின் மூலமே அந்தந்த காலங்களில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டினை அறிய முடிகிறது.
- தமிழ் மொழியின் இலக்கண இலக்கியங்களே தமிழர் பண்பாட்டினை எடுத்துரைக்கும் காலக்கண்ணாடியாகும்.
- பண்பாட்டினை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல பண்பாடு ஓர் ஊடகமாக செயல்படுகிறது.
- ஓர் சமூகத்தின் பண்பாடு, அவரவர் பேசும் மொழியின் வெளிப்பாட்டின் மூலம் சிறப்பு மற்றும் வளர்ச்சி பெறுகிறது. அதேபோல் மொழி சிறப்பு பெற்றால் பண்பாடு சிறப்பு பெறும். இவை இரண்டும் ஒரு பாலத்தில செல்லும் இணை கோடுகளாகும்.

**முடிவுரை**

இதன்மூலம் மனிதர்களின் உடல், உள்ளம், அறிவு ஆகிய மூன்றினையும் வளர்ச்சி பெறச் செய்வதே கல்வி என்பதை அறியலாம். தாய்மொழியாகிய தமிழ் கற்பித்தலின் நோக்கங்களையும், தமிழ்மொழியின் முக்கியத்துவத்தையும் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளமுடிகிறது. குழந்தை, தான் பிறந்தது முதல் கேட்டும், பேசியும் வரும் தாய்மொழி அக்குழந்தையின் அக வளர்ச்சிக்கும், புற வளர்ச்சிக்கும் துணை நிற்கிறது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும், கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், பிறரைப் புரிந்து கொள்ளவும் மொழியே அடிப்படைக் காரணியாகிறது என்பதையும் அதிலும் நம் தாய்மொழியாகிய தமிழின் பங்கு குறிப்பிடத்தக்கது என்பதையும் இவ்வியலின் மூலம் அறியலாம்.

**பயிற்சி வினாக்கள்**

1. தமிழ் மொழி கற்பித்தலின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்கள் குறித்து விரிவான கட்டுரை வரைக.
2. மொழிக் கற்பித்தலின் உளவியல் கோட்பாடுகளில் ஏதேனும் மூன்றினை விளக்குக.
3. பண்பாட்டிற்கும் மொழிக்குமுள்ள தொடர்பினை விளக்குக.



Downloaded From www.nagaicollege.com

# அலகு 2 கற்பித்தலுக்கான திட்டமிடல்

**நோக்கங்கள்:**

இப்பாடம் முடிவுறும் தருவாயில், மாணவ ஆசிரியர்கள்:

1. பாடம் கற்பித்தலுக்கான நோக்கங்களை புரிந்துகொள்வர்.
2. புளூமின் கற்பித்தல் கோட்பாட்டை பற்றி அறிந்துகொள்வர்.
3. அலகுத்திட்டம் மற்றும் கற்பிப்புத்திட்டத்தின் நோக்கங்களை உணர்ந்து பயன்படுத்துவர்.

**முன்னுரை**

கற்பித்தலைச் சிறப்பாக்குவதற்கும், வெற்றிகரமாக முடிப்பதற்கும் உள்ள திறவுகோல் வகுப்பறைப் பாடங்களை ஒழுங்காகத் திட்டமிடுதலேயாகும். எவற்றைக் கற்பிப்பது என்பதையும், எவ்வாறு கற்பிப்பது என்பதையும் ஆசிரியர் முன்கூட்டியே தெளிவாக அறிதல் வேண்டும். பாடம் கற்பிக்கப்படுவதன் முக்கிய நோக்கங்களையும், அப்பாடத்தை மாணவருக்குக் கற்பிக்கும்போது எவ்வாறு தொடங்குவது, எவ்வாறு புதிய செய்திகளை அமைப்பது, எந்தெந்தத் துணைக்கருவிகளை உபயோகிப்பது, பாடம் முடிந்தபின் குறிப்பிட்ட நோக்கங்கள் நிறைவேறினவா என்று அறிய எவ்வாறு சோதனை செய்வது போன்ற அனைத்தையும் முன்கூட்டியே திட்டமிடுதல் வேண்டும்.

**பாடம் கற்பித்தலின் படிநிலைகள்**

பாடம் கற்பித்தலின் பொழுதும், பாடம் கற்பிப்புத் திட்டம் எழுதும்பொழுதும் பின்பற்ற வேண்டிய படிநிலைகளை **ஹெர்பார்ட்டின்** என்பவர் வடிவமைத்தார். அப்படிநிலைகளுக்கு ஹெர்பார்ட்டின் படிநிலைகள் என்று பெயர். அவை:

1. ஊக்குவித்தல்
2. பாடவளர்ச்சி
3. தொடர்புபடுத்துதல்
4. பொதுக்கருத்தை உருவாக்குதல்
5. பயன்படுத்துதல்
6. மீள்பார்வை செய்தல்

1. **ஊக்குவித்தல்:** ஆசிரியர் ஒரு புதிய பாடப்பொருளை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு முன் அது பற்றிய அறிவினைப் பெறுவதற்கு மாணவர்களைத் தயார் செய்தல் வேண்டும். மாணவர்கள் ஆர்வத்துடன் புதிய செய்திகளை அறிந்து கொள்வதற்கு அவர்களைத் தயார் செய்வதே ஊக்குவித்தல் ஆகும்.

   **ஊக்குவிக்கும் வழிமுறைகள்:**

   - கற்பித்தல் பாடப்பொருளுடன் தொடர்புடைய முன்னறிவினை மாணவர்கள் பெற்றிருக்கிறார்களா என்று சோதித்தல்.
   - கற்பித்தல் பாடப் பொருளுடன் தொடர்புடைய செயல்களையும், நிகழ்ச்சிகளையும் கூறுதல்.
   - துணைக்கருவிகள் மூலம் புதிய செய்திகளைத் தொடர்புபடுத்துதல்.



Downloaded From www.nagaicollege.com

- மாணவர்களின் அன்றாட வாழ்க்கையோடு புதிய செய்திகளை இணைத்தல்.

2. **பாட வளர்ச்சி:** மாணவர்களை ஊக்குவித்த பிறகு பாடத் தலைப்பின் நோக்கங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பாடத் தலைப்பைக் கரும்பலகையில் எழுதி பாடத்தைத் தொடங்க வேண்டும். பாடப்பொருளின் வளர்ச்சி நிலைகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்ய வேண்டும். பாடவளர்ச்சியின் இடையில் கேட்கப்படும் வினாக்கள் மாணவர்களின் பாடப்பொருள் அறிவினைச் சோதிப்பதாக அமைய வேண்டும். வினாக்களை வகுப்பறையில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பயன்படும்படி திட்டமிட்டு வினவ வேண்டும்.

3. **தொடர்பு படுத்துதல்:** பாட வளர்ச்சியில் அளிக்கப்பட்ட செய்திகளுக்குத் தொடர்பான சான்றுகளைத் தொடர்புபடுத்த வேண்டும். செய்திகளைத் தொடர்ந்து அளித்துக் கொண்டே செல்லாமல் ஒவ்வொரு பாடப்பொருளுக்கும் பொருத்தமான விளக்கத்தை அளிக்க வேண்டும். கேள்விக் காட்சிக் கருவிகளைப் பாடத்துடன் இணைத்து ஒப்புமைப்படுத்த வேண்டும். இதனால் முக்கியமான பாடக்கருத்துக்களை மாணவர்களால் எளிதில் புரிந்து கொள்ள இயலும்.

4. **பொதுக்கருத்தை உருவாக்குதல்:** ஆசிரியர் தொடர்புபடுத்தலில் விளக்கப்பட்ட கருத்துகளையும், கொள்கைகளையும் தகுந்த முறையில் பொதுமைப் படுத்த வேண்டும். விதிகளைப் பொதுமைப்படுத்துதல் மூலம் புதிய கருத்தினைப் பெற இயலும்.

5. **பயன்படுத்துதல்:** மாணவர்கள், பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைச் சுட்ட வேண்டும். பொதுக் கருத்துக்களை சூழ்நிலையுடன் இணைக்கும் போது அன்றாட வாழ்க்கையோடு ஒரு தொடர்பு ஏற்படுத்துகிறது. கற்றல் பயிற்சி மாற்றம் செய்யப்படுவதால் கற்றல் நிலை பெறுகிறது.

6. **மீள்பார்வை:** இது இறுதிப்படிநிலை. மிக முக்கியமான இப்படிநிலையில் மாணவர்கள் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதை ஆசிரியரால் அளந்தறிய முடிகிறது. குறிப்பிட்ட வகுப்பறைக் கற்பித்தல் நோக்கங்கள் நிறைவேறி இருக்கின்றனவா என்று மதிப்பீடு செய்ய உதவுகிறது. ஹெர்பார்ட்டின் படிகள் அனைத்தையும் எல்லாப் பாடங்களுக்கும் எல்லா நேரங்களிலும் பயன்படுத்த இயலாது. எனவே, சில பாடங்களுக்கு ஹெர்பார்ட்டியின் படிநிலைகளில் உள்ள சில முக்கியப் படிநிலைகள் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தப்படலாம். ஆனால் கற்பிக்கும் பாடப்பொருளின் தன்மை, மாணவர்களின் தரம் ஆகியவற்றிற்கேற்ப சில பாடங்களில் சில படி நிலைகளை முற்றிலுமாக ஒதுக்கிடவும் செய்யலாம்.

**பாடம் கற்பித்தலுக்கான நோக்கங்களைத் தயாரித்தல்**

பாடம் கற்பித்தலுக்கான முதல் அடிப்படை பாடம் கற்பிப்புத் திட்டம் தயாரித்தல். பாடம் கற்பிப்புத்திட்டம் என்பது சில தலைப்புகளின்கீழ் அமைக்கப்பட்ட பாடப்பொருளைக் கற்பித்து நிறைவு செய்யவேண்டும் என்ற கருத்து இல்லை. பள்ளிக்கு வருகின்ற ஒவ்வொரு பிள்ளையையும் ஒரு நீர் கொள்ளும் பாத்திரம் என்று கருதி, நம்மிடம் உள்ள பாடத்திட்டம் என்ற நீரை அதன் தலையில் திணிக்க இயலாது. அல்லது ஒவ்வொரு பிள்ளையையும் களிமண் உருண்டையெனக் கருதி, ஆசிரியர் எண்ணியபடி, தமது கருத்துகளையெல்லாம் அவர்கள் மனத்தில் புகுத்தி, அவர்களைப் பொம்மைகளாக்கும் சிற்பி போல ஆசிரியர் அமைத்துவிடவும் முடியாது. பிள்ளைகள் ஒவ்வொன்றும் உயிருள்ள ஜீவன். அவர்களைக் கட்டுப்படுத்தி வைக்க


Downloaded From www.nagaicollege.com

இயலாது. அவர்கள் மிகுந்த சுறுசுறுப்புடன் செயல்படும் உயிர்கள். ஆகவே அவர்களுக்குப் பாடங்களை கற்பிக்கத் திட்டமிடும்போது, அவர்களையும் கற்றல் செயலில் ஈடுபடுத்தல் வேண்டும். இதுவே தற்கால முறையாகும்.

வகுப்பில் படிப்பது, படக்காட்சியைக் காண்பது அல்லது குறிப்புகள் தயாரிப்பது போன்ற செயல்கள் மனத்தைக் கட்டுப்படுத்துவன. வெளிபயணங்கள் அமைப்பதும், சோதனைகள் செய்வதும், செயல்திட்டங்களில் ஈடுபடுவதும் மாணவர்களை முழுதும் ஈடுபடுத்தும் செயல்களாகும். செய்து காட்டும் சோதனைகளில் சில மாணவரது கவனத்தை முழுதும் நிலைநிறுத்துவன. குறிப்புகள் எழுதிக்கொள்ளும்படி செய்தல், மாணவர்களைச் செயலில் ஈடுபடுத்தினாலும் அச்செயல் மிகச்சிறிய அளவே கவனத்தை நிலைநிறுத்தும்.

வகுப்பில் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு செயலும் மாணவர் மனத்தில் ஒவ்வொருவித விளைவினை ஏற்படுத்தும். ஒரு பாடப் பகுதியினைக் கற்பிக்கப் பயன்படுத்தும் செயல் ஒரு சில மாணவருக்கு எதிர்பார்க்கும் பலனை அளிக்கலாம். அதே செயல் மற்றொரு சாராருக்கு எவ்விதப் பயனும் அளிக்காமல் போகலாம். ஆகவே பாடம் கற்பித்தலுக்கு திட்டமிடும் போது பலவிதச் செயல்களைத் திட்டமிட்டால் கற்றல் எல்லா மாணவரிடத்தும் இயல்பாக நிகழும்.

### அலகுத்திட்டம் தயாரித்தல்

அலகுத்திட்டம் என்பது பாடப்பகுதியின் ஓர் அலகைக் கற்பிக்கத் திட்டமிடுவதாகும்.

ஓர் அலகு என்பது ஒரு குறிப்பிட்ட பாடக்கருத்தை மையமாகக் கொண்ட பாடம் கற்பிப்புத்திட்டங்களின் தொகுப்பாகும்.

நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு ஒரு பாடப்பகுதியை மட்டும் தேர்ந்தெடுத்து அதற்குக் கற்பிக்கத் திட்டமிடுவதே பாடகற்பிப்புத்திட்டமிடுதல் ஆகும். பாடம் கற்பிப்புத்திட்டங்கள் ஆசிரியருக்குக் கற்பித்தல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு துணை புரிகின்றன.

### அலகுப் பாடத்திட்டம்: வரையறை

பாடப்பொருள் கற்பித்தலுக்குத் தகுந்தவாறு பிரிக்கப்படாமல் இருக்கும் போது ஆசிரியர் அதனைச் சரியான அலகுகளாகத் திருத்தி அமைக்க வேண்டும். **பிரஸ்டன்** என்பவர் கருத்துப்படி, **“ஓர் அலகு என்பது தொடர்புடைய பாடக் கருத்துக்கள் அமைந்த பெரிய பாடப்பகுதியாகும். ஒரு குறிப்பிட்ட கருத்தினை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களின் தொகுப்பாக இது அமையும்.”**

ஓர் அலகுத்திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட தலைப்பிலுள்ள, ஒன்றுக்கொன்று தொடர்புடைய பாடம் கற்பிப்புத்திட்டங்களைக் கொண்டது. அலகுத்திட்டம் அப்பாடப்பகுதியைக் கற்றுக் கொடுப்பதற்குக் கிடைக்கும் பாடவேளைகளைப் பொறுத்து அமையலாம்.

பாடப் புத்தகத்திலுள்ள பாடப் பகுதிகளைத் தனித்தனியாகப் பிரித்துக் கற்பிக்கும் பொழுது கருத்துக்களின் இடையே தொடர்பில்லாமல் போகலாம். எனவே, ஒரு குறிப்பிட்ட அலகிலுள்ள பகுதிகளின் முழுக் கருத்தினையும் புரிந்து கொள்ளும்படி அலகுத்திட்டம் தயாரிக்க வேண்டும்.

### நல்ல அலகுத்திட்டத்தின் தன்மைகள்

1. மாணவர்களின் நிலை, சமுதாயச் சூழலிற்கேற்ப பாடப் பகுதியை அமைத்துக்கொள்ள வேண்டும்.


Downloaded From www.nagaicollege.com

2. மாணவர்களின் முன்னறிவை மையமாக வைத்து எளிய கற்றல் அனுபவங்கள் மூலம் அறியச் செய்யும்படி வைக்க வேண்டும்.
3. மாணவர்களின் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து வளமான வருங்காலத்திற்கு வகை செய்ய வேண்டும்.
4. பாடப்பகுதியின் வளர்ச்சி படிப்படியாக எளிமையானதில் இருந்து கடினம் நோக்கி செல்ல வேண்டும்.
5. அலகுத்திட்டம் கடினமானதாக இல்லாமல் ஆசிரியர் தேவைகளுக்கும், செயல் முறைகளுக்கும் ஏற்ப நெகிழும் தன்மை உடையதாக இருக்க வேண்டும்.

**அலகுத்திட்டத்தின் பயன்கள்**

- கற்பித்தல் பொது நோக்கங்களையும், சிறப்பு நோக்கங்களையும் தெளிவுபடுத்துதல்
- மாணவர்களின் தேவை, ஆர்வம், மனப்பாங்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் திட்டமிட உதவுதல்
- ஆசிரியரும், மாணவர்களும் இணைந்து சுதந்திரச் சூழ்நிலையில் செயல்படத் துணைநிற்றல்
- கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்
- காலவிரயம் தடுக்கப்படுதல்
- மாணவர்களின் உள்ளுணர்வுகளைத் தூண்டுதல்
- செயல்திறன் மேம்படுதல்
- அறிவை வாழ்க்கைச் சூழ்நிலையுடன் இணைத்துப் பயன்படுத்த உதவுதல்
- மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தல்
- செயல்திட்ட வேலைகளுக்குத் திட்டமிட உதவுதல்
- கற்பிப்பிதற்குத் தேவையான கருவிகளைத் தயாரிக்க ஆசிரியருக்கு உதவுதல்
- பாடம் கற்பிப்புத்திட்டத்தினைச் சிறப்பாக அமைக்க உதவுதல்.

**அலகுத்திட்டம் தயாரித்தலிலுள்ள படிநிலைகள்**

ஆசிரியர் அலகுத்திட்டம் தயாரிக்கும் முன் பாடப்பொருளைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அலகுத்திட்டம் தயாரித்தலில் உள்ள படிநிலைகள் பின்வருமாறு:

1. **தயாரித்தல்:** இது மாணவர்களை ஆர்வத்துடன் கற்றலில் தயார் செய்ய உதவுகிறது. புதிய தலைப்புகளுக்கு அலகுத்திட்டமிடும் பொழுது வாழ்க்கைச் சூழ்நிலையுடன் இணைத்துக் கற்பித்தலை மேற்கொள்வது நன்று.
2. **முன்னறிவைச் சோதித்தல்:** ஒரு புதிய அலகை மாணவர்களுக்குக் கற்பிக்கும் முன், எந்த அடிப்படையில் கற்பித்தலைத் தொடங்குவது என்பதைத் திட்டமிட மாணவர்களின் முன்னறிவைச் சோதிக்க வேண்டும்.
3. **பாடவளர்ச்சி:** பாடப்பொருளைக் கற்பிப்பதற்குத் தேவையான கற்பித்தல் கருவிகள், செயல்கள், பயிற்சி முறைகள், கற்பித்தல் முறைகள் ஆகியன திட்டமிடப்படுகின்றன.
4. **தொகுத்துக் கூறுதல்:** ஒரு குறிப்பிட்ட பாட அலகின் கீழ் அமைந்த அனைத்து உட்தலைப்புகளையும், ஓர் ஒழுங்கு முறையில் தொகுத்துக்கூற அலகுத்திட்டம் துணை செய்கிறது.
5. **மீள்பார்வை:** முழு அலகையும் கற்பித்த பிறகு, கற்பித்த பகுதிகளில் மாணவர்களின் புரிந்து கொள்ளும் தன்மையை மீண்டும் மீட்டறிவதற்கு மீள்பார்வை உதவுகிறது. பாடப்பொருளை ஒட்டிய சிறு வினாக்களின் மூலம் மீள்பார்வை செய்யலாம்.


Downloaded From www.nagaicollege.com

6. **மதிப்பிடுதல்:** பாட இறுதியில் கற்பித்தல் நோக்கங்களின் அடிப்படையில் மதிப்பிடுதல் அமைகிறது. மதிப்பிடுதலின் முடிவுகளை ஆராய்ந்து அதற்கு மீண்டும் பாடத்தை திட்டமிடுதல் வேண்டும்.

## அலகுத் திட்டம் எழுதுதல்

ஓர் அலகுத் திட்டத்தை எழுதுவதற்குப் பல்வேறு வடிவமைப்புகள் உள்ளன. எனினும் ஒரு நல்ல அலகுத்திட்டம் கீழ்க்கண்ட கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும்:

- அலகின் தலைப்பு
- அலகின் நோக்கங்கள்
- பாடத்தலைப்பில் அடங்கியுள்ள கருத்துக்கள்
- மையக்கருத்து
- கற்பித்தல் முறைகள்
- துணைக்கருவிகள்
- கால அளவு
- ஒப்படைப்பு
- மதிப்பிடுதல்

### அலகுத்திட்டத்தின் வடிவமைப்பு

### மாதிரிப் படிவம் -1

அலகின் பெயர் :
அலகின் நோக்கங்கள் :
பாடம் :
வகுப்பு :

| வ. எண். | பாடத் தலைப்புகள் | பாடங்களின் எண்ணிக்கை | பாடப்பொருளின் மையக்கூறுகள் | கற்பித்தல் முறைகள் | கற்பித்தல் கருவிகள் | கால அளவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |

மாதிரிப்படிவம் 1 ஐ நிரப்பிய பின் படிவம் 2ன் அடிப்படையில் அலகுத்திட்டம் அமைக்கப்படல் வேண்டும்.

### படிவம்-2

அலகின் பெயர் :
அலகின் நோக்கங்கள் :
பாடம் :
வகுப்பு :



Downloaded From www.nagaicollege.com

| வ. எண். | பாட உட்கருத்துகள் | பாட எண்ணிக்கை | கற்றல் கற்பித்தல் முறைகள் | ஒப்படைப்புகள் | மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | | | | | |

**பாடம் கற்பிப்புத் திட்டம் வடிவமைத்தல்**

பாடப் பொருளுக்கு ஏற்பவும், மாணவர்களின் தரம், வயது, வகுப்பு, மனவளர்ச்சி, உணர்வு அடிப்படையிலும் வகுப்பறைச் செயல்களை அமைக்கும் திட்டமே பாடம் கற்பிப்புத் திட்டமாகும்.

**கார்டர் வி.குட்:**"கற்பிப்பதற்கு முக்கியமான கருத்துக்களை ஓர் ஒழுங்கு முறைப்படி அமைக்கும் திட்டமாகும். இதில் கற்பித்தல் நோக்கங்கள், படிக்க வேண்டிய மேற்கோள் நூல்கள் மற்றும் ஒப்படைப்புகள், வினாக்கள் போன்றவைகள் அடங்கும்."

**பாடம் கற்பிப்புத்திட்டமிடுதலில் அடங்கியுள்ள கூறுகள்**

ஒரு பாடம் கற்பிப்புத்திட்டம் என்பது கீழ்க்காணும் கூறுகளைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

- ஆசிரியரின் செயல்கள்
- ஆசிரியரின் பாடப்புலமை
- மாணவர்களைப் பற்றி ஆசிரியர் அறிந்தவை
- ஆசிரியர் அறிந்துள்ள கல்வி நோக்கங்கள்
- கற்பிக்க வேண்டிய பாடப்பொருள்
- கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல்.

**புளும் என்பாரின் கற்பித்தல் நோக்கங்களின் வகைப்பாடு**

கல்வியாளர்கள் வரையறுத்த நோக்க வகைப்பாடு பல இருந்தாலும் அவற்றுள் சிறந்ததாக பெஞ்சமின் புளும் வடிவமைத்தது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவருடைய வகைப்பாட்டில் மாணவரின் வளர்ச்சி மூன்று பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை

1. அறிவுப் பகுதி
2. உணர்வுப் பகுதி
3. உள-இயக்கப் பகுதி எனப்படும்.

**அறிவுப்புலம் சார்ந்த நோக்கங்கள்**

கல்வியில் மாணவர்கள் செய்திகளைப் பாடமாக மட்டும் கற்காமல் அவற்றைப் புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்தவும், வாய்ப்பு கிடைத்தால் அவர்களுடைய மேல்நிலைப் படிப்பிற்கும் பயன்படுத்துவதாக உள்ளது.


Downloaded From www.nagaicollege.com

1. **அறிந்து கொள்ளுதல்**
   அடிப்படை அறிவைக் குறிப்பிடும் இதில் கருத்துகள், கோட்பாடுகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதலை குறிப்பிடுவது. நினைவாற்றலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
2. **புரிந்து கொள்ளுதல்**
   செய்திகளுக்கு விளக்கம் கூறுதல், எடுத்துக்காட்டுகள் தருதல், செய்திகளைத் தொடர்புபடுத்துதல் போன்ற விவரங்களை அடக்கியது.
3. **பயன்படுத்துதல்**
   கற்பித்தலின் முக்கிய நோக்கமே பெற்ற அறிவைப் புதிய சூழலில் பயன்படுத்துதல் ஆகும். இது மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்கப்படுத்துவதற்கு பயன்படக்கூடியதாகும்.

4. **பகுத்தாராய்தல்**
   பொதுவான கருத்துகளில் இருந்து அதன் பகுதிகளைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து, அந்த பிரிவுகளுக்கிடையே உள்ள தொடர்புகளை அறியச் சொல்வது ஆகும்.

5. **தொகுத்தாராய்தல்**
   ஒரு தலைப்பில் அமைந்த தனித்தனி செய்திகளை ஒருங்கிணைத்து பொதுக் கருத்துகளை செய்திகளை அமைக்கும் திறன் ஆகும். பகுத்தலுக்கு நேர் எதிரான செயல் ஆகும்.
6. **மதிப்பிடுதல்**
   கற்றல் கற்பித்தல் நிகழ்வினை அறிய அளவிடுதலை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுதல் நடைபெறுகின்றது.

**உணர்வுப்புலம் சார்ந்த நோக்கங்கள்**

மாணவர்களின் மன எழுச்சியை வளர்க்கின்றன. இது அடிப்படையில் மாணவர்களுடைய பாராட்டுணர்வை வளர்த்து, அவர்களுக்கு கருத்துகளின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தி அவற்றை நன்குணர்ந்து ஆராய்ச்சி செய்யும் மனப்பான்மையை ஏற்படுத்துகிறது

1. **ஏற்றுக்கொள்ளுதல்**
   சில சூழ்நிலைகளையும், தூண்டல்களையும் ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்வதற்கான உணர்நுட்பம் ஆகும். தூண்டலைப்பெற வேண்டுமாயின் கவனத்தை மேற்கொள்ள வேண்டும். கவனம் தூண்டலை நீட்டிக்கிறது.
2. **துலங்கல்**
   ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல், புலன்களால் நன்கு உணரப்பட்டபின் தொடர்ந்து துலங்கல் நடைபெறும். இந்நிலை தொடர்ந்து கவனத்துடன் துலங்களுக்காக எழுச்சி அடைவதாகும்.
3. **மதிப்பளித்தல்**
   மதிப்பளித்தல் என்பது ஒரு செயலைப் பற்றி மதிப்பிடுதல் என்பதைக் குறிக்கும். மதிப்பளித்தலில் மதிப்பை ஏற்றுக்கொள்ளுதல், மதிப்பிற்கு முன்னுரிமை கொடுத்தல், பொறுப்புணர்தல் என்ற மூன்று கூறுகள் உள்ளன.
4. **ஒழுங்கப்படுத்தல்**
   மதிப்பிடுதலில் கிடைத்த செய்திகளை இணைத்து முடிவுகளை உருவாக்குவது ஒழுங்குப்படுத்துதலாகும்.


Downloaded From www.nagaicollege.com

5. **பண்பாக்குதல்**
   இது பண்பினை வளர்த்தல் என்பதைக் குறிக்கும். சரியான மதிப்பிடுதலிலிருந்து ஒழுங்குப்படுத்தப்பட்ட செய்திகளைத் தொடர்ந்து பயன்படுத்தும் தன்மை வாழ்க்கையில் பண்பாக உருவாகிறது.

**உள-இயக்கப்புலம் சார்ந்த நோக்கங்கள்**

இது மன இயக்கத்துடன் உடல் தசைகள் ஒருங்கிணைவதால் செய்யப்படும், மனப்பாங்கின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் செயல்களைக் கொண்டது.

1. **புலக்காட்சி**
   உற்றுநோக்குதல் திறன், பிரச்சனையை உணருதல் திறன் மற்றும் சுய ஆர்வத்தை வளர்த்தல் திறன் ஆகியவைகளைப் புலன் காட்சி செயல்படுத்துகின்றது.
2. **போலச்செய்தல்**
   திரும்பத்திரும்ப, ஒரே மாதிரியான செயல்களை நிகழ்த்துவதற்கும், சிந்தனை அடிப்படையில் ஒத்திசைவுச் செயல்களை உருவாக்குவதற்கும் இப்பகுதி காரணமாகிறது.
3. **தானே செய்தல்**
   சூழ்நிலைக்கு உகந்தவாறு நுண்ணறிவைப் பயன்படுத்தி அதே மாதிரியான ஆனால் மாறுபட்ட வழிமுறைகளை உள்ளடக்கிய செயல்கள் யாவும் இப்பகுதியைச் சேர்ந்தது.
4. **துல்லியமாகச் செய்தல்**
   இதில் சோதனைகள் அமைத்தலில் பொருத்தமுடைமை, செயற்படுத்துதலில் துல்லியம், கருவிகளைத் தவறின்றிக் கையாளும் திறன் ஆகியவை அடங்கும்.
5. **கலையாக்கல்**
   கலையாக்கலில் தர்க்கரீதியான சிந்தனை, கணக்கிடுதல் திறன், மனத்திறன் போன்ற உட்கூறுகள் அடங்கும்.
6. **இயல்பாக்குதல்**
   ஒரு செயலைத் திரும்பத்திரும்பச் செய்யும் போது அது இயல்பான பழக்கமாகிவிடுகிறது. வெற்றி அடைதல் திறன், பல்வகை செயல்களை நிர்வகித்தல் திறன், ஒருங்கிணைத்தல் திறன் போன்ற உட்கூறுகள் இதில் காணப்படுகின்றன.

**நான்கு கட்ட கற்பிப்புத்திட்ட அட்டவணையின் அமைப்பு**

ஒவ்வொரு ஆசிரியரும் வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ளுவதற்கு முன்பாக, மேற்கொள்ள வேண்டிய கற்பித்தல் செயல்களை நன்கு திட்டமிட்டுப் பாடம் கற்பிப்புத்திட்டத்தை எழுத வேண்டும். தமிழ் கற்பித்தலின் நவீன நுட்பங்களை வெளிப்படுத்தும் வகையில் பாடம் கற்பிப்புத் திட்டம் எழுதப்பட வேண்டும். பாடம் கற்பிப்புத் திட்டம் பின்வரும் வடிவத்தில் எல்லோராலும் எழுதப்பட்டு வருகிறது.

**பாடம் கற்பிப்புத்திட்டம் வடிவமைப்பு**

கற்றல் - கற்பித்தல் அனுபவங்கள் நோக்கங்களைப் பொறுத்தும், நோக்கங்களை அடைவதற்கான கற்றல் அனுபவங்கள் பாடப்பொருளைப் பொறுத்தும் அடிப்படையில் அமைகின்றன. நோக்கங்களின் அடைவை அளந்தறிய மதிப்பிடுதல் பயன்படுகிறது. எனவே பாடப்பொருள், நோக்கக்கூறுகள், கற்றல் அனுபவங்கள், மதிப்பீடு ஆகிய நான்கும் வரிசை அடிப்படையில் தொடர்புடையன. 45 நிமிடங்களுக்கான பாடப்பொருள் சிறுசிறு பகுதியாகப் பிரிக்கப்படுகிறது. ஆசிரியர் பாடத்திட்டத்தை எழுதுவதற்கு முன் அப்பாடப்பகுதியைப் பற்றிய


Downloaded From www.nagaicollege.com

ஆழ்ந்த அறிவைப் பெற்றிருக்க வேண்டும். எனவே கற்பிக்க வேண்டிய பாடப்பகுதியை நன்கு படித்துப் பொருளுணர்ந்த பின்னர் தான் பாடம் கற்பிப்புத் திட்டத்தை எழுத வேண்டும்.

**கற்பித்தல்**

கற்பித்தல் என்பது மாணவருடைய நடத்தையில் (அறிவுப்புலம், உணர்வுப்புலம், உடலியக்கப் புலம் ஆகிய புலங்களில்) மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஆசிரியர் வகுப்பறையில் வழங்குகின்ற செய்கைகளும் செயல்களும் ஆகும்.

இன்று, பொதுவாக ஆசிரியர்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர் மையக் கற்பித்தல் முறைகளையும், குழந்தை மையக் கற்பித்தல் முறைகளையும் வகுப்பறையில் பயன்படுத்துகின்றனர்.

**கற்றல்**

ஆசிரியரது செயல்களின் தூண்டலினால், மாணவர்களின் நடத்தைகளில் வெளிப்படும் நிரந்தரமான மாற்றங்கள் கற்றல் எனப்படும். ஒரு பாடத்தைக் கற்ற பின்பு மாணவர்கள் வெளிப்படுத்தும் நடத்தைகளை ஆசிரியர் கண்ணால் பார்க்க இயலும்: அந்நடத்தைகளைச் சில அளவுகோல்களால் அளக்க முடியும். பொதுவாக, மாணவர்கள் தாங்கள் கற்றதைப் பேசுதல், எழுதுதல், ஒப்பித்தல், செய்து காட்டுதல் போன்ற நடத்தைகளில் வெளிப்படுத்துவர்.

**கற்பிப்புத் திட்டத்தின் நான்கு முக்கிய கூறுகள்**

ஓர் ஆசிரியர் தனது கற்பிப்புத் திட்டத்தை நான்கு கூறுகள் உள்ள முறையில் எழுதித் தயாரிக்க வேண்டும்.

1. **பாடப்பொருள்:** ஒரு பாடத்தில் ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்க விரும்பும் மிக முக்கிய பாடக்கருத்துக்கள் பாடப்பொருள் எனப்படும். இதைக் கற்பிப்பதால் ஒரு மாணவரிடம் அறிதல் புலம், உணர்வுப் புலம், உடலியக்கப் புலம் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுகிறது. அதாவது, மாணவர்களிடம் அறிவு, உணர்வு, திறன் ஆகியன வளர்ச்சி அடைகின்றன.
2. **நடத்தை விளைவுகளைக் குறிப்பிடுதல்:** பாடத்தைக் கற்கும் மாணவரிடம் ஏற்படும் நடத்தையின் விளைவுகளைக் குறிப்பிட்டு எழுத வேண்டும். பொதுவாக, நடத்தை விளைவுகளைக் குறிப்பிடும்போது கண்ணால் காணக்கூடிய செயல் சார்ந்த வினைச் சொற்களைத் ‘தல்’ விகுதி பயன்படுத்தி எழுத வேண்டும். (எ.கா. கூறு-கூறுதல், எழுது-எழுதுதல், பாடு-பாடுதல், வரை-வரைதல், ஒப்பிடு-ஒப்பிடுதல், ஒப்பி-ஒப்பித்தல்.)
3. **கற்றல் அனுபவங்கள்:** கற்றல் அனுபவங்கள் என்பது ஒரு பாடப்பொருளைக் கற்க வகுப்பறையில் ஆசிரியர், மாணவர் ஆகிய இருவரும் செய்யும் செயல்களால் கிடைக்கும் பயிற்சிகளாகும். ஆசிரியர் கற்பிக்க விரும்பும் பாடப்பொருளை எப்படி கற்பிக்கப் போகிறார் என்ற குறிப்புகள் இடம் பெற வேண்டும்.(இது ஆசிரியர் செயல்) கற்பித்த பாடப்பொருளை மாணவர்கள் கற்பதற்குச் செய்யும் பயிற்சிகள் என்னென்ன என்பதைக் குறிப்பிட வேண்டும் (இது மாணவர் செயல்.)
4. **மதிப்பீடு:** வகுப்பில் மாணவர்கள் பெற்ற கற்றல் அனுபவங்களின் காரணமாக அவர்களிடையே கற்றல் நிகழ்ந்துள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்காக, ஆசிரியர் என்னென்ன கேள்விகளைக் கேட்பார் என்பதைக் குறிப்பிட வேண்டும். ஒரு நல்ல கற்பிப்புத்திட்டம் நேர்கோட்டு உறவில் கீழ்க்கண்டவாறு அமையும்.



Downloaded From www.nagaicollege.com

## பாடம் கற்பிப்புத்திட்டம் - மாதிரிப்படிவம்

மாணவ ஆசிரியர் பெயர் :
வகுப்பு∴ பிரிவு மற்றும் காலம் :
பள்ளியின் பெயர் :
பாடம் :
அலகு :
தலைப்பு :

**கற்பித்தலின் நோக்கங்கள்:**

**மாணவர்**

- ..............................................நினைவுகூர்தல்
- ..............................................விளக்குதல்
- ..............................................உதாரணம் தருதல்
- ..............................................வரிசைப்படுத்திக் கூறுதல்
- ..............................................வேறுபடுத்திக்காட்டுதல்
- ..............................................சுட்டிக்காட்டுதல்

**வழிகாட்டலுக்கு தேவைப்படும் ஆதாரங்கள் ∴ வளங்கள்:**

இருபரிமான, முப்பரிமாண மாதிரிகள், வரைபடங்கள், சுழலட்டைகள், சொல்லேணி, படத்தொகுப்பு போன்ற வழிகாட்டலுக்கு தேவைப்படும் வளங்களைப் பட்டியலிடுதல்.

**கற்பவருக்கான முந்தைய அறிவு :**

மாணவர்களைக் கற்றலுக்குத் தயார்படுத்துவதற்காகவும், பாடப்பொருள் தொடர்பான முன்னறிவைச் சோதிப்பதற்காகவும் ஆசிரியர் மாணவர்களை எளிமையான வினாக்களைக் கேட்டு ஊக்குவிக்க வேண்டும்.

| பாடப்பொருள் | கற்றலின் நடத்தைக் கூறுகள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| | | | |

**தொடர் செயல்பாடுகள் (ஏதேனும்):**

**வழிகாட்டி ஆசிரியர் கையொப்பம்** **மாணவ ஆசிரியர் கையொப்பம்**

**நான்கு கட்ட அட்டவணையின்படி மாதிரி கற்பிப்புத் திட்டம் தயாரித்தல்**



Downloaded From www.nagaicollege.com

**முடிவுரை**

பாடங்கற்பிக்கச் செல்லும் ஆசிரியர், வகுப்பறைக்குச் செல்லுமுன் பாடப்பகுதி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய செயல்களை முன் கூட்டியே திட்டமிட்டு எழுதி வைத்துக் கொள்ளும் துணைக்கையேடே பாடம் கற்பிப்புத்திட்டம் ஆகும். இது மாணவர்கள் அடைய வேண்டிய கற்றல் விளைவுகளைக் கருத்தில் கொண்டு, புளூமின் கற்றல் கோட்பாடுகளை பயன்படுத்தி எழுதப்படுகிறது. இதன் மூலம் ஆசிரியர் கற்பித்தலை தொடங்குமுன் எதை, எவ்வாறு, எப்படிக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதை அறியலாம். இது காலவிரயத்தைத் தடுப்பதுடன், வகுப்பறை வேலைகளை வரிசையாகவும், ஒழுங்காகவும் செயல்படுத்த உதவும்.

**(உரைநடை) பாடம் கற்பிப்புத்திட்டம்**

| | | |
|---|---|---|
| **மாணவ ஆசிரியர் பெயர்** | : | ஒஒஒஒஒஒஒ |
| **பள்ளியின் பெயர்** | : | சாரதா மேல்நிலைப்பள்ளி |
| **வகுப்பு.்.பிரிவு மற்றும் காலம்** | : | ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவு |
| **பாடம்** | : | உரைநடை |
| **அலகு** | : | உணவே மருந்து |
| **தலைப்பு** | : | உணவின் இன்றியமையாமை |

**கற்பித்தலின் நோக்கங்கள்:**

**மாணவர்:**

- ❖ உணவே மருந்து பாடத்தில் உணவின் இன்றியமையாமை என்ற பாடப்பகுதியை **வாசித்துக்காட்டுவார்.**
- ❖ உடல்நலம், உளநலம் பெறும் முறைகளைப்பற்றி கற்பித்தப் பாடப்பகுதியில் ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்குப் **பதிலுரைப்பார்.**
- ❖ பொருந்திய உணவு, பொருந்தா உணவை தனது **சொந்த வாக்கியத்தில் எழுதுவார்.**
- ❖ தவிர்க்க வேண்டிய உணவு வகைகளை **கண்டறிந்து எழுதுவார்.**
- ❖ உணவின் இன்றியமையாமைப் பாடப்பகுதியை **தொகுத்துக்கூறுவார்.**

**வழிகாட்டலுக்கு தேவைப்படும் ஆதாரங்கள்.். வளங்கள்:**

- ❖ சமச்சீர் உணவு - வரைபடத்தாள்
- ❖ உணவு அவற்றின் பயன்கள் - பொருத்தட்டை
- ❖ மருந்தான உணவுப் பொருட்கள் - மாதிரிகள்
- ❖ நோய்களும், நோய் நீக்கும் மருந்துகளும் - சுழலட்டை

**கற்பவருக்கான முந்தைய அறிவு :**

ஆசிரியர் கீழ்க்காணும் வினாக்கள் மூலம் மாணவர்களின் முந்தைய அறிவினை சோதித்தல்

உங்களுக்கு தெரிந்த மருந்து வகைகள் யாவை?
உணவில் மருந்துப் பொருட்கள் உண்டா?


Downloaded From www.nagaicollege.com

உணவில் உள்ள மருந்துப் பொருட்கள் சில கூறுக.

| பாடப்பொருள் ∴கருத்து | கற்றலின் நடத்தைக் கூறுகள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| மருந்துப் பொருட்கள் | வாசித்தல் கூறுதல் நினைவுகூர்தல் எழுதுதல் | ஆசிரியர் உணவில் உள்ள மருந்துப் பொருட்கள் எவையெவை என வினவுகிறார். ஆசிரியர் தயாரித்த வாசிப்பு, கரும்பலகையில் எழுதுதல். மாணவர்கள் மருந்துப் பொருட்களை நினைவு கூர்கின்றனர். | 1.மருந்தாகப் பயன்படும் உணவுப் பொருட்களுக்கு இரண்டு உதாரணம் கூறுக. 2. மருந்தான உணவுப் பொருட்களின் பெயர்களை எழுதிக்காட்டுக. |
| உணவின் இன்றியமையாமை | வாசித்தல், விளக்கிக்கூறுதல்எழுதுதல் | ஆசிரியர் உணவின் இன்றியமை-யாமையை விளக்கிக்கூறுகிறார். கரும்பலகையில் எழுதுகிறார். மாணவர்கள் கேட்டுக் குறிப்பெடுக்-கின்றனர். உணவு உண்ண வேண்டிய அவசியத்தை வாசித்துப் பழகுகின்றனர். | 1.உடலுக்கு வலிமை தரு- பவை யாவை? 2.உணவின் இன்றியமை-யாமையை வாசித்துக்-காட்டுக. 3.உணவின் இன்றியமை - யாமையை குறிப்பேட்டில் எழுதுக. |
| இயற்கை உணவு முறை | வாசித்தல் தெளிவாக்குதல் எழுதுதல் | ஆசிரியர் இயற்கை உணவு முறை-யினையும், இயற்கையோடு இயைந்த பழக்கவழக்கங்களையும் தெளிவாக வாசித்துக்காட்டுகிறார். உணவும் அவற்றின் பயன்களும் எழுதிய பொருத்தட்டையை காட்டுகிறாார். மாணவர்கள் இயற்கை உணவை கடைபிடிப்பதன் மூலம் கிடைக்கக்-கூடிய உடல் நலத்தையும், உள-நலத்தையும் குழுவாக அமர்ந்து வாசித்து பழகுகின்றனர். | 1.இயற்கையான உணவு முறையின் பயனைக் கூறுக. 2.உடல்நலம் பெறும் முறையைக் கூறுக. 3.உளநலம் பெறுவதற்கான காரணங்களை எழுதிக்காட்டுக. |
| நோய் நீக்கும் மருந்துப் பொருட்கள் | வாசித்தல், உதாரணம் கூறுதல், எழுதுதல் | ஆசிரியர் நோய் நீக்கும் மருந்து பொருட்களுக்கு உதாரணம் கூறி மாதிரிகளைக் காட்டுகிறார். மாணவர்கள் நோய் நீக்கும் மாதிரி மருந்துகளைக் கவனித்து | 1.நோய் நீக்கும் மருந்துப் பொருட்ளுக்கு இரண்டு உதாரணம் தருக. 2. நோய் நீக்கும் மருந்துகள் பாடப்பகுதியை |


Downloaded From www.nagaicollege.com

| | | | |
|---|---|---|---|
| | | மேலும் சிலவற்றை உதாரணமாகக் கூறுகின்றனர். | வாசித்துக்காட்டுக. |
| நாம் உண்ண வேண்டிய உணவு | வாசித்தல், வரிசைப்படுத்திக் கூறல், எழுதுதல | ஆசிரியர் நாள்தோறும் நாம் உண்ண வேண்டிய உணவு முறைகளை வரைபடத்தாள் மூலம் வரிசைப்படுத்திக் கூறுகிறார். மாணவர்கள் ஆசிரியர் வாசிப்பதை கவனித்துக் குழுவாகப் பிரிந்து வாசித்துப் பழகுகின்றனர். | 1.காலையில் நாம் உண்ண வேண்டிய உணவு வகைகளைக் கூறுக. 2.இரவில் நாம் உண்ண வேண்டிய உணவு முறைகளை எழுதிக்காட்டுக. |
| துரித உணவுமுறை | வாசித்தல் சுட்டிக்கூறுதல் எழுதுதல் | ஆசிரியர் தவிர்க்க வேண்டிய உணவு வகைகளை சுட்டிக்கூறுகிறார். மாணவர்கள் ஆசிரியர் கூறிய துரித உணவுகளின் தீங்கினை குழுவுடன் பேசிப்பகிர்ந்து கொள்கின்றனர். | 1.உடலிற்கு பொருந்தும் பொருந்தா உணவுகளைக் சுட்டிக்கூறுக. 2.தவிர்க்க வேண்டிய உணவு முறைகளுக்கு இரண்டு உதாரணம் தருக. 3.துரித உணவுமுறையின் தீங்கினைப் பற்றி எழுதுக. |
| சரிவிகித உணவுகள் | வாசித்தல் பட்டியலிட்டுக் கூறல் | ஆசிரியர் வரைபடத்தாளில் சமச்சீர் உணவினை பட்டியலிட்டு வாசித்துக் காட்டுகிறார். கரும்பலகையில் எழுதுகிறார். மாணவர்கள் நமது உடலிற்கேற்ற சரிவிகித உணவுகளை விளக்கிக் கூறுகிறார். | 1.சமச்சீர் உணவு என்றால் என்ன? 2.சரிவித விகித உணவிற்கு உதாரணம் தருக. 3.உடலிற்கேற்ற சரிவித உணவு பட்டியலை எழுதுக. |
| கற்பித்த பாடப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துக்கள் | தொகுத்துக் கூறல் சுருக்கிக்கூறல் | படித்த பாடப்பகுதியிலுள்ள முக்கியக் கருத்துக்களைச் சுருக்கியும் தொகுத்தும் சொல்லி மாணவர்கள் குழுவாகப் பயிற்சி செய்கின்றனர். | கற்பித்த பாடப்பகுதியில் இருந்து உணவின் இன்றியமையாமைப் பற்றி தொகுத்துச் சொல்லுக. 2.கற்பித்த பாடப்பகுதியில் இருந்து உணவே மருந்து பற்றி சுருக்கி எழுதுக. |



Downloaded From www.nagaicollege.com

**தொடர் செயல்பாடுகள் (ஏதேனும்):**

கற்பித்த பாடப்பகுதியின் அடிப்படையில்

1. உணவின் இன்றியாமையை பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.
2. மருந்தாகப் பயன்படும் உணவுப் பொருட்களைப் பற்றி உன் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் கேட்டு எழுதி வருக.
3. பொருந்தும்-பொருந்தா உணவுப் பொருட்களைப் பற்றிய செய்திகளை நாளிதழ்களிலிருந்து சேகரித்து வருக.

**வழிகாட்டி ஆசிரியர் கையொப்பம்** **மாணவ ஆசிரியர் கையொப்பம்**

**(செய்யுள்) பாடம் கற்பிப்புத்திட்டம்**

| | | |
|---|---|---|
| **மாணவ ஆசிரியர் பெயர்** | : | ஒஒஒஒஒஒஒ |
| **பள்ளியின் பெயர்** | : | சாரதா மேல்நிலைப்பள்ளி |
| **வகுப்பு.ஃ.பிரிவு மற்றும் காலம்** | : | ஒன்பதாம் வகுப்பு ‘அ’ பிரிவு |
| **பாடம்** | : | செய்யுள் |
| **அலகு** | : | பாஞ்சாலி சபதம் |
| **தலைப்பு** | : | விதுரனைத் தூதுவிடல் |

**கற்பித்தலின் நோக்கங்கள்:**

**மாணவர்:**

- ❖ பாரதியார் பற்றிய **ஆசிரியர் குறிப்பினைக் கூறுவார்.**
- ❖ பாஞ்சாலி சபதத்தின் **நூற்குறிப்பினைக் கூறுவார்.**
- ❖ ‘விதுரனைத் தூதுவிடல்’ செய்யுளை ஒலிநயம் தோன்ற **வாசித்துக்காட்டுவார்.**
- ❖ ‘தம்பி’ எனத்தொடங்கும் செய்யுளிலுள்ள புதிய சொற்களுக்கு **சொற்பொருளைக் கூறுவார்.**
- ❖ செய்யுளின் மையக் கருத்தினை **விளக்கிக் கூறுவார்.**
- ❖ செய்யுளில் இடம்பெறும் சொற்களுக்கு இலக்கணக்குறிப்பினை **தெளிவாக எடுத்துரைப்பார்.**
- ❖ செய்யுளில் இடம்பெறும் சொற்களுக்கு பகுபத உறுப்பிலக்கணத்தை **சுட்டிக்காட்டுவார்.**
- ❖ செய்யுளின் கருத்தினை **தொகுத்துக் கூறுவார்.**



Downloaded From www.nagaicollege.com

**வழிகாட்டலுக்கு தேவைப்படும் ஆதாரங்கள்∴ வளங்கள்:**

- ❖ பாரதியார் பற்றிய குறிப்பு (அல்லது) உருவப்படம் - வரைபடத்தாள்
- ❖ அருஞ்சொற்பொருள் - பொருத்தட்டை
- ❖ இந்திர மாநகர் மண்டபம் - மாதிரி

**கற்பவருக்கான முந்தைய அறிவு :**

ஆசிரியர் கீழ்க்காணும் வினாக்கள் மூலம் மாணவர்களின் முந்தைய அறிவினை சோதித்தல்

மகாபாரதம் யாரைப் பற்றிய கதை என்று தெரியுமா?

பாண்டவர்களின் பெயர்களைக் கூறுக.
பாண்டவர்களின் மனைவி யார்?
திரௌபதியின் வேறு பெயர் என்ன?

| பாடப்பொருள் ∴கருத்து | கற்றலின் நடத்தை கூறுகள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| ஆசிரியர் குறிப்பு | நினைவு கூர்தல், ஆசிரியர் குறிப்பு கூறுதல் | ஆசிரியர் வரைபடத்தாளி-லிருந்து பாரதியாரைப் பற்றி கூறுகிறார்.<br>மாணவர்கள் வரைபடத்தாளை பார்த்து பாரதியார் பற்றிய கருத்துக்களை நினைவு-கூர்கின்றனர். | பாரதியார் பற்றிச் சில குறிப்புகளைக் கூறுக. |
| நூல் குறிப்பு | நூற்குறிப்பு கூறுதல் | ஆசிரியர் வாசிப்பு அட்டையிலிருந்து நூற்குறிப்பினைக் கூறுகிறார்.<br>பாஞ்சாலி சபதம் நூலின் தோற்றம் பற்றிய நூற்குறிப்பினை மாணவர்கள் தங்களுக்குள் படிக்கின்றனர். | 1.பாஞ்சாலி சபதம் என்னும் நூல் எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது?<br>2. பாஞ்சாலி சபதம் நூல் குறிப்பினைக் கூறுக. |



Downloaded From www.nagaicollege.com

| | | | |
|---|---|---|---|
| ‘தம்பி’ எனத் தொடங்கும் செய்யுள் | ஒலிநயம் தோன்ற வாசித்துக் காட்டுதல் | ஆசிரியர் செய்யுளை ஒலிநயம் தோன்ற வாசித்துக் காட்டுகிறார். மாணவர்கள் சிறு குழுக்களாகப் பிரிந்து ஒலிநயத்துடன் வாசித்துப் பழகுகின்றனர். | ‘தம்பி’ எனத் தொடங்கும் செய்யுளை ஒலிநயம் தோன்ற வாசித்துகாட்டுக. |
| செய்யுளில் உள்ள புதிய சொற்கள் | சொற்பொருள் கூறுதல் | ஆசிரியர் செய்யுளில் இடம்பெற்ற மடப்பிடி, களிக்க, நுந்தை போன்ற புதிய சொற்களுக்கு சொற்பொருள் விளக்கம் கூறுகிறார்.<br>மாணவர்கள் செய்யுளிலிலுள்ள புதிய சொற்களுக்கு பொருள் விளக்கம் சொல்லியும், எழுதியும் காட்டுகின்றனர். | 1.மடப்பிடி, நுந்தை – பொருள் விளக்கம் கூறுக.<br>2. களிக்க- என்பதன் பொருளை கரும்பலகையில் எழுதுக.<br>1.‘தம்பி’ எனத் தொடங்கும் செய்யுளை ஒலிநயம் தோன்ற வாசித்துக்காட்டுக.<br>2.செய்யுளின் மையக் கருத்தினைக் கூறுக. |
| செய்யுளின் பொருள் | செய்யுளின் மையக் கருத்தினைக் கூறுதல் | ஆசிரியர் செய்யுளின் மையக் கருத்தினைக் கூறுகிறார். அதை மாணவர்கள் குறிப்போட்டில் எழுதுகின்றனர். எழுதியதை மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து படித்து மகிழ்கின்றனா | |
| இலக்கணக்குறிப்பு | தெளிவாக எடுத்துரைத்தல் | | 1.‘மாநகர்’ - இலக்கணக் குறிப்பு கூறுக.<br>2.‘சார்ந்தவர்’ - இலக்கணக்குறிப்புக் கூறுக. |
| பகுபத உறுப்பிலக்கணம் | சுட்டிக் காட்டுதல் | ஆசிரியர் செய்யுளில் வரும் சொற்களுக்கு இலக்கணக் குறிப்பினை தெளிவாக எடுத்துரைக்கிறார். மாணவர்கள் செய்யுளில் வரும் இலக்கணக்குறிப்புகளை கையேட்டில் எழுதுகின்றனர். | 1.கடந்து – பகுபத உறுப்பிலக்கணம் கூறுக. |



Downloaded From www.nagaicollege.com

| | | | |
|---|---|---|---|
| கற்பித்த செய்யுள் பகுதியின் முக்கிய கருத்துக்கள் | தொகுத்துக் கூறுதல் சுருக்கமாகக் கூறுதல் | ஆசிரியர் செய்யுளில் இடம்பெறும் சொற்களுக்கு பகுபத இலக்கணத்தினை கரும்பலகையில் சுட்டிக்காட்டி விளக்கம் அளிப்பார். மாணவர்கள் அவ்விலக்கணத்தை நன்கு கவனித்து தனது குறிப்பேட்டில் குறித்துக்கொள்வார். படித்த செய்யுள் பாடப்பகுதியிலுள்ள முக்கியக் கருத்துக்களைச் சுருக்கியும் தொகுத்தும் சொல்லி மாணவர்கள் குழுவாகப் பயிற்சி செய்கின்றனர். | 2.செல்வான் - பகுபத உறுப்பிலக்கணத்தை குறிப்பேட்டில் எழுதிக்காட்டுக. 1.விதுரனைத் தூதுவிடல் செய்யுள் பகுதியின் கருத்தினை சுருக்கமாகக் கூறுக. 2.விதுரன் வழியில் கண்ட காட்சிகளை தொகுத்துக் கூறுக. |

**தொடர் செயல்பாடுகள் (ஏதேனும்):**

கற்பித்த பாடப்பகுதியின் அடிப்படையில்

1. மகாபாரதக் கதையை மூல நூலிலிருந்து அல்லது பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்து வருக.
2. பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றி ஒரு சிறுகுறிப்பு வரைக.
3. சூழ்ச்சிச் சருக்கத்தின் கதைச் சுருக்கத்தை கலந்துரையாடல் செய்க.

**வழிகாட்டி ஆசிரியர் கையொப்பம்** **மாணவ ஆசிரியர் கையொப்பம்**

**பயிற்சி வினாக்கள்**

1. ஹெர்பார்டின் பாடம் கற்பித்தலுக்கான படிநிலைகளை விளக்குக.
2. அலகுத்திட்டம் என்றால் என்ன? ஒன்பதாம் வகுப்பு பாடத்திற்கு அலகுத்திட்டம் ஒன்று தயாரிக்க.
3. புளுமின் கற்பித்தல் வகைப்பாட்டினை விளக்குக.
4. ஒன்பதாம் வகுப்பு செய்யுள் பாடம் ஒன்றிற்கு பாடம் கற்பிப்புத்திட்டம் ஒன்று தயாரிக்க.



Downloaded From www.nagaicollege.com

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்**


- **கலைச்செல்வி.வெ ,(2014)** *பொதுத்தமிழ் கற்றல்-கற்பித்தல்,* ஈரோடு: சஞ்சீவ் வெளியீடு.
- **பழனிவேலு.ஞா (2011),***செந்தமிழ் கற்பித்தல் பொதுத்தமிழ்,* தஞ்சாவூர்: நதிபப்ளி‘ர்ஸ்.
- **வேணுகோபால் இ.பா.** (2014), *பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள்,* சென்னை: சாரதா பதிப்பகம்.
- **மகாகவி பாரதியார்** ,(1997), *பாரதியார் பாடல்கள்* , சென்னை: குமரன் பதிப்பகம்.
- **புலவர் குழந்தை,** (2007), நீதிக்களஞ்சியம், சென்னை: சாரதா பதிப்பகம்
- **வா.செ.குழந்தைசாமி**, இது கல்வி யுகம், சென்னை: பாரதி பதிப்பகம்.




Downloaded From www.nagaicollege.com

## அலகு–3 கற்பித்தல் திறன்களில் பயிற்சி பெறுதல்

### நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றப் பின்னர் மாணவ ஆசிரியர்கள்,

- தமிழ் மொழி கற்பித்தல் திறன்களை வெளிப்படுத்துவர்.
- குறுநிலைக் கற்பித்தலின் படிநிலைகளைப் பின்பற்றுவர்.
- உரைநடை, கட்டுரைக் கற்பித்தலுக்குப் பொருத்தமான முறைகளைப் பின்பற்றுவர்.
- செய்யுள் கற்பித்தலுக்குரிய சிறப்பு உத்தியை மேற்கொள்வர்.
- இலக்கணத்தின் இனிமையை எடுத்துரைப்பர்.

### முன்னுரை

கற்பித்தல் ஒரு திறன் மட்டுமன்றுளூ கலையுமாகும்.நூலறிவு மட்டுமே கற்பித்தல் திறனை வளர்த்து விடாது. பேருந்து ஓட்டக் கற்பவர், பேருந்தின் உறுப்புகள், இயக்கம் ஆகியன பற்றிய செய்திகள் அடங்கிய நூலைப் படித்து அடைவு பெற்று விட்டோ, பேருந்து ஓட்டலில் ஏற்படும் சிக்கல்கள் என்பது பற்றி நூலளவில் தெரிந்துகொண்டோ பேருந்தை ஓட்டிவிட முடியாது. பேருந்து ஓட்டும் திறன், பேருந்து ஒட்டிப் பார்த்துப் பழகுவிப்போர் அறிவுரைகளாலும் பழகுவோர் முனைப்பாலும் நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ளும் திறத்தாலும் பெறுவதாகும்.அதேப்போல் கற்பித்தல் திறனும் அத்தன்மையதே!ஆசிரியர் கல்வி பெறும் நாள்களில் குறுநிலைக் கற்பித்தல் திறன்களிலும் படிநிலைகளிலும் பயிற்சி பெறல், உரைநடை ,செய்யுள், இலக்கணம், கட்டுரை ஆகியனகற்பிக்கப் பயிற்சி பெற்றால் எதிர்நாளில் கற்றலைத் தயக்கமின்றி கற்பிக்க இயலும் ஊக்கம் பிறக்கும். ஊக்குவிக்கும் இவற்றை, ஆசிரியர் கல்வி பெறும் காலத்து அறிந்து தேர்வது இன்றியமையாததாகும்.

### கற்பித்தல் - விளக்கம்

“மாணவருக்கு அறிவைப் புகட்டும் நோக்கில், ஆசிரியர் மாணவருக்கிடையே நிகழும் ஊடாட்டமே கற்பித்தல்”என வரையறுக்கப்படுகிறது.மாணவன் மனத்தில் நிலைபெறச் செய்யவேண்டுமாயின்,ஐம்புலன்களும் உணருமாறுகற்பித்தல் வேண்டும்.

கற்பித்தல் செயல்பாட்டில் பல்வேறு கற்பித்தல் திறன்களை ஒருங்கிணைத்து ஏதேனும் ஒரு பாடப்பொருளை விளக்குவது சிறந்தது ஆகும்.

கற்பிப்பு நடத்தைகளாக வெளிப்படும் செயல்களைக் கல்வியாளர்கள் தத்தம் அணுகுமுறைகளுக்கு ஏற்ப வகைப் படுத்தியுள்ளனர். அவற்றைக் கற்பித்தல் ஆற்றல் என்றும் கற்பித்தல் உத்திகள் என்றும் கொள்வர்.

### முக்கிய கற்பித்தல் திறன்களைப் புரிந்து கொள்ளல்

முக்கிய கற்பித்தல் திறன்களாக கீழ்கண்டத் திறன்கள் அமைகின்றன.அவை:

1. தொடங்குதல் திறன்
2. விளக்குதல் திறன்
3. பொழிப்புரைத் திறன்
4. வினாக் கேட்டல் திறன்
5. தூண்டல் மாற்றுத் திறன்
6. மொழிச்சாராக் குறிப்புத் திறன்



Downloaded From www.nagaicollege.com

7. வலுவுட்டல் திறன்
8. முடிக்கும் திறன்
9. சரளமாகப் பேசும் திறன்

இவை, ஒன்பது திறன்களையும் ஆசிரிய மாணவர் பெறுவதற்காகக் குறுநிலைக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

**தொடங்குதல் திறன்**

கற்பித்தல் செயல்முறையில் பாடத்தைத் தொடங்கும் முறை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. பாட அறிமுகம் செய்யும் தன்மையால், ஆசிரியர் சிலர் மாணவர்களின் கவனத்தை அப்பாடம் முழுவதும் ஈர்த்து விடுகின்றனர். "நல்ல தொடக்கம் பாதிப் பணியை முடித்ததற்கு ஒப்பாகும்" என்பது கற்பித்தலிலும் பொருத்தமாக அமைகிறது.

- **முன்னறிவுத் தொடர்**

புதிய அறிவை ஏற்றுக்கொள்வது எளிய செயலன்று. எனவே, புதிய அறிவுப்பகுதியைக் கற்பிக்கத் தொடங்கும் பொழுது மாணவர்களது முந்தைய அறிவையும் தகுந்த முறையில் இணைத்துத் தருதல் வேண்டும்.

- **ஏற்ற விடை தந்தமை**

முன்பு பெற்ற அறிவை நினைவூட்டுதலுக்காக வினாக்கள் கேட்கப்படும்பொழுது, அவற்றில் ஏற்ற விடை தந்ததனை எத்தனை என அறிதல் வேண்டும். ஏற்ற விடை தந்தவை மிகுதியாயிருப்பின் பாடம் நன்கு தொடங்கப்படுகிறது என்றும், ஏற்ற விடைகள் இல்லையாயின் தொடக்கம் சரியில்லை என்றும் நாம் அறியலாம்.

- **தொடர்ச்சி**

ஆசிரியர் கூறும் தொடர்கள்மூலம், பெறும் புதிய அறிவு, மாணவர்கள் ஏற்கெனவே பெற்ற அறிவின் தொடர்ச்சி போன்றதாக அமைதல் வேண்டும். தொடர்கள், அத் தொடர்ச்சியை உணர்த்துகின்றனவா என்று அறிதல் வேண்டும். ஒரு கருத்தை, அடுத்த கருத்து தொடர்ந்து இயல்பாக அமையுமாறு பேச்சு அமைதலையே தொடர்ச்சி என்கிறோம்.

- **பொருத்தமான தொடர் - புறம்பான தொடர்**

பொருத்தமான தொடர்கள் மிகுதியாக வரும்படியும், பாட நோக்கத்திற்குப் பொருத்தமில்லாத தொடர்கள் வராதபடியும் திட்டமிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

- **தொடங்குமுறை**
    - புதிய பாடத்துடன் ஒப்புமையுடைய கருத்துகளைக் கூறித் தொடங்குதல்
    - வினாக்கள் கேட்டு விடைகளை வரவழைத்துத் தொடங்குதல்.
    - விளக்குதல், வருணித்தல், சொற்பொழிவுகள் மூலம் தொடங்குதல்.
    - குதைக் கூறி தொடங்குதல்.
    - நடித்தல் முறை மூலம் தொடங்குதல்
    - துணைக்கருவிகளைப் பயன்படுத்தித் தொடங்குதல்
    - செய்துகாட்டல் மூலம் தொடங்குதல்


Downloaded From www.nagaicollege.com

எனப் பாடத் தலைப்புக்கேற்ற முறையைப் பின்பற்றித் தொடங்குதல் சிறப்புடையது எனப் பயிற்சிபெற்ற ஆசிரியர் பலர் தம் பட்டறிவினால் கூறுகின்றனர்.

**விளக்குதல் திறன்**

ஆசிரியர் பாடம் கற்பித்தலில், விளக்குதல் திறன் சிறப்பிடம் பெறுகிறது. திறம்பெற விளக்குதல் நடைபெற்றால், மாணவர்கள் பாடப்பொருளை நன்கு உணர்வார்கள்.

வகுப்பறையில் விளக்குதலுக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. ஷஎவ்வாறு, எப்போது, யார், எவை, ஏன், எப்படி, எது' என்னும் வினாக்களை எழுப்பி விளக்குவதால், அவற்றிற்கு உரிய விடையைச் சொல்லுவதால் மாணவர்கள் விளக்கம் பெறுகின்றனர்.மொழிப்பாடத்தில் பாடல்களைக் கற்பிக்கும்பொழுதும், விளக்கங்கள் மிகுதியாக இடம் பெறுகின்றன. எனவே, விளக்குதலில் திறன்பெறுதல் இன்றியமையாததாகிறது.

- **தொடங்கும் தொடர்**

பாடப்பகுதி எவையாயினும் சரி, விளக்கும்போது தொடங்குதொடர் மையக்கருத்தை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். எதனைப்பற்றி விளக்க இருக்கிறோம் என்பதனைத் தொடங்கும்பொழுதே அறிதல் வேண்டும்.

- **இணைப்புச் சொற்கள்**

ஒன்றை விளக்கும்போது, ஒரு கருத்தோடு மற்றொரு கருத்தை இணைத்து, இயைபுபடுத்திக் கூறுவதற்கு இணைப்புச் சொற்களைப் பயன்படுத்துவோம். அத்தகைய இணைப்புச் சொற்களுள் ஏற்றவற்றை இடமறிந்து பயன்படுத்த வேண்டும். சில தொடர் இணைப்புச்சொற்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*ஆனால், ஆகவே, அவ்வாறு, இவ்வாறு,*

*அதோடு, ஆகையால், எனவே, பின்னர்,*

*பின், முன், ஏனெனில், எப்படியெனில்,*

*எவ்வாறெனில், இதன் காரணமாக, இதிலிருந்து,*

*இது தொடர்பாக, அதன் காரணமாக, இதன் விளைவாக,*

*அத்தகைய, இப்படியிருப்பின், இல்லாதிருந்தால்,*

*இதனால், இருந்திருந்தால், அதோடுகூட.*

- **முற்றுவிக்கும்தொடர்**

கற்பித்தல் பகுதி எப்படி நல்ல தொடக்கம் அமைகிறதோ, அதேபோன்று தெளிவாக முடிவு பெறுதலும் வேண்டும். முடிவுபெறுதல் திறம்பட அமைந்தால், மாணவர்கள் கற்றவற்றைத் தொகுத்துக்கொள்ள முடியும்.

- **விளக்குதலில் வினாக்கள்**



Downloaded From www.nagaicollege.com

விளக்குதலில் அமைந்த வினாக்கள் அனைத்தும் ஏற்ற விடைகள் பெறுமாயின், விளக்குதல் திறம்பட நடைபெற்றது எனக் குறிப்பிடப்படுகிறது.

**3. பொழிப்புரைத் திறன்**

செய்யுளுக்கு உரைநடை வடிவில் பொருள் விளக்கம் அமையும்.இது செய்யுளுக்கே பொருத்தமுடையதாகும்."செய்யுள் முதலியவற்றின் பொருளைத் திரட்டி, தொகுத்துக் கூறுதல்பொழிப்புரைத் திறன்" எனப்படும்.

**எடுத்துக்காட்டு,**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத்தூறும் அறிவு".

**பொழிப்புரை**

மணிலின்கண் கேணி தோண்டிய அளவிற்கு நீர் ஊறும் அது போல மக்களுக்குக் கற்ற அளவிற்கு ஏற்ப அறிவு மிகுதியாகும்.

**4.வினாக்கேட்டல் திறன்**

ஆசிரியர் கற்பித்தலுக்கு உறுதுணையாக அமைவது வினாக் கேட்டல் திறன் ஆகும். பாடப்பொருளைக் கற்பிப்பதற்கு அவர் வினாக்கள் கேட்கின்றார். அவற்றைக் கற்பித்தல் வினாக்கள் என்பர். கற்பித்த பின்னர் அவர்கள் பாடப் பொருளை நன்கு அறிந்துள்ளனரா என அறியவும் வினாக்கள் கேட்கின்றார். அவற்றைத் தேர்ந்தறி வினாக்கள் என்பர். இவ்வாறு வினாக்களை ஆசிரியர் மிகுதியும் பயன்படுத்துகின்றார்.

எதிர்பார்க்கும் விடைகளைப் பொறுத்து வினாக்களைப் பின்வருமாறு அமையும்.

- **எளிய நிலை வினாக்கள்,**

எளிய நிலை வினாக்கள் நினைவாற்றலை மையமாகக் கொண்டு விடை பெறுவன. ஏற்கெனவே இருக்கும் அறிவு நிலையைச் சோதிப்பன. இவ்வினாக்களுக்கான விடைகளில் மாணவரதுக் கருத்துகள் வெளியாவதில்லை.

- **இடைநிலை வினாக்கள்,**

இவை கருத்துணர்தல் நிலையில் விடைகளைப் பெறுவன. ஒரு தொடரின் பொருளை விளக்குதல், தொடரின் பொருள் உணர்ந்து ஒப்பிடல் போன்றவை இந்த வகையைச் சாரும்.மாணவர்தம் அறிவைப் புதிய சூழ்நிலையில் பயன்படுத்தும் தன்மையானவற்றைக் குறிக்கும் வினாக்களை இடைநிலை வினாக்கள் என்பர்.

- **உயர்நிலை வினாக்கள்**

உயர்நிலை வினாக்கள் மாணவர் அறிந்ததிலிருந்து அதற்கு அப்பாற்பட்ட அறிவுப் பகுதிகளை அடையத் தூண்டுவனவாகும். தாங்கள் பெற்ற அறிவினின்று மேலும் சென்று பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடுதல் போன்ற வற்றைச் செய்து விடை தரும்படியாக இவை அமையும். புதிர்தீர்த்தல், முன்கூட்டியே உய்த்துணர்தல், தீர்மானித்தல், தானே படைக்குமாற்றலைத் தருதல் போன்றவை உயர் நிலை வினாக்களால் விளைவனவாம்.மேலும்


Downloaded From www.nagaicollege.com

- அறிவு நிலை வினாக்கள்
- கருத்துணர்தல் வினாக்கள்
- அறிவைப் பயன்படுத்தும் வினாக்கள்
- சிந்தனை வினாக்கள்

இவ்வகை வினாக்களுள் அறிவு நிலை வினாக்களை,எளிய நிலை வினாக்கள் என்றும், கருத்துணர்தல், அறிவைப் பயன்படுத்துதல் போன்ற வினாக்களை இடைநிலை வினாக்கள் என்றும், சிந்தனை வினாக்களை உயர்நிலை வினாக்கள் என்றும் கூறுவர்.

**5.தூண்டல் மாற்றுத் திறன்**

இத்திறன் பல்வகை தூண்டல் எனவும் பெயர் பெறும். அவை:

- **ஆசிரியர் இட மாற்றம்**

ஆசிரியர் ஒரே இடத்தில் நிலையாக நின்று கற்பிக்காமல் நகருதல் வேண்டும். கரும்பலகையில் எழுதுதல், மாணவர்கள் அருகே சென்று பாராட்டல், நாட்டுப்படத்தில் ஓர் இடத்தைக் காட்டுதல், ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்லுதல் போன்ற செயல்கள் இடநிலைமாற்றம் அல்லது அசைவு எனப்படும்.

- **மெய்ப்பாடுகள்**

பாடப்பொருளின் தன்மைக்கேற்ப உணர்வுகளை ஆசிரியர் வெளிப்படுத்துவதும், சைகைகளைப் பயன் படுத்துவதும் உண்டு. இவற்றையே மெய்ப்பாடு என்பர். ஷகுறுகலானது, அகன்றது, உருண்டையானது, நீளமானது' என்னும் தொடர்களைக் கூறும்போது, ஆசிரியர் சைகைகளைக் காட்டுவதும், உணர்வுகளைக் குறிப்பிடும் பொழுது முகம் சுளித்தல், முகமலர்ச்சி ஆகியவற்றை முகக்குறிகளால் காட்டுவதும் மெய்ப்பாடுகளையே சாரும். எனவே, உணர்வை வெளியிடும்போதும், அளவு, இயக்கம், வடிவம் ஆகியவற்றைக் குறிக்கும்போதும் மெய்ப்பாடுகளைப் பயன்படுத்தலாம். சொற்களோடுகூட, மெய்ப்பாடுகளும் இணையும்போது கவன ஈர்ப்பையும், கவன நிலைப்பையும் அதிகரிக்கச் செய்கிறது. கைகளால் மட்டுமன்றி, தலை, உடல் ஆகிய உறுப்புகளின் மூலமும் மெய்ப்பாடுகள் தோன்றுமாறு செய்யலாம்.

- **குரல் ஏற்றத் தாழ்வு**

ஒரே சீரான பேச்சு, ஒலிப்பு என்பது சலிப்புத் தன்மையைத் தோற்றுவிக்கும். அதன் காரணமாகக் கவனம் நிலைக்காதுளூ கற்றலும் நிகழாது. எனவே, கற்பித்தலின் போது குரலில் ஏற்றத்தாழ்வுகள், மாறுதல்கள் வேண்டும். வீர உரையைப் படிக்கும்பொழுதும், இரக்க உணர்ச்சிபற்றிக் கூறும் பொழுதும், கோபத்தை உணர்த்தும் சொற்களைப் படிக்கும் பொழுதும் குரலில் ஏற்றத்தாழ்வு ஏற்பட வேண்டும். வினா, உணர்ச்சி வாக்கியங்களை அவை வெளிப்படுத்தும் உணர்வுக்கு ஏற்ப ஒலிக்க வேண்டும். உயிர்ப்புடனும் உணர்வுடனும் குரல் ஒலியில் ஏற்ற இடங்களில் ஏற்றத்தாழ்வுகள் அமைந்தால், கவன ஈர்ப்பு ஏற்பட்டு, கற்றல் மிக அதிக அளவில் நடைபெறும்.

- **கவனம் ஈர்த்தல்**

ஆசிரியர் பாடம் கற்பிக்கும்போது,“இப்பொழுது சொல்வது மிகமுக்கியம் கவனியுங்கள்” என்னும் சொற்களின் மூலம் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கலாம்ளூ அல்லது சொற்களில் அழுத்தம் கொடுத்தும் கரும்பலகையில் எழுதியவற்றுள் சிலவற்றை அடிக்கோடிட்டுக் காட்டியும்


Downloaded From www.nagaicollege.com

வண்ணங்களால் எழுதிக்காட்டியும் மாணவர்கள் கவனத்தை ஈர்க்கலாம். வரைபடம், படம் ஆகியவற்றில் சுட்டிக்காட்டுதலும் மாணவர்களின் கவனம் ஈர்த்தலுக்கே யாகும். இவ்வாறு பலவழிகளில் மாணவர்கள் கவனத்தை ஈர்க்கலாம்.

- **இடைவினை மாற்றம்**

கற்பித்தலின்போது ஆசிரியர் பேசுகிறார்ளூ மாணவர்கள் கேட்கின்றனர். எனவே, கற்பித்தலின்போது தாம் செயல்படுவதோடு, மாணவர்களும் செயல்படத் திட்டமிட வேண்டும். மாணவர்களிடம் வினாக்கள் கேட்டு, அவர்களைப் பதில் கூறச்செய்தல், மாணவர்களைக் கரும்பலகையில் எழுதச் செய்தல், ஒருவரை வினா கேட்கச்செய்தல் போன்றவற்றின் மூலம் மாணவர்கள் செயல்பட வாய்ப்பளிக்கலாம். இதுவே ஷவினைமாற்றம்’ எனப்படும். இதனை ஷஇடை வினைமாற்றம்’ எனவும், ஷமாணவர் பங்களிப்பு’ என்றும் கூறுவர். இவ்வினை மாற்றத்தை,

ஆசிரியர் - வகுப்பு ஆசிரியர் - மாணவர்

மாணவர் - மாணவர் என்னும் அமைப்பில் கொள்ளலாம்

- **நிறுத்தம்**

ஆசிரியர் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது இடையில் சற்றுப் பேச்சை நிறுத்தினால்..... மாணவர்கள் அனைவரும் கவனிக்கத் தொடங்குவர். விளக்கம் தரும்போதோ, நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போதோ, வினாக்கள் கேட்கும்போதோ, தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போதோ, திட்டமிட்டு வேண்டுமென்றே பேச்சு நிறுத்தம் செய்வது கவனத்தை ஒருமுகப்படுத்துவதோடு சிந்தனையையும் தூண்டும்.

- **புலன் மாற்றம்**

வகுப்பில் ஆசிரியர் பேசும்பொழுது மாணவர்கள் கேட்கின்றனர். மாணவர்களது செவிப்புலன் (கேட்டல்) பயன்படுகிறது. கரும்பலகையில் எழுதும்பொழுதும், படங்களைக் காட்டும்பொழுதும், பொருள்களைக் காட்டும்பொழுதும் அவற்றைப் பார்க்கின்றனர். அப்பொழுது மாணவர்களது கட்புலன் (பார்த்தல்) பயன்படுகிறது. இவ்வாறு செவிப்புலனும் கட்புலனும் (கேட்டல், பார்த்தல்) செயல்பட வாய்ப்பளிப்பதே ஷபுலன்மாற்றம்’ எனப்படும்.

எந்தப் பாடமாக இருந்தாலும் காட்சி, கேள்வி அமைப்பில் கற்பித்தல் நிகழ்ந்தால் கற்றல் சிறப்புறும். காட்சி - கேள்வி நிகழ்வுகள் மாறிமாறி அமைதல் நல்லது. கீழ் வகுப்புகளில் முகர்தல் புலனையும், தொடுதல் புலனையும் கையாளும் வாய்ப்பு ஏற்படின், ஆசிரியர் அவற்றையும் நன்முறையில் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அமைவதனைப் ஷபுலன்வகைத் தூண்டல் மாற்றம்’ என்றும், சுருக்கமாகப் ஷபுலன்மாற்றம்’ என்றும் கூறுவர்.

**6.மொழிச்சாராக் குறிப்புத் திறன் அல்லது சைகை மொழித்திறன்**

ஆசிரியர் கற்பிக்கும் போது வகுப்பறையில் அவருடைய தோற்றம், மொய்ப்பாடு முதலியன மாணவரின் கவனித்தலையும் கற்றலையும் ஊக்குவிப்பனவாகும்.

ஆசிரியர் மாணவர்கள் கவனிப்பதை உறுதிசெய்யவும் கற்பிப்பின் பால் மாணவர்கள் ஈர்க்கவும் பல உத்திகள் உள்ளன. அவற்றுள் மெய்ப்பாடுகள் சிறப்பிடம் வகிக்கின்றன. மெய்ப்பாடுகளின் மூலம் ஆசிரியர் பல கருத்துகளை வலிமையாக உணர்ந்த முடியும்.



Downloaded From www.nagaicollege.com

இவற்றை "சைகைமொழி" எனவும் கூறுவர். வகுப்பில் 40 மேற்பட்ட மாணவர்கள் இருக்கின்ற சூழலில் ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் பெயரிட்டு அழைக்க முடியாத சூழலில் விரலால் சுட்டி அழைக்கலாம்.

வகுப்பறையில் கவனிக்காது குறும்பு செய்யும் மாணவர்களை ஆசிரியர் தம் பார்வையினால் எச்சரிக்கை இயலும்.

விரலை நீட்டுதல், சொடுக்குதல், முகத்தை திருப்புதல், மாணவரின் துலங்களுக்கு ஏற்ப முகப்பாவணைகளை வெளிப்படுத்துதல், ஓரக்கண்ணால் பார்த்தல், முறைத்து பார்த்தல் போன்ற சைகைமொழிகளும் ஆசிரியருக்கு தேவையாகும்.

ஆசிரியர் ஒரே போக்கில் உரையாடி கொண்டு இருக்காமல் அவ்வப்போது மெய்ப்பொருள் மூலம் பாடம் பொருக்கு ஏற்ற சுவைகளை வெளிப்படுத்துவதலும் கற்பித்தலை வளப்படுத்த முடியும். சுருங்ககூறின் வகுப்பறை ஆசிரியர் தனி நடிப்பு நிகழ்த்தும் ஒரு மேடையாகும்.

**7.வலுவூட்டல் திறன்**

ஆசிரியர் வகுப்பில் கற்பிக்கும் பொழுது வினாக்கள் கேட்கின்றார். வினாக்களுக்கு மாணவர் விடை யளிக்கின்றனர். மிகச் சரியான விடை அளிக்கின்றபோது ஆசிரியர் ஒன்றும் சொல்லாது, அடுத்து வேறு வினா கேட்டால் மாணவர் மகிழ்ச்சி அடையார். கற்றலில் ஊக்கம் பெறார். சரியான விடையானது ஆசிரியரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என ஆசிரியர் சொல்லாலோ, பிற குறிப்புகளாலோ தெரிவிப்பின் மாணவர் மகிழ்வுறுவர். அவ்வாறு நன்கு படித்து முறையாக விடையளித்தலுக்கு ஆசிரியரது செயல் வலுவூட்டுகிறது. அதனை ஷவலுவூட்டி' என்பர். பாராட்டல் என்றும் கூறலாம்.

வலுவூட்டிகள் சரியான முறையில் பயன்படுத்தப் படுமானால்,

- தங்கள் விடை சரி என்று தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டு.
- மேலும் படிக்க மாணவரைத் தூண்டும்
- மாணவர் நடுவில் சமூக ஏற்பு நிகழ்வதால் கற்றல் சூழலில் விருப்பம் ஏற்படும்.
- மாணவருக்கு மகிழ்ச்சி ஏற்படும்
- நல்ல செயல்கள், நடத்தைகள் வலுப்படும்
- வகுப்பு நடைமுறைச் செயலில் மாணவர் பங்கேற்பு மிகுதியாகும்
- அடுத்து வரும் வினாக்களுக்கான விடைகளை எதிர்நோக்கச் செய்யும். இதனால் கவனம் பெருகும்.

ஆனால், எதிர்மறையிலான வலுவூட்டிகள் (தவறு-தப்பு-சரியில்லை போன்றவை) கற்றலுக்குத் துணைபுரிவ தில்லைஇ இதனால் மாணவர் வேறொரு நிலையில் விடைதரத் தயங்கிப் பின் வாங்கி விடுவர். எனவே வலுவூட்டிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தினால் கற்றல் சிறக்கும். தேவையில்லாத போதும், அதிகமாகவும் இவற்றைப் பயன்படுத்துதல் கூடாது.

வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் போது கீழ் உள்ள கருத்துகளை மனத்தில் கொள்வது நன்று.

1. வலுவூட்டிகளை மாணவர் பலரும் பெறுமாறு செய்தல் வேண்டும். சிலர் மட்டுமே பெற்றால், நாளடைவில் மற்றவர்கள் விடை தருவதில் கலந்து கொள்ள மாட்டார்கள்.


Downloaded From www.nagaicollege.com

2. வலுவூட்டிகளில் பலவற்றையும் பயன்படுத்த வேண்டும். விடையின் தரத்திற்கேற்ப, இவற்றின் தகுதியும் அமைதல் வேண்டும். இல்லையேல் மாணவர் ஆர்வம் குறைந்து விடும்.

3. வலுவூட்டிகளைக் கண்டபடி பயன்படுத்துதல் சிறந்ததன்று. அவ்வாறாயின் இதன் வலு குறைந்துவிடும்.

- **மொழிச் சார்புடைய வலுவூட்டிகள்**

மாணவர் சரியான விடையளிக்கும் போது, நன்று, சரி, மிக நன்று. அருமை, ஆகா, மிக அருமை, சிறப்பானது, அழகு, ஆம் மேலும் தொடர்க, மேலும் சொல்லுக... முதலிய தொடர்கள் மொழிச் சார்புடைய வலுவூட்டிகளாம். இவற்றை ஆசிரியர் நன்கு பயன்படுத்துதல் வேண்டும்.

- **திரும்பக் கூறல்**

மாணவர் கூறும் சரியான விடையை ஆசிரியர் கேட்டு அதனை வகுப்பு முழுமைக்கும் திரும்பக் கூறுகிறார். அப்படிக் கூறும் பொழுது மாணவன்,“தன் விடையை, மாணவர் அனைவரும் அறிய ஆசிரியர் கூறினார்” என்று மகிழ்கிறான். இவ்வாறும் பாராட்டலாம்.

- **வேறு வகையில் கூறல்**

மாணவன் ஓரளவு சரியான விடை கூறினால், ஆசிரியர் அதைத் திருத்திச் செம்மையாக்கிக் கூறலாம். தன்னுடைய விடையிலுள்ள சொற்களையே பயன்படுத்தி ஆசிரியர் விளக்கினார் என்று அறிந்து மாணவன் மகிழ்வான். எடுத்துக்காட்டு,

ஆ: நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் உள்ள வேறுபாடு யாது?

மா: நாகரிகம் என்பது புற ஒழுக்கம். பண்பாடு என்பது எல்லோருக்கும் பொதுவானது.

ஆ: நாகரிகம் என்பது புற ஒழுக்கம் பண்பாடு என்பது அக ஒழுக்கம். புறஒழுக்கம் நாட்டுக்கு நாடு வேறுபடும். அக ஒழுக்கம் மனித இனத்துக்கே பொதுவானது.

இவ்வாறு மாணவன் விடையை ஏற்று வேறுவகையில் கூறலாம்.

- **மொழிச் சார்புடை ஒலிகள்**

மாணவன் விடை கூறும் போது ஆசிரியர் ஷம்’ ஷம்’எனக் கூறி மாணவனை மேலும் விடையைக் கூறும்படி செய்தலே மொழிச் சார்புடை ஒலியாகும்.

- **உதவும் சைகைக் குறிகள்**

மாணவன் சரியான விடை கூறும் போது ஆசிரியர் தம் தலையசைப்பால் ஏற்றல், சிறிது புன்முறுவல் செய்து மேலே சொல்லும்படி கையால் காட்டுதல், அருகே சென்று தட்டிக் கொடுத்தல் போன்றன மாணவனைப் பாராட்டும் சைகைக் குறிகளாம்.

**8.முடிக்கும் திறன்**

கற்பிக்கும் ஒரு பாடத்தின் பாடப்பகுதியின் சிறப்பான கருத்துகள், கொள்கைகள் கற்பிக்கப்பட்டு விட்டன என்னும் நிலை தோன்றும்போது அவற்றை முடித்துக் காட்டுவது கற்றலுக்குப் பெருந்துணைப் புரியும். அவ்வாறு முடித்துக் காட்டும் பொழுதுதான் பாடங்


Downloaded From www.nagaicollege.com

கற்போருக்கு ஒரு நிறைவு ஏற்படும். முடிக்குந் திறனின் உட்கூறுகளாகக் கீழ் உள்ளனவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

- **கருத்துகளைத் தொகுத்துக் கூறுதல்**

பாடம் கற்பிக்கப்படும் பொழுது ஆசிரியரும், மாணவரும் பல கருத்துகளைக் கூறியிருக்கலாம். பாட இறுதியில் அவற்றைத் தொகுத்துக் கூறுதல் வேண்டும். அப்பொழுதுதான் கற்போர் எவற்றை நாம் கற்றுக் கொண்டோம் என்று அறிந்து, அறிவை ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியும்.

- **புதிய அறிவைப் பயன்படுத்த வாய்ப்பு**

புதிய செய்தி, கருத்து, விதிகள் கற்பிக்கப் பட்டிருக்குமாயின் அவற்றைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளைக் குறிப்பிடல் வேண்டும். இன்னின்ன சூழ்நிலையில் இன்னின்ன வகையில் இந்தப் புதிய அறிவைப் பயன்படுத்தலாம் எனக் கூறி அவ்வித வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். தாங்கள் கேட்டோ, பார்த்தோ பெற்ற அறிவைப் பயன்படுத்தும் பொழுதுதான் அதனை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

- **முன்னறிவுடன் இணைப்பு**

பாட வேளையில் கற்ற புதிய அறிவை மாணவரிடையே முன்னர் அது தொடர்பாக ஏற்கெனவே உள்ள அறிவுடன் இணைத்தல் வேண்டும். இவ்வாறு இணைத்துக் காட்டும் பொழுது அந்தப் புதிய அறிவு தெளிவாக உணரப்பட முடியும். மாணவர் அறிவில் வளர்ச்சி பெற்றதாக உணர முடியும்.

- **மேலும் கற்றலுக்கு வாய்ப்பு**

மாணவர் பெற்ற புதிய அறிவை, அடுத்துப் பெறப் போகும் அறிவோடு தொடர்புபடுத்துதல் வேண்டும். இன்னின்னவற்றை அறிந்து கொண்டீர்கள்ளூ இவற்றைத் தொடர்ந்து, இன்னின்னவற்றை நீங்கள் மேலும் அறிந்து கொள்வீர்கள் என்று கூறும் பொழுது மாணவர் அறிவு நிலையில் மென்மேலும் வளர்ச்சி பெறத் தயாராகிறார்கள்.

சிறப்பாகப் பாடம் முடித்தலைக் குறுகிய தொகுப்பு என்று கூறலாம். கற்பித்தலின் சாரம் என்று அழைக்கலாம். பாட இறுதியில் தான் இவ்வாறு முடித்தலைத் திரட்டித் தரல் வேண்டுமென்பதில்லை. பாடமானது குறிப்பிட்ட கருத்துகளைக் கொண்ட பாடப் பகுதிகளாக விளங்கும். அப்பாடப்பகுதிகளை எல்லையாகக் கொண்டு அவ்வெல்லைக்குட்பட்ட பகுதியை உடனேயே முடித்து விடலாம். அவ்வாறு முடிப்பது இன்னும் சிறப்புடைய தாகும்.

இவ்வாறு செய்வதால், திட்டமிட்ட பாடம் பாடப்பகுதி நிறைவு பெறும்போது மாணவர் பெற்ற புதிய அறிவு தெளிவு பெறுகின்றது. அவ்வறிவைப் பயன்படுத்தத் தூண்டல் நேரிடுகிறது. மேலும், இவ்வாறு முடித்தல் மாணவரிடையே ஒரு சாதனையைச் செய்த உணர்வைத் தோற்றுவிக்கிறது.

### 9. சரளமாகப் பேசும் திறன்

ஆசிரியர் வகுப்பறையில் சரளமாக பேச கற்றுக் கொடுக்க வேண்டும்.தங்குதடையின்றி பேசுதல் நன்று. கேட்பவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் விதத்தில் வார்த்தைகளைக் கூறுதல் சிறந்தது.பேச்சு உறுப்புகளைச் சரிவர பயன்படுத்த வேண்டும். அதோடு சொல் அமைப்பைப் புரிந்து வைத்தல் அவசியமாகும்.


Downloaded From www.nagaicollege.com

பேசும்போது தலையை நிமிர்த்து பேசுவது சிறந்தது,வாயை போதியளவு திறந்து, உங்கள் கழுத்து,தாடை,உதடுகள்,முக தசைகள்,தொண்டை தசைகள் ஆகியவற்றை தளர்த்த பழகுங்கள்.உங்கள் நிலையைச் சோதித்தறிவதற்கு,சத்தமாக வாசித்துப் பார்ப்பது உதவியாக இருக்கும்.

**கற்பித்தல் திறன்களை இணைத்துக் குறுநிலைக் கற்பித்தலில் (சிறு பாடம் நடத்துதல்) பயிற்சி பெறுதல் (20 மணித்துளிகள்) பின் வரும் பகுதியில் விளக்கப்படுகிறது.**

**குறுநிலைக் கற்பித்தலின் முக்கிய படிகளைப் புரிந்துகொள்ளல்**

குறுநிலைக் கற்பித்தலில் படிநிலைகள் பின்வருமாறு அமைந்துள்ளன. அவை:

1. ஊக்கப்படுத்துதல்
2. பாடக் கருத்துகளை வழங்குதல்
3. இடைவினைப் பேச்சு
4. மீளச் சிந்தித்தல்
5. தொகுத்துக் கூறல்

**1. ஊக்கப்படுத்துதல்**

கற்றலுக்கு ஆதாரமாகவும் கற்பித்தலுக்கு உறுதுணையாகவும் அமைவது ஊக்குவித்தல் ஆகும்.சிறு பாடம்(ஆைைை டநளளழழெ) கற்பிக்கும் போது பாடத்தை முன்பு அறிந்த செய்திகளுடன் நினைவுப் படுத்தி கற்பிக்க வேண்டும்.ஊக்கப்படுத்தி, நல் உரையாடிக் கற்பிக்கும் பாடமே சிறப்பான கற்றலுக்கு வழிவகுக்கும். இந்தப்படிநிலை,கற்போர் அனைவரின் மனநிலைச் சிதறாமல் தங்களின் முழுகவனத்தையும் ஒருமுகப்படுத்துவதாகும். மேலும் கற்றலுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாகும்.

**2. பாடக்கருத்துகளை வழங்குதல்**

ஊக்குவித்த பின் கற்பிக்கப்போகும் பாடத்தின் தலைப்பினைக் கரும்பலகையில் எழுதி பிறகு பாடத் தலைப்பிற்கான நோக்கங்களை மாணவர்களுக்குத் தெளிவாகப் புரியும் வண்ணம் எடுத்துக் கூற வேண்டும் அல்லது நாளும் வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பம்(ீவு) கொண்டும் கற்பிக்கலாம்.

“பாடத் தொடக்க வேளையிலிருந்து நிறைவு வரைச்செல்லும் கற்பித்தல் வளர்ச்சியைப்பாடக்கருத்துகளை வழங்குதல்” என பட்டறிவு மிக்க கல்வியாளர் கூறுகின்றனர்”.

பாட வளர்ச்சியின் குறிக்கோளாக அமைவது, கற்பிக்கும் பாடத்தை நன்குப் புரிந்து கொள்ளுதலாகும். இதன் தொடர்ச்சியாக உள் வளர்ச்சிகளைக் கொண்டு அமையும். கற்பிக்கும் துணைக்கருவிகள் கொண்டு கற்பிக்க வேண்டும். கற்பிக்கும் முறை, காட்சிப் பொருளிலிருந்து கருத்துப் பொருளுக்குச் செல்லுதல்,தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல் என்பதாக அமையும்.

**3. இடைவினைப் பேச்சு**

இடைவினை என்பது கற்பித்தல் கற்றல் இடையே நிகழும் சொல்லாடல்(னுளைஉழரசளந) ஆகும்.“ஆசிரியர் வகுப்பறையில் கற்பித்தல் செயலை நோக்கிய பின்னர், கற்பவருக்கு ஏற்படும் ஐயங்களைத் தீர்த்துக் கொள்வதற்கும் அவர் மேற்கொண்ட கற்பிப்பு முறைகளின் அடிப்படைக் காரணங்களை அறிவதற்கும் பயன்படுவதாகும்”.ஆசிரியருடன் கலந்துரையாடுகிறபோது


Downloaded From www.nagaicollege.com

வாழ்க்கையோடுத் தொடர்புடைய புதிய செய்திகளைக் கற்போர் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. குறிப்பாக, இடைவினைக் குறுநிலைக் கற்பித்தலை அச்சமின்றி கற்பிக்க ஆசிரிய மாணவரிடையே வழிவகுக்கிறது. மாணவர்களின் பங்களிப்பு ஏற்படுகி.

**4. மீளச்சிந்தித்தல்**

மீளச்சிந்தித்தல் என்பது கற்றவற்றை மீண்டும் சிந்தனையில் ஏற்றுதலாகும். பாடத்திலிருந்து கிளர் வினாக்களைக் கேட்டு கற்போரைமீளச் சிந்திக்கச்செய்யமுடியும், மீளச் சிந்திப்பதன் வாயிலாகப் புதியனவற்றை உருவாக்கும் திறன் ஏற்படுகிறது.

**5.தொகுத்துக்கூறல்**

“தொகுப்பு” என்பது பாட முடிப்பு ஆகும்.சிறு பாடம் முடிவுறும் தருவாயில் நடத்திய அனைத்துக் கருத்துகளையும் தொகுத்துக் கூறுவதாகும்.

**கற்பித்தல் படிகளை இணைத்துக் குறுநிலைக் கற்பித்தலில் (சிறு பாடம் நடத்துதல்) பயிற்சி பெறுதல் (20 மணித்துளிகள்) – குறுநிலைக் கற்பித்தலை உற்றுநோக்கிப் பின்னூட்டம் வழங்குதல் பின் வருமாறு அமைந்துள்ளது.**

**குறுநிலைக் கற்பித்தல் - விளக்கம்**

- இது பாடம் கற்பிப்புத் திறன்களைப் பெறுவதற்குரிய ஒரு பயிற்சி உத்தியாகும்.
- இது நடைமுறையிலான கற்றல் சூழ்நிலைகளை ஏற்படுத்தி கற்றல் திறன்களை மேம்படுத்துகிறது.
- இது கற்பித்தலுக்கான ஆழ்ந்த திறனை உருவாக்குகிறது.
- பெரிய பாடத்தைக் கற்பதற்கு முன்னோட்டமான பயிற்சியாக இது விளங்குகிறது.
- சில நிமிடங்களில் கற்பிக்கும் போக்காகும் ஆனால் இது பின்னாளில் வகுப்பறையில் பாடங்களைக் கற்பிக்க வழிகாட்டுகிறது.
- இப்பயிற்சி 20 நிமிடங்கள் மேற்கொள்வது வழக்கமாகும்.
- இக்கற்பிப்புக் காலம் 20 நிமிடங்களே ஆயினும் முறையான கற்பித்தலுக்கு சிறந்த அடிப்படையை அமைத்துத் தருகிறது.

சிறு பாடம் (ஆைைெ டுநளளழெ) -மாதிரி

மாணவ ஆசிரியர் பெயர்:…………………

பாடம்: தமிழ்

தலைப்பு: திருக்குறள்

உட்தலைப்பு: ஒழுக்கமுடைமை (முதல் திருக்குறள்)

தேதி:…………………

காலம்:காலை 10.00மணி முதல் 10.20 வரை



Downloaded From www.nagaicollege.com

**நோக்கங்கங்கள்**

மொழிப்பாடத்தில் கற்றல் நோக்கங்களை மொழித்திறன், பாடப்பொருள் ஆகியன சார்ந்து தனித்தனியே வரையறுக்க வேண்டும்.

- திருக்குறளின் சிறப்புகளைப் எடுத்துரைத்தல்.
- குறளில் அமைந்துள்ள காரண,காரிய மொழி அமைப்பினைப் பயன்படுத்துதல்.
- திருவள்ளுவரின் பெருமையை உணர்த்தும் எடுத்துக்காட்டுகளைத் தருதல்
- ஒழுக்கத்தின் சிறப்பை எடுத்துக் கூறல்.
- நல்லொழுக்கத்தை மேற்கொள்ளுதல்.

**துணைக் கருவிகள்**

- பவர் பாயிண்ட் நழுவம் ரீவு)
- மின் அட்டைகளில் சொற் - பொருள்

முதலியன .இவை உள்ளடக்கத்திற்கு ஏற்ப துணைக்கருவிகளைத் தேர்ந்தெடுக்கின்றன.

**உள்ளடக்க வரைவு :ஒழுக்கமுடைமை(முதல் செய்யுள் மட்டும்)**

- குறள் வெண்பாவின் அமைப்பு.
- திருக்குறள், திருவள்ளுவரின் பெருமை.
- ஒழுக்கத்தின் சிறப்பு –விளக்கம்
- வாழ்க்கையோடு இயைபுப் படுத்தி ஒழுக்க உயர்வைக் கற்பித்தல்

**கற்பித்தல் திறன்கள்:**

- தொடங்குதல் திறன்
- விளக்குதல் திறன்
- பொழிப்புரைத் திறன்
- வினாக் கேட்டல் திறன்
- பல்வகைத்தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்
- முடிக்கும் திறன்

**கற்பித்தல் முறைகளும் செயல்பாடுகளும்**

1. **ஊக்கப்படுத்துதல்**

**வணக்கம் மாணவர்களே,**

ஆசிரியர்: உங்களுக்குத் தெரிந்த பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் குறித்துக் கூறுங்கள்?
மாணவர்: நாலடியார்,திரிகடுகம்,இன்னா நாற்பது,இனியவை நாற்பது,ஏலாதி,நான்மணிக்கடிகை,திருக்குறள்.
ஆசிரியர்: திருவள்ளுவர் சிலையை எங்கெல்லாம் பார்த்திருக்கிறீர்கள்?
மாணவர்: சென்னை வள்ளுவர் கோட்டம்,கன்னியாகுமரி கடலில் 133 அடி உயர சிலை…….
ஆசிரியர்:திருக்குறள் எப்பாவகையில் அமைந்துள்ளது?
மாணவர்: திருக்குறள் குறள் வெண்பா அமைப்பில் உள்ளது.
ஆசிரியா: திருக்குறளில் உள்ள அதிகாரங்களை கூறுக?
மாணவர்: திருக்குறள் 133 அதிகாரங்கள் ஆகும்.
ஆசிரியர்: திருக்குறள் எத்துணைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது? கூறுக.


Downloaded From www.nagaicollege.com

மாணவர்: திருக்குறள் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்: அறத்துப்பாலில் ஒழுக்கமுடைமை எந்த அதிகாரத்தில் உள்ளன.

மாணவர்: ஒழுக்கமுடைமை 14 வது அதிகாரத்தில் உள்ளது.

ஆசிரியர்: இன்றைய வகுப்பில் திருக்குறளில் *"ஒழுக்கமுடைமை"* பற்றி படிப்போம்.

**(தொடங்குதல் திறன்)**

**2. பாடக் கருத்துகளை வழங்குதல்**

ஆசிரியர் : குறள் வெண்பா என்பது வெண்பா வகையின் இரண்டு அடி உள்வகையாகும்.இவ்வகையின் அடிப்படையில் அமைவது திருக்குறள் ஆகும்.

**(விளக்குதல் திறன்)**

ஆசிரியர்: திருக்குறளில் "ஒழக்கமுடைமை" அதிகாரத்தின் முதல் திருக்குறள்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஒம்பப் படும்"

- என்பதாகும்

**பொருள்:** ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே ஆதலால், அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல்வேண்டும்.

**(பொழிப்புரைத் திறன்)**

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒழுக்கமே தலைச்சிறந்த கருவியாகும்.

**3. இடைவினை**

ஆசிரியர் : இத்திருக்குறளில் மிகுதியாக அமைந்துள்ள சொல் எது?

மாணவர் : ஒழுக்கம்

ஆசிரியர் : உயிரை விட மிகுதியாக பாதுகாக்கப்பட வேண்டியது எது?

மாணவர்: உயிரை விட மிகுதியாக பாதுகாக்கப்பட வேண்டியது ஒழுக்கமாகும்.

ஆசிரியர் : ஓம்பப்படும் என்பதன் பொருள்?

மாணவர்: பாதுகாக்கப்படுதல்

**(வினாக் கேட்டல் திறன்)**

**4. மீளச்சிந்தித்தல்**

ஆசிரியர் :குறள் வெண்பா என்றால் என்ன?

ஆசிரியர் :திருக்குறள் உனக்குத் தெரிந்த திருக்குறளைக் கூறுக.

ஆசிரியர் :ஒழுக்கம் விழுப்பம் தரலான் - இவ்வடியில் கூறப்படுவது ஒழுக்கத்தின் சிறப்பா?தேவையா?



Downloaded From www.nagaicollege.com

ஆசிரியர்:திருக்குறளைப் படித்து காண்பிக்க.

ஆசிரியர்: ம்ம்ம்…………(**பல்வகைத்தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன் -*சைகை மொழி*)**

5. **தொகுத்துக்கூறல்(ஆசிரியர் மையக் கருத்தைத் தொகுத்துக் கூறல்)**

"உலகப் பொதுமறை" என அழைக்கப்படும். இது 1330 திருக்குறள்களை உடையது. தெய்வப்புலவர் திருவள்ளுவர் *ஒழுக்கத்தை* உயிரினும் மேலானதாகக் கூறுகிறார். இதனால் வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்."

**( முடிக்கும் திறன்)**

-------------

குறுநிலைப் பாடத்தை, பயிற்சி பெரும் நோக்கில் பழகுவதே வகுப்பறை உயிரோட்டம் ஆகும்.ஆசிரியர் கல்வி பெறுவோர், பல்வேறு கற்பித்தல் திறன்களையும் படிநிலைகளையும் ஒருங்கிணைத்து சிறு பாடம் ஒன்றிணைத் தயார் செய்து கற்பித்தலைப் பழகுவர். குறுநிலைப் கற்பித்தலைக் குறைந்தது 20 நிமிட அளவிலாவது பழகுதல் வேண்டும். இதை வகுப்பறை உயிரோட்டம் எனவும் கூறலாம். வகுப்பறை உயிரோட்டத்தை ஆசிரியர் கல்வியாளர் கணிப்பது பயன்தரத் தக்கதாய் அமையும்.கொடுக்கப்பட்ட படிவத்தைப் பயன்படுத்தி,குறுநிலை கற்பித்தலுக்கான பின்னூட்டம் பெறலாம். ஆசிரியரும் உடன் பயில்வோரும் குறுநிலை கற்பிப்பினை உற்றுநோக்கி பின்னூட்டம் வழங்குவது சிறப்பாக இருக்கும். கீழே கொடுக்கப்பட்டுள்ளப் படிவங்களில் உள்ள கூறுகள் சிறு பாடத்தைக்கற்பிக்க மேற்கொள்ளும் திறன்களைக் கணிப்பதற்கு உரியதாகும்.

**குறுநிலைக் கற்பித்தலை உற்றுநோக்கிப் பின்னூட்டம் வழங்கும் படிவம்**

**குறுநிலைக் கற்பித்தல் பயிற்சி**

கற்பித்தல் திறன்களை ஒருங்கிணைத்தல்

உடன் பயில்வோர் ∴ ஆசிரியர் கணிப்பு

குறிப்பு: இப்படிவத்தை பயன்படுத்தும் போது வெளிப்படும் கற்றல் கூறுகளுக்கு எதிரே பொருத்தமான இடத்தில் (✓) இக்குறியிட்டுக் காட்டுக.

மதிப்பிடுதல் : சராசரி ஸ்ரீ 1, நன்று ஸ்ரீ 2, மிக நன்று ஸ்ரீ 3

மாணவ ஆசிரியர் பெயர்: காலம்: 20 மணித் துளிகள்

| கற்பித்தல் திறன்கள் | சராசரி | நன்று | மிக நன்று | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடங்குதல் | | | | |
| விளக்குதல் | | | | |
| வினவுதல் | | | | |
| பல்வகைத் தூண்டல் | | | | |



Downloaded From www.nagaicollege.com

| | | | | |
|---|---|---|---|---|
| மொழிச்சாராக் குறிப்புத் திறன் அல்லது சைகை தொழித்திறன் | | | | |
| வலுவூட்டல் | | | | |
| முடித்தல் | | | | |
| சரளமாகப் பேசுதல் | | | | |
| மொத்தம் | | | | |

மதிப்பெண் வீச்சு : 8-24

சிறுநிலை கற்பித்தலின் பொது கணிப்பு

சராசரி: நன்று: மிக நன்று:

மதிப்பெண்களை நுணுகுதல்

சராசரி : 8

நன்று : 9-16

மிக நன்று : 17-24

உற்றுநோக்குபவர் கையொப்பம்

**குறுநிலைக் கற்பித்தல் பயிற்சியின் கற்பித்தல் படிநிலைகளை ஒருங்கிணைத்தல் படிவம்**

கற்பித்தல் திறன்களை ஒருங்கிணைத்தல்

உடன் பயில்வோா் ∴ ஆசிரியா் கணிப்பு

குறிப்பு: (✓) இக்குறியை இடுக.

மதிப்பிடுதல் : சராசரி ஸ்ரீ 1, நன்று ஸ்ரீ 2, மிக நன்று ஸ்ரீ 3

மாணவ ஆசிரியா் பெயா்: காலம்: 20 மணித்துளிகள்

| கற்பித்தல் படிநிலைகள் | சராசரி | நன்று | மிக நன்று | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஊக்குவித்தல் | | | | |
| வழங்குகுதல் | | | | |
| இடைவினைப்பேச்சு | | | | |
| சிந்தனையில் ஏற்றல் | | | | |
| தொகுத்தல் | | | | |
| மொத்தம் | | | | |

மதிப்பெண் வீச்சு: 5-15



Downloaded From www.nagaicollege.com

கற்பித்தல் படிநிலைகளின் பொதுக் கணிப்பு

சராசரி: நன்று: மிக நன்று:

மதிப்பெண்களை நுணுகுதல்

சராசரி : 5

நன்று : 6-10

மிக நன்று : 11-15

உற்றுநோக்குபவர் கையொப்பம்

**உரைநடை கற்பித்தல்**

இதில்,உரைநடையின் பொருள் ,உரைநடைக் கற்பித்தலின் நோக்கம் , உரைநடை கற்பித்தலிலுள்ள படிகள் , சொற்களஞ்சியத்தைக் கற்பித்தல் , அருஞ்சொற்களைக் கற்பித்தல் ,சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் ஆகியன விளக்கப்படுகிறது.

**உரைநடையின் பொருள்**

பாடநூலில் மிகப் பெருமளவில் இடம்பெறும் மொழிவடிவம் உரைநடையாகும். கட்டுரை,உரையாடல்,நாடகம் ஆகியன பாடநூல்களில் உரைநடை வடிவில் இடம்பெறும் வடிவங்களாகும்.இவற்றுள் ஒவ்வொன்றும் மொழிக் கல்வியில் மொழித்திறன் வளர்ச்சிக்குப் பொரும்பங்கு வகிக்கிறது, நடைமுறைப் பயன்பாடு கருதியும், பல இலக்கிய வடிவங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மையாலும் உரைநடை மொழிக் கல்வியின் இன்றியமையாத வடிவமாகக் கருதப்படுகிறது.

**உரைநடை கற்பித்தலின் நோக்கம்**

- மொழித் தூய்மை அறிதல்
- சொற்களஞ்சியப் பெருக்கம் அடைதல்
- பிழையறப் பேசும் எழுதும் திறன் பெறுதல்
- நடைமுறை இலக்கணத்தில் பயிற்சி பெறல்
- ஒலியமைவினை அறிதல்
- சொல் மரபினை அறிதல்.
- பாடப்பகுதியின் மையக்கருத்தினை அறிந்து கொள்ளல்
- சொற்றொடர் அறிதல்
- பத்தி அமைக்கும் விதத்தினை அறிதல்

**உரைநடை கற்பித்தலிலுள்ள படிகள்**

ஒவ்வோர் உரைநடைப் பாடத்தையும் மாணவர் விரும்பி ஏற்கும் வண்ணம் தக்க ஆர்வமூட்டித் தொடங்கிக் கற்பிக்க வேண்டும். கற்பிக்கும் பொழுது பாடத்திற்கேற்ப முறைகளை



Downloaded From www.nagaicollege.com

ஆசிரியர் வகுத்துக் கொள்ளுதல் நன்று. எனினும் பொதுவாகப் பின்பற்றுவதற்குரிய கற்பித்தல் படிகள் வருமாறு:-

- **ஆர்வமூட்டல்**

மாணவர்களுடன் இயல்பான சூழ்நிலையில் உரையாடத் தொடங்கிப் பாடத்துக்கேற்ப கருத்துகளை நினைவூட்டலாம். பாடக் கருத்துகளை விரும்பி ஏற்றுக் கொள்வதற்கேற்ற செய்திகளைக் கூறி ஆர்வமூட்டலாம். எடுத்துக்காட்டாக, ஷமாமல்லபுரம்' என ஒரு பாடம் இருப்பதாகக் கொள்வோம். இங்கு பல அழகான சிற்பங்களின் படங்களைக் காட்டிச் சிற்பக்கலை சிறப்புப் பற்றி மாணவரிடம் உரையாடுதல் ஆர்வமூட்டுதலாக அமையும்.

- **முன்னுரை**

மேற்கூறியவாறு பாடத்திற்கேற்ற செய்திகளைக் கூறி ஆர்வமூட்டிய பின்னர், அக்குறிக்கப்பட்ட பாடத்துக்குத் தேவையான முன்னுரையைக் கூற வேண்டும். சில பாடங்களில் ஆர்வ மூட்டுதலில் கூறும் செய்திகளே முன்னுரையாக அமைதல் கூடும். மேற்குறிப்பிட்ட ஷமாமல்லபுரம்' பாடத்திற்கு ஆர்வமூட்டிய பின்னர் மாமல்லபுரம் பற்றியும், பல்லவ மன்னர் பற்றியும் கூறுதல் பாட முன்னுரையாக அமையும்.

**குறிப்பு:-** ஆர்வமூட்டல், பாட முன்னுரை ஆகியவை ஒவ்வோர் உரைநடைப் பாடத்தையும் புதிதாகத் தொடங்கும் பொழுது மேற் கொள்ளப்படும். தொடர் பாடமாக அமையின் முன் நடந்த பாடப் பகுதியில் சில வினாக்கள் கேட்டுக் கற்ற பாடப்பகுதிப் பொருளை நினைவூட்டித் தொடர்ந்து கற்பித்தல் வேண்டும்.

- **பாடப்பகுதியை ஆசிரியர் படித்தல்**

அடுத்து, ஆசிரியர் புதிய பாடப் பகுதியைப் படிக்க வேண்டும். உரைநடைப் பாடம் முழுமையும் படிக்க வேண்டிய தில்லை. தாம் கற்பிக்கும் பாடத்தில் அப்பாட வேளையில் எத்தனை பத்திகளைக் கற்பிக்கிறாரோ அவற்றை மட்டும் படிக்க வேண்டும். ஆசிரியர் இருமுறை படித்துக் காட்டுதல் நன்று. பின்னர், பத்தி பத்தியாகப் படித்துக் கற்பிக்கத் தொடங்க வேண்டும். இவ்வாறு ஒரு பத்தியைப் படிக்கத் தொடங்குமுன் மாணவரிடம் ஷநான் முதற்பத்தியைப் படித்ததும், அதன் மையக் கருத்து யாது என உங்களைக் கேட்பேன் பகுதியை நன்கு கவனிக்க', என்று கூறிப் படித்தல் நன்று. அவர்களிடம் மையக்கருத்தைத் தகுந்த வினாக்கள் மூலம் வரவழைக்க முயல வேண்டும். முடியவில்லையெனில் நேரத்தை வீணாக்காது ஆசிரியர் மையக் கருத்தைக் கூறிக் கரும்பலகையில் எழுத வேண்டும்.

- **செய்திகளைக் கூறி விளக்குதல்**

பத்தியைப் படித்து அதன் மையக் கருத்தை மாணவரிடமிருந்து வரவழைத்தோ, ஆசிரியரே கூறியோ கரும்பலகையில் எழுதிய பின்னர் ஒவ்வொரு வாக்கியமாகப் படித்துப் புதிய சொற்களையும், சொற்றொடர்களையும் விளக்க வேண்டும்.

மேற்கோளாக வேறு நூல்களிலிருந்து சில அடிகள் கொடுக்கப் பெற்றிருப்பின் அந்நூல் பற்றிய குறிப்பு, மேற்கோளாகவுள்ள அடிகள் தவிர அச்செய்யுளின் பிற அடிகள் ஆகியவற்றைக் கூற வேண்டும்.

பாடக் கருத்துகளை மட்டும் அப்படியே விளக்கிச் செல்லாது வாழ்க்கையுடன் தொடர்பு படுத்துதல் வேண்டும். தேவையான இடங்களில் தகுந்த நாட்டுப்படம். பிறநாட்டுக் காட்சிப்


Downloaded From www.nagaicollege.com

படங்கள், பொருள்கள், இடங்களின் படங்கள் போன்ற துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

- **இணைத்துக் கற்பித்தல்**

பாடப்பகுதியின் கருத்து, செய்யுட் பகுதியில் இருப்பின் அத்துடன் இணைத்தும், இலக்கண விதிகளைக் கற்பிப்பதற்கு ஏற்றதாக இருப்பின், இலக்கணப் பாடத்துடன் இணைத்தும் கற்பித்தல் வேண்டும். அறிவியல் செய்திகள், வரலாற்றுச் செய்திகள் இருப்பின் அவ்வப்பாடங்களுடன் இணைத்துக் கற்பித்தல் நன்று. இவ்வாறு இணைத்துக் கற்பித்தல் மாணவருக்குப் பாடத்தில் ஆர்வமூட்டுவதுடன், பாடப்பொருள் மனத்தில் நன்கு பதியவும் உதவும்.

- **மொழிப் பயிற்சியளித்தல்**

ஒரு பாடவேளையில் கற்பிக்க வேண்டிய பகுதியைக் கற்பிக்கும் பொழுதே அரிய சொற்களை வாக்கியங்களில் அமைக்கச் செய்தல், தொடர்களை வாக்கியங்களில் அமைக்கச் செய்தல், மரபுத் தொடர்கள், பழமொழிகள், உவமைகள் இருப்பின் அவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுதச் செய்தல் முதலிய மொழிப் பயிற்சியளித்தல் வேண்டும் மற்றும் வாக்கிய வகைகளைச் சுட்டிக்காட்டி வாக்கிய மாற்றங்கள் பயிற்சியும் அளிக்கலாம். உடன்பாடு-எதிர்மறை, செய்தி-வியப்பு, நேர்கூற்று-அயற்கூற்று, செய்வினை-செயப்பாட்டு வினை வாக்கிய மாற்றங்கள் வகுப்பு நிலைக்கு ஏற்றாற்போல் இம்மொழிப் பயிற்சியில் இடம் பெறும். உரைநடைப் பாடத்தில் மொழிப் பயிற்சியளித்தல் மாணவர் மொழித்திறன் பெறப்பெரிதும் உதவும்.

- **மாணாக்கரைப் படிக்கச் செய்தல்**

பெரும்பாலான ஆசிரியர்கள் தாம் பாடப்பகுதியைப் படித்ததும் சில மாணவரைப் படிக்கச் செய்கின்றனர். இம்முறை அத்துணை சிறந்ததன்று. ஏனெனில், புதிய பாடப்பகுதியில் புதிய சொற்களும், அருஞ்சொற்றொடர்களும் இருக்கலாம். பாடப்பகுதியின் கருத்தும் புதியதாக இருக்கும். புதிய சொற்களை ஒலிப்பதில் சிக்கல் ஏற்படும். பொருள் விளங்கும் பகுதியைச் சேர்த்துப் படிப்பதிலும் மாணவர் தவறு செய்தல் கூடும். ஆதலின், அப்பத்தி முழுமையையும் ஆசிரியர் நன்கு கற்பித்த பின்னரே மாணவரைப் படிக்கச் செய்தல் வேண்டும்.

- **துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்**

பாடம் கற்பிக்கும் பொழுது ஆசிரியர் துணைக்கருவிகளையும் பயன்படுத்துதல் வேண்டும். அரிய சொற்களை எழுதிக் காட்டவும், புதிய சொற்களுக்குப் பொருள் எழுதவும், சொற்களைப் பிரித்துக் காட்டவும் ஆசிரியர் கரும்பலகையைப் பயன்படுத்துதல் வேண்டும். வேறுபாடு உணர்த்தவும், கவனத்தை இழுக்கவும் வண்ணங்களைப் பயன்படுத்துதல் நன்று.

ஊர் இருக்கும் இடம் காட்டவும், செல்லும் வழியைக் காட்டவும், நாட்டின் எல்லைகளையும் காட்டவும், நாட்டுப் படங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். இவ்வாறு பாடப்பொருளுக்கேற்ற துணைக்கருவிகளை ஆசிரியர் தகுந்த முறையில் பயன்படுத்துதல் நன்று.

- **பாடத்தைத் திருப்புதல்**

பாடத்தைக் கற்பித்து முடித்த பின்னர், கற்பித்த பகுதியை அறிந்து கொண்டனரா எனத் தேர்ந்தறிய வினாக்கள் கேட்டல் வேண்டும். இதனையே பாடத்தைத் திருப்புதல் என்போம். புதிய சொற்களின் பொருள் கேட்டல், சொற்களை, தொடர்களை வாக்கியத்தில் அமைக்கச் செய்தல், பாடக் கருத்து பற்றிய வினாக்கள் கேட்டல் ஆகியன திருப்புதலில் அடங்கும். பாடத்தைக்


Downloaded From www.nagaicollege.com

கற்பித்த பின்னர் ஆசிரியர் கட்டாயமாகத் திருப்புதல் வினாக்கள் கேட்டல் வேண்டும். இது நல்ல வாய்மொழிப் பயிற்சியாகவும் அமையும்.

- **கரும்பலகை வேலை**

பாடத்திற்குஆர்வமூட்டிய பின்னர் பாடத்தலைப்பினைக் கரும்பலகையில் எழுதுதல் வேண்டும். பத்தியின் மையக் கருத்து எழுதுதல், அருஞ்சொற்களும் பொருளும் எழுதுதல், சொற்களைப் பிரித்துக் காட்டுதல், ல,ள,ழ, ஒலிவேற்றுமையால் பொருள் வேறுபடும் சொற்களை எழுதிக் காட்டுதல், தேவையான படம் வரைந்து காட்டுதல் முதலிய பல செயல்கள் கரும்பலகை வேலையாக அமையும், காதால் கேட்பதைவிடக் கண்ணால் பார்ப்பது செய்தி மனத்தில் நன்கு புதிய உதவுவதால் ஆசிரியர் கரும்பலகையைப் பயன்படுத்துதல் வேண்டும்.

- **வீட்டு வேலை**

பாட இறுதியில் திருப்புதல் வினாக்களாகக் கேட்ட வற்றிற்கு மாணாக்கர் வாய்மொழியாக விடை கூறினர். அவ்வினாக்களுக்கு வீட்டில் விடை எழுதி வரும்படி வீட்டு வேலையாகக் கொடுக்கலாம். அதன் மூலம் மாணவர் எழுத்துப் பயிற்சி பெறுவர். வினாக்களுக்குரிய விடைகளைப் படித்து வரச் செய்யலாம். அவர்களது மனப்பாட ஆற்றல் வளரும். இவ்வாறு மொழப் பாடத்தில் வீட்டு வேலை அளித்தல் வேண்டும்.

உரைநடை, செய்யுள் என்பன வடிவம் பற்றிய வேறுபாட்டை உணர்த்துவன. வரலாறு, மருத்துவம், சோதிடம், இலக்கியம் போன்றவை பொருள் பற்றிய வேறுபாட்டை உணர்த்துவன. வரலாறு செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமையும். பழங்காலத்தில் இலக்கியங்கள் செய்யுள் வடிவத்திலேயே அமைந்தன. இக்காலத்தில் அவை உரைநடையிலும் அமைகின்றன. சிறுகதை, புதினம், பயணக் கட்டுரை முதலியன உரைநடையிலும் அமைகின்றன. சிறுகதை, புதினம், பயணக் கட்டுரை முதலியன உரைநடை இலக்கியங்கள் ஆகும்.

**சொற்களஞ்சியத்தைக் கற்பித்தல்**

ஒருவர் மிகுதியான சொற்களை அறிந்திருந்தால்தான் பிறர் பேசுவதைக் கேட்டறியவும், புத்தகங்களைப் படித்தறியவும் முடியும். இவ்வாறு செய்திகளையும் கருத்துகளையும் அறிந்து கொள்வதற்கு உதவும் சொல் தொகுதியை அறிந்த சொற் களஞ்சியம் என்பர். கருத்துகளையும், உணர்ச்சியையும் வெளிபடுத்தும் சொல் தொகுதியைப் பயன்படுத்தும் சொற் களஞ்சியம் என்பர். இவ்வாறு அறிந்த சொற்களஞ்சியம் பயன்படுத்தும் சொற்களஞ்சியம் என இரு வகைப்படும். அறிந்த சொற்களஞ்சியத்தை மிகுதிப்படுத்துவதுடன் அவற்றைப் பயன்படுத்தும் சொற்களஞ்சியமாக மாற்றுவதே மொழிப் பாடத்தின் நோக்கமாகும். சொற்களஞ்சியத்தைப் பெருக்கும் முறைகளைப் பொது நோக்கங்களின் இறுதியில் படித்தீர்கள். அவற்றுள் ஏற்ற முறைகளைப் பயன்படுத்திச் சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல் வேண்டும்.

**அருஞ்சொற்களைக் கற்பித்தல்**

எந்த ஒரு உரைநடை பாடத்தைக் கற்பிக்கும்போதும் அதில் அமைந்துள்ள புதியச் சொற்களுக்கு இணையான எளிய சொற்களைக் கற்பிக்க வேண்டும்.

**சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்**

உரைநடைப் பாடம் கற்பித்தலின் முக்கிய நோக்கமே சொற்களஞ்சியப் பெருக்கம் செய்வது அன்றாட மாணவர்கள் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டுக் காட்ட வேண்டும்.



Downloaded From
www.nagaicollege.com

மாணவர்கள் விரைவாகப் படிக்க இச்சொற்களஞ்சியப் பெருக்கம் உதவுகிறது. ஒரு சொல் பல பொருள் உடைய சொற்களை மாணவர்க்கு எழுத பயிற்சி அளிக்க வேண்டும்.

**செய்யுள் கற்பித்தல்**

இதில் செய்யுளின் பொருள் - செய்யுள் கற்பித்தலின் நோக்கம் - செய்யுள் கற்பித்தலிலுள்ள படிகள் - செய்யுள் கற்பித்தலை இனிமையாக்கும் முறைகள் ஆகியன விளக்கப்படுகிறது.

**செய்யுள் பொருள்**

செய்யுள் என்பது எடுத்துக்கொண்ட பொருள் விளங்கச் சுருக்கமாகச் செய்யப்படுவது.ஓசையை அடிப்படையாக கொண்டுப் பாடப்படுவது செய்யுள். இது ஒரு இலக்கண வரம்புக்கு உட்பட்டே அமையவேண்டும். செய்யுள் ஓசை நயம் மிக்கதாக விளங்குகிறது.

**செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள்**

- இலக்கிய நயம் கூறல்
- கற்பனை ஆற்றலை வளர்த்தல்
- சொற்சுவைக் கூறல்
- தொடை நயம் அறிதல்
- இறையுணர்வினை ஊட்டல்
- அணி நலம் காணல்
- அழகுணர்ச்சியை வளர்த்தல்
- நாட்டுப் பற்றினை வளர்த்தல்
- மொழிப்பற்றினை வளர்த்தல்
- பண்பாட்டினைப் போற்றல்
- ஓசை நயம் பெறல்

செய்யுள் பகுதியிலுள்ள பனுவல்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை செய்யுள், கவிதை, அருட்பாடல் என்பனவாம். ஒவ்வொரு வகைச் செய்யுளையும், தனித்தனிப் பாடல்களையும் கற்பிக்கும்பொழுது, சிறப்பு நோக்கம் பாடலைப் பொருத்து வேறுவேறாக அமையும். எனவே, சிறப்பு நோக்கங்கள் அவ்வப் பாடலைப் பொறுத்து அமையும்ளூ

**செய்யுள் கற்பித்தலிலுள்ள படிகள்**

செய்யுளைக் கற்பிக்கும் நோக்கங்கள், உரைநடையைக் கற்பிக்கும் நோக்கங்களினின்றும் வேறுபட்டவை. எனவே, செய்யுளைக் கற்பிக்கும்முறை, அந்நோக்கங்களை நிறைவேற்றுவதாக அமைதல் வேண்டும். செய்யுளின் கருத்துணர்தலுக்கு இம்முறைகள் தேவை. எனினும், செய்யுளைக் கற்பிக்கும்போது, பதவுரை பொழிப்புரை கூறுதலையே முதன்மையான வேலையாகக் கொள்ளுதல்கூடாது. இவற்றிற்கு மாறாக, செய்யுள் கருத்துணர்தல், உணர்ச்சியில் ஒன்றுபடுதல், நயம் உணர்ந்து போற்றுதல், பாடிப்பாடி இன்பமடைதல் ஆகிய நோக்கங்களும் நிறைவேறும்வண்ணம் கற்பித்தல் வேண்டும். செய்யுளைக் கற்பிக்கும்பொழுது கீழுள்ள முறைகளில் ஏற்புடையவற்றைக் கையாளலாம்.

**செய்யுள் கற்பித்தலுக்கேற்ற சூழ்நிலையமைத்தல்**

எந்தச் செய்யுளையும் மாணவர்களுக்குக் கற்பிக்கும்முன்பு தகுந்த சூழ்நிலையை உருவாக்கிக்
கொள்ள வேண்டும். கற்பிக்கவிருக்கும் செய்யுளின்கருத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்கிற



Downloaded From www.nagaicollege.com

ஆர்வத்தைத் தோற்றுவிக்க வேண்டும். குறம், பள்ளு, குறவஞ்சி, கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்களுள் ஒரு பகுதியினையோ, தனிப்பாடல்களையோ, வருணனைப் பாடல்களையோ கற்பிக்கும்பொழுது இது சிறந்த முறையாகும்.

**· முன்னுரை கூறல்**

தகுந்த சூழ்நிலையமைத்த பின்னர், கற்பிக்க எடுத்துக்கொண்ட செய்யுள், எச்செய்யுள் பகுதியின் தொடர்ச்சி என்பதைச் சொல்லுதல் வேண்டும். தொடர்நிலைச் செய்யுள் பகுதியாயின் முன்கதைப் பகுதியைக் கூறுதல் வேண்டும். தனிப் பாடலாயின், அப்பாடல் பாடப்பெற்ற சூழல் நிகழ்ச்சியைக் கூறல் வேண்டும். தேவையான இடங்களில் தேவையான முன்னுரையைக் கூறிச் செய்யுளைக் கற்பிக்க வேண்டும்.

**· செய்யுளை இலக்கியம் நயம் தோன்றப் படித்தல்**

பாடப்பகுதியாய் அமைந்த செய்யுளைக் கற்பிப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்கியபின்னர், முதன்முதல் அறிமுகப்படுத்தும்போது அதனை இசையுடன் பாடுதல் சிறந்தது. உரைநடையைப் படிப்பதுபோல் படித்தால், சொற்களின் ஒலி நயத்தினை மாணவர்கள் உணர முடியாது. இசையுடன் பாடுதலில் தகுந்த திறமை தமக்கில்லையென ஆசிரியர் கருதினால், சீர்பிரித்துச் சந்தஅமைப்போடு குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக்காட்ட வேண்டும். அப்பொழுது தான் உரைநடையினின்றும் செய்யுள் வேறுபட்டது என்பதனை மாணவர்கள் உணர்வர்.

**· கற்பித்தலைத் தொடரும்முறை**

கற்பிக்க எடுத்துக்கொண்ட செய்யுட்குரிய ஓசையில் படித்துக் காட்டிய பின்னர், செய்யுட் கருத்தை, பாடலின் உணர்ச்சியை, மாணவர்கள் அறியச்செய்வதுடன், அதன் நயத்தினையும் உணரத் தூண்டுதல் வேண்டும். இதுவே செய்யுள் கற்பித்தலின் மிகச்சிறந்த, சுவை மிகுந்த பகுதியாகும். ஆசிரியர் செய்யுள் நயத்தில் ஈடுபட்டு உரைப்பதாலும், மாணவர்கள் தொடர்ந்து கேட்டு வருவதாலும் செய்யுள்நயம் அறியப்படுகிறது.

**· பாடத்தைத் திருப்புதல்**

செய்யுளைக் கற்பித்து முடித்தபின்னர், சில வினாக்களை எழுப்பி, மாணவர்களை பாடல் கருத்தை முழுமையாகக் கூறச் செய்யலாம். உவமையைப் பொருளொடு பொருத்திக்காட்டச் செய்யலாம். அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறும்படி கேட்கலாம். இவையனைத்தும், திருப்புதல் வினாக்களாக அமையும்.

**· துணைக்கருவி**

செய்யுள் பகுதியைக் கற்பிப்பதற்குத் தயாரித்த துணைக்கருவிகளை உரிய இடத்தில் பயன்படுத்திப் பாடத்தைக் கற்பித்தல் வேண்டும். செய்யுள்பகுதி இடம்பெற்ற நூலைப் பற்றிய காலக்கணிப்புச் செய்திகள் இருப்பின், அவற்றை முதலில் சுட்டிக்காட்டி, எக்காலத்தில் தோன்றிய நூலைப் படிக்கிறோம் என அறியச்செய்யலாம். நூல் விளக்கப் பாடத்தைக் காட்டி, அதில் எப்பகுதியை நாம் படிக்கிறோம் எனக் கூறிப் பாடத்தைத் தொடங்கலாம். சிலேடை நயம் அமைந்த பாடப்பகுதி தக்க விளக்கப் படங்களைத் துணைக்கருவிகளாகப் பெற்றிருக்குமாயின், ஒவ்வோர் அடியை விளக்கும்பொழுதும், தொடரின் இரு பொருள்களைக் காட்டும் படங்களைக் காட்டி விளக்குதல் வேண்டும். இவ்வாறு துணைக்கருவிகளை ஆசிரியர் தக்கமுறையில் கையாண்டு பாடத்தைச் சிறப்பாகக் கற்பித்தல் வேண்டும்.

**· வீட்டு வேலை**

செய்யுளைக் கற்பித்து முடித்தபின்னர், மாணவர்களுக்கு வீட்டு வேலையாகச் சில பயிற்சி வினாக்கள் கொடுத்தல் வேண்டும். அவ்வினாக்களைக் கருத்துணர் வினாக்கள், நயமுணர் வினாக்கள், செய்முறை வேலை வினாக்கள் என மூவகையாக அமைக்கலாம். தொடர்களின்


Downloaded From www.nagaicollege.com

பொருளையோ, பாடல் கருத்தையோ எழுதிவரச் செய்தல் கருத்துணர் வினாக்கள் வகையைச் சார்ந்தவை யாகும். நயமுள்ள தொடர்களை எடுத்தெழுதுதல், எதுகைத் தொடர்களை எழுதுதல் போன்றவை நயமுணர் வினாக்கள் வகையைச் சாரும். செய்யுள் கருத்துக்கேற்ற படம் வரையச்செய்தல், சிலேடையை விளக்கப்படம் வரையச்செய்தல், காட்சியைப் படமாக வரையச்செய்தல் போன்றவை செய்முறை வேலைப் பயிற்சியைச் சேர்ந்தவையாகும். தகுந்த வீட்டுவேலையை முன்னதாகவே ஆசிரியர் திட்டமிட்டுக் கொடுத்து, பாடலின் கருத்தையும் நயத்தையும் மாணவர்கள் உணர உதவுதல் வேண்டும்.

**செய்யுள் கற்பித்தலை இனிமையாக்கும் முறைகள்**

- **ஆசிரியர் வரலாறு கூறித் தொடங்குதல்**

பண்டைக் காலத்தில் எச் செய்யுளைக் கற்பிப்பதாயினும் அதனைப் படைத்த ஆசிரியர் வரலாற்றைக் கூறியே கற்பிக்கத் தொடங்குவர். ஆசிரியர் வரலாறு, அவரியற்றிய பிறநூல்கள், அவர் காலத்துப் பிறபுலவர்கள், ஆதரித்த வள்ளல், அவரது காலம் போன்றவற்றைக் கூறி முடித்துவிட்டுச் செய்யுள் பகுதியைத் தொடங்கும்பொழுது, மாணவர்கள் களைப்படைவர். குறிப்பிட்ட ஆசிரியரின் வரலாற்றை அறிய வேண்டுமென்ற ஆர்வம் மாணவர்கள் உள்ளத்தில் எழாதாகையால், அச்செய்திகள் சலிப்புத் தருவனவாக அமையும். எனவே, ஆசிரியர் வரலாற்றைக் கூறிச் செய்யுள் பகுதியைத் தொடங்கும்முறை சிறந்ததன்று. அவ்வாறாயின் ஆசிரியர் பற்றிய குறிப்பை எப்பொழுது கூறுவதென்ற வினா எழுமன்றோ? செய்யுளைக் கற்பித்தபின், இறுதியில், ஷஇவ்வளவு சுவைமிகுந்த பாடலைப் பாடியவர் யார் தெரியுமா?' என்ற வினாவை யெழுப்பி ஆர்வமூட்டி, அவர் வரலாற்றைக் கூறலாம். தொடக்கநிலை வகுப்புகளில், ஆசிரியர் பற்றிய குறிப்புகள் குறைவாகவும், உயர் வகுப்புகளில் அந்த ஆசிரியர் காலத்துப் பிறபுலவர்கள், நூலியற்றிய வரலாறுபோன்ற குறிப்புகளுடன் விரிவாகவும் கூறுதல் நன்று.

- **அருஞ்சொற்பொருள் விளக்கித் தொடங்குதல்**

சில ஆசிரியர்கள், கற்பிக்க வேண்டிய செய்யுளில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்கள் அனைத்தையும் கரும்பலகையில் எழுதி, அவற்றிற்குப் பொருள்களைக் கூறிவிட்டுச் செய்யுளைக் கற்பிக்கின்றனர். இம்முறையில் கற்பிக்கும்பொழுது செய்யுளைப் படித்ததும் மாணவர்கள் பொருள் உணர்ந்து கொள்வர் என எதிர்பார்க்கின்றனர். ஆனால், ஒருவிதத் தொடர்புமற்ற நிலையில் சில சொற்களையும் அவற்றின் பொருள்களையும் முதலில் கற்பிக்கத் தொடங்குவதால், மாணவர்களுக்குச் சலிப்புத் தோன்றும். அன்றியும், சொற்கள் தனிப்பட்டமுறையில் உணர்த்தும் பொருளும், செய்யுளில் அது அமைந்த இடத்தையொட்டி உணர்த்தும் பொருளும் வேறுபடுதல் கூடும். ஆதலின், இம்முறையும் சிறந்ததன்று. செய்யுளைக் கற்பித்துக்கொண்டு செல்கின்றநிலையில், பாடலின் கருத்தை உணர்ந்து போற்றுவதற்கேற்ற வகையில், அதில் கையாளப்பட்டுள்ள அருஞ்சொற்களின் பொருளை உணர்த்துதலே நன்று.

- **பின்னணி கூறித் தொடங்குதல்**

கவிஞரின் உணர்ச்சி அடிப்படையில் தோன்றுகிற செய்யுள், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உருப்பெற்றிருக்கும். அச் சூழ்நிலையை மொழிஆசிரியர் அறிந்து விளக்கி, அதன்பின் செய்யுளைக் கற்பிக்கத் தொடங்கலாம். இதுவே, சூழ்நிலை கூறித் தொடங்கும் முறையாகும். கவிஞர் எந்தச் சூழ்நிலையில் செய்யுளைப் பாடினார் என அறிந்துகொண்டால், செய்யுளின் உணர்ச்சியைப் பெறுதலும், நயம் உணர்ந்து போற்றுதலும் எளிமையாகும். இது சிறந்ததொரு


Downloaded From www.nagaicollege.com

முறையே. பெரும்பாலும் தனிப்பாடல் செய்யுள்களை இம்முறையைப் பின்பற்றித் தொடங்கலாம். இவை தவிர, பிறசெய்யுள்களுக்கு இம்முறை பொருந்தும் என்று கூறுவதற்கில்லை. ஆதலின், தனிப் பாடல்களாக அமைந்த செய்யுள்நீங்கலாக வேறு செய்யுள்களுக்கு, வேறு தகுந்த முறையைக் கையாள வேண்டும்.

**· ஆர்வமூட்டித் தொடங்குதல்**

கற்பிக்க இருக்கின்ற செய்யுளின் கருத்தினை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை மாணவர்களிடத்தில் எழுப்பிப் பின்னர்ச் செய்யுளைக் கற்பிக்கத் தொடங்குதலே ஆர்வமூட்டித் தொடங்குதல் முறையாகும். இதற்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும். எனவே,இதனைச் சூழ்நிலையமைத்துத் தொடங்கும்முறை என்றும் கூறலாம்.

ஏனெனில், தகுந்த சூழ்நிலை யமைந்தால்தான், மாணவர்களுக்குச் செய்யுளைப் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் எழும். தொடர்நிலைச் செய்யுள்களின் ஒரு பகுதியினையோ, குறம், குறவஞ்சி, கலம்பகம் ஆகிய சிற்றிலக்கியங்களின் ஒரு பகுதியினையோ, வருணனைச் செய்யுள்களையோ கற்பிக்க இது சிறந்த முறையாகும். இலக்கியங்களின் சுவைமிகுந்த பகுதிகளை நன்கு விளக்குவதன்மூலம் ஆர்வமூட்டலாம். மாணவர்களுக்குச் சிறந்த ஆர்வத்தைத் தூண்டிவிடுவோமாயின் பாடப் பகுதியாகவுள்ள செய்யுள்களைப் படிப்பதில் பெருவிருப்பத்துடன் ஈடுபடுவர். அத்துடன் கற்பிக்கப்பட்ட காவியத்தின் பிற பகுதிகளையோ, அக்கவிஞர் இயற்றிய வேறு நூல்களையோ படிக்கவும் முற்படுவர்.

**· பிரித்துக் கூறும்முறை**

செய்யுளைப் படித்து, பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, இலக்கணக் குறிப்பு, தொடை நயம், அணி நயம் எனப் பிரித்துப் பிரித்துச் செய்யுளைக் கற்பிக்கும் முறையைப் பிரித்துக்கூறும் முறையென்பர். இம்முறை செய்யுளைக் கற்பித்தலுக்கு ஏற்ற சிறந்த முறையன்று. எனினும், மிகக் கடினமான செய்யுட்கள் இம்முறையால் கற்பிக்கப்படுகின்றன.

தமிழ்மொழி கல்வியில் சிறப்பிடம் பெறுவது செய்யுள் கற்பிப்பதாகம். முந்தைய பாடத்தில் கூறப்பட்ட மொழி கற்பித்தல் நோக்கங்கள் பல செய்யுள் கற்பதால் நிறைவேறு கின்றன. செய்யுள் பாடங்களை கற்பிக்காமல் தமிழ் மொழி கல்வி நிறைவு பெறாது. ஆகையால் செய்யுள் கற்பிப்பு முறைகளும், நோக்கங்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.மேலும்,

**உரைநடை,செய்யுள் கற்பித்தலின் வேறுபாடுகள்**

| செய்யுள் | உரைநடை |
|---|---|
| 1.ஓசை நயம், சொற்சுவை,பொருள்சுவை,அழகுணர்வு ஆகியவற்றின் வழியாக மாணவர்களின் பண்பாட்டை வளர்ப்பது செய்யுள் பாடத்தின் சீரிய நோக்கமாகும். | ஒலியமைதி, சொல் மரபு, தொடர் மரபு,பத்தி மரபு,மொழித்தூய்மை,சொற்களஞ்சியப் பெருக்கம், நடைமுறை இலக்கணம் ஆகியவற்றின் வாயிலாக மாணவர்களின் மொழியறிவை வளர்த்து முழுமை பெறச்செய்து உரைநடைப் பாடத்தின் உயரிய நோக்கமாகும். |
| 2. செய்யுட் பாடத்தில் நயமுணர்ந்து போற்றுதல் தலையாய நோக்கம். | உரைநடைப் பாடத்தில் சொற்களஞ்சியம் பெருக்குதலும், சொல்லாட்சித்திறன் வளர்த்தலும் தலையாய நோக்கங்கள். |
| 3.செய்யுளில் சொல்லுக்குச் சொல் உரை சொல்வ் உரைநடையாக்குவது | உரைநடைப் பாடத்தில் சொல்லுக்குப் பொருள் சொல்வது, சொற்களைத் தொடர்களில் |



Downloaded From
www.nagaicollege.com

| | |
|---|---|
| செய்யுட் படிப்பைச் சுவையற்றதாக்கும். | அமைக்கச்செய்வது போன்றவை பின்பற்றப்படும். |
| 4. செய்யுட் பாடத்தை ஆசிரியர் இசையுடன் படித்து,நயமான பகுதிகளைக் கூறி மகிழ, மாணவர்கள் அவ்வழகில் ஈடுபடுவர். | உரைநடைப் பாடத்தைப் பத்தி பத்தியாகப் படித்து ஆசிரியர் விளக்கிச் சொல்வார். |
| 5. செய்யுளில் இடம்பெறும் சொல்லின் பண்புப்பொருள் சிறப்பிடம் பெறும். அதனை விளக்குதல் வேண்டும். | உரைநடைப் பாடத்தில் சொல்லின் நேர்பொருளுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படும். |
| 6.செய்யுட் ஒலிநயம் உணர்ந்து மகிழ வேண்டுமாகையால், வாய்விட்டுப் படித்தல் சிறப்பிடம் பெறும். | உரைநடைப் பாடத்தில் கருத்துணர்தல் நோக்கமாகையால், வாய்க்குட் படித்தல் படிப்படியாகச் சிறப்பிடம் பெறும். |

**இலக்கணம்கற்பித்தல்**

இதில் இலக்கணத்தின் பொருள் - இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்கள் - இலக்கணம் கற்பிக்கும் முறைகள்: விதிவருமுறை,விதிவிளக்குமுறை - இலக்கணப் பாடத்தை இனிமையாக்குதல் ஆகியன விளக்கப்படுகிறது.

**இலக்கணத்தன் பொருள்**

ஒரு மொழியின் பயன்பாட்டு விதிகளை இலக்கணம் எனலாம். மொழியின் அமைப்பையும் பயன்படுத்தும் விதத்தையும் வரையறை செய்யும் விதிகளைச் சுட்டுகிறது.மொழிக்கு இலக்காகப் பொருந்திய இயல்தனை இலக்கணமெனத் தமிழ்ப் பெரியோர் வழங்குவர்.

தமிழ் மொழி,இயற்றமிழ்,இசைத்தமிழ்,நாடகத்தமிழ் என 3 பிரிவுகளை உடையது.இவையே முத்தமிழ் என அழைக்கப்பட காரணமாக விளங்குகிறது. செய்யுள்,உரைநடை ஆகியவற்றின் இயற்றமிழாகும். தொல்காப்பியம் இயற்றமிழில் கிடைத்துள்ள மிகப்பழைய இலக்கண நூலாகும்.

**இலக்கணம்கற்பித்தலின் நோக்கம்**

- பிழையில்லாமல் பேசுவதற்கும் எழுதுவதற்கும் எடுத்துரைத்தல்.
- நடைமுறை எடுத்துக் காட்டுகளைக் கூறுதல்.
- கருத்துப் பரிமாற்றத்திற்கு ஏற்றதை உரைத்தல்.
- ஒலி அமைப்பு, சொற்றொடர் அமைப்பு இலக்கண விதிகளின் அடிப்படையில் உணரவைத்தல்.

**இலக்கணம்கற்பிக்கும் முறைகள்**

இலக்கண கற்பிக்கும் பொழுது விதிவருமுறை ,விதிவிளக்கு முறை ஆகிய இரு முறைகளைப் பின்பற்றுகின்றோம். அவ்விரு முறைகளையும் பற்றி விரிவாக அறிந்து கொள்வோம்.

- **விதிவரு முறை**

மாணவர்களுக்குத் தெரிந்த எடுத்துக் காட்டுகளைக் கொண்டு அவற்றிடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்ந்து ஒரு பொது விதியினை வருவித்துக் கற்பித்தல் விதிவரு


Downloaded From www.nagaicollege.com

முறையாகும். விதியினை முதலில் கூறாது மாணவர் வாழ்க்கையில் பயன்படுத்தும் சொற்றொடர்களிலிருந்து மாணவர்களே விதியினை அறிந்து கொள்ளச் செய்வதால் இது சிறந்த முறையாகிறது. சிறந்த பேச்சு முறையில், திருந்திய எழுத்து முறையில் அமைந்துள்ள இயல்பினை வரையறுத்துக் கூறுவதே, இலக்கண விதியென்பதனையும் மாணவர் நற்குணர்வர்.

சொற்றொடர்களை அல்லது எடுத்துக் காட்டுகளைக் கரும்பலகையில் எழுதுவதற்கு மாணவரிடம் இயல்பாக உரையாடுவது போல் ஆசிரியர் தொடங்க வேண்டும். உரையாடலின் இடையே சில தொடர்களை ஆசிரியர் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும். ஆனால், மாணவர் அ.்.து இயல்பாக ஏற்பட்டதாக என்னும் படியமைதல் நன்று. இவ்வாறு அமையின் பாடம் சுவைமிக்கதாக விளங்கும்.

ஆசிரியர் ஒரு நிகழ்ச்சியைக் கூறுவதாகத் தொடங்கலாம் "வரும் வழியில் ஒரு சிறுவன் மாமரத்தின் மீது கல்லெறிந்தான்ஒ தோட்டக்காரன் வருவது கண்டு ஓடினான்ஒ கீழே விழுந்தான் அவன் காலொடிந்தது..." இவ்வாறு சிலவற்றைச் சொல்லி நிறுத்திச் சிறுவன் என்ன செய்தான்? கல்லெறிந்தான் என்னும் அவனுக்கு என்ன நேர்ந்தது? காலொடிந்தது என்று வினாக்கள் மூலம் விடை வரவழைத்துத் தனித்தனியே கரும்பலகையில் எழுதிப் பிரித்து எழுதச் செய்யலாம். கல் எறிந்தான். கால் ஒடிந்தது எனவும் எழுதுவர். இதனைத் தொடர்ந்து பொன்னாசை, தன்னியல்வு, பொய்யுடல், பல்லாண்டு போன்ற தொடர்களையும் பயிருயர்ந்தது. வாயகன்றது, பழமினித்தது போன்ற தொடர்களையும் கரும்பலகையில் வகைப்படுத்தி எழுதலாம். நிலை மொழியில் தனிக்குறிலின் பின் வரும் ஒற்று, வருமொழி முதலில் உயிர் வந்தால் இரட்டிக்கும் தன்மையை அவர்களையே கூறச் செய்தல் வேண்டும். இறுதியில் "தனிக் குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்னும் விதியினைக் கூறச் செய்யலாம்.

**விதிவரு முறையின் நன்மைகள்**

இவ்விதிவரு முறையைப் பின்பற்றிக் கற்பிப்பதில் பல நன்மைகள் உள்ளன. (1) மாணவர்கள் தாங்கள் அறிந்த பல சொய்திகளிலிருந்து, அறியாத ஒரு பொது விதியினை அறிந்து கொள்வர். கற்பித்தலில் தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல் வேண்டும் என்ற உளவியல் கொள்கைக்கு இது பொருத்தமாயுள்ளது. (2) மாணவர் புதிய விதியினைத் தாமே எண்ணிப் பார்த்து அறிந்து கொள்வதால் அவர்கள் மனத்தில் அது நன்றாகப் பதிகிறது (3) இம்முறையில் மாணவர்களுக்குப் பாடத்தில் ஆர்வம் ஏற்படுகிறது. தாங்களாகவே ஒரு விதியைக் கண்டு பிடித்ததாக உணர்ச்சி ஏற்படுவதால் அவர்களது தன்னம்பிக்கை வளர்கிறது.

இம்முறையின் மூலம் கற்பிப்பதில் சில குறைகளும் உள்ளன. (1) இம்முறையின்படி பல எடுத்துக்காட்டுகளைப் பார்த்து, மாணவர் ஒவ்வொரு பொதுவிதியினை அறிவதற்கு நீண்ட நேரமாகும். (2) இம்முறையைப் பின்பற்றிக் கற்பித்தால் மாணவர் பெற வேண்டிய இலக்கண அறிவு முழுமையையும் குறிப்பிட்ட காலத்திற்குள் கற்பித்து முடித்தல் இயலாததாகும். (3) மாணவனைக் ஷகண்டு பிடிப்போன்' நிலையில் வைத்து, எடுத்துக் காட்டகள் மூலம் அவனையே பொது விதியினைக் கண்டுபிடிக்கச் செய்வதற்கு ஆசிரியர் தனித்தனிமை வாய்ந்தவராதல் வேண்டும். மேலும் ஆசிரியர் ஒரு பாடத் தலைப்புக்கே நீண்ட நேரம் தயாரித்தல் தேவைப்படும்.

**விதிவிளக்கு முறை:**

மாணவர்களே எளிதில் கண்டுணர முடியாத சில விதிகளை ஆசிரியர் விதிவிளக்கு முறையில் கற்பிக்கலாம். இலக்கண விதியொன்றைக் கூறி அதனைப் பல எடுத்துக் காட்டுகள் மூலம் விளக்குதல் விதிவிளக்கு முறையாகும் இம்முறையே பழங்காலத்தில் இலக்கணம் கற்பித்தலில் பின்பற்றப்பட்ட முறையாகும்.



Downloaded From www.nagaicollege.com

மெய்யீற்றுப் புணர்ச்சியில் ண, கர, ன கர ஈற்றுப் புணர்ச்சியைக் கூறும் நன்னூல் விதி,

“ண ன வல்லினம் வரட்டறவும், பிறவரின்

இயல்புமாகும் வேற்றுமைக்கும்ளூ அல்வழிக்கு

அனைத்து மெய்வரினும் இயல்பாகும்மே”

என்று கூறி, அதன் பின்னர் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக் காட்டு கொடுத்தல் வேண்டும்.

வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வர ணகர மெய்-டகர மெய்யாகவும், னகர மெய் றகர மெய்யாகவும் மாறும்.

மண் ு குடம் - மட்குடம்ளூ பொன் ு குடம் - பொற்குடம்.

வேற்றுமைப் புணர்ச்சியில் மெல்லினமும் இடையினமும் வரணகரமும், னகரமும் இயல்பாகவேயிருக்கும்.

மண் ு மலை - மண்மலைளூ பொன் ு வன்மை - பொன்வன்மை

அவ்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலில் மூவினமும் வரணகரமும், னகரமும் இயல்பாகவே இருக்கும்.

பொன் சிறந்ததுளூ விண் நிறைந்தது.

இவ்வாறு விதியைக் கூறி எடுத்துக் காட்டின் மூலம் விளக்கிச் செல்வதால் வரும் நன்மைகளாவன:

(1) இலக்கணப் பாடப்பகுதியை மிக விரைவாகக் கற்பிக்கலாம்.

(2) இலக்கண விதிகளும் எடுத்துக் காட்டுகளும் நூலில் கொடுக்கப் பட்டிருப்பதால் ஆசிரியர் மிக எளிதாகக் கற்பித்தல் கூடும்ளூ நீண்ட நேரத் தயாரிப்பு தேவையில்லை.

விதிவிளக்கு முறையில் சில குறைகளும் உள்ளன

(1) கற்பித்தலில் தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல் வேண்டும் என்னும் உளவியல் கொள்கைக்கு இம்முறை முற்றிலும் மாறானது. (2) ஆசிரியர் இலக்கண விதியை விரைவாகக் கற்றுக் கொடுத்து விடலாம். ஆனால், மாணவர் விதியை நன்றாக அறிந்து கொண்டார்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. (3) இம்முறையின் படி ஆசிரியர் சொல்வதை மாணவர் கேட்டுக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வேலை செய்வதில்லை. ஆதலால், கற்பிக்கப்படும் இலக்கண அறிவு நெடுநாள்களுக்கு நிலைத்திருக்கும் என்று சொல்வதற்கில்லை.

விதிவிளக்கு முறை, விதிவருமுறை ஆகிய இரு முறைகளிலும் குறைகளும், நிறைகளும் உள்ளன. ஆசிரியர் இலக்கணப் பாடத்தைக் கற்பிக்கும் பொழுது ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற முறையைக் கையாளுதல் வேண்டும். விதிவரு முறையும், விதி விளக்கு முறையும் கலந்ததொரு முறைப்படி கற்பித்தலும் நலம் பயப்பதாகும்.

இருமுறைகளுக்குமுள்ள வேறுபாடுகள்



Downloaded From www.nagaicollege.com

| விதிவிளக்கு முறை | விதிவரு முறை |
|---|---|
| 1. பொது விதியைக் கூறி எடுத்துக் காட்டுகளை விளக்குகிறது. | 1.எடுத்துக்காட்டுகளைக் கூறி அவற்றினின்றும் பொது விதியை அமைக்கிறது. |
| 2. புதிய அறிவு முதலிலேயே வழங்கப்படுகிறது. | 2. பாட முடிவில் புதிய அறிவு பெறுகின்றனர். |
| 3. விரைவாகக் கற்பிக்கலாம். காலச் செலவு குறைவு. | 3.மெதுவாகச் செல்லும் முறை நேரம் அதிகமாகும். |
| 4. பெறும் இலக்கண அறிவு உறுதியாக நிலை பெற்றிருக்கும் எனக் கூற முடியாது. | 4.பெற்ற இலக்கண அறிவு உறுதியாக நிலை பெற்றிருக்கும். |
| 5. தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல் போன்ற உளநூல் கொள்கைகளுக்கு ஏற்றமுறையன்று. | 5.உளநூல் கொள்கைகளுக்கு ஏற்றமுறை. |
| 6. சுய சிந்தனைக்கு இடமில்லை | 6. சிந்தனை செய்து பொது விதியைக் கண்டு பிடிப்பதால் தன்னம்பிக்கையை வளர்க்கின்றது. |
| 7. இலக்கண நூலில் உள்ள நூற்பாவினையும் எடுத்துக் காட்டுகளையும் கூறுவதால் ஆசிரியர் வேலை எளிதாகின்றது. | 7. மாணாக்கர் தம் வயதுக்கும் அறிவு நிலைக்கும் ஏற்ப எடுத்துக் காட்டுகளைத் தயாரிக்க வேண்டியிருப்பதால் ஆசிரியருக்கு வேலை அதிகமாகின்றது. |

**இலக்கணப் பாடத்தை இனிமையாக்கல்**

மக்கள் தங்களிடம் இயல்பாக அமைந்திருந்த ஒலியெழுப்பம் திறனைச் சிறிது சிறிதாகப் பொருள் தரும் ஒன்றாகச் செய்து மொழியைப் படைத்துக் கொண்டனர் எனக் கண்டோம். ஒலிக் குறியீடுகள் செப்பமடைந்தபின் பேச்சு மொழி உண்டாயிற்று. காலம் செல்லச் செல்ல மக்கள் தம செவிகளால் உணரவல்ல ஒலிவடிவமான குறியீடுகளுக்குக் கண்களால் அறிந்து கொள்ளக் கூடிய வரிவடிவக் குறியீடுகளை அமைக்க முயன்று வெற்றி பெற்றனர். இதன் விளைவாக எழுத்து மொழி உண்டாயிற்று. முந்தையோர் பேசி வந்த அதே முறையில் பேசி ஒருவருடன் ஒருவர் கலந்து பழகினர். எந்தச் சொல்லை, எப்பொருளில், உயர்ந்தோர் வழங்கி வந்தனரோ அச்சொல்லை அதே பொருளில் மற்றவரும் வழங்கின்.

ஷஎள்ளினின்றும் எண்ணெய் எடுப்பது போன்று இலக்கியத் தினின்றும் எடுக்கப்படுவது இலக்கணம்’ என்று ஷபேரகத்தியம் நூல் கூறுகின்றது. என் நல்ல எள்ளாக இருப்பின், எண்ணெய் நல்லதாக அமைவது போன்று இலக்கியம் சிறந்ததாக இருப்பின் இலக்கணமும் சிறந்த ஒன்றாக அமையும் என்பது தெளிவு. நன்னூல் இயற்றிய ஷபவணந்தி முனிவரும்’ ஷஇலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயல்பலின்’ என்று கூறியுள்ளார்.

**இலக்கணம் - தேன்**

வேறு சிலர் இலக்கணப் பாடத்தைக் கற்பிக்க வேண்டு மென்கின்றனர். இப்பாடத்தில் மாணவர் நல்ல தேர்ச்சி பெறுதல் இன்றியமையாதது என்றும், இலக்கணப் பாடத்தில் தேர்ச்சி பெற்ற பின்பே இலக்கியம் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் இவர்கள் கூறுகின்றனர். பழங்காலத்தில் தொல்காப்பியம், நன்னூல் கற்ற பின்பே இலக்கியம் கற்பிக்கப்பட்ட தென்பதையும், சில நாடுகளில் தொடக்கப் பள்ளிகளை இலக்கணப் பள்ளிகள் என்றே


Downloaded From www.nagaicollege.com

அழைத்தமையையும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இலக்கண விதிகளை முறையாகப் பயிலாவிடில் மொழியைச் செம்மையுறக் கற்றதாகக் கொள்ளல் முடியாது. எனவே இலக்கணப் பாடத்தை அனைத்து வகுப்புகளிலும் ஒரு தனிப்பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்பது இவர்கள் கருத்தாகும்.

ஷஇலக்கணம் தேன்' என்பாருக்கும் இடைப்பட்ட நிலையில் சிலர் மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும் தேவைப்படும் இலக்கண அறிவைப் பாடத்தோடு இணைத்துக் கற்பிக்க வேண்டுமென்று சொல்கின்றனர். மொழியறிவை உறுதிப்படுத்துவதற்கு இலக்கணம் ஒரு துணையாகவே உள்ளது என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இலக்கணம் என்பது மொழியின் பொது விதிகளைக் கூறுவதால் அவற்றை அறிந்து கொள்ளக் கூடிய பருவத்தில் இலக்கண அறிவு வழங்கப் பட வேண்டும் என்று கொள்ளலாம். முறையான இலக்கணப் பாடம் தொடங்கப் பெறுவதற்கு முன் இலக்கணப் பாடத்தில் பயன்படுத்தப்படும் சொற்களை, அறிமுகப்படுத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட குறைகள் நேராதவாறு இலக்கணப் பாடத்தைக் கற்பித்தால் இலக்கணப் பாடம் மாணாக்கர் விரும்பிக் கற்கும் இனிய பாடமாக மாறும். கீழ் உள்ளவற்றுக்கு ஆசிரியர் சிறப்புக் கவனம் செலுத்துதல் நன்று.அவை:

- வாழ்க்கையோடு இணைந்த எடுத்துக் காட்டுகள் கூறுதல்.
- உரைநடை, செய்யுள் பாடத்தோடு இணைத்துக் கற்பித்தல்.
- சுழலட்டைகள், விளக்க அட்டைகள் போன்ற துணைக் கருவிகளைப் பயன்படுத்துதல்.
- இலக்கண விதிகளை மாணாக்கர் விரும்பும் மெல்லிசை மெட்டுகளில் அமைத்துக் கூறுதல்.
- விளையாட்டு முறைகளைப் பயன்படுத்துதல்
- பெரும்பான்மையும் விதிவருமுறையைப் பயன்படுத்துதல்.
- ஆசிரியர் இலக்கணப் பாடத்தில் ஈடுபாடுக் கொண்டு பேரார்வத்துடன் கற்பித்தல்.

**கட்டுரை கற்பித்தல்**

இதில் கட்டுரையின் பொருள் ,கட்டுரையினுடைய வகைகள், குறிப்புகளையொட்டி கட்டுரை எழுதுதல்,வழிகாட்டுதலையொட்டி கட்டுரை வரைதல், சொந்தமாகக் கட்டுரை வரைதல் ஆகியன விளக்கப்படுகிறது.

**கட்டுரையின் பொருள்**

"உள்ளத்தில் தோன்றுவதைக் கட்டுரைப்பது கட்டுரை". அழகு நிரம்பிய தன்மையைக் கட்டழகு என்று சொல்வது போன்று அமைப்பழகு நிரம்பிய உரையைக் கட்டுரை என்கிறோம். சுருக்கமாகக் கூறினால், குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி ஒரு கட்டுக் கோப்புடன் யாவரையும் கவரும் முறையில் அமைக்கப் படுவதைக் கட்டுரை எனலாம்.

ஒருவரது பேச்சு எதிரே கேட்பவரைத் தம் பால் பிணித்துக் கொள்ள வேண்டும். கேளாதவரும் அவர் பேச்சைக் கேட்க விரும்ப வேண்டும். இதுவே பேச்சாற்றலுக்கு அழகு என்று வள்ளுவர் கூறும் இலக்கணம் எழுத்தாற்றலுக்கும் பொருந்துவதாகும். மேலும், ஒரு சிறந்த கட்டுரையானது படைப்பாளியின் அறிவாற்றலை வெளிப்படுத்துவதோடு படிப்போரின் சிந்தனையையும் தூண்டுவதாக அமைதல் வேண்டும்.



Downloaded From www.nagaicollege.com

நம் உள்ளத்தில் தோன்றும் கருத்துகளை வெளியிடவும் செய்திகளைப் பிறருக்குக் கூறவும் நம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் நாம் பேச்சையும் எழுத்தையும் பயன்படுத்துகிறோம். இவற்றுள் எழுதுதல் என்பது தனித்திறன், எல்லாராலும் எளிதில் கையாள முடியாத ஒரு திறன். ஆதலின் எழுதுதல் திறனை வளர்க்கும் கட்டுரைப் பயிற்சி என்பது மொழிப் பாடத்தில் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது.

**கட்டுரையினுடைய வகைகள்**

- **படக் கட்டுரை**

ஒரு கதை நிகழ்ச்சிகளைப் படங்களாக அமைத்து, அப்படங்களைப் பார்த்து நிகழ்ச்சி முறைப்படி எழுதச் செய்வது படக் கட்டுரையாகும். இவ்விதமாகப் படங்கள் கதை கூறுவனவாக அமையாமல் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பதாகவும் அமையலாம். இரயில் நிலையக் காட்சி. வீடு நெருப்புப் பிடித்து எரிதலும் மக்கள் தீயணைத்தலும், மழை வெள்ளக் காட்சி - போன்ற காட்சிகளைப் படங்களாகக் காட்டி அவை குறித்து ஒரு பத்தி எழுதச் செய்தல் படக் கட்டுரையாக அமையும். மாணவர் தம் கற்பனையில் நிகழ்ச்சிகளை எண்ணிப் பாராது நேரே ஒரு காட்சியைப் பார்ப்பதால் அது குறித்து எழுதுவது எளிதாகிறது.

- **கதைக் கட்டுரை**

தொடக்க நிலையில் கதைகளை எழுதுவது மாணவர் மனம் விரும்பி ஈடுபடும் ஒரு செயலாகும். எனவே, சுவை மிக்க கதைகளைக் கூறி அவற்றை எழுதச் செய்யலாம். முதல் நிலையாகக் கதையைச் சுருக்கமாகக் கூறலாம். அல்லது ஓரிரு முறை படித்துக் காட்டலாம். அதைக் கேட்ட மாணவர் கதை நிகழ்ச்சி, தொடர் அனைத்தையும் அறிவர். ஆதலால், அவர்கள் எளிதாக எழுதுவர். இரண்டாம் நிலையாக, கதை முழுவதையும் கூறாமல் இன்றியமையாது தேவைப்படும் குறிப்புகளையும் தொடர்களையும் கூறிக் கதையைக் கூறுவர். பின்னர், மாணவரை எழுதச் செய்யலாம். மூன்றாவது நிலையாக கதையின் குறிப்புகள் தொடர்ச்சியாகவும், மிகுதியாகவும் இராமல் கதைத் தொடர்பைக் குறிக்கும் ஓரிரு சொற்களாக அமையும். அவற்றின் உதவி கொண்டு மாணவர் கதையை எழுதுவர்.

கதைக் கட்டுரைகளை முதலில் எழுதப் பழக்குவதால் மாணவர் ஏற்ற சொற்களைப் பயன்படுத்தவும், தொடர்ச்சியாக எழுதவும், நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப பத்தி பிரிக்கவும் பயிற்சி பெறுவர். அவர்கள் மொழித்திறன் வளரும்.

- **சிந்தனைக் கட்டுரை (அ) விளக்கக் கட்டுரை**

ஒரு பொருளைப் பற்றிப் பல கருத்துகளைத் திரட்டி நன்கு சிந்தித்து எழுதப் பெறுவது கருத்தியல் கட்டுரையாம். இதனைச் சிந்தனைக் கட்டுரை என்றும் கூறுவர். இவை பண்பாடு, அரசியல், சமூகம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும். அன்புடைமை, வாய்மை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, முயற்சி, செல்வம், கல்வி, நாட்டு ஒருமைப்பாடு முதலான பல தலைப்புகளில் எழுதப் பெறும்.

பல நூல்களில் படித்த கருத்துகளுடன் தாமே சிந்தித்து அறிந்து கொண்ட கருத்துகளையும் வெளிப்படுத்தும் வாயிலாக அமைவதால் இவை வருணனைக் கட்டுரை எழுதுதலை விட அரியனவாம். தம் கருத்துக்கேற்ற தொடர்களை அமைத்தல், மேற்கோள் காட்டுதல், விளக்கம் தருதல் முதலானவை இவற்றில் இடம் பெறும்.


Downloaded From www.nagaicollege.com

- **விவாதக் கட்டுரை (அ) தருக்கியல் கட்டுரை**

ஒரு பொருள் குறித்து அதன் தன்மைகளையும் அது பயன்படும விதத்தையும் எழுதுவது எளிதாக அமைதல் கூடும். ஆனால் ஒரு பொருள் தேவையா, தேவையில்லையா என ஆராயும் பொழுது அதற்குரிய காரணங்களைக் கூறல் வேண்டும். ஒரு செயல் நன்மை தருமா, தீமை தருமா என ஆய்ந்து இருபக்கக் கருத்து குறித்தும் எழுதுதல் விவாதக் கட்டுரை அல்லது தருக்கியல் கட்டுரையாகும். அறிவியல் கண்டுபிடிப்புகளால் நன்மையா, தீமையா? அணுவாற்றல் பெரிதும் பயன்படுத்தப் படுவது ஆக்கத்திற்கா, அழிவுக்கா போன்ற கட்டுரைகள் தருக்கியல் கட்டுரைகளாம்.

- **வரலாற்றுக் கட்டுரை**

கல்வியறிவை விரிவடையச் செய்வது வரலாறு. வரலாற்றைத தனி மனிதரின் வரலாறு, நாட்டு வரலாறு, சமுதாய வரலாறு, நாகரிக வரலாறு எனப் பலவகைப் படுத்தலாம். இவ்வரலாற்றைப் படிப்பதனால் ஒரு நாடடின் பண்டைய வரலாற்றை நாம் அறியலாம். மக்கள் வாழ்க்கையை அறியலாம். சான்றோர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதன் மூலம் நம்மை நாம் நெறிப்படுத்திக் கொள்ளலாம். நாட்டு வரலாற்று அறிவால் நமக்கு நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் உண்டாகின்றன.

வரலாற்றக் கட்டுரை இரு வகைப்படும். ஒருவரது வாழ்க்கையைப் பிறர் எழுதும் பொழுது அது ஷவாழ்க்கை வரலாறு' எனவும், ஒருவரது வாழ்க்கையைத் தாமே கூறுவது போல் அமைவது ஷதன் வரலாறு' எனவும் அழைக்கப் பெறும். பள்ளிகளில் மக்கள் யாவரும் பின்பற்றத் தக்க முறையில் வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்தெழுதும் கட்டுரைகளை எழுதச் செய்யலாம்.

வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையை எழுதப் புகும் சான்றோரின் பிறப்பு, பெற்றோர், இளமை வாழ்வு, கல்விப் பணிபுரிதல், இல்வாழ்வு, ஆற்றிய அருந்தொண்டுகள், போற்றுதற்குரிய பண்பு நலன்கள், பெற்ற சிறப்புகள், முடிவுரை என வகுத்துக் கொள்ளலாம்.

வரலாற்றுக் கட்டுரைகள் கதைக் கட்டுரைகளை விடச்சற்று உயர்ந்த நிலையில் உள்ளனவாகும். நிகழ்ச்சிகள் குறிப்புகளைத் திரட்டிப் பண்பு நலன்களையும் விளக்க வேண்டியிருப்பதால் கதைக் கட்டுரைகளைத் தொடர்ந்து இவ்வகைக் கட்டுரைகள் எழுதப் பயிற்சியளிக்கலாம்.

- **வருணனைக் கட்டுரை**

ஒரு பொருளை வருணித்துக் கூறுவது வருணனைக் கட்டுரை எனப்படும். இதில் இயற்கைக் காட்சிகள், நாடு, நகரம், மலை, ஆறு, கடல்,மேகம், மழை, பருவகாலங்கள் பற்றியும், துளசிச் செடி, மல்லிகைக் கொடி, வேப்ப மரம் முதலான மரம் செடி கொடிகள் பற்றியும், இரும்பு, தங்கம் முதலான உலோகங்கள் பற்றியும் எழுதலாம். மேலும், இந்திய நாடு, தமிழ் நாடு, சென்னை, திருநெல்வேலி, வள்ளுவர் கோட்டம் முதலான நாடு நகரங்கள், சிறப்பான இடங்கள் பற்றியும் எழுதலாம்.

வரலாற்றுக் கட்டுரை, கதைக் கட்டுரைகளை விட இவ் வருணனைக் கட்டுரைகள் சற்று உயர்ந்த நிலையில் உள்ளன வாகும். வருணனைக்கு ஏற்ற தொடர்களைத் தேர்ந்தெடுத்தல், கற்பனைத் திறனோடு வருணித்தல் போன்றவை இவற்றில் இடம் பெறும். வியப்பு வாக்கியங்கள், வினா வாக்கியங்கள், உடன்பாடு, எதிர்மறை வாக்கியங்கள் எனப் பலவகை வாக்கியங்களைப்


Downloaded From www.nagaicollege.com

பயன்படுத்த நேரிடும். எனவே, வரலாற்றுக் கட்டுரைகளை எழுதுவதில் ஓரளவு பயிற்சி பெற்ற பின்னர் இவ்வருணனைக் கட்டுரைகளை எழுதச் செய்யலாம்.

(எடுத்துக் காட்டு)

ஷமயில்' பற்றிய வருணனைக் கட்டுரைக்குரிய குறிப்புகள் கீழ் உள்ளவாறு அமையலாம்.

**முன்னுரை:** இயற்கைச் செல்வம்-பறவைகளின் தன்மை மயிலின் தனிச் சிறப்பு.

**பொருளுரை:** தோற்றம்-ஆடும் அழகு-கண்ணுக்கு விழுந்து-உணவும் உறைவிடமும்-பண்பும் பயனும்-இலக்கி யத்தில் மயில்.

**முடிவுரை:** நாட்டியப் பறவை-நாட்டுப் பறவை.

- **உரையாடல் கட்டுரை**

ஒரு பொருள் குறித்துச் செய்திகளைத் தொடர்ச்சியாக எழுதுவதைவிட அக்கருத்துகளை இருவர் பேசுவது போல உரையாடலாக அமைப்பது படிப்பதற்குச் சுவையாயிருக்கும். எடுத்துக் காட்டாக, ஷஅஞ்சலகம் ஆற்றும் பணிகள்' பற்றித் தொடர்ச்சியாக எழுதுவதைவிட ஒவ்வொரு துறை பற்றி ஒருவர் வினாக்கள் கேட்பதாகவும் மற்றவர் விடை சொல்வதாகவும் அமைவது உரையாடலாகும். இதனையே உரையாடல் கட்டுரை என்பர். விழாக்கள் பற்றிய செய்திகள், புதிய பொருள்கள் பற்றிய விளக்கம் போன்றவை உரையாடல் கட்டுரைக்கு ஏற்றவையாம்.

**குறிப்புகளையொட்டிக் கட்டுரை எழுதுதல்**

திரட்டிய செய்திகளை அப்படியே எழுதி வைத்தால், எழுத இருக்கும் தலைப்புக்கு வேண்டிய செய்தியினை, அல்லது மேற்கோளை எடுத்தாளுதற்குச் சற்று சிரமம் ஏற்படும். எனவே அவற்றை வகைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். மொழி குறித்தவை, வரலாறு பற்றியவை, அறிவியல் தொடர்பானவை, கணிதம் பற்றிய குறிப்புகள், புவியியல் பற்றிய செய்திகள் எனப்பாட வாரியாக வகைப்படுத்திக் கொள்ளலாம். அல்லது உடன்பாடானவை, விழாக்கள் பற்றியவை, இலக்கியம் தொடர்பானவை என வகைப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். ஏற்ற தலைப்புகளில் செய்திகளை வகைப்படுத்தி எழுதி வைத்துக் கொள்ள உதவுதல் கட்டுரைப் பாடத்தின் நோக்கங்களுள் ஒன்றாகும்.

ஒரு பழமொழியின் விளக்கத்தையோ, உவமையின் விளக்கத்தையோ படித்து முடித்ததும் குறிப்பேட்டில் பழமொழியையோ, உவமையையோ எழுதி வைத்துக் கொள்வோம். நாம் எழுதும் கட்டுரையில் அதனை எடுத்தாளும் பொழுது அதனை விரித்து எழுதத் தெரிதல் வேண்டும். இதே போன்று வெவ்வேறு தலைப்புகளில் செய்திகளைத் திரட்டும் பொழுது அவற்றைச் சுருக்கமாக ஓரிரு தொடர்களில் எழுதி வைத்துக் கொள்வோம். தேவையான போது அதனை விரித்து எழுதுதல் வேண்டும். இவ்வாறு விரித்து எழுதும் பொழுது எடுத்துக் காட்டு கூறி விளக்குதல் வேண்டும். செய்திகளை விரித்து எழுதும் திறனை ஒரு நோக்கமாகக் கொண்டு நாம் மாணாக்கரைப் பயிற்றுதல் வேண்டும்.

**வழிகாட்டுதலையொட்டிக் கட்டுரை வரைதல்**

மாணாக்கரைக்கட்டுரை எழுதச் சொல்லும் பொழுது அவர்கள் சூழலில் உள்ள பொருள்களைப் பற்றியும், பங்கெடுத்துக் கொண்ட நிகழ்ச்சிகளைப் பற்றியும், படித்தோ, கேட்டோ அறிந்த செய்திகளைப் பற்றியும் எழுதச் சொல்கின்றோம். தொடக்க நிலையில் கருத்துப் பொருள்களை விடக் காட்சிப் பொருள்களுக்கு முதலிடம் தருகின்றோம். தாங்கள் எடுத்துக்



Downloaded From www.nagaicollege.com

கொண்ட தலைப்பு பற்றிய செய்திகளை முழுமையாக அறிந்திருக்கிறார்களா என்பதை வினாக்கள் மூலம் அறிந்து குறைவாக இருப்பின் புத்தகங்களைப் படித்து அவற்றைத் தொகுத்து அறியச் செய்கின்றோம். இவ்வாறு செய்திகளைத் திரட்டித் தொகுத்து வைத்துக் கொள்ளு தலையே செய்திகளின் தொகை என்கிறோம். செய்திகளைத் தொகுப்பதற்கு மாணாக்கர் கலைக் களஞ்சியங்கள், செய்தித் தொகுப்புகள் அபிதான சிந்தாமணி, போன்ற நூல்களைப் பயன்படுத்தல் வேண்டும். அதற்கு ஆசிரியர் அவர்களுக்கு பயிற்சியளித்தல் வேண்டும். இவ்வாறு பல நூல்களிலிருந்து திரட்டிய செய்திகளைத் தனியாகக் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

கட்டுரையில் அமைய வேண்டிய செய்தியைப் பலரிடம் கேட்டோ, புத்தகங்களைப் படித்தோ மாணாக்கர் அறிந்து கொள்கின்றனர். அவற்றை வெளிப்படுத்தும் போது மாணாக்கரிடமுள்ள கருத்தாழம், அவர்களிடமுள்ள சொற்களஞ்சியம் ஆகியவற்றிற்கேற்ப அவரது நடையமையும், பிற ஆசிரியருடைய தொடர்களை மனப்பாடம் செய்து அப்படியே எழுதுதலைத் தவிர்த்தல் வேண்டும். பழமொழிகள், உவமைகள், வருணனைத் தொடர்கள், மேற்கோள் தொடர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சிறுசிறு வாக்கியங்கள் எழுதப் பயிற்றுவிக்க வேண்டும் அவ்வாறாயின் கருத்து வளத்துக்கும் சொல் வளத்துக்கும் ஏற்பத் தனிநடை அமையும்.

நூல்களையும் கட்டுரைகளையும் படிக்கும் போது மாணாக்கர் தம் உள்ளம் கருவம் சொற்றொடர்கள், வருணனைத் தொடர்கள், மரபுத் தொடர்கள் ஆகியவற்றை ஒரு குறிப்பேட்டில் எழுதி வரச் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் பொழுது அரிய சொல்லாட்சிகளை அவர்கள் அறிவர். இத்தகைய பழக்கம் மாணாக்கர் கருத்தை வலியுறுத்தவும் உதவும். எனவே மாணாக்கர் தம் செய்தியறிவை வளர்த்தற்கும் மொழித் திறனை வளர்த்தற்கும் வழி காட்ட வேண்டும்.

**சொந்தமாகக் கட்டுரை வரைதல்**

மாணாக்கர் இயல்பாகவே கற்பனையாற்றல் மிக்கவர்கள். அவ்வாற்றல் வெளிப்படும் வண்ணம், வகுப்பு நிலைக்கு ஏற்ற தலைப்புகளைக் கொடுத்து எழுதச் செய்தல் வேண்டும். குறைக் கதைகளை முடித்தல், ஒரு பொருள் தன் வரலாறு (கற்பனை) கூறுவது போல் எழுதுதல் போன்றவை மாணவர் தம் கற்பனைத் திறனைப் பெரிதும் வளர்க்கும். ஓவ்வோராண்டும் ஓரிரண்டு கட்டுரைகள் கற்பனைத் திறனை வளர்ப்பனவாக சொந்தமாக கட்டுரை அமைதல் வேண்டும்.

ஒரு பொருள் குறித்து ஆராய்ச்சி செய்து எழுதுவது ஆய்வுக் கட்டுரை. நூல் அல்லது ஆக்கியோர் காலம் பற்றிய ஆராய்ச்சி, உயர்ந்த நூல்களின் ஒத்த கருத்துகள் பற்றிய ஆராய்ச்சி, சிறந்த நூல்களின் உவமை, சொல், அணிகள், யாப்பு நிலை பற்றிய ஆராய்ச்சி யாவும் ஆய்வுக் கட்டுரையில் அடங்கும்.

கட்டுரை எழுதுவதற்கு கட்டுரைத் தலைப்பு பற்றிய செய்தியினையும், அச்செய்தியினை வெளியிடும் மொழித் திறனையும் மாணவர் பெறுதல் வேண்டும். எனவே மாணாக்கர்களைப் பல நூல்களைப் படிக்கும் படி தூண்டுதல் வேண்டும். வகுப்பு நூலகத்தில் பல்விதமான நூல்களை அமைத்துப் படிக்கச் செய்தல் வேண்டும். சிறந்த கட்டுரைகளை ஆசிரியர் வகுப்பில் படித்தும் காட்டலாம். இவ்வாறு மாணவர் செய்திவளத்தைப் பெருக்குவதுடன் அவர்கள் மொழித்திறன் பெறவும் வழி காட்ட வேண்டும்.



Downloaded From
www.nagaicollege.com

மாணவர் தாம் கூற நினைக்கும் செய்திகளை முறையாகக் கூறுதல் வேண்டும். கருத்துக்கேற்ப அதனை ஒரு பத்தியாக அமைத்து, பத்தியின் மையக் கருத்துக்கேற்ப பிற சொற்றொடர்களை எழுதும் திறனும் பெறுதல் வேண்டும்.

### சொந்தமாக கட்டுரை எழுதும் முறை

மாணாக்கரைக் கட்டுரை எழுதச் செய்தலுக்கு ஆசிரியர் சில வழி முறைகளைக் கையாளுதல் வேண்டும். முதன் முதல் வகுப்பு நிலைக்கேற்ற கட்டுரைத் தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அத்தலைப்பு பற்றி மாணவருடன் உரையாடி வாய் மொழிக் கட்டுரையாக அமைத்தல் வேண்டும். பின்னர்த் தேவையான செய்திகளைத் திரட்டச் செய்தல் வேண்டும். பின்னர், கட்டுரையில் வழங்கப்படும் கருத்துகளுக்கேற்பப் பத்தி பிரித்தல் வேண்டும். சொற்றொடர் அமைப்பு, மொழிநடை போன்றவற்றைச் சுட்டிக் காட்டி எழுதச் செய்தல் வேண்டும். ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

- **கட்டுரைத் தலைப்பு**

ஓர் இடத்தில் பயிற்சி என்னும், நாளும் குறிப்பிட்ட பின்னர், கட்டுரைத் தலைப்பை பக்கத்தின் நடுப்பகுதியில் சற்றுப் பெரிய எழுத்துகளில் எழுதச் செய்தல் வேண்டும். அடிக்கோடிட்டும் காட்டலாம்.

- **வாய்மொழிப் பயிற்சி**

கட்டுரை பாடவேளை இரு பாட வேளைகாளக அமையலாம். முதல் பாடவேளையில் தலைப்பு பற்றிக் குழந்தைகளிடம் உரையாடிக் கட்டுரைப் பொருளைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் அனைவரும் அறியச் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்திகளை வரவழைக்கும் பொழுதே முன்னுரையாகக் கூறவேண்டியவை, கட்டுரைப் பொருளில் இடம் பெற வேண்டியவை. முடிவுரையாகக் கூற வேண்டியவை எனப் பிரித்துக் கூறுதல் வேண்டும்.

- **செய்திகளைத் திரட்டுதல்**

கட்டுரையில் இடம் பெற வேண்டிய செய்திகளைப் பற்றி உரையாடும் பொழுது மேலும் தேவையான செய்திகளை எந்தெந்த நூல்களைப் பார்த்துத் திரட்டிக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுதல் நன்று. எடுத்துக் காட்கீக, ஷசெய்தித் தாள்கள்' பற்றிக் கட்டுரை எழுதுவதாயின், முதன் முதல் செய்தித்தாள் எப்பொழுது வெளியிடப் பெற்றது, வெளியிட்டவர் யார் எனக்கலைக் களஞ்சியம் பார்த்துச் செய்தி திரட்டுதல் வேண்டும். கட்டுரைக்குத் தேவையான மேற்கோள்கள், பழமொழிகள் போன்றவற்றையும் நூல்களைப் பார்த்து எழுதி வைத்துக் கொள்ளலாம்.

- **பத்தி பிரித்தல்**

செய்தியைத் திரட்டிய பிறகு கட்டுரையைப் பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளுதல் வேண்டும். முன்னுரை, பொருள், முடிவுரை என மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் எவ்வெச் செய்திகளை இடம் பெறல் வேண்டுமெனக் குறிப்புச் சட்டகம் தயாரித்தல் வேண்டும். பொருள் பகுதியில் பல கருத்துகளைக் கூற வேண்டியதிருக்கும். ஒவ்வொரு கருத்துக்கும் ஒரு பத்தியாக அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு முன்னுரை ஒரு பத்தி, பொருள், கட்டுரைத் தலைப்புக்கேற்ப நான்கைந்து பத்திகள், முடிவுரை ஒருபத்தி எனப்பிரித்துக் கொள்ள வேண்டும்.

- **சொற்றொடர் அமைப்பு**

  மேற்கூறியவாறு பத்தியமைக்கும் பொழுது மிகமிக முக்கியமான இடங்களில் எவ்வகையான சொற்றொடர் அமைக்க வேண்டும் எனக் குறித்துக் கொள்ளுதல்



Downloaded From www.nagaicollege.com

நன்று. வியப்பு வாக்கியம், வினா வாக்கியம், உடன்பாடு எதிர்மறை வாக்கியங்கள், உவமைகள், பழமொழிகள் போன்றவற்றைக் குறித்துக் கொள்ளலாம்.

- **மொழிநடை**

கட்டுரையின் மொழிநடை நன்கமைய வேண்டும். கட்டுரைப் பொருளை நன்குணர்ந்து உரையாடும் பொழுது (வாய் மொழிப் பயிற்சியின் போது) பயன்படுத்திய சொற்களையும், தொடர்களையும் பயன்படுத்துதல் வேண்டும். அவ்வாறு எழுது முற்படின் தம் உணர்ச்சிக்கும் சொல் வளத்துக்கும் ஏற்பத்தினி நடை அமையும்.

- **மேற்கோள்**

கட்டுரையில் தாம் எழுதும் கருத்தை உறுதிப் படுத்துவதற்காக அங்கங்கே தக்க மேற்கோள்களைப் பயன்படுத்துதல் வேண்டும். மேற்கோளை எழுதிய பிறகு அடைப்புக்குறியில் மேற்கோளைக் கூறிய ஆசிரியர் அல்லது மேறகோள் இடம் பெற்றுள்ள நூலைக் குறிக்கலாம். இவ்வாறு எழுதப்படும் கட்டுரை மிகச் சிறந்த கட்டுரையாக அமையும்.

- **மீள்பார்வையிடுதல்**

எப்பொருளைப் பற்றிக் கட்டுரை எழுதினாலும், எழுதி முடித்தபின் அதனைப் படித்துப் பார்க்க வேண்டும். மரபுப் பிழை, இலக்கணப் பிழை, எழுத்துப் பிழை, சந்திப் பிழை ஆகியவை இருப்பின் அவற்றை நீக்குவதற்கு மீள்பார்வை பயன்படும். ஆதலின் மீள்பார்வையிடுதலை ஓர் இன்றியமையாப் பணியாகக் கொள்ள வேண்டும்.

- **கையெழுத்து**

கட்டுரையில் சொல்லப்படும் கருத்து எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும், எழுதுவோரின் கையெழுத்து நன்றாக அமையவில்லையாயின் அது பயனற்றதாகி விடும். கருத்தோடு கையெழுத்தும் சிறப்பாக இருப்பின் ஷபொன்மலர் நாற்றம் பெற்றது’ போல் கட்டுரை மேலும் சிறப்புடையதாகும்.

**கட்டுரை எழுதும் பயிற்சியால் நன்மைகள்**

- செய்தியினைத் தொடர்பாக எண்ணி ஒன்றன் பின் ஒன்றாக முறையாக எழுதுவதற்குத் துணை செய்கின்றது.
- எந்தப் பொருள் பற்றி எழுதும் பொழுதும் தக்க முன்னுரை யமைத்துக் கொள்வதற்கும். இறுதியில் சிறப்பாக முடித்துக் கூறுவதற்கும் பயிற்சியளிக்கின்றது.
- ஒவ்வொரு கருத்துக்கும் ஒருபத்தியமைத்து அதனைத்தக்க எடுத்துக் காட்டுகளுடனும், விளக்கமாகவும் எழுதுவதில் மாணவர்அறிவு பெறுகின்றனர்.
- தாம் கற்றுக் கொண்ட தொடரமைப்பு முறையினைப் பின்பற்றி மொழி மரபு கெடாமல் எழுதுவதில் பயிற்சி தருகின்றது.
- செய்தி வாக்கியம், வினா வாக்கியம், வியப்பு வாக்கியம் உடன்பாடு, எதிர்மறை வாக்கியங்கள் என மாணவர் கற்ற பல வாக்கியங்களைப் பயன்படுத்த வாய்ப்புத் தருகின்றது.
- ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிக் குறித்த காலத்தில், குறித்த அளவில் எழுதும் பயிற்சி அளிக்கின்றது.
- மாணவர்கள் தாங்கள் அறிந்த சொற்களையெல்லாம் பயன்படுத்தும் சொற்களாக மாற்றித் தம் சொல்லாட்சித் திறனைப் பெருக்க உதவுகின்றது.


Downloaded From www.nagaicollege.com

- மாணவர்கள் பல நூல்களில் அழகாகக் கூறப்பட்ட கருத்துகளை மேற்கோளாகக் காட்டவும் வாய்ப்பளிக்கின்றது.
- எல்லாக் கருத்துகளையும் தாமே எண்ணிப் பார்த்துத் தம் உணர்ச்சிக்கேற்பச் சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுவதால் அவர்களுக்கென்றே தனியாக ஒரு மொழிநடை உருவாகின்றது.
- தன் கருத்துகளைத் திறமையாக எழுதிப் பிறரைப் படிக்கச் செய்வதால் மாணவர்க்கு மனநிறைவு ஏற்படுவதோடு தன்னம்பிக்கையும் உண்டாகின்றது.

**முடிவுரை**

இவ்வலகு வாயிலாக மேற்கூறப்பட்டவாறு குறுநிலைக் கற்பித்தலுக்கான திறன்களையும் படிநிலைகளையும் அறியமுடிகிறது. மேலும் உரைநடை ,செய்யுள், இலக்கணம், கட்டுரை ஆகியனகற்பிக்கப் பயிற்சி பெறல். எதிர்நாளில் கற்றலைத் தயக்கமின்றி கற்பிக்க ஆசிரியர் கல்வி பெறும் காலத்து இச்செய்திகளை அறிவது இன்றியமையாததாகிறது.

**பயிற்சி வினாக்கள்**

1.வகுப்பறையில் ஆசிரியர் பயன்படுத்தும் மொழிச் சார குறிப்புகளில் தேவையினையும்,பயன்பாட்டினையும் விவாதிக்க.

2. செய்யுள் கற்பித்தலுக்கும், உரைநடை கற்பித்தலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

3.இலக்கணம் கற்பித்தல் முறையினை விளக்குக.

4.ஆசிரியர் கல்வியின் போது வழங்கப்படும் கற்பித்தல் பயிற்சிகள் பற்றி விரித்துரைக்க.

5.குறுநிலைக் கற்பித்தலின் படிநிலைகள்



Downloaded From www.nagaicollege.com

## அலகு – 4 மொழித்திறன்களைக் கற்பித்தலும் மதிப்பிடுதலும்

**நோக்கங்கள்**

இப்பாடத்தைக் கற்றப் பின்னர் மாணவ ஆசிரியர்கள்

- உட்கொள்ளும் (கேட்டல்,படித்தல்) திறன்களை எடுத்துரைப்பர்.
- வெளியிடும் திறன்களை (பேசுதல்,எழுதுதல்) எடுத்துரைப்பர்.
- படைப்பாற்றல் திறன்களை வளர்ப்பர்.
- மொழித்திறன்களை மதிப்பிடுவர்.

**முன்னுரை**

மொழிப்பாடம் ஒரு திறன் பாடம். மொழிக் கல்வி இரு பகுதிகளைக் கொண்டது. 1.மொழியைக் கற்பது. 2. மொழியில் அமைந்த இலக்கியங்களைக் கற்பது. மொழியைக் கற்ற பின்னர்தான் மொழியிலுள்ள இலக்கியங்களைக் கற்கவியலும். மொழியைக் கற்கும் போக்கின் முதல்படி, அடிப்படைத் திறன்களைப் பெறுதலாகும். மொழியின் பயன் ஒருவருக்குக் குறைவின்றிக் கிடைக்க, அடிப்படைத் திறன்களைத் தொடக்கத்திலும் உயர்நிலையிலும் பெற வேண்டும்.

மொழியின் அடிப்படைத் திறன்கள், அவை பெறப்படுகின்ற நிலையில், கொள்திறன், வெளியிடு திறன் என இரு வகைப்படும். கேட்டலும் படித்தலும் கொள்திறன்கள். பேசுதலும் எழுதுதலும் வெளியிடு திறன்கள். இவை: கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என வரிசைப்படுத்தப்படுகின்றன.

கல்வி ஏற்பாட்டில், தமிழ்மொழிக் கல்வி, தொடக்க நிலை வகுப்புகளிலிருந்தே இடம்பெறுவதால் இந்நான்கு திறன்களும், தாய்மொழிச் சூழலிலும் நடைமுறைப் பயன்பாட்டு அடிப்படையிலும் தொடக்கநிலை வகுப்புகளிலிருந்து வளர்க்கப்படுகிறது.

**கேட்டல் திறன் கற்பித்தல்**

ஒலியைக் காது ஏற்கும் செயல் கேட்டல் எனப்படும். இது உயிரியல் வழித் தரப்பட்ட வரையறையாகும். கல்வியில் கேட்டல் என்பது மேலும் பரந்துபட்ட பொருளைக் கொண்டது. வெளிப்படும் ஒலிகளைச் செவியில் ஏற்று, அவற்றிற்குரிய பொருளை உணர்வதுவே கேட்டல் ஆகும். கேட்டலின்போது உயிரற்ற செயலும் அச்செயலால் உளவியல் இயக்கமும் நடைபெறுகின்றன. இரு செயல்களும் இணைந்த கேட்டலைச் செவிமடுத்தல் என்றும் கூறலாம். ஒலிகளால் ஆன எழுத்துகள், எழுத்துகளைக் கொண்ட சொற்கள், சொற்களால் அமைந்த வாக்கியங்கள், வாக்கியங்களால் வெளிப்படும் பொருள் ஆகியனவற்றைக் கொண்டதே மொழி. இம்மொழியைக் கற்பதற்கு முதல்நிலை வாயில் செவியே.

“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை.”

என வள்ளுவரும் செவியின் இன்றியமையாமையை வலியுறுத்தியுள்ளார். செவி அறிவுக்கு ஒலியை ஏற்பதற்காக மட்டுமன்றி, அறிவைப் பெறும் வாயிலாகவும் விளங்க வேண்டுமெனக் கருதிய வள்ளுவர்,

“கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்


Downloaded From www.nagaicollege.com

தோட்கப் படாத செவி”

எனக் கூறினார்.

**கேட்டல் திறனின் பொருள்**

ஐம்பொறிகளைக் கற்றிலின் வாயில்கள் என்பர். ஐம்பொறிகளுள் ஒன்று செவி. செவியே கேட்டலுக்குரியது. நடைமுறை வாழ்க்கையிலும், கல்விக் காலத்திலும் கேட்டலுக்கே வாய்ப்புகள் மிகுதியாக ஏற்படுகின்றன. கேட்டல் வழிதான் கற்றலின் பெரும்பகுதி நிகழ்கிறது. கற்பதில் 80 விழுக்காட்டிற்குமேல் கேட்டல்வழி நிகழ்கிறது.

எனவே, கற்றலின் அளவை மேம்படுத்தக் கேட்டல் திறன் வளர்ச்சி இன்றியமையாததாகும்.

- **பேசுவதற்கு முன்செயல்**

பெற்றோரும் மற்றோரும் பேசுவதைக் குழந்தை கேட்கிறது. கேட்ட பின்னர் அது பேச முனைகிறது. குழந்தையின் கேட்டல் அளவினைப் பொருத்தே, மொழியைப் பேசும் அளவும் திறனும் அமைகின்றன. எவரும் பேசாத சூழலில் குழந்தை வளருமாயின், அது ஊமையாகிவிடும்.

- **பேசுதல் தொடர்பு**

பேசுதல் திறன் பெறுவதற்குக் கேட்டல் இன்றியமையாதது போல, கேட்டல் திறனை வளர்ப்பதற்கு ஷபேசுதல்’ நிகழ்வு இன்றியமையாதது. கேட்டலால் பேசுதல் திறனும், பேசுதலால் கேட்டல் திறனும் வளர்வன. இம்மறுதலைப் போக்கு, கேட்டல் திறனை வளர்க்கும் முறைகளை வகுப்பதற்கு வழிகாட்டுகிறது.

- **பேசுதலில் விளைவை ஏற்படுத்தல்**

ஒரு மொழி, அம்மொழி பேசும் மக்கள் அனைவராலும் ஒரே தன்மையாய்ப் பேசப்படுவதில்லை. நெல்லை மாவட்டத்தவர் பேச்சுக்கும் சென்னை நகரத்தவர் பேச்சிற்கும் வேறுபாடு காணப்படும். தமிழ்மொழியை ஒருவர் பேசுகின்ற போக்கிலிருந்து, எந்த மாவட்டத்தவர் எனக் கணிக்க முடிகிறது.

- **கேட்டல் சூழல் இயல்புகள்**

நடைமுறை வாழ்க்கையில் ஏற்படும் கேட்டல் சூழல்களின் இயல்புகளாக 1. இயல்பாக பேச்சு அல்லது உரையாடுதல், 2. கேட்போர் எதிர்பார்ப்பும் நோக்கமும், 3. பார்த்தலும் கேட்டலும் இணைதல், 4. கேட்கும் போக்கில் துலங்கல், 5. பேசுபவரை ஈர்த்தல் ஆகியன அறியப்படுகின்றன.

**கேட்டல் வழியே கற்றல்**

பன்னெடுங் காலமாகக் கதைச் சொல்லுதல், பாடச் சொல்லுதல், பாடிக் காட்டல், நடிக்கச் சொல்லுதல் முதலியன ஆசிரியர்களால் தொடக்க வகுப்புகளில் வழங்கப்படும் பழகு செயல்களாகும். இவை முதலிரு வகுப்புக் குழந்தைகளைக் கேட்டலில் ஈடுபடுத்துவனவாகும்.. முதலிரு வகுப்புகளில் இவற்றைக் குழந்தைகளைக் கேட்கச் செய்வதோடு நிறைவுபெற வேண்டும்.



Downloaded From www.nagaicollege.com

- **கட்டளைகளைக் கேட்டுச் செயல்படுதல்**

கேட்டல் நிகழும்போது, கேட்பவர் உடனுக்குடன் துலங்கலை வெளிப்படுத்தும் போக்கினராக இருப்பர். (கேட்டலின் தன்மை) இத்தன்மையைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்படும் பழகு செயல்களுள் ஒன்று கட்டளைகளைக் கேட்டுச் செயல்படுதல் ஆகும். இச்செயல்பாட்டில், ஆசிரியர் குழந்தைகளின் முதிர்ச்சிக்கு ஏற்பக் கட்டளைகளை இடுவர்.

ஒரு கற்றல் பகுதியில் அடங்கியுள்ளவற்றில் கற்றல் சிறப்புக்குரியவற்றை மட்டும் நோக்கும் செயல் மேலோட்டம் ஆகும். எதனையும் ஒதுக்காது முழுமையாக நோக்கும் செயல் உள்ளோட்டம். ஷமேலோட்ட உள்ளோட்டப்’ பழகு செயலில், கேட்டல் பகுதியை மாணவர்களுக்குப் படித்துக் காட்டி, அவற்றிலிருந்து பொதுக்கருத்து பற்றியும் குறிப்பிட்ட செய்திகளைப் பற்றியும் கேட்க வேண்டும்.கற்றல் பகுதிகளின் சொற்களஞ்சியம், பொருள் ஆகியவற்றின் கடின நிலை நோக்கி, அவற்றை உரிய வகுப்புகளில் பயன்படுத்த வேண்டும்.

நெடுந்துலங்கல், விரிவுத் துலங்கல் சார்ந்த பழகு செயல்கள், மேல்நிலை வகுப்புகளுக்கே பொருத்தமுடையனவாகும். செயல்பாடுகள் அனைத்திலும் கேட்டல் பகுதி ஆசிரியராலோ, ஒலி, ஒளிப்பதிவு நாடா வழியோ மாணவர்களுக்கு முதலில் வழங்கப்பட்டு, பின்னர் செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தப்பட வேண்டும்.

கட்டளைகளைக் கேட்டல் நிகழும்போது, கேட்கும் மாணவர்கள் உடனுக்குடன் துலங்கலை வெளிப்படுத்துபவராக இருப்பார்கள். இப் பயிற்சிகளை விளையாட்டு முறையில் வழங்கலாம்.

**கேட்டல் பழக்கத்தினை வளர்த்தல்**

நடைமுறை வாழ்க்கையில் கேட்டலின் இயல்புகளாகக் காணப் பட்டவற்றைக் கருத்திற்கொண்டு, வகுப்பறைக் கற்பிப்பிலும் அவற்றை உருவாக்கினால் கேட்டல்திறன் வளரும் வாய்ப்புகள் மிகுதியாகும். ஒரு முனையில் கேட்டல் திறன் வளர்வதற்கு, மறுமுனையில் பேசுதல் அல்லது பேச்சு தேவை. அப்பேச்சு நடைமுறை வாழ்க்கையோடு பொருந்தியதாக இருத்தல் சிறப்பு. ஆசிரியர் பேசுதலை மாணவர்களைக் கேட்கச் செய்வதால் மட்டும், கேட்டல் திறன் வளர்ந்துவிடாது. பாடநூலிலிருந்து ஒரு பகுதியை உரக்கப் படிப்பது, முறையாகக் கேட்டல் பாடப் பொருள் ஆகாது. அது கேட்டல் இயல்புகளை நிறைவு செய்யாதுழ கேட்டல் திறனை வளர்க்கவும் பயன்படாது. இயல்பான, தங்குதடையற்ற பேச்சே, கேட்டல் திறனை வளர்க்கப் பயன்படும்.

கேட்டல் சூழலினை ஏற்படுத்தும் ஆசிரியர், மாணவர்கள் அனைவரின் பார்வையில் படவேண்டும். கேட்டல் திறனை வளர்ப்பதற்கு, வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஒலிப்பதிவு நாடாவைவிட, ஒளிப்பதிவு நாடா சிறந்ததாகும். ஒளிப்பதிவு நாடா பயன்படுத்தப்படும் போது பேசுபவர், கேட்பவர் பார்வையில் படுகிறார். எனவே, ஒளிப்பதிவு நாடாவைப் பெருமளவில் பயன்படுத்தலாம்.

கேட்டலும் துலங்கலும் உடனுக்குடன் நடக்கும் நிகழ்ச்சிகள். கேட்டலுக்கான பாடப்பொருளை வழங்கும்போது, துலங்கலை வெளிப்படுத்தும் வாய்ப்பினை மாணவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.


Downloaded From www.nagaicollege.com

**சொல்வதைக் கேட்டுத் திரும்பச் சொல்லுதல்**

இதில் ஷகேட்டல்’ என்பதனைப் பேசுதலைக் கேட்டல், படித்தலைக் கேட்டல் என இருவகையாகக் கூறலாம். படித்தலின்போது, மொழியின் எழுத்து வடிவத்தைப் படிக்கிறோம். அது திருந்திய வடிவில், கொச்சைச் சொற்கள் இல்லாதிருக்கும். பேச்சு வடிவில் கொச்சைச் சொற்கள் கலந்திருக்கும். பேசுபவருடைய இயல்புகளைக்கொண்டு நோக்கினால், சொற்சிதைவு, இறுதி விழுங்கல், இடையெழுத்து விழுங்கல் போன்றன அமைந்திருக்கக் காணலாம். எனவே, பேசுதலைக் கேட்டு அறிவதற்கும், படித்தலைக் கேட்டு அறிவதற்கும் மாணவர்களைப் பழக்குதல் வேண்டும்.

- **பேசுதலைக் கேட்டறிதல்**

தொடக்கநிலை வகுப்புகளில் மாணவர்களது குடும்பம், ஊர், ஊர்த் திருவிழா போன்றன குறித்து அவர்கள் அறிந்த தலைப்புகளைப் பற்றிப் பேசி, அவர்களைக் கேட்கச் செய்தல் வேண்டும். பின்னர்ச் சிறுசிறு வினாக்கள் மூலம், மாணவர்கள் கேட்டதைத் தேர்ந்தறிதல் வேண்டும். நடுநிலை வகுப்புகளில் பொதுத்தலைப்புகளைப் பற்றிப் பேசலாம்�ளூ கதைகளைக் கூறலாம்�ளூ தலைப்புகளின் கருத்துகள் பற்றியும், கதை நிகழ்ச்சிகள் பற்றியும் வினாக்கள் மூலம் தேர்ந்தறியலாம்.

- **படித்தலைக் கேட்டறிதல்**

பள்ளியில் ஒவ்வொரு வகுப்புக்கும் தமிழ்ப் பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலில் உள்ள உரைநடைப் பாடத்தைப் படித்து, மாணவர்களைக் கேட்கச் செய்தல் வேண்டும். பிறகு, சிறுசிறு வினாக்கள் கேட்கலாம். நடுநிலைப் பள்ளிகளில் பாடநூல்களைப் பயன்படுத்துவதோடு, நூல்நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட பொது நூல்களிலிருந்தும் ஒரு சில பகுதிகளைப் படித்துக்காட்டி மாணவர்களைக் கேட்கச் செய்யலாம். பின்னர்ச் சிறுசிறு வினாக்கள் வாயிலாக மாணவர்கள் கேட்டவற்றைத் தேர்ந்தறியலாம்.

- **கதையையும் பாட்டையும் கேட்டல்**

ஆசிரியர் கதை சொல்லுதல், மாணவர்களை அவர்களுக்குள்ளே குழுவாகப் பேசச் செய்தல், பாடச் செய்தல், நடிக்கச் செய்தல் போன்றவை. பயன் விளைவை மிகுதியாக்கும் கேட்டல் பயிற்சிகளாகும்.

ஆசிரியர் கதை கூறும்போது, மாணவர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான கதைகளையும் அறிமுகமாகாத கதைகளையும் கூறலாம். அப்போது தம்மை மாணவர்களோடு ஒருவராக ஆக்கிக்கொண்டு கூறவேண்டும்ளூ குரலில் ஏற்றத்தாழ்வு, மெய்ப்பாடு, நடிப்பு போன்றவை வெளிப்படுமாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். இதனால், மாணவர்களின் கேட்கும் திறன் அதிகரிக்கும்.

பாடல்கள் மூலமும் கேட்டல் திறனை வளர்க்கலாம். இதற்கு ஓசை நயமுள்ள எளிய சந்தப் பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடிக்காட்ட வேண்டும். மாணவர்களைப் பாடவைத்தும் கேட்டல் திறனை வளர்க்கலாம்.

- **தொலை, அலைபேசியில் பேசிப்பழகுதல்**

ஒருவர் பேச்சை நேரில் கேட்பதை விட தொலைபேசி அல்லது அலைபேசியில் கேட்பது சற்று சிக்கல் நிறைந்தது ஆகும். நேரில் கேட்கும் போது பேசுபவரின் மெய்ப்பாடுகள் கருத்துணர



Downloaded From www.nagaicollege.com

உதவியாக இருக்கும். ஆனால் தொலைபேசியிலோ, அலைபேசியிலோ கேட்கும்போது அந்த வாய்ப்பு இல்லை. மேலும் அப்பேச்சுகள் ஒரு பொதுவான வேகத்தில் அமையும் கேட்பவருடைய அல்லது பேசுபவருடைய சுற்றுசூழல் இரைச்சலால் எல்லா சொற்களும் தெளிவாக இருக்காது. எனவே முன்பின் கேட்கப்படுகின்ற சொற்களை கொண்டு ஊகித்து சில சொற்களை தெரிய வேண்டி இருக்கும். எனவே பேசுபவரிடம் தாம் கேட்டதை திரும்பிச்சொல்லி மீண்டும் கேட்க தொடங்கினால் கேட்டல் முழுமை பெறும். தொலைபேசி அல்லது அலைபேசியில் கேட்கும் பயிற்சி அளிக்க உரையாடல் வடிவில் பயிற்சிகளை அமைக்கலாம்.

**சொல்வதைக் கேட்டு எழுதுதல்**

வகுப்பறையில் ஆசிரியர் ஏதேனும் ஒரு பகுதியை பாடநூலிருந்து படித்தே தாமாக தொடர்களைக் கூறியே மாணவர்களைக் கேட்க செய்ய வேண்டும். கேட்கும் போக்கில் அவ்வப்போது கூறுவதை நிறுத்தி கூறியப்பகுதியை எழுதச் சொல்ல வேண்டும். முதல் இரு வகுப்புகளில் ஒவ்வொரு சொல்லாக கூறி எழுதச் சொல்லுதல் மூன்றாம் வகுப்பில் தொடர், தொடராக கூறி எழுதச் சொல்லுதல், நான்கு ஐந்து வகுப்புகளில் வாக்கியம், வாக்கியமாக கூறி எழுத சொல்லுதல், என எழுதும் பயிற்சியில் கடின தன்மையை ஏற்படுத்தலாம். மேல் வகுப்புகளில் ஆசிரியர், ஒரு பத்தியை படிக்க அதில் சொல்லப்பட்டுள்ள முதன்மையான குறிப்புகளை மாணவர்களை எழுத செய்ய வேண்டும். கேட்டல் பயிற்சியில் இவை போன்ற பழகு செயல்கள் நடைமுறையில் அறிதாகி வருகின்றன. ஆதலால் மாணவர்களுக்கு பிற மொழி திறன்கள் ஏற்படுவதிலும் சிக்கல்கள் நேர்கின்றன.

- **தொடர் அறுந்து கேட்டல்**

ஓர் உரைபகுதியால் வெவ்வெறு பகுதிகளை வெவ்வெறு மாணவர்களை கேட்க செய்து பின்னர் கேட்டப் பகுதிகளை ஒன்றுச் சேர்த்து முறையாக முழுமைப்படுத்துவது தொடர் அறுந்து கேட்டல் பயிற்சியாகும்.

வகுப்பறையில் இப்பயிற்சியை மேற்கொள்ள இருவர், இருவராக குழுக்கள் பிரிக்கப்பட வேண்டும். குழுவில் ஒருவர் உரைபகுதியை கூறும்போது பிரிதொருவர் கூறுவதைக் கேட்டு எழுத வேண்டும். பிறகு வகுப்பில் உள்ள அனைவரும் சேர்ந்து தனித்தனியே எழுதப்பட்ட உரைபகுதியை ஒன்றிணைத்து முழுமையாக்க வேண்டும்.

**நேர் படுத்திக் கேட்டல்**

எழுத்து மொழியும் தகவல் பரிமாற்றத்திற்கு உரியதாயினும்,நேருக்கு நேர் தகவல் பரிமாற்றம் நிகழ்கிறது.நேருக்கு நேர் தகவல் பரிமாற்றத்திற்குரிய பேசுதல் பிறவகைத் தகவல் பரிமாற்றத்தை விட விளைப்பயன் மிக்கது.ஒருவர் நேரில் தரும் தகவல்கள் எழுத்து வழித்தரும் தகவல்களை விடப் பாதிப்பை அதிகமாக்கும். பேசும் பேச்சுக் காற்றோடு சென்றாலும் உள்ளத்தை ஊடுருவ வல்லதாகும். நேர்படுத்திக் கேட்கும் போது பேசுதல் திறன் மிக்கோரின் பேச்சில் வெளிப்படும் உணர்வுகளைக் கல்லாதாரும் உணர முடியும்.

**கேட்டல் திறனை மதிப்பிடல்**

கேட்டலுக்குரிய பாடப்பொருள் எம்முறையில் வழங்கப்பட்டாலும் கேட்டலின் போதே, கேட்டல் திறன் பெறுகின்றனர் என அறிய, உரிய தேர்வு அல்லது தேர்வோடு இணைந்த செயல்கள் வழங்கப்பட வேண்டும்.



Downloaded From www.nagaicollege.com

பழகு செயல்களும் தேர்ந்தறி முறைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவற்றுள் ஒன்றைச் சிறிது மாற்றத்துடன் வடிவமைத்தால் பிறிதொன்றாகப் பயன்படுத்தலாம். பெற்ற அறிவு மனத்தில் பதிவதற்காகப் பயன்படுபவை பழகு செயல்களாகும். மாணவர் ஈடுபட்டுச் செய்யும் வேலையாகும். பழகு செயல்களின் போது ஆசிரியர் விளக்கவுரை, நெறியுரை, துணையுரை போன்றவற்றை வழங்குகிறார். பழகு செயல்களே தேர்வு முறைகளாகப் பயன்படுத்தப்படும்போது, ஆசிரியர் நெறியுரை மற்றும் குறிப்புரை வழங்குவதோடு செயல்களில் ஈடுபடும் தன்மைக்கு ஏற்ப மதிப்பெண்கள் அல்லது தரக்குறியீடுகளை வழங்குகிறார்.

பழகு செயல்களில் மாணவர்களின் ஈடுபாடு முதன்மையாகக் கருதப்படுகிறது. தேர்வில் மாணவர் அடைவு முதன்மையாகக் கருதப்படுகிறது. பழகு செயல்களில் எடுத்துக்காட்டுகள், செயல் துணைகள் ஆகியன வழங்கப்படும். ஆனால், தேர்வில் நெறிவுரைகளோ, குறிப்புகளோ தான் வழங்கப்படும்.

**பேசுதல் திறன் கற்பித்தல்**

மொழிப்பாடத்தின் தலையாய நோக்கங்களுள் ஒன்று மொழியைத் திறமையாகப் பேசப்பயிற்றுதலாகும். பேச்சு, வாய்மொழியாதலால், பேச்சுப்பயிற்சியை வாய்மொழிப் பயிற்சி எனவும் கூறுவர். பேச்சுத் திறன் பெறுவதற்கு மாணவர்களைப் பேசும் செயல்களில் ஈடுபடச் செய்து, நல்ல வழியைக்காட்டி, தொடர்ந்து நல்ல பயிற்சியும் அளித்துப் பேச்சுத் திறன்பெறச் செய்தல் வேண்டும். இதனையே வாய்மொழிப் பயிற்சி எனவும் கூறுவர்.

**நோக்கங்கள்**

- திருத்தமாகப் பேசுதல்
- தெளிவுடன் பேசுதல்
- அச்சமின்றி பேசுதல்
- உணர்வுடன் பேசுதல்
- பிழையின்றிப் பேசுதல்
- கொச்சைச் சொற்கள் நீக்கிப் பேசுதல்
- வட்டார வழக்கை நீக்கிபேசுதல்
- பகுத்தறிவுடன் பேசுதல்

**இன்றியமையாமை**

பள்ளிக்கு வருவதற்கு முன்னரே, பிள்ளைகள் தம் வீட்டிலுள்ளோர், அக்கம்பக்கத்திலுள்ளோர், உற்றார் உறவினர் முதலியோருடன் பழகும் சூழல்களில் பேசுதல் திறனைப் பெறுகின்றனர். எனினும், அவர்கள் பேச்சில் பல குறைபாடுகள் காணப்படலாம். அவற்றைப் போக்குதலும் பேசுதல் திறனை வளர்த்தலும் இன்றியமையாதன வாகும்.



Downloaded From www.nagaicollege.com

மாணவர்கள், முன்னுக்குப்பின் முரணின்றித் தெளிவாகப் பேசவும், தயங்கித் தயங்கி ஒவ்வொரு சொல்லாகப் பேசாமல் விரைவாகப் பேசவும், வாய்மொழிப் பயிற்சி இன்றியமையாத தாகும். விரைவாகப் பேசும்பொழுது, பொருள் விளங்கும்

படியாகத் தகுந்த இடங்களில் நிறுத்தி, மூச்சு வாங்கவும் ஏற்ற பயிற்சியளித்தல் வேண்டும். எளிமையாகவும் தன்னினைப்பின்றியும் இயல்பாகவும் பேசுவதற்கு வாய்மொழிப் பயிற்சி வாய்ப்பு தருகிறது. ஷசெந்தமிழும் நாப்பழக்கம்' என்னும் தொடர், பயிற்சியினால்தான் மொழியை நன்றாகப் பேசலாம் என்னும் கருத்தையே வலியுறுத்துகிறது.

**வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள்:**

வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள் பின்வருமாறு அமையும். அவை:

- **திருத்தமாகப் பேசுதல்**

முதலில் சொற்களைத் திருத்தமாக ஒலிக்கக் கற்றுத் தரவேண்டும். பின்னர்த் திருத்தமாகத் தொடர்ந்து பேசவும் பயிற்சியளிக்க வேண்டும். கூற எடுத்துக்கொண்ட கருத்தும், அதற்கேற்ற சொற்களும் அவற்றின் சரியான ஒலிப்பும் பொருத்தமாக அமையும்போது திருத்தம் ஏற்படும். தொடர்கள் பொருத்தமாக அமையாவிடில், கேட்பவருக்குத் தெளிவாகக் கருத்து விளங்காதுளு குழப்பமே ஏற்படும். ஆதலின், திருத்தமாகப் பேசப் பயிற்றுதல் வேண்டும்.

- **அழுத்தமாகப் பேசுதல்**

சாதாரணமாக நாம் பேசும்பொழுது, சில கருத்துகளைக் கூற விரும்புகிறோம். கேட்பவர் எந்தக் கருத்தை அறிய வேண்டுமோ, அக்கருத்தைக் கூறும் சொற்களில் அழுத்தம் கொடுத்துப் பேசுகிறோம். கேட்பவரின் கவனம் அதில் செல்வதால், கருத்தை உணர்கிறார். ஷவேலன் ஒன்பது மணிக்குப் பள்ளிக்குப் போனான்' என்று கூறும்போது, ஷஒன்பது மணிக்கு' என்பதில் அழுத்தம் கொடுக்கிறபொழுது, எத்தனை மணிக்குப் போனான் என்பதைக் கூற விரும்புகிறோம் என்பது தெளிவாகிறது. ஷவேலன் ஒன்பது மணிக்குப் பள்ளிக்குப் போனான்' என்பதில் ஷபள்ளிக்கு' என்பதில் அழுத்தம் கொடுக்கிறபோது, எங்கே போனான் என்பது தெளிவாகிறது. இவ்வாறு பேசும்பொழுது, ஒரே குரலில் சொற்களை ஒலிக்காமல், தெரிவிக்க வேண்டிய கருத்து அடங்கிய சொற்களில் அழுத்தம் கொடுத்துப் பேசப்பழக்க வேண்டும்.

- **தெளிவுடன் பேசுதல்**

மாணவர்கள் சொல்ல வேண்டிய கருத்துகளைத் தெளிவாகச் சொல்லப் பயிற்சி அளித்தல் வேண்டும். பேச்சில் ஐயத்திற்கோ, திரிபுக்கோ இடமிருத்தல் கூடாது. தெளிவற்ற தொடர் அமைதலுக்கு ஓர் எடுத்துக்காட்டு, எறும்பு வரம் கேட்ட கதை! மக்கள் காலால் நசுக்கியும் கையால் தேய்த்தும் பல எறும்புகளைக் கொன்றுவிடுகின்றனர். இவ்வாறு துன்பப்பட்ட எறும்பு, தவமிருந்து இறைவனை வணங்கி, "நான் கடித்ததும் மனிதன் சாக வேண்டும்" என்று வரம் கேட்க விரும்பியதாம். ஆனால், எதிரில் தோன்றிய இறைவனிடம் பதற்றத்தோடு "நான் கடித்ததும் சாக வேண்டும்" என்று வரம் கேட்டதாம். அதனாலேதான் எறும்பு கடித்ததும் அதனை அடித்துக் கொன்றுவிடுவதாகக் கதை கூறுவர். ஷநான் கடித்ததும் மனிதன் சாக வேண்டும்' என்று வரம் கேட்டிருத்தல் வேண்டும். ஆனால், எறும்பு கேட்டதில் வரத்தின் பொருளே மாறிவிட்டது. இது தெளிவற்ற பேச்சால் ஏற்பட்டநிலை. பொருத்தமான எளிய சொற்களைக் கையாளுதல், கோவைப்படுத்திப் பேசுதல், காரண காரியத் தொடர்புபடுத்திப் பேசுதல், இறுதியில் சுருக்கம் கூறல் ஆகியவை பேச்சில் தெளிவைச் சேர்க்கும்.



Downloaded From www.nagaicollege.com

- **அச்சமும் கூச்சமுமின்றிப் பேசுதல்**

- ஒரு மன்றத்திலோ, அவையிலோ மேடை ஏறிப் பேசும்பொழுது பலருக்குக் கூச்சம் ஏற்படும்ஐ சிலருக்கு அச்சம் ஏற்படும். ஆனால், பல மாணவர்களுக்கு ஆசிரியரிடம் பேசும்பொழுதே அச்சமும் கூச்சமும் ஏற்படுவதுண்டு. அதனால் செய்திகளை முறையாகவும் தெளிவாகவும் கூறமுடியாமல் இடர்ப்படுவார்கள். மாணவர்களை ஆசிரியர் அருகே அழைத்து, அன்போடு பேசி, இயல்பான சூழ்நிலையை உண்டாக்கினால் மாணவர்களது கூச்சம் அகலும்.

- **அளவறிந்து பேசுதல்**

பேசுவது, இயற்கையான விரைவுடன் கூடியதாக, இயல்பானதாக இருத்தல் வேண்டும். மிகமிக நிதானமாகப் பேசினால், கேட்போருக்குச் சலிப்பும் களைப்பும் ஏற்படும். எனவே, பிறருக்குப் புரியும்படி, ஏற்ற விரைவுடன் பேசப் பயிற்றுதல் வேண்டும். பேச்சு மிகமிக விரைவாக அமையுமானால், கேட்பவருக்குக் கருத்து விளங்காது போய்விடும். அதனால், பிழைகளும் ஏற்படலாம்.

- **உணர்வுடன் பேசுதல்**

பேச்சினை மற்றவர் கவனத்துடன் கேட்க வேண்டுமானால், பேசுவது உயிர்ப்பு உள்ளதாக அமைதல் வேண்டும். பேச்சுக்கு உயிர்ப்புத் தருவன குரலின் ஏற்றத் தாழ்வு, நகைச்சுவை, அளவோடு பேசுதல் ஆகியன. பேசப்படும் பொருளின் தன்மை, கேட்பவரின் மனப்பக்குவம் ஆகியவற்றிற்கேற்ப விரைவு மாறும். கணக்குப் பாடத்தை விளக்கும்பொழுது விரைவு இருத்தல் கூடாது. ஆனால், கதை சொல்லும்பொழுது, இடத்திற்கு ஏற்றாற்போல் விரைவாகவும் மெதுவாகவும் கூற வேண்டும்.

- **பிழையின்றி பேசிப் பழகுதல்**

வாய்மொழிப் பயிற்சியின்போது பிழையான ஒலிகளையும் கொச்சைச் சொற்களையும் நீக்கிப்பேசப் பயிற்சியளித்தல் வேண்டும். இவை தவிர, கருத்துகளை முறையாகக் கூறாமை, முன்னுக்குப்பின் முரண்படப் பேசுதல் ஆகிய பிழைகளும் மாணவர்கள் பேச்சில் எழுதல்கூடும். வாய்மொழிப் பயிற்சியளிக்குமுன்னர், கருத்துகளை நிரல்பட எழுதிவைத்துக் கொள்ளுதல், எவற்றை முன்னர்க் கூற வேண்டும், எவற்றைப் பின்னர்க் கூற வேண்டும் எனத் திட்டமிடச் செய்தல், பயிற்சியளித்தல் வேண்டும். பிழையின்றிப் பேசப் பழக்குதல், வாய்மொழிப் பயிற்சியளிப்பதன் நோக்கங்களுள் ஒன்றாகும்.

- **சொற்களஞ்சியப் பெருக்கம்**

சொற்களின் தொகுதி எனப் பொருள்படும் சொல் ஷசொற்களஞ்சியம்’. மொழியைக் கையாளுவதற்கு அதனுள் அமைந்த சொற்களின் அறிவு இன்றியமையாததாகும். மொழியின் கூறுகளாக எழுத்து, சொல், தொடர் போன்றன இருப்பினும் பொருள் முழுமையாகத் தரும் மொழியின் அலகு சொல்லாகும். மேலும் கருத்தினைச் சிந்தனையில் பதிப்பதற்குரிய மொழிக் கூறு சொல்லாகும். ஒரு மொழியிலுள்ள எழுத்துகள், தொடர் அமைப்புகள் போன்றவற்றை அறியாத நிலையிலும் சொற்களைக் கொண்டு ஓரளவு அந்த மொழியைக் கையான முடியும். பொருண்மைகள் சொற்களை அலகாகக் கொண்டே அமைக்கின்றன. சொற்களஞ்சியத்தைப் பெருக்க, கற்பித்தல் நிலையில் அவற்றின் ஒலிப்பு, பொருள் கூறுகள் மற்றும் தொடர்புகள்


Downloaded From www.nagaicollege.com

ஆகியவற்றை அறிவதோடு அவற்றைக் கற்பிக்கும் முறைகளையும் சொற்களஞ்சிய அறிவைத் தேர்ந்தறி முறைகளையும் ஆசிரியர்கள் பெறுதல் வேண்டும்.

பொருள் தரும் முழுமைக் கூறாக அமையும் சொற்களை ஒலிப்பு, தோற்றம், பயன்பாடு, பொருட் கூறுகள், பொருள் தொடர்புகள், உருவாக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலும் கற்பித்தல் வேண்டும்.

**திருந்திய பேச்சின் பொருந்திய நல்லியல்புகள்**

நன்றாகக் கல்வி கற்று, அறிவில் சிறந்தவரைப் பொன்மலருக்கு ஒப்பாகக் கூறுவர். அறிவில் நிறைந்து சிறந்த அவர், தம் கருத்தை எடுத்துக்கூறும் மொழித்திறனையும் பெறுவாராயின், அப் பொன்மலர், மணமும் பெற்றுச் சிறப்பைப் பெற்றதற்குச் சமமாகும் என்று கூறுவர். அதனையே நாம் திருந்திய பேச்சு என்கிறோம். ஷகல்விக்கழகு கசடற மொழிதல்' அன்றோ? இனித் திருந்திய பேச்சின் நல்லியல்புகளைப் பின்வருமாறு.

- **தெளிவான ஒலிப்பு**

  தமிழ்மொழியில் ஏறத்தாழ ஒத்த ஓசையுடைய எழுத்துகள் உள்ளன. ல, ள, ழ ∴ ன, ந, ண ∴ ர, ற போன்ற எழுத்துகள் அமைந்த சொற்களை ஒலிக்கும்பொழுது, மிகுந்த கவனத்துடன் இருக்கவேண்டும். இல்லையெனில் பொருள் மாறுபடும். பெரும்பிழை ஏற்படும். ஷநன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்பதை ஷநன்றாகப் பார்த்துக் கொல்ல வேண்டும்' எனக் கூறினால் எத்துணை தீமை விளையும்! ஒலி தவறாயின், மொழியின் உயிரே போனதுபோலாகும். சிறந்த பேச்சு, தெளிவான ஒலிப்பும் திருத்தமான உச்சரிப்பும் உடையதாய் விளங்குதல் வேண்டும்.

- **குரலில் ஏற்றத்தாழ்வு**

கருத்துகளைக் கூறும்பொழுது, ஒரே குரலில் பேசுவதால் கேட்பவர்க்குச் சலிப்பு ஏற்படும். அது மட்டுமன்றுஆ ஏற்ற உணர்ச்சியோடு அவற்றை அறிந்துகொள்ளவும் முடியாது. சினத்துடன் பேசப்படுகின்ற தொடர்களையும், இரங்கி வேண்டுதல் உணர்ச்சியோடு பேசப்படும் தொடர்களையும் குரல் ஏற்றத் தாழ்வால் உணர்த்த வேண்டும். இவ்வாறு பேசுங்கால், கேட்போர் விரும்பிக் கேட்பர். எனவே, குரல் ஏற்றத்தாழ்வுடன் பேசுதல் திருந்திய பேச்சின் நல்லியல்பாகும்.

- **வெற்றுச் சொல் தின்மை**

தொடர்ச்சியாகப் பேசும்பொழுது, சில குழந்தைகள் தேவையில்லாத, பொருளற்ற சொற்களை இடையிடையே சேர்த்துப் பேசுவர். கருத்தினைத் தொடர்பாகக் கூற முடியாமையாலும், உணர்ச்சி மிகுதியாலும் இவ்வாறு ஏற்படக் கூடும். ஷஆங்........, ஆங்.........' என்னும் ஷஊம்....., ஊம்......' என்றும் சில ஒலிகளைப் பேச்சின் இடையிடையே எழுப்புதலுண்டு. வேண்டாத ஒலிகளைப் போலவே தேவையற்ற சொற்களையும் சிலர் சேர்த்துப் பேசுவர். ஷவந்து......., வந்து........', ஷஅப்புறமா..........' ஷபாருங்க......' ஷஎன்னென்னா......' போன்ற பல சொற்கள் தேவையற்றனவாய்ப் பேச்சின் இடையே வழங்கப்படுகின்றன. குழந்தைப் பருவத்தில் பேசும்பொழுது எண்ணிப் பார்த்து இவற்றைத் தவிர்க்காததால், பெரியோர் சிலரது பேச்சிலும் நாம் இவற்றைக் காணலாம்.



Downloaded From www.nagaicollege.com

- **கொச்சை தவிர்த்தல்**

படிக்காத சென்னைப் பாமர மக்கள் "ப்' தண்ணிய எடுத் மூஞ் கழுவிகினா, ஜல்பு புடிச்சி போச்" என்று பேச்சு வழக்கில் சொற்களைச் சிதைத்துப் பேசுவர். (பச்சத் தண்ணிய எடுத்து மூஞ்சியைக் கழுவிக் கொண்டான். அதனால் ஜலதோ'ம் பிடித்துக் கொண்டது). இவ்வகைச் சொற்களைக் கொச்சைச் சொற்கள் என்பர். ஷஇது பயசா, புச்சா, பச்த் தண்ணி குட்ச்சேன், ஷசங்கியே அத்துகினு ஓடிப்பூட்டான்' என்பன கொச்சைச் சொற்கள் அமைந்த தொடர்களாம். ஷபோய் விட்டான்' என்பதைப் ஷபூட்டான்' என்பதுபோல விரைவாகப் பேசுவதாலும் சொற்கள் கொச்சையாக மாறலாம். கொச்சை வடிவங்களையும் திருந்திய வடிவங்களையும் ஒலித்துக்

- **வேகமுடன் பேசுதல்**

வேகமான பேசுதலில் ஏற்படுவது சொல் நெருக்கம், அல்லது சொற்செறிவு என்பதும் குற்றமாகும். அதனால், சொல் தடுமாற்றம் ஏற்படுகிறது. மேலும், சொற்களின் திருந்திய வடிவம் சிதைந்தும் போகலாம். ஷகொண்டு வா' என்பது ஷகொண்டா' எனவும் ஷகேட்டீர்களா' என்பது ஷகேட்டியளா' எனவும் விரைவான பேச்சில் அமையும். இப் பிழைகளைத் தவிர்க்க, நிறுத்தி நிதானமான வேகத்துடன் பேசப் பயிற்சி தர வேண்டும்.

- **பிழையின்றிப் பேசப் பழகுதல்**

சொற்களைத் தவறாகக் கேட்பதாலும், தவறாக ஒலிப்பதாலும் மாணவர்கள் பிழைபடப் பேசுவார்கள். வாய்மொழிப் பயிற்சியின்போது பிழையான ஒலிகளையும் கொச்சைச் சொற்களையும் நீக்கிப்பேசப் பயிற்சியளித்தல் வேண்டும். இவை தவிர, கருத்துகளை முறையாகக் கூறாமை, முன்னுக்குப்பின் முரண்படப் பேசுதல் ஆகிய பிழைகளும் மாணவர்கள் பேச்சில் எழுதல்கூடும்.

- **திருந்திய பேச்சு**

தம் உள்ளத்தில் தோன்றும் கருத்துகளை, சொல்ல விரும்பும் தகவல்களை மற்றவருக்கு எடுத்துக் கூறும் நோக்கத்துடன் மக்களால் படைத்துக் கொள்ளப் பெற்றதே மொழி. தெளிவான ஒலிப்பு, திருத்தமான உச்சரிப்பு, இடத்திற்கு ஏற்ற குரல் எடுப்பு ஆகியவற்றைத் திருந்திய பேச்சின் நல்லியல்புகளாகக் கொள்ளலாம். பேசும்பொழுது விரைவு, அச்சம், கூச்சம், படபடப்பு முதலியன இல்லாமல் தன்னம்பிக்கையோடு, உணர்ச்சி வெளிப்படும் வகையில் பேசினால், பேச்சு சிறப்படையும். பேசுகிற பேச்சிலும் இலக்கண நூலார் கூறும் "கூறியது கூறல், மாறுகொளக் கூறல், குன்றக் கூறல், மிகைபடக் கூறல், வெற்றெனத் தொடுத்தல், சென்று தேய்ந்திறுதல், வழூஉச்சொல் புணர்த்தல், மயங்கவைத்தல் மற்றொன்று விரித்தல்" முதலிய குற்றங்களை நீக்கவேண்டும்.

**திருத்தமில்லாப் பேச்சில் தென்படும் குறைகள்**

- **திருத்தமில்லாப் ஒலிப்பு**

சிலர் பேசுகின்றபொழுது எழுத்துகளைத் திருத்தமாக ஒலிப்பதில்லை. பெரும்பான்மையும் ன.ண ல.ள.ழ ஆகிய எழுத்துகள் அடங்கிய சொற்களைப் பேசும்பொழுது பிழை செய்வர். சிறு குழந்தைகளாக இருக்கும்பொழுது இவை திருத்தம் பெறாவிடின் பெரியவர்களான பின்பு திருத்த முடியாமற் போய்விடுகிறது. இவ்வாறு திருத்தமின்றி ஒலிப்பதால் சொல் குறிக்கின்ற பொருள் மாறிவிடவும் கூடும். மனம் என்பதை மணம் என்றும், அழகு என்பதை அலகு என்றும் ஒலித்தல்


Downloaded From www.nagaicollege.com

பிழையின்றோ? இவ்வாறு பிழை ஏற்படாமல் இருக்கப் பொருள் வேறுபாடு காட்டும் சிறப்பொலிகள் அடங்கிய தொடர்களை எழுதிப் படிக்கச் செய்து பயிற்சியளித்தல் வேண்டும்.

- **குரல் ஏற்றத்தாழ்வு**

கூறப்படும் கருத்துக்கேற்றவாறும் பகுதியின் உணர்ச்சிக் கேற்றவாறும் குரல் ஏற்றத்தாழ்வுடன் பேசாதது ஒரு பெரும் குறையாகும். ஒரு மேற்கோளையும் பகுதியையும் ஒரே குரலில் பேசுவதால் கருத்து விளக்கம் ஏற்படாது. மேலும் குரலை மாற்றிக் கொண்டு கரகரத்த குரலிலோ, மெல்லிய குரலிலோ பேசுவதும் ஒரு குறையேயாகும்.

- **கொடுஞ்சொல்**

தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வழங்கும் சொற்களைச் செந்தமிழ் சொற்கள் என்றும் ஒரு பகுதியில் மட்டுமே வழங்கும் சொற்களைக் கொடுந்தமிழ்ச் சொற்கள் என்றும் கூறுவர். இவற்றையே வட்டார வழக்குச் சொற்கள் என்றும் கூறுவதுண்டு. எடுத்துக்காட்டாக, திருநெல்வேலி மாவட்டத்தில் சமையலறையை அடுக்களை என்றும், நெருப்பைக் ஷகங்கு' என்றும் வழங்குவர். தஞ்சை மாவட்டத்தினர் சாக்கடையை மோரி என்றும், உப்பை வலணம் என்றும் வழங்குவர். இவ்வாகையான கொடுஞ் சொற்களைத் தவிர்த்து அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய செந்தமிழ் சொற்களைப் பேசப் பயிற்றுதல் வேண்டும்.

- **வேகம்**

வேகமாக பேச்சில் ஏற்படுவது சொல் நெருக்கம் அல்லது சொற் செறிவு என்னும் குற்றமாகும். அதனால் சொல் தடுமாற்றம் ஏற்படுகிறது. மேலும், சொற்களின் திருந்திய வடிவம் சிதைந்தும் போகலாம். ஷகொண்டு வா' என்பது ஷகொண்டா' எனவும் கேட்டீர்களா என்பது ஷகேட்ளா' எனவும் விரைவான பேச்சில் அமையும். இப்பிழைகளைத் தவிர்க்க நிறுத்தி நிதானமான வேகத்துடன் பேசப் பயிற்சி தர வேண்டும்.

- **அச்சம், கூச்சம்**

அறிந்தவர்களாய் இருப்பினும் பலர் முன்னிலையில் தனியாக நின்றும், அறியாதவர் முன்னிலையிலும் பேசுவதற்குச் சிலர் கூச்சப்படுவர். அவர்கட்கு அச்சமும் ஏற்படுதல் கூடும். அதனால் படபடப்பாய்ப் பேசுவர்ளூ அல்லது ஒன்றுக்கொன்று மாற்றிப் பேசுவர் அதனால் பேசும்பொழுது அச்சடத. கூச்சம் ஏற்படுவது ஒரு குறையாகும்.

- **கால தாமதம்**

சிலர் பேசும்பொழுது இடையில் நிறுத்தி நிறுத்திக் கால தாமதம் செய்து பேசுவர்ளூ கருத்துகளை ஒழுங்குபடத் தயாரித்துக் கொள்ளாததாலும், சபையைக் கண்டு ஏற்படும் அச்சத்தாலும் இவ்வாறு நிறுத்திப் பேசுதல் ஏற்படலாம். அவ்வாறு பேசுவதால் கேட்பவருக்குச் சலிப்பு ஏற்படுவதுடன் கருத்துகளையும் முறையாகக் கேட்டு அறிய முடியாது.

- **தக்க சொல் இன்மை**

வள்ளுவர் சொல்வன்மை பற்றிக் கூறுகின்றபொழுது

ஷசொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

சொல்லிற் பயனிலாச் சொல்'



Downloaded From www.nagaicollege.com

எனப் பாடியுள்ளார். கருத்துக்கேற்ற பயனுடைய சொற்களைத் தேர்ந்து எடுத்துப் பேசாமை ஒரு பெருங்குறையாக அமைந்துவிடும்.

- **உணர்ச்சி**

சொல்லுகின்ற கருத்தோடும் அதன் உணர்ச்சியோடும் ஒன்றுபட்டுப் பேசாது ஓரே குரலில் பேசுதல் ஒரு குறையாகும். கேட்பவர்க்கு சலிப்பு ஏற்படும்.

- **சொற்றொடர்க் குற்றங்கள்**

எழுவாய், பயனிலை பொருத்தமின்மை. ஒரு தொடரில் எழுவாய்க்கேற்றபடி பிற சொற்கள் அமைக்காமை. மொழியின் மரபறிந்து தொடர்களைப் பயன்படுத்தாமை, சொற்களில் சில எழுத்துகளை ஒலிக்காது விடுதல் முதலியன சொற்றொடர் குறற்ங்களாம். இவை ஏற்படாது பேசுதல் வேண்டும்.

- **பத்துவகைக் குற்றங்கள்**

நன்னூல் என்னும் இலக்கண நூலைத் தந்த பவணந்தி முனிவர் ஒரு நூலில் ஏற்படும் பத்துவகைக் குற்றங்களைளத் தொகுத்துக் கூறியுள்ளார். அவை பேச்சுக்கும் பொருத்தமானவையாம். கருத்தைக் குறைவுபடக் கூறுதல், அதிகமாக விளக்குதல், கூறியதை மீண்டும் மீண்டும் கூறுதல், முன்னுக்குப்பின் முரண்படக் கூறுதல், குற்றமுடைய சொற்களைக் கூறுதல், இதுவோ அதுவோ என மயக்கம் ஏற்படும்படி பேசுதல், கருத்துச் செறிவு இல்லாதது வெறும் சொற்களைத் தொகுத்தல், ஒன்றைக் கூறத் தொடங்கி மற்றொற்றைப் பற்றிப் பேசுதல், முதலில் விரிவாகத் தொடங்கிப் போகப் போகக் கருத்து குறைந்து வருதல், சொற்களிலிருந்தும் ஒரு பயனும் இல்லாது போதல் ஆகியன பத்துக் குற்றங்களாகும். இவை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

- **உடல்நலக் குறைவு**

உடல் உறுப்புகளின் குறைபாடுகளாலும், உடல் நலக் குறைவாலும் திருத்தமில்லாப பேச்சு ஏற்பட வழியுண்டு. மூக்கில் சதை வளர்ச்சி, தொண்டையில் சதை வளர்ச்சி, திக்குவாய் போன்றவை திருத்தமில்லாப் பேச்சுக்குக் காரணங்களால் அமையலாம்.

**நா நெகிழ் பயிற்சிகள்**

ஒரே வகையான சொற்கள் அல்லது ஒலிகளைப் பலமுறைக் கூறுமாறு செய்தல் நா நெகிழ் பயிற்சியாகும். இதனால், நாவின் நுனி மேலும் கீழுமாக அசைந்து அவ்வொலிக்குரிய இடத்தில் அமையும் பயிற்சி பெறும். ஒலியை எழுப்பும் முறை திருத்தமடையும்.

ர, ர, ர, ர, ர, ர, ரா

ல ல ல ல ல ல லா

ள ள ள ள ள ள ளா என்று அகர ஒலியுடனும், பின்னர்,

ரி, ரி, ரி, ரி, ரி, ரி, ரீ

ழி ழி ழி ழி ழி ழி ழீ

னி னி னி னி னி னி னீ



Downloaded From www.nagaicollege.com

ணி ணி ணி ணி ணி ணி ணீ என்று இகர ஒலியுடனும் இவ்வாறு வெவ்வெறு உயிரெழுத்துடன் சேர்த்துக் கூறச் செய்து பயிற்சியளிக்க வேண்டும்.

2. ஒரே ஒலி பலமுறை அமைந்த சொற்கள் கூறல்

ஷல' ஒலி

(அ) அவன் நல்லவன் அல்லன்

சொல்லொன்று சொல்லேன்

கல்லிலிருந்து எடுத்தான்

(ஆ) ஷள' ஒலி

தள்ளும் உள்ளம்

தள்ளாடித் தள்ளாடிச் சென்றான்

பள்ளத்தில் உள்ள முள்ளெடு

(இ) ஷழ' ஒலி

கீழே விழுந்து அழுதான்

ஏழைக்கிழவன் வாழைப்பழம் வழுக்கி விழுந்தான்

கொழு கொழுத்த வாழை

(ஈ) ஷற' ஒலி

காற்றில் கீற்று விழுந்தது

ஊற்று நீர் கொண்டு வா

காற்று திசை மாறி மாறி வீசியது.

இம்முறைகளைப் பின்பற்றி மாணாக்கருக்கு வாய்மொழிப் பயிற்சியளித்து பேச்சில் வல்லவராக்குதல் வேண்டும்.

**நா பிறழ் பயிற்சிகள்**

ஏறத்தாழ ஒத்த ஒலியுடைய சொற்கள் அடுத்தடுத்து வரும் சொற்கள் அமைந்த தொடர்களை விரைவாகவும் பிழையின்றியும் கூறுமாறு பயிற்சியளிப்பதுதான் நா பிறழ் பயிற்சியாகும்.

எடுத்துக்காட்டாகக் கீழ் உள்ள தொடர்களைக் கூறச் செய்யலாம்.

- ❖ அவனும் அவளும் அவலும் தெள்ளு மாவும் தின்றார்கள்.
- ❖ மேல் ஏழு ஓலை, கீழ் ஏழு ஓலை ஆகப் பதினான்கு ஓலை.
- ❖ வில்வேருழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேருழவர் பகை.



Downloaded From www.nagaicollege.com

❖ பலாப்பழம் பழுத்துப் பள்ளத்தில் விழுந்தது.

❖ மனம் இசைந்த மணம்.

❖ பணம் பழம் பணம், பழம் பனம் பழம்.

எழுத்துகளின் ஒலி வேறுபாட்டால் பொருள் வேறுபடும். அதனை மாணவர் ஒலி அறிந்து கொள்வதற்கு தவலை, தவளை எனச் சொற்களைச் கூறச்செய்வதுடன் அவற்றின் பொருள் உணரும் வண்ணம் தொடர்களின் அமைத்துக் கூறச் செய்தல் வேண்டும்.

❖ தண்ணீர் எடுப்பது தவலை

❖ தண்ணீரில் இருப்பது தவளை

❖ வாளை என்பது மீனின் பெயர்

❖ வாழை என்பது மரத்தின் பெயர்

இவை போன்ற வலை, வளை, வலி.'.வளி.'.வழி, ஒலி.'.ஒளி.'.ஒழி, கூரை.'.கூறை, இரங்கு.'.இறங்கு முதலானவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறினால் ஒலிப்பு அறிவதுடன் பொருளும் அறிவர்.

**பேசுதல் திறனை வளர்க்கும் பயிற்சிகள்**

மிக விரைவாகப் பேசினால், நாம் என்ன பேசினோம் என்பதனைக் கேட்பவர் அறிந்து கொள்ள முடியாது. மிக மெதுவாகப் பேசினால், கேட்பவருக்குச் சலிப்பு உண்டாகும். எனவே, கூறப்படும் செய்திக்கு ஏற்ற வேகத்துடன், பொருள் விளங்கும் பகுதிகளில் நிறுத்திப் பேச வேண்டும். தேவையான வேகத்தோடு விவேகமாவும் பேசுதல் வேண்டும். மேடையில் பேசும்போது, ஒரே குரலில் உணர்ச்சியின்றிப் பேசினால், கேட்போருக்குச் சலிப்பு ஏற்படும். உணர்ச்சியற்ற பேச்சு, உப்பில்லா உணவுக்குச் சமம் எனலாம். கோபத்தை உணர்த்தும் சொற்களைக் கூறும்பொழுதும், இரக்க உணர்ச்சியை வெளிப்படுத்தும் பொழுதும் அந்தந்த உணர்ச்சிக்கேற்பப் பேசுதல் வேண்டும். இவ்வாறு பேசுவதற்குத் தாம் பேசும் கருத்துகளுடனும், செய்திகளுடனும் பேசுபவர் ஒன்றுபட்டவராதல் வேண்டும்.

- **பேச்சில் அமைதி**

சிலர் உணர்ச்சி வயப்பட்டுப் படபடப்புடன் பேசுவர். அவ்வாறு பேசினால், கேட்பவர் கருத்தினை நன்கு உணர்ந்து கொள்ளுதல் முடியாது. எனவே, அமைதியாகப் பேசுதல் வேண்டும். ஒருவர் பேசவிருக்கும் கருத்துகளை, செய்திகளைப் பற்றி நன்கு அறிவாராயின், அவருக்குத் தன்னம்பிக்கை ஏற்படும். அப்பொழுது அவர் அமைதியாகக் கருத்துகளை எடுத்துக் கூறுவார்.

- **நடையும் மொழியும்**

- ஒருவருடைய கருத்து வளத்துக்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப அவருடைய மொழியும் நடையும் அமையும். அவரைப்போல் பேச வேண்டும். இவரைப்போல் பேசவேண்டும் என்னும் எண்ணத்துடன் தொடர்களைப் பேசத் தொடங்கினால் அது இயல்பான பேச்சாக அமையாது. கருத்துகளை ஒழுங்குபடுத்திக் கொண்டபின், சிறுசிறு தொடர்கள்மூலம்


Downloaded From www.nagaicollege.com

அவற்றை வெளியிட வேண்டும். தமிழில் பேசும்பொழுது, தூய தமிழ்ச் சொற்களைக் கையாளுதல் வேண்டும்.

- **குற்றமில்லாது கருத்துக் கோவையாகப் பேசுதல்**

முன்னர்க் கூறியபடி ஒலிப்புக் குற்றமோ, சொற் குற்றமோ, பொருள் குற்றமோ, முன்பின் முரணாகப் பேசும் குற்றமோ அமையாது பேசுவதே திருந்திய பேச்சாகும். பேசத் தொடங்குமுன் கருத்துகளை வரிசைப்படுத்தி வைத்துக் கொள்ளுதல் வேண்டும். முதலில் கூறவேண்டிய கருத்துகளை முதலிலும், தொடர்ந்துகூற வேண்டியவற்றை இடையிலும், இறுதியில் கூற வேண்டியவற்றை இறுதியிலும் கூறுதலே கருத்தைக் கோவைபடப் பேசுதலாகும்.

- **பத்து அழகு பொருந்துதல்**

நன்னூல் என்னும் சிறப்புமிக்க தமிழ் இலக்கணம் தந்த பவணந்தி முனிவர், ஒரு நூலில் பொருந்தியிருக்க வேண்டிய பத்து அழகுகளைக் கூறியுள்ளார். அவை அடுத்து வரும் இயலில் விரிவுரை முறையில் விளக்கப்படுகிறது.

- **உவமைகளும் மேற்கோள்களும்**

“தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு வாழ்ந்தனர்” என்பதைவிட, “அவர்கள் நகமும் சதையும் போல, மலரும் மணமும்போல வாழ்ந்தனர்” எனக் கூறுவது சுவையுடையதாக உள்ளதன்றோ? நல்ல பொருத்தமான உவமைகள் பேச்சில் அமைவது சிறப்பாக இருக்கும். அத்துடன், கருத்தைக் கூறும்பொழுது, சிறந்த சான்றோர் எழுதிய நூலிலிருந்து மேற்கோள் கூறுவது என்பது அவருடைய பேச்சுக்கு ஓர் உறுதியைச் சேர்க்கும். “நண்பருக்குத் துன்பம் ஏற்பட்டால் நாம் உடனே சென்று உதவவேண்டும்” என்று வெறுமையாகக் கூறாது,

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு”

என வான்புகழ் வள்ளுவர் கூறியுள்ளார் என மேற்கோள் கூறுவது பேச்சைச் சுவையுடையதாக்கும்.

- **நற்பண்புகள்**

ஒருவரது பேச்சு கேட்பவரைத் தம்பால் ஈர்ப்பதாக, கட்டுப்படுத்துவதாக அமைதல் வேண்டும். கேட்பவர்பால் அன்போடு, இனிமையான சொற்களை நகைச்சுவை கலந்து பேசினால், கேட்பவர் இன்பம் பெறுவர்ளூ பேச்சில் ஈடுபாடு காட்டுவர். வள்ளுவர் சொல்லாற்றலைப் பற்றிக் கூறும்பொழுது,

“கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல்”

என்று திருவள்ளுவர் தெளிவுபடக் கூறியுள்ளார். எனவே, ஒருவரது பேச்சு, கேட்பவரைப் பிணிப்பதாக அமைதல் வேண்டும் என்பதைத் தெளியலாம்.



Downloaded From www.nagaicollege.com

- **தக்க சொல் இன்மை**

ஷஒருவனுக்குப் பேச்சாற்றல் கைவரப் பெற்றிருத்தல் வேண்டும்' என்பதனை விளக்கவந்த வள்ளுவர் ஷசொல்வன்மை' பற்றிக் கூறுகின்றபொழுது,

“சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

சொல்லிற் பயனிலாச் சொல்”

எனப் பாடியுள்ளார். ஷகருத்துக்கேற்ற பயனுடைய சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசாமை, ஒரு பெருங்குறையாக அமைந்து விடும்' என்பதே இவ்வாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**உணர்ச்சி**

சொல்லுகின்ற கருத்தோடும் அதன் உணர்ச்சியோடும் ஒன்றுபட்டுப் பேசாது, ஒரே குரலில் பேசுதல் என்பது பெருங்குறையாகும். உணர்ச்சியற்ற பேச்சு, கேட்பவர்க்குச் சலிப்பையே ஏற்படுத்தும்.

- **சொற்றொடர்க் குற்றங்கள்**

சொற்றொடர்க் குற்றங்களுள் தவிர்க்கப்பட வேண்டியது எழுவாய், பயனிலை பொருத்தமின்மையேயாகும். ஒரு தொடரில் எழுவாய்க்கு ஏற்றபடி பிற சொற்களை அமைக்காமை, மொழியின் மரபுஅறிந்து தொடர்களைப் பயன்படுத்தாமை, சொற்களில் சில எழுத்துகளை ஒலிக்காது விட்டுவிடுதல் முதலியன சொற்றொடர்க் குற்றங்களாகும். இவ்வகைச் சொற்றொடர்க் குற்றங்கள் ஏற்படாது பேசுதல் வேண்டும்.

**மாணவர்கள் பெற வேண்டிய மொழித்திறன்கள்**

- பொருத்தமான அடைமொழிச் சொற்கள், உரிய கலைச் சொற்கள் கலந்து பேசுதல்.
- பிறமொழிச் சொற்களைக் கலவாது பேசுதல்.
- வரவேற்புரை, பாராட்டுரை, நன்றியுரை ஆற்றல்.
- கலந்துரையாடல்.
- மாணவர்கள் செயல்பாடுகள்
- பொருத்தமான தலைப்புகளில் பேசச் செய்தல்.
- முன் தயாரிப்புடைய சொற்பொழிவுகளைப் பேசச்செய்து - சொற்பொழிவில் மேற்கோள், கருத்து வலியுறுத்தல், ஏதுக்கள் காட்டல் போன்ற கூறுகளை அமைத்துப் பேசச் செய்தல்.

**பேசுதல் திறனை மதிப்பிடல்**

சொற்களஞ்சியத்தைப் பெருக்கம் வழிகள் பல. அவை பேசுதல் திறனை வளர்க்கப் பயன்படுவனவாகும். அவை முறையே, 1. படம் பார்த்து விளக்குதல், 2. செயலெதிராகப் பேசுதல், 3. தொடர் நிகழ்வாகப் பேசுதல், 4. சொல் விளக்கப் புனைவு, 5. சூழ்நிலைகள்ப்



Downloaded From www.nagaicollege.com

பேச்சு, 6. பாத்திரப் புனைவு, 7. பட்டிமன்றம் இப் பழகு செயல்கள் பேசுதல் திறனை வளர்ப்பனவாகும். இவை வகுப்பிற்கேற்பத் தரப்படுத்தப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

- **படம் பார்த்து விளக்குதல்**

படம் பார்த்து விளக்கம் சொல்லும் பழகு செயல், தொடக்க வகுப்புகளுக்கு மட்டுமல்லாமல் நடுநிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் வழங்கப்படலாம்.

- **செயலெதிராகப் பேச்சு**

ஷசெயலெதிராகப் பேசுதல்' எனும் பழகு செயலில், இருவர் பேச வேண்டும். ஒருவர் பேசுவதற்கு மாற்றுரையாக இன்னொருவர் பேச வேண்டும். மாற்றுரை, எதிர்மறைக் கூற்று, எதிர்ச்சொல் கூற்று, அந்தாதிக் கூற்று, வாக்கிய அளவு மாற்றும் போன்றனவாக அமையலாம். மாற்றுரையைப் பாடப் பொருள் தேவைக்கேற்ப உருவாக்கலாம்.

எ-கா: எதிர்மறைக் கூற்று

ஒருவர்: நேற்று நான் படித்தேன்.

மற்றொருவர்: நேற்று நான் படிக்கவில்லை.

- **தொடர் நிகழ்வுப் பேச்சு**

இருவர் பங்கேற்கத் தக்கவாறு மேலே காட்டப்பெற்ற பழகு செயல்களைக் குழுவிற்கும் வடிவமைக்கலாம். வரிசை முறையில் ஒவ்வொருவராக வரையறுத்த முறைப்படி பேசுதல் வேண்டும். இப்பழகு செயலில் ஷஅந்தாதியாகப் பேசுதல்' மிகவும் விறுவிறுப்பையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும்.

- **சூழ்நிலைப் புனைவுப் பேச்சு**

சூழ்நிலைப் புனைவுப் பேச்சும், பேசுதல் திறனில் மேம்பட்ட நிலையாகும். ஒரு சூழலைச் செயற்கையாகக் கொண்டு பேசப்படும் பேச்சு, சூழ்நிலைப் பேச்சு ஆகும்.

கடைக்காரர் - பொருள் வாங்குபவர்

பேருந்து ஓட்டுநர் - நடத்துநர்

ஆசிரியர் - மாணவர்

நேர் காண்பவர் - நேர்காணி

போன்று, இருவர் எதிர்ப்படும் சூழலைச் செயற்கையாகக் கொண்டு, அச்சூழலில் மாணவர்களைப் பேசச்செய்து பேசுதல் திறனை வளர்க்கலாம்.

- **பாத்திரப் புனைவுப் பேச்சு**

பாத்திரப் புனைவுப் பேச்சும் சூழ்நிலைப் புனைவுப் பேச்சினைப் போன்றதாகும். சூழ்நிலைப் புனைவுப் பேச்சில் நடைமுறை வாழ்க்கை நிகழ்ச்சிகள் கற்பனையாகக் கொள்ளப்படுகின்றன. பாத்திரப் புனைவு நாடகப் பாங்கினைப் போன்றது. பேச்சோடு மெய்ப்பாடும் இணைந்தவாறு செயல் நிகழ்கிறது.



Downloaded From www.nagaicollege.com

- **பட்டிமன்றம்**

இது பள்ளிகளில் நடைபெறும் பட்டிமன்றம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பேச்சுத் திறனை வளர்க்கலாம். தொடக்க வகுப்புகளில், வகுப்பறை அளவில் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி, குழந்தைகளைப் பங்கேற்கச் செய்யலாம்.

**பேசுதல் திறனைத் தேர்ந்தறியும் முறைகள்**

பேசுதல் திறனை அளக்க வாய்மொழித் தேர்வே ஊடகமாக அமையும். எழுதுமுறை பயன்படாததால் நடைமுறையில் இத்திறன் தேர்வு செய்யப்படாமலுள்ளது. தேர்வில் இடம் பெறாததால் மொழிக் கற்பிப்பில் இத்திறன் தவிர்க்கப்பட்டு வருகிறது.

கருத்தாடல், பட விளக்கம் கூறுதல், பாத்திரப் புனைவில் பேசுதல் போன்றன பேச்சுத் திறனை வளர்க்கும் செயல்பாடுகளாகும். இச்செயல்பாடுகளில் பங்கேற்றுப் பேசும்போது அமையும் துல்லியம், பேச்சுச் சரளம் ஆகியன பேசுதல் திறனை அளக்கும் அளவீடுகளாகும். துல்லியம், சரளம் ஆகியனவற்றை அளவீடாகக் கொள்ளும்போது இவற்றின் உட்கூறுகளை வரையறுக்க வேண்டும்.

முறையான ஒலிப்பு, பொருத்தமான சொல்லாட்சி, இலக்கணமுடைமை ஆகியன பேச்சுத் துல்லியத்தின் கூறுகள். உரிய விரைவு (தயக்கமின்மை), முன்பின் தொடர்பு, உடனுக்குடன் பதிலுரைத்தல் ஆகியன சரளத்திற்குரிய கூறுகளாகும். பேசுதல் திறனை அளக்க மேற்காட்டப்பட்ட கூறுகளைக் கொள்வதுபோல மொழிநடை, மெய்ப்பாடு, கருத்து ஆகியனவற்றையும் பேச்சுத் திறனை அளப்பதற்கான அளவுக் கூறுகளாகக் கொள்ளலாம். இவற்றைப் பற்றிய மிகை விளக்கங்களைச் சொற்பொழிவுக்கலை தொடர்பான நூல்களிலிருந்து அறியலாம்.

**படிக்கும் திறன் கற்பித்தல்**

படிப்பது திருத்தமான ஒலியுடன் இருக்க வேண்டும். படிக்கும்பகுதியின் பொருள் உணர்ந்து ஏற்ற இடங்களில் நிறுத்திப் படித்தல் வேண்டும். உணர்ச்சிக்கேற்ப குரல் ஏற்றத் தாழ்வுடன் படிக்கப் பயிற்றுதல் தற்காலத்தில் எழுதும்பொழுதும், அச்சிட்டு வெளியிடும் பொழுதும் காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக் குறி, வியப்புக்குறி போன்ற நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்து கின்றனர். அவை பகுதிகளை எளிய முறையில் பொருள் அறிந்து படிக்க உதவுகின்றன�ளூ நிறுத்த வேண்டிய இடத்தில் தாமே நிறுத்திப் படிப்பதற்கும், நிறுத்தம் இடங்களில் குறிப்பிட்ட கால அளவே நிறுத்திப் படிப்பதற்கும் அவை பயன்படுகின்றன.

**படித்தலின் நோக்கங்கள்**

- சிறப்பு உச்சரிப்புடன் படித்தல்
- திருத்தமாகப் படித்தல்
- ஒலியமைதியுடன் படித்தல்
- உள்ளதை உள்ளவாறு படித்தல்
- உணர்வுகளை உணர்ந்து படித்தல்



Downloaded From www.nagaicollege.com

- நிறுத்தற்குறிகள் அறிந்து படித்தல்

**வாய்விட்டுப் படித்தல்**

வாய்விட்டுப் படிக்கக் கற்பிக்கும்பொழுது உதவும் துணைக் கருவிகள் பல உள்ளன. அவையாவன:

- **மின் அட்டைகள்**

முதல் வகுப்பு மாணவர்களைப் படித்தலுக்கு அறிமுகப்படுத்த மின் அட்டைகள் நல்ல தொடக்கமாகும். தொடக்க நிலையில் அவை புத்தகங்களைவிட அதிகக் கவர்ச்சியும் பயனும் தருபவையாகும்.

- **கட்டளை அட்டைகள்**

- **முகவரி அட்டடைகள்**

கட்டளைகளைத் தொடர்ந்து முகவரி அட்டைகளைக் காட்டிப் படிக்கச் செய்யலாம். வகுப்பிலுள்ள மாணவர்களின் மாணவர்களின் உண்மையான பெயர்களை எழுதுவது நன்று.

- **வாக்கிய அட்டைகள்**

கட்டளை அட்டைகளையும் முகவரி அட்டைகளையும் விரைவாகப் படித்து முடித்தவுடன் வாக்கிய அட்டைகளைப் படிக்கச் செய்யலாம்.

- **வாசிப்புத் தாள்கள்**

மாணவர்கள் செய்து முடித்த செயல்களைக் குறித்து வாய்மொழியாகக் கூறச் செய்ய வேண்டும். கொச்சை மொழியை நீக்கித் திருத்தமுற அவற்றைப் பெரிய அளவில் கரும்பலகையில் எழுத வேண்டும்.

- **அறிக்கைகள்**

பள்ளியில், மாணவர் சங்க நடவடிக்கைகள் விளை யாட்டுச் சங்க நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகள் வாசிப்புப் பயிற்சி பெற உதவி செய்வனவாகும்.

- **நாளிதழ்கள், வார மாத ஏடுகள்**

செய்தி வாசித்தல் என்பது பல பள்ளிகளில் அன்றாட அலுவலாக நடந்து வருகிறது. மேற்கண்டவாறு படிப்புப் பயிற்சி பெற இவை துணை புரிகின்றன. இவை தினந்தோறும் புதிய சொற்களையும் சொல்லாட்சியையும் கற்க வாய்ப்பு அளிக்கின்றன.

- **கடிதங்கள்**

கடிதங்களை எழுதவும், பிறருக்குப் படித்துக் காட்டவும் மாணவர் அறிதல் வேண்டும். புத்தக விற்பனை நிலையத்துக்குக் கடிதம் எழுதுதல், விடுப்புக்காக கடிதங்கள், தொழிற்சாலைகளைப் பார்க்க அனுமதிகோரும் கடிதங்கள், நன்றி கூறும் கடிதங்கள், வாழ்த்துக் கடிதங்கள் போன்ற பல பள்ளி வாழ்வில் இயல்பாய் எழுத அத்தகைய வாய்ப்புகள் ஏற்படுகின்றன படிக்குங்கால் அவற்றைத் தவறில்லாமல் படிக்க வேண்டியுள்ளது. **கட்டுரைகள்**



Downloaded From www.nagaicollege.com

கட்டுரைகள் வாய்மொழியாகவும் அமைவதுண்டு. அவை வாய் மொழிக் கட்டுரைகள் எனப்பெறும். அதற்கு நிரல்படக் கருத்துகளைப் பேச்சின் மூலம் வெளிப்படுத்துவதே இம்முறை எழுதிய கட்டுரைகளைப் பலர் முன் படித்துக் காட்டுவதும் உண்டு. அந்நிலையில் படிப்பு பயிற்சி நிகழ இடமுண்டு.

- **நாடக உரையாடல்**

அந்தந்தப் பாத்திரங்களுக்குரிய உரையாடல் பகுதிகளை நெட்டுருப்போட வாய்விட்டுப் படித்தல் அவசியமாகிறது. தவிர, பேச்சுகளை உணர்ச்சி பாவத்துடன் நாடக அரங்கில் வெளியிட வேண்டியிருக்கிறது. அவ்வாறு செய்ய அப்பகுதிகளை உணர்ச்சியுடன் படிக்க வேண்டியிருக்கிறது. வாய்விட்டுப் படித்தலின் போது கவனிக்க வேண்டியவை

மிகவும் விரைவாகப் படித்தல் கூடாது. அவ்வாறு படித்தால் படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் பொருள் விளங்காது. படித்தல் மிகத் தெளிவாகவும் திருத்தமாகவும் இருத்தல் வேண்டும்.

- குரல் இயல்பானதாக அமைய வேண்டும். சொற்பொழிவு, செய்வது போல் படிப்பதோ, ஒரே மாதிரியான குரலில் படிப்பதோ இசை பாடுவது போன்று குரலை ஏற்றியும் இறக்கியும் படிப்பதோ கூடாது.

- படிக்கும்பொழுது தேவையற்ற அசைவுகள் இருத்தல் தவறு. கையை நீட்டியும், தலையை ஆட்டியும் படிப்பது ஒழுங்கன்று.

- இவ்வாறு வாய்விட்டுப் படித்தலில் ஓரளவு திறன் பெற்று வரும்பொழுது வாய்க்குட் படித்தலிலும் பயிற்சியளித்தல் வேண்டும்.

**வாய்விட்டுப் படித்தலின் நன்மைகள்**

கண் நோக்க, நா ஒலிக்க, மனம் உணர உதவுவது வாய்விட்டுப் படித்தலாகும். தொடக்க நிலையில் வாய்விட்டுப் படித்தல்தான் சிறந்ததாகும்.

- ❖ ஒலிப்பு முறையைக் கற்க, வாய்விட்டுப் படித்தல் உதவும்.
- ❖ ஒலிப்பிலுள்ள குறைகளைத் திருத்த இம்முறை உதவும்.
- ❖ மனப்பாடம் செய்வதற்கு வாய் விட்டுப் படித்தலே ஏற்றது.
- ❖ தமிழுக்கே ஏற்ற ஷஇழுமென்' ஒலி நயத்திலேயே ஓசையின் பத்திலே சொற்சுவையிலேயே ஈடுபட வாய்விட்டுப் படித்தலே தக்கது
- ❖ நிறுத்தற் குறிகளின் பயனை வாய்விட்டுப் படிப்பதன் வாயிலாக நன்கு அறியலாம். இவ்வாறு படிப்பதால் உணர்ச்சியுடன் நடிப்பதற்கும் தேர்ச்சி பெற்றதாகும்.
- ❖ வாய்விட்டுப் படிப்பதனால் சொற்களை அறிவதிலும் அவற்றைப் பாகுபாடு செய்வதிலும் உள்ள குறைகளை அறிவதுடன் அவற்றை உடனுக்குடன் களையவும் முடியும்.

**வாய்விட்டுப் படித்தலின் தீமைகள்**

- ❖ வாய்விட்டுப் படித்தலின்போது படித்தலின் வேகம் ஏற்படாது. எனவே காலம் வீணாகும்.



Downloaded From www.nagaicollege.com

- ❖ மிகுதியான பகுதிகளை வாய்விட்டுப் படிக்கும் பொழுது ஒலியுறுப்புகள் களைப்படையும் படிப்பதில் சோர்வு தோன்றும்.
- ❖ சொற்களையும், தொடர்களையும் கண்டு ஏற்றமுறையில் படிப்பதிலேயே மனம் செல்வதால் பொருள் உணாதலில் சற்று தாமதம் ஏற்படும்.
- ❖ பொது நூலகங்களில் படிக்கும் பொழுது வாய்விட்டுப் படித்தால் பிறருக்கு இடையூறு ஏற்படும். எல்லாரும் வாய்விட்டுப் படிக்கத் தொடங்கினால் கவனச் சிதறல் ஏற்பட்டுப் பொருள் உணர முடியாது.

**மனத்துக்குள் படித்தல்**

அச்செழுத்து அல்லது கையெழுத்து ஆகிய ஒன்றினை உரக்க, வாய்விட்டுப் படிக்காமல் மனத்துக்குள்ளேயே படித்துப் பொருள் உணர்தலே வாய்க்குட் படிப்பு எனப்படும். வாய்விட்டுப் படித்தல் நன்கு கைவரப் பெற்ற பின்னர் கையாள வேண்டிய முறை வாய்க்குட் படிப்பாகும். தொடக்க நிலையில் வாய்விட்டுப் படித்தலே சிறந்த பயனைத் தரும். எனினும் மேல் வகுப்புக்குச் செல்லச் செல்ல மாணவர் திறன் பெற வேண்டுவது வாய்க்குட் படிப்பேயாகும்.

மூன்றாம் வகுப்பிலிருந்து வாய்க்குட் படிப்பு தொடங்க வேண்டும். அவ்வகுப்பில் வாய்க்குட்படிப்பும், வாய்விட்டுப் படித்தலும் 40 சதவீதம், 60 சதவீதத்தில் இருக்க வேண்டும். அதாவது 2:3 என்னும் விகிதத்தில் அமைதல் நன்று எனப் பாடத்திட்டம் வரையறுத்துள்ளது. உயர்வகுப்புகளுக்குப் போகப் போக வாய்க்குட் படிப்பின் விகிதமும் உயர்ந்து கொண்டே போக வேண்டும்.

**மனதிற்குள் படிப்பதில் பெற வேண்டியவை**

**படிப்புத் திறன்களை வளர்த்தல்** - படிக்கும் பொழுது வரி வடிவத்தைக் கண்களால் பார்த்தே படிக்கின்றோம். எனவே, படிப்புத் திறன்களான கண் சாண் அளவு, கண் நகர்ச்சி, கண் பாய்ச்சல் அகியவற்றில் நல்ல திறன் பெறுதல் வேண்டும்.

அ) **கண் சாண் அளவு** - படிக்கும் பொழுது கண் வரி வடிவத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பார்க்கிறது. பின்பு அடுத்த பகுதியைப் பார்க்கிறது. ஒரு தடவை பார்ப்பதால் கண்டறிகின்ற சொற்றொகுதியைக் கண்சாண்அளவு என்பர். ஷகந்தன் தன் நண்பனைக் கடைத்தெருவில் கண்டான்’ என்னும் தொடரில் கந்தன் என்பதை மட்டும் ஒரு தடவையில் பார்க்க முடியும் எனில் படிக்கும் வேகம் குறையும். ஷகந்தன் தன் நண்பனைக்’ என்பது வரை ஒரு தடவையில் பார்க்க முடியுமெனில் படிப்பின் வேகம் மிகுதிப்படும். இக்கண் சாண் அளவு பெரியதாய் அமையப் பயிற்சி பெறல் வேண்டும்.

ஆ) **கண் நகர்ச்சி** - ஒரு தடவை பார்த்தபின் கண் அடுத்த பகுதியைப் பார்க்கக் குதிப்பது போல் செல்கிறது - இதனைக் கண்குதிப்பு என்பர். இதனையே கண் நகர்ச்சி எனவும் கூறுவர். ஒரு பகுதியைப் பார்க்கும் நேரம் கண் நிற்பதைக் ஷகண் நிறுத்தல்’ என்பர். ஒரு பகுதிக்கு கால் வினாடி தேவை எனக் கூறுவர். இக்கண் நிறுத்தம் அதிகமாயின் படிப்பின் வேகம் குறையும். நிறுத்தும் காலத்தைக் குறைத்துப படிக்கப் பயிற்சி பெற வேண்டும்.

இ) **கண் பாய்ச்சல்** - ஒரு தொடர் முடிந்ததும், அடுத்த தொடருக்குக் கண் பார்வை தாவுகிறது. இத்தாவுதலுக்கு கண் பாய்ச்சல் எனப் பெயர். அப்பாய்ச்சல் அடிபிறழாது செல்லுதல் வேண்டும். ஒரே வரியை மீண்டும் படிப்பதும், ஒரு வரி விட்டுப் படிப்பதும் சில வேளைகளில் நிகழ்வதுண்டு.


Downloaded From www.nagaicollege.com

அது படிக்கும் வேகத்தைக் குறைக்கும். எனவே கண் பாய்ச்சல் நேர்மையானதாக அமையப் பயிற்சி பெறல் வேண்டும்.

**மனதிற்குள் படிக்கும் முறைகள்**

- ❖ தொடக்க நிலையில் சிறுசிறு கட்டளைகள் எழுதப்பட்ட அட்டைகளைச் சிறிது நேரம் காட்டி, அவற்றை வாய்க்குள் படிக்கச் செய்து அக்கட்டளைப்படி செயல்களைச் செய்யச் சொல்லலாம்.

- ❖ குறிப்பிட்ட தலைப்பில் செய்திகளை எளிய தொடர்களில் எழுதி வாசிப்பு அட்டைகள் தயாரித்துக் குறித்துக் கால அளவுக்குப் படிக்கச் செய்து பின்னர் அவற்றில் வினாக்கள் கேட்கலாம்.

- ❖ குறித்த நேரத்தில் கொடுத்த பகுதியைப் படித்து முடித்தல் வாய்க்குள் படிப்பில் பயிற்சி பெறும் வழிகளில் ஒன்றாகும்.

- ❖ நூல் நிலையத்தோடு இணைந்த படிப்பகம் ஒன்று அமைத்து நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் ஆகியவற்றுள் குறிப்பாக சிலவற்றை நாள்தோறும் படிக்கச் செய்யலாம்.இ

**படிக்கப் பயிற்றும் முறைகள்**

படிக்கப் பயிற்றுவதற்கும் 1. எழுத்து முறை, 2. சொல் முறை, 3. சொற்றொடர் முறை என மூன்று முறைகள் உள்ளன. ஒவ்வொரு முறையினைப் பற்றியும் விளக்கமாக அறிந்து கொள்வோம்.

**1. எழுத்துமுறைப் படிப்பு**

தமிழ் நெடுங்கணக்கில் நால்வகை எழுத்துகள் உள்ளன. அவை உயிர் எழுத்து (12), மெய்யெழுத்து (18), உயிர்மெய் எழுத்து (216), ஆய்தம் (1) என்பனவாகும். ஒவ்வோர் எழுத்துக்கும் தனித்தனியே ஒலி உண்டு. எனவே, எல்லா எழுத்துக்களையும் கற்று, அதன் பின் அவ்வெழுத்துகளால் ஆன சொற்களையும், சொற்றொடர்களையும் படிப்பதே எழுத்து முறையில் படிப்பதாகும். பழங்காலத்தில் படிக்கக் கற்பித்த முறை இதுவோயாகும். இம்முறையைப் பின்பற்றுவதால் ஏற்படும் குறை, நிறைகளை அறிந்து கொள்வோம்.

**நிறைகள்**

- ○ எழுத்து களை முறைப்படி படிப்பதால் அவற்றின் வரிசை முறையை மாணவர் நன்குணர்ந்து கொள்ள வழியேற் படுகின்றது.

- ○ எழுத்துகளைக் கற்ற பின்னர்ச் சொற்களைப் படிப்பதற்குச் செல்வதால் ஐயந்திரிபு அற எழுத்தறிவு பெற முடிகிறது.

- ○ தமிழ் மொழியில் நாம் ஒலிப்பது போன்றே எழுதுகிறோம். எனவே, ஒவ்வொர் எழுத்துக்குரிய ஒலியினை நன்குணர்ந்து கொள்வதால் எழுதும் பயிற்சி எளிதாகின்றது. எழுத்துப் பிழைகள் மிகுதியும் ஏற்படுவதில்லை.

- ○ படிப்பதும் பிழையின்றி அமையும்.



Downloaded From www.nagaicollege.com

**குறைகள்**

- தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போதல்’ என்ற கற்பித்தல் முறைக்கு இது புறம்பாகும்.
- மேலும், எழுத்துகளைக் கற்பிக்கும்பொழுது ஒவ்வோர் எழுத்தின் வரிவடிவையும் ஒலி வடிவையும் கற்பிப்பது மிக்க காலதாமதத்தை உண்டு பண்ணுகிறது.
- தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 247 எழுத்துகளில் பல எழுத்துகள் மொழியில் கையாளப்படுவதில்லை. எடுத்துக் காட்டாக ஷங’ கர வரிசையை எடுத்துக் கொள்வோம். அவ்வரிசையில் ங, ஙா, ங் என்ற 13 எழுத்துகள் உள்ளன. அவற்றுள் ஷங’ ஷங்’ என்ற இரு எழுத்துகள் மட்டுமே மொழியில் கையாளப் படுகின்றன. எஞ்சியுள்ள பதினொரு எழுத்துகள் கையாளப்படும் சொல்லே தமிழ் மொழியில் இல்லை.

(1) ஷங’ ப் போல் வளை, 2 அங்ஙனம் இதைப் போன்று ஷண’ வரிசையிலும் ஷட’ வரிசையிலும் சில எழுத்துகள் கையாளப் படுவதில்லை. மொழியில் வரவே வராத இத்தகைய எழுத்துகளின் வரிவடிவையும் ஒலி வடிவையும் இளங்குழந்தைக்குக் கற்றுக் கொடுப்பது தேவையற்றது.

**சொல்முறைப் படிப்பு**

எழுத்து முறைக்கு மாறுபட்டது சொல் முறையாகும். புதுச் சொற்களை எளிதில் படிக்கக் கற்கின்றனர். இவ்வண்ணம் ஒவ்வொரு சொல்லாகக் கற்பிப்பதுதான் சொல்முறை எனப்படும். இனி, இம்முறையின் நிறைகுறைகளை ஆராய்வோம்.

**நிறைகள்**

- மனித இயல்புக்கு இம்முறை பொருத்தமாக உள்ளது. ஷஅம்மா, அப்பா, அக்கா, தாத்தா, பாட்டி’ போன்ற சொற்களைத்தான் இளங்குழவிகள் கூறுகின்றனர்.
- ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனிப் பொருள் உண்டு.
- ஷமுழுமையினின்று பாகங்களுக்குச் செல்வது’ உளவியல் முறை எனவே, சொல்லிலிருந்து எழுத்துக்குச் செல்வது இயல்பானது

**குறைகள்**

- எழுத்துக் கூட்டிப்படிக்க வாய்ப்பில்லாத காரணத்தால் கற்ற எழுத்துக்களைக் கொண்ட புதுச் சொற்களைப் படிப்பதும் படித்தவற்றைப் பார்க்காமல் எழுதுவதும் பிழை நிறைந்ததாக ஆகிவிடக்கூடும்.
- மீண்டும் மீண்டும் சொற்களை எழுதும் பயிற்சி அளிப்பின், இக்குறையினை நீக்கக்கூடும்.
- நேர் ஒலிப்பு முறையுள்ள தமிழைவிடத் தனி ஒலிப்பு முறை கொண்ட ஆங்கிலம் போன்ற வேறு மொழிகட்கே சொல்முறை சாலச் சிறந்தது.
- ஒரு படத்தை மூடிக்கொண்டு எழுத்துகளை மட்டும் பட உதவியின்றிப் படிக்கச் சொன்னாலே படிக்க முடியாமல் வாளாவிருக்கலாம்.



Downloaded From www.nagaicollege.com

- இதற்குப் பரிகாரமாக ஒவ்வொரு சொல்லிலும் மூன்று மின் அட்டைகள் தயாரித்துப் பயிற்சி அளித்தால்: அக்குறை நீங்கும்.

- தமிழ் மொழியின் நெடுங்கணக்கு வரிசையறிவு மாணவர்கட்கு இல்லாமல் போகக்கூடும்.

இது ஒரு குறையே எனினும் நாளடைவில் மாணவர் போதிய தேர்ச்சி பெற்று மேல் வகுப்புக்குச் செல்லுங்கால் இக்குறை தானே நீங்கும்.

**சொற்றொடர் முறைப்படிப்பு**

புதிதாகக் கையாளப்படும் முறைகளுள் இது ஒன்றாகும். எளிய சொற்றொடர்கள் பலவற்றைக் கற்பித்து அதன் பின்னே அவற்றில் வரும் தனித்தனியான சொற்களையும், எழுத்துகளையும் கற்பிப்பது இம்முறையாகும். வாழ்க்கையில் நாம் பேசுங்கால் சொற்றொடர்களாகவே பேசுகிறோம். ஆகவே குழந்தைகளும் சொற்றொடர்களாகவே படிக்கக் கற்பது பொருத்தமுடைத்து. சொல்லை ஓர் அலகாகக் கொண்டு அறிதல் போல சிறிய சொற்றொடரை அலகாகக் கொள்வது ஒன்றுதான். இம்முறையில் உள்ள குறைகளும் நிறைகளும் சொற்றொடர் முறைக்குப் பொதுவாகப் பொருந்துதல் என்பது தெளிவு.

சொல் முறையிலும், சொற்றொடர் முறையின் சிறப்புண்டு. குழந்தைகள் முதலில் தனித்தனிச் சொல்லாகப் பேசத் தொடங்கினாலும் அவர்களின் உள்ளத்தில் ஒருசொற்றொடரின் கருத்தேதொக்கி நிற்கின்றது. எடுத்துக்காட்டாக, ஷஅம்மா' என்று ஒரு குழந்தை அழுகின்றது என்றால் அது ஷஅம்மா பசிக்கிறது' அல்லது ஷஅம்மா பால் வேண்டும்' என்ற சொற்றொடர்களின் கருத்தைத்தான் ஒரே சொல்லில் அடக்கிக் காட்டுகிறது. எனவே, கூர்ந்து நோக்கின் ஷஅம்மா' என்ற சொல் ஒரு சொற்றொடரேயாகும். நடுச்சாலையில் நிற்கும் கைகாட்டியில் ஷபழனி 64 கி.மீ.' என்பது போன்ற சொற்களைப் பார்க்கிறோம். ஷபழனி கை காட்டும் திசையில் 64 கி.மீ. தொலைவில் உள்ளது' என்ற சொற்றொடரின் சுருக்கம் ஆகும். இயற்கைக்கிணங்கக் கற்பிப்பதே உளவியல் முறையாகும். உளவியல் நன்று என்பது கூறவும் வேண்டுமோ?

**நிறைகள்**

- வெறும் சொல்லாகக் கற்பதைவிட அச்சொல் கையளப் பெற்றிருக்கும் ஒரு சொற்றொடர் மாணவர்களுக்குப் பொருண்மையைக் கொடுக்க வல்லது. ஷமயில்' என்றால் திகைக்கலாம். ஷமயில் ஆடுகிறது' என்றால் புரிந்து கொள்வார்கள்.

- படிப்பதில் மாணவர்க்கு ஆர்வம் பெருகும்.

- உளவியல் விதிகளை ஒட்டிய முறை இது. முழுமையான சொற்றொடர்களிலிருந்து அவற்றின் பகுதிகளான சொற்கள் எழுத்துகள் ஆகியவற்றிற்குப் போதல் எளிய வழி.

- இது விளையாட்டு முறையாதலால் பிள்ளைகளிடம் கவர்ச்சி மிகுதி, களைப்பு குறையும்.

**குறைகள்**

- தொடக்கத்திலேயே சொற்றொடராகப் படிப்பது மாணவர்களுக்கு இடர் தருவதாகவும், சிக்கல் மிகுந்ததாகவும் தோன்றும்.



Downloaded From www.nagaicollege.com

- சொற்றொடர்களைப் பாராமலே மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடும். ஆனால், படித்த சொல்லைக் கரும்பலகையில் தனித்து எழுதினால் படிக்க அறியாமல் திகைப்பர்.

- சொற்றொடர்களைக் கற்பிக்க வேண்டும் என்னும் இம்முறை எளிதிலிருந்து தொடங்கு என்பதற்கு எதிர் மாறாக உள்ளது.

- தமிழ் நெடுங்கணக்கு எழுத்துகளை வரிசை ஒழுங்குப்படி இம்முறையில் கற்றுக் கொள்ள இயலாது.

**படித்தல் திறனை மதிப்படல்**

**நூலகப் படிப்பு**

அகன்ற படிப்புக்கு நன்கு உதவும் இடம் நூலகப் படிப்பாகும். நூலகத்தில் கலைக் களஞ்சியங்கள், பல்வகை இலக்கிய நூல்கள், மலர்கள், இதழ்கள் மற்றும் செய்தித் தாள்கள் இடம் பெறும். அகன்ற படிப்பினை உண்மையிலேயே பொருளுள்ள ஒன்றாக மாற்றும் இடம் நூலகமே. நூல்களைத் தாமே தேர்ந்தெடுத்துப் படிக்கும் வாய்ப்பும், ஆசிரியர் வழிகாட்ட அவ்வழியே நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் வாய்ப்பும் இதில் உண்டு.

**தின, வார, மாத இதழ்கள் படித்தல்**

நாட்டுச் செய்திகளை நாள்தோறும் தின இதழ்கள் வெளியீடுகின்றன. வார, மாத, இதழ்களில் கதைகளும், கட்டுரைகளும் வெளியாகின்றன.

**எழுதுதல் திறன் கற்பித்தல்**

குகைகளில் வாழ்ந்த ஆதி மனிதர் ஓவியம் வரைந்தனர் என்பதனை அவர்கள் விட்டுப் போயுள்ள அறிகுறிகளால் அறிகின்றோம். இந்த முயற்சியே ஓவிய எழுத்துகளாக வளர்ந்தது. இரண்டொரு கருத்துகளையன்றிப் பல கருத்துகளை எழுதி வரும் பொழுது விரைவு காரணமாக ஓவியங்கள் இரண்டொரு வரிகளாகச் சுருங்கின. நாளடைவில் அந்த அறிகுறி ஓவியமும் ஒரு சொல்லாக நின்று அந்தச் சொல்லை அறிவிக்காது அந்தச் சொல்லின் முதல் எழுத்தினை மட்டும் அறிவிக்க வந்தது. பிறகு சொல்லின் பொருளையன்றிச் சொல்லின் எழுத்துகளையும் மக்கள் பிரித்தறிய விரும்பினர். இவ்விருப்பமே ஒலி எழுத்துகளாக வளர்ச்சி பெற்றது. இவ்வாறு ஒலி வரிவடிம் பெற்று எழுத்து தோன்றியது.

மொழி தோன்றி வளர்ந்து பல்லாண்டுகளுக்குப் பின்னரே எழுத்து என்ற ஒன்றின் வாயிலாகவும் எண்ணத்தை எடுத்தியம்ப முடியும் என மக்கள் கண்டறிந்தனர். ஓரளவுக்குப் படிக்கக் கற்ற பின்னரே எழுதக் கற்பிக்கவேண்டும். இனி எழுதுதலின் நோக்கங்களை அறிந்து கொள்வோம்.

**எழுதுதலின் நோக்கங்கள்**

- **கருத்துகளையும் பேச்சையும் நிலையாகப் பதிவு செய்தல்**

நாம் நேரில் உள்ளவரிடம் நம் கருத்துகளையும், எண்ணங்களையும் பேச்சு மூலம் கூறுகின்றோம

- **தொலைவில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளுதல்**



Downloaded From www.nagaicollege.com

நம் கருத்துகளை அறிய வேண்டியவர் தொலைவில் இருந்தால் பேச்சு மூலம் தெரிவிக்க முடியாது. நம் உறவினர், நண்பர் ஆகியோருக்குக் கருத்தைத் தெரிவிக்க விரும்பலாம்.

**எழுதுதலில் நிலைகள்**

எழுதக் கற்பித்தலில் இரு நிலைகள் உள்ளன. முதல் நிலையில் ஒலி வடிவங்களை வரி வடிவங்களாக எழுத அறிமுகப்படுத்துவதுடன் திருத்தமாகவும், அழகாகவும் விரைவாகவும், எழுதப் பயிற்றுவது நோக்கமாகும். வரியொற்றி எழுதுதல், பார்த்து எழுதுதல், கேட்டு எழுதுதல் போன்றவை மட்டும் இங்குக் கற்பிக்கப்படும்.

இரண்டாம் நிலையில் எழுதும் விரைவை உயர்த்துவதுடன் சொந்தமாகக் கடிதம், கட்டுரை, அறிக்கை, முதலியன எழுதவும் கற்பிக்கிறோம். இது ஆக்க வேலை கற்பிக்கும் நிலையாகும்.

இரண்டு நிலைகளுக்கும் தனித்தனியான வழிவகைகள் உள்ளன. முதல் நிலை பெரும்பாலும் ஒன்றுமுதல் மூன்றாம் வகுப்பு வரை பின்பற்றப்படுவதாகும். இரண்டாம் நிலை படிப் படியாக மேல் வகுப்புகளில் பின்பற்றப்படும்.

- **எழுதுவதற்கு முன்னேற்பாடான வேலைகள்**

பேச்சிலும் படிப்பிலும் ஓரளவு திறன் கைவரப் பெற்ற பின்னரே எழுத்துகள் எழுதுவதைக் கற்பிக்க வேண்டும். சுருங்கக் கூறினால் எழுதத் தொடங்குவதற்கு ஒரு பக்குவம். ஒரு வகை முதிர்ச்சிப் பருவம் அதாவது ஆயத்தம் தேவைப்படுகிறது.

**எடுத்துக்காட்டாக,** எழுத்துகளில் உள்ள நுட்பமான வேறுபாடுகளை அறிந்து எழுத வேண்டியிருக்கிறது. (மு, மு, ஒ, ஓ, க, ச, த, ந) சிறிய எழுத்துகளை எழுதக் குழந்தைகளின் கைவிரல்களின் நுண்ணிய தசைநார்கள் போதிய வலிமை இணைந்து இயங்கும் திறனும் பெற்றிருத்தல் வேண்டும். மணிக்கட்டிலுள்ள தசை நார்களும் வலிமை அடைந்திருத்தல் வேண்டும். கண்களும் மேற்கூறிய நுண்ணிய வேறுபாடுகளை அறிந்துணர வல்லவையாயிருத்தல் வேண்டும். ஆகவே, எழுதக் கற்பதற்குரிய ஆயத்த நிலையை அடைந்த பின்னரே, குழந்தைகளுக்கு எழுத கற்பிக்கத் தொடங்க வேண்டுமெனக் கல்வி மனவியல் கூறுகிறது. ஆகவே, மேற்கூறிய தசைநார்கள், வலிமையறவும், வெவ்வேறு உறுப்புகள் இணைந்து செயலாற்றவும் பயிற்சி தருவது எழுத்துக்குரிய ஆயத்தத்தின் முதற்படியாகும். அதற்குக் கீழ்க்கண்டமுன் பயிற்சிகள் துணை புரியும்.

**நல்ல கையெழுத்தின் நல்லியல்புகள்**

ஒருவர் எழுதுவதைப் பிறர் படிப்பதற்காகவேண எழுத்து எழுதப்படுகின்றது. அந்நிலையில் எழுத்து தெளிவாக இல்லையெனில் பிறர் படிக்க முடியாதன்றோ! எழுத்து தெளிவாக அமையக் கீழ்கண்டவற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

1. **தெளிவு**

எழுத்துகளைத் தனித்தனியாக எழுதுதல் வேண்டும் சங்கிலி போன்று ஒன்றோடொன்று சேர்த்து எழுதினால் தெளிவில்லாமல் போகலாம் சிலர் இரண்டு எழுத்துகளைச்சேர்த்து கூட்டெழுத்தாக எழுதுவர். அவ்வாறு எழுதுவதும் தவறாகும்.

எழுத்தின் வளைவுகளைத் தெளிவாகக் குறித்தல்வேண்டும். ஷமு’ என்பதற்கம் ஷழு’ என்பதற்கும் தெளிவாக வேறுபாடு காட்டும் வகையில் எழுத்து அமையாவிடில் தெளிவிருக்காது.



Downloaded From www.nagaicollege.com

ஒவ்வோர் எழுத்தின் வளைவு, சுழிவு, மேற்கோடு ஆகியவற்றை நன்கு கவனித்து எழுத்தின் சீரான அமைப்பில் எழுதுதல் வேண்டும்.

எழுத்துகளின் முனை அறியாமல் எழுதுதல் வேண்டும். அப்பொழுதுதான் தெளிவாகப் படிக்க முடியும். அதற்காக அச்செழுத்துப் பார்த்து எழுதச் செய்தலே நல்ல பயிற்சியாகும்.

2. **அளவும் அழகும்**

எழுத்துகள் ஒரே அளவினவாக இருந்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஒரு வரியில் சில எழுத்துகள் பெரியனவாகவும், சில எழுத்துகள் சிறியனவாகவும் அமைதல் கூடாது. ஆனால், தொடக்கத்தில் குழந்தைகள் பெரிய எழுத்துகளாக எழுதத் தொடங்குவர். ஆனால், இரண்டு கோடுகளுக்குள் எழுதும் பயிற்சி அளிக்கும்பொழுது ஒரே அளவினவாக எழுத்துகள் அமையும்.

ஷவேண்டாத சுருள்களைச் சேர்த்து எழுதுதலும், மேல்விலங்கு, கீழ் விலங்கு, கொம்புளை ஒரே விதமாக எழுதாமையும் அழகைக் கெடுப்பனவாம். சிலர் புள்ளிகளைச் சிறு வட்டங்களாக எழுதுவதுண்டு. அதனாலும் அழகு கெடும். எழுத்துகளை நேராக அச்செழுத்துகளைப் போன்று எழுதுவதே சிறந்தது. சிலர் சாய்த்து எழுத விரும்புவர். அவ்வாறு சாய்த்து எழுதும்பொழுது ஒரு சிறிது வலப்பக்கம் சாய்த்து எழுதலாமே தவிர இடப்பக்கம் சாய்த்து எழுதுதல் கூடாது. கோடுகளை நேராக எழுதாமல் சிலர் வளைத்து எழுத்துகளைக் குண்டு குண்டாக எழுதுதலும் உண்டு. இதுவம் ஓரளவு அழகாயிருக்கும்.

3. **இடைவெளி**

எழுத்துகளைச் சேர்த்து எழுதாமல் அடுத்தடுத்துத் தனியாகவும், ஒரு சொல்லுக்கும் அடுத்து சொல்லுக்கும் இடையே ஒரே அளவாகச் சிறிது இடைவெளி விட்டும் எழுதுதல் வேண்டும். 4) **விரைவு**

எழுத்துகள் தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டுமென்பதற்காக மிக மெதுவாக எழுதுதல் கூடாது. தெளிவுடன் விரைவாகவும் எழுகப் பயிற்றுதல் வேண்டும். விரைவுக்காகத் தெளிவினைப் பறி கொடுத்தல் கூடாது.

**எழுத்துப் பயிற்சி முறைகள்**

மாணவர்கள் எழுத்துகளை எழுதக் கற்றுக் கொண்ட பின்பு தொடர்ச்சியாகச் சொற்களையும் சொற்றொடர்களையும் எழுதப் பயிற்சியளித்தல் வேண்டும். அப்பயிற்சி தர வரியொற்றி எழுதுதல், பார்த்து எழுதுதல், சொல்வது எழுதுதல் அல்லது கேட்டு எழுதுதல் போன்ற முறைகளைப் பின்பற்றிக் குழந்தைகள் தாமே எழுதப் பயிற்சியளிக்கலாம்.

1) **வரியொற்றி எழுதுதல்**

கையெழுத்து சிறந்ததாக இருப்பதற்கு, வரியொற்றி எழுதுதல் நல்ல பயிற்சியாகும் தொடக்க நிலை வகுப்புகளில் நான்கு வரிகளில் எழுதச் செய்யலாம். மேல் விலங்கு கீழ் விலங்கு ஆகியவற்றை எவ்வளவு தூரம் நீட்ட வேண்டுமென்றும், எழுத்தின் அளவ எவ்வளவு இருக்க வேண்டுமென்றும் மாணவர் அறிய இது வழி வகுக்கின்றது முதல் இரண்டு வரிகளில் எழுத்துகளைப் புள்ளியிட்டுக் காட்டி அப்புள்ளிகளின் மேலும் எழுதச் செய்யலாம் நான்கு வரிகளில் எழுதிப் பழகிய பின்பு, இரண்டு வரிகளுக்கிடையே எழுதச் செய்தல் வேண்டும். நாளாக நாளாக எழுத்துகளைச் சிறியனவாகவும், ஒரு வரியிலும் எழுதப் பழக்கலாம்.


Downloaded From www.nagaicollege.com

2) **பார்த்து எழுதுதல்**

பாடப் புத்தகத்தில் உள்ள பகுதிகளைப் பார்த்து நாள்தோறும் குறிப்பேட்டில் எழுதி வரச் செய்தலே பார்த்து எழுதுதலாகும். ஆசிரியர் கரும்பலகையில் எழுதுவதைப் பார்த்துக் கரும்பலகையில் அல்லது குறிப்பேட்டில் எழுதுதலும் பார்த்து எழுதுதல் பயிற்சியே. நாள்தோறும் பார்த்து எழுதிவரச் செய்தல் கையெழுத்து திருந்துவதற்கு நல்ல பயிற்சியாகும். பார்த்து எழுதும் பயிற்சியால் வேறு பல நன்மைகளும் உள்ளன.

- ❖ 1.வேகமாய் எழுதுவதற்கு நல்ல பயிற்சியளிக்கின்றது.
- ❖ 2.மாணவர்கள் சொற்களைப் பார்த்து வரிசையை உணரவும், தெளிவாய் உள்ளத்தமைக்கவும் வழி வகுக்கின்றது.
- ❖ 3.அருமையான சொற்றொடர்கள், மரபுச் தொடர்கள் ஆகியவற்றை எழுதிப் பழக உதவுகின்றது.
- ❖ 4.கவனக் குறைவுள்ள மாணவர்கள் பிழைபட எழுதுவார்கள். அவர்களைக் கண்டு கவனக்குறைவைத் திருத்த வாய்ப்பு கிடைக்கின்றது.

3. **சொல்வதெழுதுதல்**

வகுப்பில் ஆசிரியர் சொற்களையோ தொடர்களையோ கூற அவற்றைக் கேட்டு மாணவர் எழுதுதலே சொல்வதெழுதுதல் பயிற்சியாகும்.

- ❖ இவ்வாறு எழுதச் செய்வதால் மாணவர்கள் எழுத்துகளின் ஒலியை நன்கு கேட்டுப் பிழையின்றி எழுதுகின்றனரா என அறியலாம்.
- ❖ கையெழுத்தின் விரைவினை வளர்க்க இது சிறந்த வழியாகும்.
- ❖ நினைவாற்றல், கவனிக்கும் ஆற்றல்ம போன்றவற்றை வளர்க்க உதவுகின்றது.
- ❖ மாணவர் வேறெதெனைப் பற்றியும் எண்ணாமல் ஆசிரியர் சொல்வதையும், பின்பு அதை எழுதுவதையும் பற்றியே நினைப்பதால் அவர்களுடைய ஒருமுகப்படுத்தும் திறன் வளரும்.
- ❖ படிப்பதைவிடக் கேட்டு எழுதும்போது அப்பகுதி நினைவில் பதிய இடமுண்டு.

சொல்வது எழுதுதல் பயிற்சி அளிக்கும்பொழுது ஆசிரியர் சில குறிப்புகளை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

- ❖ தொடக்க நிலைவில் சொற்களை எழுதும் பயிற்சியளித்துப் பின்னரே தொடர்களை எழுதும் பயிற்சி தரல் வேண்டும்.
- ❖ முதலில் வேகம் குறைவாகவும், வரவர விரைவாகவும் படித்து எழுதச் செய்தல் வேண்டும்.
- ❖ பகுதியைப் படிக்கும்பொழுது சொற்களைத் திரும்படத் திரும்பக் கூறுதல் கூடாது. பொருள் விளங்குமிடத்தில் நிறுத்திக் கூறும்பொழுது ஒவ்வொரு பகுதியையும் இருமுறை கூறலாம்.



Downloaded From www.nagaicollege.com

- ❖ அவ்வாறு பொருள் உணரும் பகுதியாகப் படிக்கும் பொழுது மாணவர் பகுதி முழுமையையும் கேட்ட பின்னரே எழுதுதல் வேண்டுமெனக் கூறி, அவ்வாறே எழுதப் பயிற்சியளித்தல் வேண்டும்.

- **தசைப்பயிற்சி**

குழந்தைகள் பள்ளிக்கு வருமுன்னரே கை விரல், மணிக்கட்டு ஆகியவை ஓரளவிற்குத் தசைப்பயிற்சிப் பெற்றிருக்கும். இந்தப் பயிற்சிகள் மூலம் தசைநார்கள் வலுவடைவதுடன் கோடு, அதன் நீளம் வட்டம், அதன் எல்லைக்கோடு ஆகியவை அறிமுகப் படுத்தப் பெறுகின்றன.

- ஆள் காட்டிவிரல், குச்சி

அடுத்து, தரையில் மணலைப் பரப்பி அதில் குழந்தைகளைத் தம் விருப்பம்போல் தத்தம் வலக்கை ஆள்காட்டி விரலால் கிறுக்கச் செய்யலாம். பேச்சில் முதல் நிலை மழலையைப் போன்று, எழுதுவதில் முதல்நிலை கிறுக்குவதாகும். மணலும் நீரும் குழந்தைகளுக்கு மிக விருப்பம். தவிர ஆள்காட்டி விரலிலுள்ள தசைநார்களுக்குப் பயிற்சி கிட்டுகிறது. மணலில் கிறுக்கப்படும். கோடுகள் குழந்தைகளுக்கு முற்றிலும் புலனாகாமலிருக்கலாம் அதனால் கெடுதலில்லை. இவ்வாறு வலக்கை ஆள்காட்டி விரல், முதல் எழுது கருவியாகிறது.

- **கரும்பலகை**

அடுத்து, தாழ்ந்த கரும்பலகையில் சாக்குத் துண்டின் உதவியினால், கைகளைத் தாராளமாக வீசி வளைவுகள், சுழிகள், கோடுகள் முதலியன வரைந்து பழகச் செய்யலாம்.

- **எளிய படங்கள் வரைதல்**

கோடுகளை ஓரளவு சரியாக வரைய கற்ற பின்னர் சதுரம், வட்டம், ஆகியவற்றை எழுதப் பழக்கலாம். அதன் பின்னர் அவற்றின் உதவியினால் பொருள்களின் உருவங்களுள் எளியவற்றைக் கற்பிக்கலாம். எ.டு. பரங்கிக்காய், மாங்காய், ஆரஞ்சு, ஏணி.

- **வெட்டி ஒட்டுதல்**

ஓர் அட்டையில் பல உருவங்களை வெட்டி எடுத்துவிட்டு அந்த அட்டையை ஒரு தாளின் மேல் வைத்து ஒரு பென்சிலால் - குறிப்பாக வண்ணப் பென்சிலால் - எல்லைக் கோட்டைச் சுற்றிலும் வரைந்து உருவத்தை உண்டாக்க வேண்டும். அதன் பின்னர் அந்த உருவங்களைத் தனித்தனியே வெட்டித் தேவைப்படின் வண்ணங்கொடுத்து வேறு வெள்ளைத் தாளில் ஒட்டி வைக்கலாம

- **உப்புத்தாள், பட்டு, மணல்**

எழுத்துகளின் வடிவங்களை உப்புத்தாளில் வெட்டி அவற்றை முறையாய்த் தொடக்கம், மத்தி, முடிவுகளைத் தடவிப் பார்க்கச் செய்தல் நல்ல பயிற்சி. இதே போன்று மென்மையும் வழுவழுப்புமுள்ள துணிகளில் எழுத்துகளை எழுதி வெட்டி ஒட்டித் தடவிப் பார்க்கச் செய்தல் நன்று. இவை பட்டி தொட்டிகளுக்கு ஒத்து வராது. மணலில் எழுத்துகளை எழுதி புளியும் விதைகளை அல்லது வேறு கொட்டைகளை முறையாய் அடுக்கி வைப்பது நடைமுறைக்கு ஒத்து வருவதாகும். விதைகளுக்குப் பதில் சிறுசிறு குச்சிகளையும் பயன்படுத்தலாம். இப்பயிற்சி மூலம் எழுத்துக்களின் தொடக்கம், வளர்ச்சி, முடிவு ஆகியவை நன்கு புலனாகிறது.


Downloaded From www.nagaicollege.com

**பிழையின்றி எழுதப் பயிற்சியளித்தல்**

மொழியின் அடிப்படைத் திறன்களில் பேசுதலும், எழுதுதலும் வெளியிடும் திறன்களாம். எழுதுங்கால் ஏற்படும் பிழைகள் குறித்து அறிந்து கொள்வோம்.

பேசுங்கால் கொச்சையாகப் பேசினாலும், சிறு தவறுகள் ஏற்படும்படி பேசினாலும் அவை நிலையாக இருப்பதில்லை. மேலும், அவற்றைத் திருத்திக் கொள்ளலாம். ஆனால், எழுத்து நிலையாக அமைகிறது. எனவே, பிழையில்லாது எழுதுதல் வேண்டும். ஆங்கில உரைநடையாசிரியர் பேகன் என்பாரது ஷஎழுதுதல் ஒருவனைச் செம்மையுடையவனாக்குறிது' என்னும் கூற்றும் இதனையே சிறப்பித்துக் கூறுகிறது. எழுதுங்கால் ஏற்படும் பிழைகளையும், அவற்றைத் திருத்தும் முறைகளையும் தெரிந்து கொள்வோம். எனவே, பிழைகள் ஏன் ஏற்படுகின்றனவென்றும் எவ்வகையான பிழைகள் ஏற்படுகின்றனவென்றும் அவற்றைத் திருத்தும் முறைகள் யாவையென்றும் அறிந்து கொள்வோம்.

**பிழைக்குரிய காரணங்கள்**

**அ. தவறானவற்றைக் கேட்டல்**

மாணவர்கள் தங்கள் வீட்டுச் சூழ்நிலையில் வாழுகின்ற பொழுது பிறர் பேசுவதைக் கேட்டுத் தங்கள் மொழித்திறனை வளர்த்துக் கொள்ளுகின்றனர் என்று நாம் அறிவோம். அப்பொழுதெல்லாம் அவர்கள் திருத்தமான சொற்களைக் கேட்டிருப்பார்கள் என்று சொல்வற்திற்கில்லை.

**ஆ. தவறாக ஒலித்தல்**

மாணவர் சில சொற்களை ஒலிக்கும்பொழுது தவறாக ஒலிப்பதால் அவ்வாறே எழுதவும் தொடங்குகின்றனர்.

கீழே உள்ளனவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

| தவறாக ஒலித்தல் | சரியான சொல் |
|---|---|
| வாளைப்பளம் | வாழைப்பழம் |
| தாளம் பூ | தாழம்பூ |
| வனக்கம் | வணக்கம் |
| கனை எய்தான் | கணை எய்தான் |

**இ. திருத்தமான சொல் அறியாமை**

சொற்களைச் சிதைத்துக்கொச்சையாகப் பேசுவதாலும், சொற்களின் திருத்தமான ஒலியினை அறியாது பேசுவதாலும் பிழைகள் ஏற்படுகின்றன. ஷபேசிக் கொண்டிரு' என்பதைப் ஷபேசிண்டிரு' ஷபேசிக்கினேயிரு' எனக் கொச்சையாகப் பேசுவார் சிலர். இது சொற்களைச் சிதைத்துப் பேசுவதால் வரும் பிழையாகும். ஷதாழ்வாரம்ஷ என்பதைத் ஷதாவாரம்ஷ என்பதும், பாகற்காய் என்பதை பாவக்காய் என்பதும் ஷதலையணை' என்பதைக் தலகாணி என்பதும் திருத்தமான சொற்களை அறியாததால் வருவனவாம்.


Downloaded From www.nagaicollege.com

ஈ. **பொருள் வேறுபாடு அறியாமை**

சில சொற்களில் ர, ற, ல, ள, ழ ஆகிய எழுத்துகளை அமைத்து எழுதும்பொழுது பொருள் வேறுபாடு அறியாமையால் மாணவர் பிழைபட எழுதுதல் கூடும். எழுத்து மாறினால் பொருள் வேறுபடும் ஒரு சில சொற்கள் எடுத்துக்காட்டாக இங்குத் தரப் படுகின்றன.

| | |
|---|---|
| கனை - நெருக்கம், ஒலி | கணை - அம்பு |
| களை - நீக்கு | கழை - மூங்கில் |
| கரை - அழை, கரைத்து விடு | கறை - களங்கம் |
| செரு - போர் | செறு - வயல் |

உ. **இலக்கண அறிவின்மை**

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், தொடரிலக்கணம் ஆகியவற்றை நன்கறியாமையால் பல பிழைகள் ஏற்படலாம். இவ்வகையானவற்றை அடுத்துச் சில பிழைகள் என்னும் பகுதிகள் அங்கங்கே குறிப்பிட்டுக் காட்டியிருப்பதைக் காண்க.

**பிழைகளைக் களையும் வழிமுறைகள்**

1) **ஆசிரியர் பேச்சு**

ஆசிரியருடைய பேச்சு எடுத்துக்காட்டானதாக அமைதல் வேண்டும். அவருடைய பேச்சில் பிழைகளிருப்பின் மாணவர் அப்பிழைகளைப் பின்பற்றுதல் கூடும். எனவே, ஆசிரியர் திருத்தமான சொற்களையே பேசினால் பெரும்பான்மையான பிழைகள் ஏற்படாமல் தடுக்கலாம்.

2) **பொதுப் பிழைகளைத் தொகுத்து விளக்குதல்**

மாணவரிடம் பொதுவாகக் காணப்படும் பிழையான சொற்களையும், சொற்றொடர்களையும் தொகுத்து பிழைகளை நீக்கி எழுதிப் பலரும் காணும் இடத்தில் வைக்கலாம். இவ்வட்டைகளைக் காணுந்தோறும் மாணவர் பிழைகளையறிந்து அவற்றை நீக்க முயல்வர்.

3) **தனியே அழைத்துக் கூறுதல்**

சில மாணவரிடம் சிறப்பாகச் சில பிழைகள் காணப்படுமாயின், அவர்களை அழைத்து அன்பாகக் கூறித் திருத்தலாம். அவ்வாறு பிழைகள் ஏன் ஏற்படுகின்றன என்பதனையும் அவர்களோடு பேசுங்கால் அறிந்துத அக்காரணத்தை நீக்கலாம்.

4) **பன்முறை எழுதுதல்**

மாணவர் எழுத்துக்கூட்டலில் கண்ணால் பார்த்தல், காதால் கேட்டல், கைவிரல்களையும் தசைகளையும் இயக்கி எழுதுதல் பயிற்சியைப் பன்முறையளித்து ஒவ்வொரு சொல்லையும் சரியாக எழுதச் செய்வதே பன்முறை எழுதுதலின் நோக்கமாகும். எனவே, ஷபயிற்' என்னும் சொல்லைப் பன்முறை எழுதச் செய்வதாயின்சொல் முழுமையையும் எழுதச் செய்தல் வேண்டும். ப, ப, ப என ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதிய பின்பு ஒவ்வோர் எழுத்தையும் அவ்வாறே சில மாணவர் எழுதுவர். இம்முறை தவறானதாகும். ஒரு சொல்லை மூன்று முறை அல்லது ஐந்து முறை எழுதச் செய்யலாம். திருத்தி எழுதியுள்ள ஒவ்வொரு சொல்லையும் ஆசிரியர் பார்த்துத் திருத்துதல் வேண்டும். இல்லைமேல் மாணவர் முதலில் சரியாக எழுதத் தொடங்கி, வர வரப் பிழைபட எழுதிவிடுதல் கூடும்.


Downloaded From www.nagaicollege.com

### 5) திருந்திய சொற்கள் எழுதிய அட்டைகள்

வட்டாரத்திலுள்ள கொச்சைச் சொற்களையும், வழூஉச் சொற்களையும் திரட்டி அவற்றின் திருந்திய வடிவத்தையும் எதிரே எழுதிப் பல அட்டைகள் தயாரித்து வகுப்பில் தொங்க விடலாம். மாணவர் அவற்றைப் பார்த்துத் திருந்திய சொல் வடிவம் அறிந்து பிழைகளைத் தவிர்த்தல் கூடும்.

### 6) இலக்கண விதிகள்

வல்லின மிகும் இடங்கள் மிகா இடங்கள் ஆகியவற்றைப் பற்றி, மாணவர்களுக்கு விளக்கிக் கூறலாம். இவ்விதிகளைத் தனி அட்டைகளில் எழுதியும் வகுப்பறையில் தொங்க விடலாம். அடிக்கடி அவற்றைப் பார்த்துப் படிப்பதன் மூலமும் மாணவர் பிழைகளைத் தவிர்த்தல் கூடும்.

மேற்கண்டவாறு பிழைகளை நீக்குவதோடு பார்த்தெழுதுதல் சொல்வது எழுதுதல் பயிற்சிகள் மூலமாகவும் எழுத்துப் பிழைகளை நீக்கலாம். நாள்தோறும் ஒரு பக்கம் எழுதி வரச் செய்யலாம். கூர்ந்து நோக்குதல் கேட்டல் எழுதுதல் ஆகியவை எழுத்திப் பிழைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு பெரிதும் உதவுவனவாம். கட்டுரையிலோ, பயிற்சியிலோ, பிழைகள் மிகுதியுமிருப்பின் கட்டுரையை, பயிற்சியை மீண்டும் முழுமையும் எழுதச் செய்தலே நன்று. மாணவர் எழுதியவற்றை ஆசிரியர் படிக்காமலே கையெழுத்திடுதல் கூடாது. திருத்தியெழுதிய பகுதியை மீண்டும் பார்த்துக் கையெழுத்திடுதல் வேண்டும். இம்முறைகளை மேற்கொள்ளுவதன் மூலம் மாணவர் எழுத்தில் ஏற்படும் பிழைகளை ஒருவாறு நீக்கலாம்.

### 7.புதியன படைத்து எழுதுதல்

மாணவர் பிழையில்லாமலும் முறையாகவும் எழுதுவதற்குக் கட்டுரைப் பயிற்சிகள் மொழிப் பயிற்சிகள் முதலியவற்றைப் பயன்படுத்தலாம். அத்துடன் அமையாது அவர்களது படைப்பாற்றலுக்கும் நாம் வழிவகுக்க வேண்டும். தாய் மொழியில் தான் படைப்பாற்றலை எளிதில் வளர்க்க முடியும். நாளிதழ்களிலும், பருவ வெளியிடுகளிலும் வெளிவரும் புதிய இலக்கிய வகைகளையும் கவிதைகளையும் படிக்கும் மாணவர்க்கு அவற்றைப் போல் தாமும் படைக்க வேண்டும் என்னும் ஆர்வம் எழுதல் இயல்பு, மொழியாசிரியர் தக்க வழி காட்டினால் மாணவரிடம் சிறு கட்டுரைகள், சிறு கதைகள், சிறு நாடகங்கள் சிறு கவிதைகள், முதலிய வடிவங்களில் தாமாகவே எழுதும் ஆற்றலை வளர்த்து விட முடியும்.

பாதிக்கதை கூறி முற்றுவிக்கச் செய்தல், நிகழ்ச்சிகள் கூறி அவற்றைப் பற்றிக் கதை எழுதச் செய்தல், எதுகையமைந்த தொடர்கள், மோனையமைந்த தொடர்கள் கொடுத்து அவற்றிற்கு இயையத் தொடர்கள் எழுதச் செய்தல், கற்பனை நிறைந்த பாடல்களைப் படித்துக் காட்டி அவை போன்ற சிறு பாடல்கள் எழுதச் செய்தல் - போன்ற புதுப்படைப்புகளில் மாணவரை ஈடுபடுத்தலாம். இவ்வாறு அவர் தம் படைப்புகளை வெளியிட்டு அவர்களை ஊக்கப்படுத்துவதற்குப் பள்ளி மலர்களைப் பயன்படுத்தலாம்.

### எழுதுதல் திறனை மதிப்பிடல்

- .சிறிய சொற்களின் எழுத்துக் கூட்டலை நன்கறிய உதவுகின்றது.
- .நிறுத்தற்குறிகளோடு எழுதிப் பழகுவதால் ஏற்ற இடங்களில் நிறுத்தற்குறியிட்டு எழுதும் பயிற்சி கிடைக்கும்.
- எழுதும்பொழுது சொல்லிக்கொண்டே எழுதச் செய்வதால் மாணவர்களுக்கு மொழிப் பயிற்சியும் கிடைக்கிறது.


Downloaded From www.nagaicollege.com

- ❖ எழுதுவதற்குரிய பகுதி முழுமையும் சொல்லி முடித்த பிறகு, மீண்டும் ஒரு முறை ஆசிரியர் படிக்க, மாணவர் அப்பகுதியை பார்த்தல் வேண்டும்.
- ❖ மாணவர் எழுதியவற்றை உடனே திருத்திப் பொதுப் பிழைகளைச் சுட்டிக் காட்ட வேண்டும்.
- ❖ சொல்வதெழுதுதல் பயிற்சிக்குப் பலவிதமான வரிவடிவங்களும் அமைந்த சொற்கள் அடங்கிய, சிறந்த பாடப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**முடிவுரை**

இவ்வலகு வாயிலாக மேற்கூறப்பட்டவாறு கேட்டல்,பேசுதல்,படித்தல்,எழுதுதல் ஆகிய திறன்களைத் தகவல் பரிமாற்ற ஊடகமாக மட்டுமின்றித் தகவல்களுக்குத் தோற்றுவாயாக அமையும் எண்ணங்களை உருவாக்குவதற்கும், உருவாக்கியதைத் தம்முள்ளும் பிறருள்ளும் பதிப்பதற்கும் மொழி பயனுடையதாகத் திகழ்வதை உணரமுடிகிறது.

**பயிற்சி வினாக்கள்**

1. படிக்க பயிற்றும் முறைகள் குறித்து எழுதுக?

2.அடிப்படை மொழித்திறன்கள் பற்றி எழுதுக?

3. நல்ல கையெழுத்தின் நல்லியல்புகள் யாவை?

4. அலைபேசி வழியாக உரையாடுவதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்**


- **இரத்தினசபாபதி.பி ரூ விஜயா.கு** (2016) *தமிழ் கற்பித்தல் முறைகள்-1.* *சென்னை: சாந்தா* வெளியீடு.
- **கோகிலா தங்கசாமி** (2016),*தமிழ்மொழி, குழந்தைகள் , ஆசிரியர்கள்.* *சென்னை:* பாவை பதிப்பகம்.
- **வஜ்ரவேலு. சு** (2009), *அருந்தமிழ் கற்பிக்கும் முறைகள்,* சென்னை: அம்சா பதிப்பகம்.

**வீரப்பன்.பா. (2000).**உயர்நிலைத் தமிழ் கற்பித்தல் ஆசிரியர் கையேடு. மைசூர்:தேசிய ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்.(ஹேஊநுசுவு).




Downloaded From
www.nagaicollege.com

# அலகு—5 கற்பிக்கும் முறைகள்

## நோக்கங்கள்

இப்பாடம் கற்றப்பின்பு மாணவ ஆசிரியர்,

- ஆசிரியர் மையக் கற்பித்தலைக் கூறுவர்.
- மாணவர் மையக் கற்றலை எடுத்துக்கூறுவர்.
- தொழில் நுட்பத்தின் பங்களிப்பை வெளிப்படுத்துவர்.
- கற்பித்தல் துணைக்கருவிகளின் பயனை எடுத்துக்கூறுவர்.

## முன்னுரை

கற்பித்தல் என்பது ஒரு தொடர் சமூகச் செயல்பாடாகும். தொழில் தகுதி பெற்ற ஆசிரியர்களால் கற்பித்தல் மேற்கொள்ளப்படுகிறது. பண்டைய காலத்தில் பயிற்று முறைகள் தமிழ் நூல்களிலிருந்தும் இலக்கண நூற்பாக்கள் வாயிலாகவும் உரையாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டிய நூற்பாக்கள் வாயிலாகவும் கல்வி கற்பித்தனர். மனனம் செய்யும் முறைகளே பின்பற்றப்பட்டது. தற்காலத்தில் கற்பித்தல் முறை குழந்தைகளை மையமாகக் கொண்டு கற்பிக்கப்படுகிறது.இன்று கற்பித்தலில் தகவல் தொடர்பு ஊடகங்கள் பெரும் பங்குவகிக்கிறது

## ஆசிரியர் மையக் கற்பித்தல்

தமிழ் மொழியைக் கற்க ஆசிரியர்களின் துணையை நாடி கல்வி கற்றனர். பின் நாளில் அறிவியலின் உத்தியையும் சேர்த்து கல்வியினைக் கற்றுக் கொள்கின்றனர். பல்வேறு சூழ்நிலையின் காலப் போக்கிற்கு ஏற்ப உத்திகளைக் கையாளுகின்றனர் என்பது குறித்து இப்பாடப்பகுதி அமைகிறது.

பண்டைய நூல்களிலிருந்து

''கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக''

''கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே''.

''உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே....''

போன்ற பாடல்களின் மூலம் கல்வி கற்கப்பட்டுள்ளதைச் சான்றாதாரங்களின் வழியே அறிந்து கொள்ள முடிகிறது. அக்காலத்தில் எண்ணிக்கையில் மிகக் குறைந்த அளவில் பள்ளிகள் இருப்பினும் ஆசிரியர்களை நாடியே மாணவர்கள் கல்வியினை கற்றுக் கொண்டனர்.

இன்றுள்ள விஞ்ஞானம் போல் அன்றில்லாததால் அனைத்தும் ஏட்டுச் சுவடிகளாக இருந்தன. கணிப்பொறியின் வளர்ச்சியால் இதழ்கள், செய்தித்தாள்கள், கருத்துப் பரிமாற்ற



Downloaded From www.nagaicollege.com

முறைகள் வேகமாக வளர்ந்து வருவதால் கற்பித்தலானது எளிமையாக அமைகிறது. இக்காலத்தில் அச்சிடப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்கள் வெளிவந்து கொண்டே இருப்பதால் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது என்கின்றனர். அக்காலத்தில் ஏட்டுச் சுவடியில் எழுதப்பட்ட கல்வி மற்றும் வேதகால கல்வி முறையை ஒருவர் வாசிக்க மற்ற அனைவரும் செவிமடித்து கேட்கும் நிலை மாறி இன்று அவரவர் தனக்கென்று புத்தகங்களை வைத்து ஆசிரியர் உதவியுடன் கற்றுக் கொண்டு வருகின்றனர். இருப்பினும் அன்றைய பாடங்களை மாணவர்களுக்குத் தெளிவு படுத்தியும், புதிய புதிய செய்திகளையும், உத்திகளையும் கையாண்டு வருகின்றனர். அந்தணர் மற்றும் அரச குடும்பத்துப் பிள்ளைகள் மட்டுமே போதித்த கல்வியானது இன்று அனைவருக்கும் கல்வி என்ற திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மாணாக்கரின் நலன் கருதி எண்ணங்களைப் புரிந்து கற்றலைச் செம்மையுடன் செய்து வருகின்றனர்.

**விரிவுரை முறை**

விரிவுரை முறையில் ஆசிரியர் பாடப் பொருள் குறித்துத் தொடர்ச்சியாக உரை நிகழ்த்துவதே விரிவுரை முறை ஆகும். மாணவர்கள் வகுப்பறையில் அமைதியாக ஷதெள்ளிய நீரோட்டம்' போன்ற விரிவுரைக் குறிப்புகளை தங்கு தடையின்றி எவ்வித இடையூறு இல்லாமல் கவனிப்பதோடு முக்கிய விபரங்களை குறிப்பெடுத்துக் கொள்கின்றனர்.

விரிவுரை முறையில் ஆசிரியரின் பங்கு அதிகமாக காணப்பட்டது. ஆசிரியர் மட்டுமே கற்றல்-கற்பித்தல் பணியை தொடர்வதாக அமைகின்றது. உயர்நிலை கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமே இந்த முறை ஏற்புடையதாக உள்ளது.

தமிழ் இலக்கண நூல் நன்னூல் இம்முறையைக் கற்பிக்க கீழ்க்காணும் தகவலைக் கொடுக்கிறது.

“சுருங்கச் சொல்லல”

விளங்க வைத்தல்

நவின்றோர்க்கு இனிமை

நன்மொழிப் புணர்தல்.........(நன்னூல் நூற்பா)

**ஆசிரியரணிக் கற்பித்தல்**

ஆசிரியரணிக் கற்பித்தல் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஒன்றுகூடி, இரண்டுக்கு மேற்பட்ட வகுப்புகளை ஒன்றிணைத்து, வகுப்பிற்கான ஒரு பாடத்தை அல்லது தலைப்பைத் தங்களது தனி ஆர்வங்கள் அல்லது சிறப்பான அறிவுத் திறமைகளின் அடிப்படையில் கற்பித்தல் செயல்களைப் பகிர்ந்து கொண் ஒதுக்கப்பட்ட கால அளவிற்குள் கற்பித்தலை நிறைவு செய்வதாகும்.

ஆசிரியரணிக்கற்பித்தல் என்பது ஒரே ஒரு ஆசிரியருக்குப் பதிலாக ஒரு சில ஆசிரியர்கள் கூட்டுறவு முறையில் கற்பித்தல் ஆகும்.

1. **ஆசிரியர் அணிக்கற்பித்தலின் இன்றியமையாநான்கு கூறுகள்**
   1. நேர மேலாண்மை
   2. சாமார்த்தியம்
   3. பொறுமை



Downloaded From www.nagaicollege.com

4. நெகிழ்ச்சியுடைமை

**2. ஆசிரியர் அணிக் கற்பித்தலின் வகைகள்**

1. பகிர்தல்
2. கூட்டுறவு முறையால் கற்பித்தல்
3. இணைந்து கற்பித்தல்

**1. பகிர்தல்**

ஒரே பாடத்துறையில் உள்ள பல ஆசிரியர்கள் ஒரு அலகைக் கூட்டுறவு முறையில் பகிர்ந்து கொண்டு நடத்தல்.

(எ.கா) தமிழ்ப்பாடத்துறையைச் சேர்ந்த ஆசிரியர்களில் ஒருவர் உரைநடைப் பகுதியையும் மற்றொருவர் செய்யுள் பகுதியையும் பிறிதொருவர் இலக்ககணப் பகுதியையும் நடத்துதல் ஆகும்.

**2. கூட்டுறவு முறையில் கற்பித்தல்**

தொடர்புடைய துறைகளின் ஆசிரியர்கள் இணைந்து ஒரு அலகைக் கூட்டுறவு முறையில் நடத்துதல்.

(எ.கா) கண்ணின் அமைப்பும், பார்வைக் குறைபாடும் என்ற தலைப்பில் இயற்பியல் வேதியியல் உயிரியல் ஓவிய ஆசிரியர் ஆகியோர் கூட்டாக இணைந்து செம்மையாக கற்பித்தல்.

**3. இணைந்து கற்பித்தல்**

ஒரு வகுப்பு அல்லது படிப்புக்கு உரிய பாடத்தில் உள்ள பல்வேறு அலகுகளைத் தொடர்புடைய துறையின் ஆசிரியர்கள் இணைந்து கற்பித்தல்.

(எ.கா) பொருளியல், வரலாறு, புவியியல், வணிகம் ஆகிய துறைகளைச் சார்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து கற்பித்தல்.

**ஆசிரியர் அணிக்கற்பித்தலால் விளையும் நன்மைகள்**

1. ஒரு கல்வி நிலையத்திலுள்ள அனைத்து வளங்களையும் திறம்பட பயன்படுத்திக் கொள்ள முடியும்.
2. அணிக்கற்பித்தல் பாடத்திட்டம், நோக்கங்களுடன் இணைந்தே செல்லும்.

**அணிக்கற்பித்தலில் எதிர்படும் சிக்கல்கள்**

1. ஆசிரியர்களின் பற்றாக்குறையால் வேலைப்பளு அதிகரித்தல்.
2. பாடவேளைகளை அமைப்பது கடினம்.

**பங்கேற்கும் முறைகள்**

பாடங்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து மாணவர்களை உட்படுத்தி பாடங்களை நடத்துவதற்குப் பங்கேற்பு முறை என்று பெயர். மாணவர்களின் மனநிலையை அறிந்து ஆர்வத்துடன் பங்கேற்கும் வகையில் ஆசிரியர் பாடங்களை நடத்துதல் வேண்டும்.

**பகுத்துக் கற்பித்தல்**

ஆசிரியர் வகுப்பறைக்குச் செல்லும் முன் அன்று பயிற்றுவிக்கும் பாடத்தின் எப்பகுதியை நடத்த வேண்டும் என்றும், என்னென்ன பகுதிகள் மற்றும் வழிமுறைகளைப் பின்பற்றப்பட வேண்டும் என்பதனைக்கு குறித்து முன்னதாகவே திட்டமிட்டு பகுத்துக் கற்பித்தல் வேண்டும்.



Downloaded From www.nagaicollege.com

பாடம் தொடங்கும் திறன், இலக்கிய மற்றும் செய்யுளின் எளிய நடை, குறல் ஏற்ற இறக்கம், நடித்தும்-பாடியும் காட்டுதல் இறுதியில் முடிக்கும் திறன் போன்றவற்றை முறையாகப் பகுத்து பாடம் கற்பிக்க வேண்டும்.

**தொகுத்துத் கற்பித்தல்**

ஆசிரியருக்குக் கொடுக்கப்பட்ட பாடவேளை முடிந்ததும் அன்றைய பாடவேளையில் நடத்திய பாடப் பொருள்களை நினைவுப்படுத்தி மாணவர்கள் ஒவ்வொருவரையும் சொல்ல வைத்து அவைகளைத் தொகுத்து நினைவுப்படுத்த வேண்டும். மாணவர்களின் இத்தொடர்ச்சியான செயலானது அவர்தன் முன்னேறிச் செல்ல தொகுத்துக் கற்பிக்கும் முறை அப்பாடத்தின் ஆர்வத்தைக் காட்டுவதாக அமையும். அப்போது தான் ஆசிரியர் என்ன கற்பித்தோம் என்ற நினைவும், மாணவர்கள் என்ன கற்றோம் என்ற நினைவினையும் மனதில் பதியும்.

**மாணவர் மையக் கற்பித்தல்**

மாணவர்களை மையப் படுத்தி அவர்களைக் கற்பித்தல் முறையில் ஈடுபடுத்த மாணவர்களே கற்றலில்ஈடுபடுவர் பாடத்தை மையப்படுத்திக் கற்றல் முறையில் கற்பிக்கப்படுகிறது.

சுயவேகம், சுயதிறன், ஆர்வத்திற்கேற்ப கற்க்கின்றனர்

கற்றல் முழுவதும் மாணவர்  செயல்களாகவே இருக்கும்.

ஆசிரியர் ஒரு வழிக்காட்டியாக மட்டுமே செயல்படுகிறார்.

புதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கற்போரை மையமாகக் கொண்ட உண்மைக் கல்வியானது உளவியல் அடிப்படையில், கல்வியாளர்கள் உலகினுக்கு உணர்த்தினர்.

புலன்களின் வழியே கற்பித்தல் நிகழ வேண்டும். இயற்கைக் கல்வியினை ரூசோ என்ற கல்வியாளர் (1712-1778) ஆம் ஆண்டு குழந்தையை மையமாகக் கொண்டு கற்பிக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார் இவரைத் தொடர்ந்து 1746-1827-ம் ஆண்டு பெஸ்டலாசி என்ற கல்வியாளர் புலன்கள் வழியே கற்பித்தல் வேண்டும். உற்றுநோக்கலை வளர்க்க வேண்டும் என்ற கருத்தினை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து பிளாண்டரின் உற்றுநோக்கலே இன்று கல்வியில் டிபரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

ஹெர்பார்ட் (1776-1841) ஆம் ஆண்டு கற்பித்தலின் படிநிலைகளான மனத்தைப் பண்படுத்தல், எடுத்துக்கூறல், ஒப்பிட்டுக்கூறல், பொதுவிதிகாணல், விதியைப் பயன்படுத்துதல் போன்றவை கற்றல், கற்பித்தல் சூழ்நிலை எவ்வாறு அமைதல் வேண்டும என்பதினைக் கூறியுள்ளனர்.

∴புரோபெல் (1789-1852) ஆம் ஆண்டு "இயற்கையை ஒட்டிக் கல்வி இருத்தல் வேண்டும். பள்ளி என்பது பூங்கா! குழந்தைகள் வளரும் செடிகள்! ஆசிரியர் தோட்டக்காரர்! என்று கல்வியாளர் விளக்கியுள்ளார்."

ஜான்டுயி (1859-1952)-ம் ஆண்டு "கற்றல் செயல்முறைகள் மூலம குழந்தைகள் பிற்கால வாழ்க்கையை கண்டு கொள்ள வேண்டும் என்ற கருத்தினை எடுத்துக்கூறியுள்ளார்.

**சக மாணவர் கற்பித்தல்**



Downloaded From www.nagaicollege.com

பொதுவாகப் பள்ளிகளில் வகுப்பு முறையேவழக்கத்திலிருந்து வருகிறது ஒவ்வொரு வகுப்பிலும் ஏறத்தாழ 50 பிள்ளைகளைச் சேர்த்துஅனைவருக்குமஒரே வகையான கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. வகுப்பில் முதல் நிலை மாணவர், இடைநிலை மாணவர்,கடைநிலை மாணவர்கள் இருப்பர். இவற்றுள் முதல் நிலை மாணவர்கள் நிறை மதியுடையவர்களாகவும்,இடைநிலை மாணவர்கள் குறை மதியுடையவர்களாகவும் கடை நிலை மாணவர்கள் இப்படியும், அப்படியும் இல்லாமல் திண்டாடுவர். இப்படிப்பட்ட மாணவர்களுக்கு பாடப்பொருள் குறித்து விளக்குவது சகமாணவர் கற்பித்தல் எனப்படும். இம்முறையில் மாணாக்கர்கள் தங்கள் விருப்பப்படி விரைவாகவோ மெதுவாகவோகற்கும் படி வாய்ப்புகள் இருக்கின்றன.

**மாணவர் கற்பித்தல்**

மாணவர்களை மையமாகக் கொண்டு கற்பித்தல் நடைபெறுகிறது. ஆசிரியர் மாணவர்களுக்கு எழும் ஐயங்களை தீர்ப்பவராகவும் சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்வர்.

**மாணவர் கற்பித்தலின் அவசியம்**

மாணவர் கற்பித்தலின் இன்றியமையாமைக்கு நான்கு காரணங்கள் உள்ளன.

1. தேர்ச்சி பெறாமை
2. படிக்க வசதிகளின்மை
3. படிக்கும் பழக்கங்கள்
4. சரியான முறையில் வழிகாட்டாமை

**1. தேர்ச்சி பெறாமை**

மாணாக்கர்கள் பள்ளியிலும், கல்லூரியிலும் பயின்று வருகின்றனர் பெரும்பான்மையோர் தேர்ச்சியுறாமல் போகின்றனர். இங்ஙனம் தேர்ச்சியுறாமலிருப்பதற்கும் இடையில் நின்றுபோவதற்கும் மாணாக்கர்களின் மனவளர்ச்சி காரணமன்று என்றும் அவர்களிடம் படிக்கும் நற்பழக்கம் சரிவர அமையாமையே அதற்கு முக்கிய காரணமாகும்.

**2. படிக்க வசதிகளின்மை**

நம்நாடு வறுமையில் ஆழ்ந்துள்ளது. பெரும்பான்மையான மாணாக்கர்கள் ஏழைமை நிலையிலுள்ளனர். நாட்டுப் புறங்களிலிருப்பினும் அவர்கள் தங்கள் வீட்டில் படிக்கின்ற சூழ்நிலையில்லை படிக்க வசதிகளுமில்லை. நல்ல காற்றோட்டமும் வெளிச்சமுள்ள தனி அறைகள் அவர்களுக்கு இல்லை.

செல்வர் வீடுகளில் வசதிகளிருப்பினும் வானொலியின் பேரொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளின் தொல்லை, அடிக்கடி பல அலுவல்கள் குறுக்கிடுதல், வீடுகளில் உள்ளோர் அடிக்கடி படக்காட்சிகள் போன்றவைகட்குச் செல்லுதல் போன்றவை மாணாக்கரின் படிப்புக்குப் பெருந்தடைகளாக விளங்குகின்றன.

**படிக்கும் பழக்கங்கள்**

இன்றைய மாணாக்கர்களிடம் குறித்த காலத்தில் படிக்கும் பழக்கம் இல்லை. சிலர் மனம் போனவாறு ஒரு திட்டமுமின்றிப் படிக்கின்றனர்.

தேர்வுக் காலங்களில் சிலர் தேநீர் பருகி நள்ளிரவு வரை படிப்பதையும் உணவுக்கு முன்னும் உணவுக்குப் பின்னும் படிப்பதையும் சிலர் தூக்கத்திலிருந்து எழுந்து நள்ளிரவில் படித்து அதிகாலையில் தூங்குவதையும் சிலர் படிப்பைத் திடீரென்று நிறுத்திவிட்டு



Downloaded From www.nagaicollege.com

நண்பர்களுடன் படக் காட்சிகளுக்கும், நாடகங்களுக்கும் செல்வதையும் படிக்கும் பொழுது பொற்றோர்கள் வீட்டு அலுவல்களைக் கவனிக்கும்படி கூறுவதையும் நாம் காண்கிறோம்.

**சரியான முறையில் வழிகாட்டாமை**

நம் நாட்டில் பெரும்பாலான குடும்பங்களில் படிப்பில் சரியான முறையில் வழிகாட்டுவதற்குத் தகுந்தவர்கள் இல்லை. பெரும்பாலான பெற்றோர் படித்தவர்களாகவுமில்லை படித்த ஒரு சிலரும் தகுந்த முறையில் மேற்பார்க்கும் தகுதியும் ஆற்றலும் பயிற்சியுமில்லாதவர்களாகவும் உள்ளனர். அதனால், பெரும்பாலான மாணாக்கர்கள் தவறான முறைகளை மேற்கொள்வதற்கும் பயனற்ற முறைகளைக் கையாள்வதற்கும் காலத்தை வீணாக்குவதற்கும் காரணமாகின்றன.

எனவே மாணவர்கள் கற்பித்தல் முறை அவசியமாகிறது. சரியான படிப்பு இல்லாத காரணத்தால் அறிவுள்ள மாணாக்கர்கள் சிலர் தீய போக்குள்ளவர்களாவதைத் தடுத்து நிறுத்த இம்முறை பயன்படுகிறது.

**சிறுகுழுவகுப்பு மாணவர் விவாதித்துக் கற்றல்**

மாணவர்கள் சிறுசிறு குழுவாகப் பிரிந்து கற்க அனுமதிக்க வேண்டும். அப்போது ஒத்த நிலையில் உள்ளவர்கள் ஒன்றுகூடி கற்கும் நிலையில் அவர்களுக்கேற்ற நிலையிலான கற்றலை மேற்கொள்ள வேண்டும்.

இம்முறையில் மாணவர்கள் தாமே விவாதித்து ஐயங்களைத் தெளிதல், சிந்தனைத் திறனை வளர்த்தல் அறிவாண்மை மிக்கவர்களாக விளங்குதல், சொல்வன்மை மிக்கவர்களாக சிறத்தல் போன்ற பல நன்மைகள் ஏற்படும்.

**மாணவர் கருத்தரங்கம்**

மாணவர்கள் தாமே அரங்கம் ஏறி விவாதிப்பதற்காக வகுப்பறைக் கருத்தரங்குகள் நடத்தப் படுகின்றன. அக்கருத்தரங்கத்துக்கென ஒரு தலைப்பினை அளித்து அது தொடர்பாக மாணவர்களை அரங்கேறிப் பேச செய்தல் மாணவர் கருத்தரங்கம் எனப்படும்.

**நோக்கம்**: மாணவர்கள் பேசுவதற்காக வாய்ப்புப் தருதலும் குறிப்பிட்ட தலைப்புப் பற்றிச் சிந்திக்கும் திறனை வளர்த்தலுக்கும், மொழிப் பயிற்சி சிறப்பதற்கும், குறிப்பிட்ட தலைப்பிலுள்ள பொதுவான கருத்துகளைப் பிறர் அறிந்து கொள்ளச் செய்தலும் இதன் நோக்கங்களாகும்.

**ஆசிரியர் பங்கு:** மாணவர்கள் பேச வேண்டிய தலைப்பை முன்னரே அவருக்குத் தெரியப் படுத்த வேண்டும். கருத்தரங்கில் குறிப்பிட்ட நேரத்தில் பேசுமாறும், ஐந்து அல்லது மாணவர்களுக்கு வாய்ப்பளித்து முறைப்படுத்தவும் வேண்டும்.

கருத்தரங்கில் பேசும் மாணவர் கருத்தரங்கப் பேச்சாளர் அல்லது கருத்தரங்கப் பொழிவாளர் எனப்படுவார். ஆவர் தமது கருத்தைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் பேசி முடித்தல் வேண்டும்.

பேச்சாளர் பேசி முடித்தபின் ஐயங்கள் குறித்துத் தெளிவு பெறும் பொருட்டு பார்வையாளராயிருக்கும் மாணவர்கள் சிறுசிறு வினாக்களைத் தொடுப்பர். அதற்குப் பேச்சாளர் விளக்கம் அளிப்பர்.

நிறைவாகக் கருத்துக்களைத் தலைவர் தொகுத்துரைப்பார். தொகுப்புரையுடன் கருத்தரங்கம் நிறைவடையும்.



Downloaded From www.nagaicollege.com

### பட்டிமன்றம்

உயர்நிலைப்பள்ளி மாணவர்ககும்ளுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் வாய்தொழிப் பயிற்சி பெறுவற்குப் பட்டிமன்றம் சிறந்ததோர் சாதனம். பட்டிமன்றம் நடைபெறும்போது மாணாக்கர் இருபிரிவாகப் பிரிந்து அணித்தலைவர்களின் கீழ் நான்கு நான்கு பேர்களாகவோ மூன்று மூன்று பேர்களாகவோ அமைந்து பொருளை ஒட்டியும் வெட்டியும் பேசுவார்கள். நடுவர் ஒருவர் இருப்பர். அவர் அணித் தலைவர்க்கு 5 மணித்துளிகளும் உறுப்பினர்களுக்கு 4 மணித்துளிகளும் கொடுத்து பேசச் செய்வார். (எ.கா.) செய்ந்நன்றிக் கடமையில் மிகவும் சிறந்தவன் கும்பகர்ணனா? கர்ணனர் நடுவர் இறுதியாகப் பிரச்சினையுள்ள பகுதிகளை நீக்கிக் கொண்டே வந்து ஒரு தலைப்புக்கான காரணங்களைத் தொகுத்துக் கூறி, அதுவே வென்றதென்று கூறி முடிப்பார். மற்றும் கட்சியின் வாதங்களில் குற்றநற்றங்களை எடுத்துக் கூறி அவையினரை வாக்குகள் வழங்கச் செய்து பெரும்பான்மையான வாக்குகள் பெற்ற கட்சியை வெற்றி பெற்றதாக அறிவிப்பர். ‘பள்ளி பாராளுமன்றம்’ பல பட்டிமன்றங்களுக்கு வாய்ப்பினை நல்கும்.

பட்டிமன்றம் முறையில் மாணாக்கர் ஆர்வத்துடன் கலந்து கொள்வதால் அனைவரும் நல்ல பயன்பெறுவர்.

### குழு விவாதம்

குழுவிவாதம் என்பதனை வாய்மொழிப் பயிற்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். பள்ளி ஆண்டுவிழா, விளையாட்டுப் போட்டி இலக்கியக் கழக ஆண்டுவிழா, பெரியோர்களின் திருநாள்களைக் கொண்டாடுதல் ஆகியவற்றை எவ்வாறு சிறப்புற நடத்துவது என்பதைப் பற்றி ஆராயலாம்.

### அண்மைக்கால கற்பித்தல் போக்குகள்

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று கற்பித்தல் என்பது பல மாற்றங்களைக் கண்டுள்ளது. மின்னாற்றல் காரணமாக கணினி, கணினிவழியே வலைதளம் என விரிவடைந்தது. ஆனால் இன்று வலைதளத்தில் இருந்து பதவிறக்கம் செய்து எதனையும் கற்கும் நிலை உருவாகியுள்ளது. ‘‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு அல கால வகையிலான’’ என்பார் நன்னூல் ஆசிரியர் பவணந்தியார்.

பழையவற்றின் அடிப்படையில் புதிய வளர்ச்சிகள் இன்று பிரமிப்பை ஊட்டுவனவாக உள்ளன. அனைத்து நடவடிக்கைகளையும் மின்மயமாக்கல் என்ற அடிப்படையில் திட்டமிட்டுப் பணிகள் நடைபெறுகின்றன. அதற்கெனத் தனியே தொழில்நுட்பக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கற்பித்தல் என்பது குரல் ஒலி, காட்சி வழி, தகவல் தொகுப்பு, அச்சு வடிவில் அமைந்தவை என அமைகின்றன.

### குரல் ஒலி

குரல் ஒலி இருவகையாக அமைகின்றது. ஒரு வழித் தகவல் அளிப்புக் கருவிகளாகிய ஒலிப்பேழைகள் வானொலி போன்றவை அமைகின்றன. இரு வழித் தகவல் அளிப்புக் கருவிகளாகத் தொலைபேசிஇ ஒலிஇ விண்ணரங்கம்மற்றும் வானொலி போன்றவையும் ஒலி வழியே கற்க உதவுகின்றன.


Downloaded From www.nagaicollege.com

**கருத்துக் கட்டமைப்புக் கற்றல்**

பல்லூடகம், கணினி சார்ந்த தொழில்நுட்பமாகும். ஒலி, ஒளி, அசைவு, அட்டவணை முதலிய பல்வேறு ஊடகங்களை இணைத்துப் பயன்படுத்துவது பல்லூடகம் ஆகும்.

கருத்துக்கள் என்பவை தொகுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டிருக்கும். அவற்றைத் தகவல் தொகுப்பு, விவர அடங்களால் கருத்துக் கட்டமைப்புப் எனப் பல பெயர்களில் அழைக்கின்றனர்.கணிப்பொறிவழிக் கற்பித்தல் முறையில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் பாடங்கள் கணிப்பொறி வழியே வழங்கப்படும்.

ஆசிரியரின் கற்பித்தல் நுட்பமானது கற்பித்தல் பொருள்களாக மாணவர்களுக்கு வழங்குவதிலேயே உள்ளது. கற்பித்தல் விளைபயன் எவ்வாறு அமைகிறது என்பதில் ஆசிரியர் அதிக கவனம் செலுத்த வேண்டும்.பாடப்பொருள்களைக் குறைந்த செலவில் விரைவாகவும், திறமையாகவும் மாணவர்களுக்கு வழங்கிட உதவும் தொழில் நுட்பமே தேர்வு செய்யப்பட வேண்டும்.

**இ.கற்றல்**

இ.கற்றல் என்பது மின்னியல் சாதனங்கள் வழியே நடைபெறும் கற்றலை குறிக்கும். பின்வருமாறு இதனை நிரல்படுத்தலாம்.

1. உளவியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பல்லூடக முறையில் மின்னணு நுட்ப வழி மற்றும் தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் கற்கும் வசதியைத் தான் இ-கற்றல்(மின்னியல் முறையில் கற்றல்) என அழைக்கிறோம்.
2. மின்னியல் முறையில் கற்றல் என்பது மின்னியல் தூண்டல்கள் நிறைந்த சூழலில் கற்றல் நடைபெறுவதாகும்.
3. பயிற்சியளித்தல், தேவைப்படும் தகவல்களை உடனடியாகக் கிடைக்கச் செய்தல், வல்லுநர்களின் வழிகாட்டுதல் பெறுவதற்கு வாய்ப்பளித்தல் ஆகிய மூன்றையும் மின்னியல் கற்றல் உள்ளடக்கியது.

**காணொலிக் காட்சிவழிக் கற்றல்**

தொலை தூரத்தில் பல்வேறு இடங்களில் உள்ளவர்கள் பயணம் ஏதும் செய்யாமலேயே இணையதளத்தின் உதவியால் வீடியோ காட்சிகள் மற்றும் உரைகள் ஆகியவற்றை இருக்கும் இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெண் மென் திரையின் மூலம் கண்டு கற்றுக் கொள்ளுதலையே காணொலி காட்சி வழிக்கற்றல் என்கிறோம்.

**நிறைகள்**

→ஆசிரியர் இல்லைஇ கரும்பலகை இல்லைஇ சுண்ணக் கட்டிகளும் இல்லாமலும் கண்டு களிக்க முடிகிறது. தேவையானவற்றை கற்றுக் கொள்ள முடிகிறது.

→ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் திறன்களைத் தாமே தெரிந்து கொள்ளலாம்.

**குறைகள்**

→ இடையிடையே வினாக்கள் கேட்கவோ, தெளிவு பெறவோ விளக்கங்கள் பெறவோ முடியாது. ஆசிரியர்-மாணவர் தொடர்பு அற்றுப் போகிறது.

→ பலராக இருப்பதால் யாருக்கு என்ன தேவை என்பதை அறிந்து கொள்ள இயலாது.



Downloaded From www.nagaicollege.com

## அச்செழுத்து வளங்கள்

புல்லிலும் கல்லிலும் எழுதிவைத்த காலம்மாறி பனையோலையினைப் பக்குவப்படுத்தி ஓலைச் சுவடியில் எழுதிய நிலை மேலும் வளர்ந்து அச்சுக் கலையாக மாறியது. புத்தகங்கள், நாளிதழ், மாத இதழ், வார இதழ் போன்றவை இதில் அடங்குமாறு அமைந்திருக்கும். தமிழ் எழுத்துக்களை அச்சில் வார்த்து நிரந்தரப் பயன்பாட்டுக்கு வழிவகுப்பது அச்செழுத்து வளங்கள்.

எப்போதோ அச்சிட்ட நூல்களையும் இப்போது நாம் படிக்கிறோம் என்பது அச்செழுத்து வளத்தின் முக்கியப் பயனாகும். ஒரு சிலரே பயன்படுத்தும் சூழ்நிலையில் ஒரே நேரத்தில் பலர் படித்து மகிழ வாய்ப்பளிக்கிறது. நீண்ட காலத்துக்குப் பயன்படுத்தலாம். ஒன்றைப் பார்த்து மற்றொன்றை எளிதாகப் படி எடுக்கலாம். கல்விப் பரவலுக்கும் படிப்பறிவு பெருக்கத்துக்கும் அச்செழுத்து வளங்கள் பயன்படும்.

## நாளிதழ்கள்

நாளிதழ்கள் மிகப்பெரிய செய்தி ஊடகங்கள். அவை பல்வேறு வகைப்பட்ட தகவல்களின் தொகுப்பாகும். பல்வேறு இடங்களில் நடக்கின்ற நிகழ்வுகளையும் உடனுக்குடன் தெரியப்படுத்தி தேவையான செயல்பாட்டுக்கு வழிகாட்டுகின்றன. நாளிதழ்கள், நிழற்படங்கள், புதிய அறிவியல் செய்திகள், இயற்கைச் சீரழிவுகளான புயல், வெள்ளம், நிலநடுக்கம், நெருப்பு போன்றவற்றிலிருந்து காப்பாற்றிக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொண்டு அவற்றை எதிர்கொள்ளும் வகையில் செயலாற்ற தூண்டுகின்றன. நாளிதழ்களில் வெளிவரும் செய்திப் படங்களை வெட்டி பொருத்தமான தலைப்புகளில் வகைப்படுத்தி வரிசைப்படுத்தி ஒட்டி வைக்கலாம். இத்தகைய தொகுப்புகளை குழு விவாதத்திற்கு, கட்டுரை தயாரிப்பு, வரலாற்று இணைப்புத் தயாரித்தல் போன்றவற்றிற்குத் தந்து உதவலாம். இத்தகைய தயாரிப்புகளை நூலகங்களில் பாதுகாப்பாக வைத்துப் பின்னால் பயன்படுத்தும் பார்வைத் தொகுப்புகளாகப் பயன்படுத்த உதவலாம். அந்த வகையில் இன்று தினத்தந்தி, தினமலர், தினமணி போன்ற நாளிதழ்களை எண்ணிப் பார்க்க முடிகிறது.

## ஆய்விதழ்கள்

இதழ்கள் நாள் இதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், பருவ இதழ்கள் எனப் பல வகைப்படும். இவ்வகையிலே ஆய்விதழ்களும் இடம் பெறுகின்றன.

ஆய்வு நோக்கில் கருத்துக்களை, படைப்புகளை, மொழியாக்கங்களை, கலைச்சொல் ஆக்கங்களைத் தாங்கி வரும் இதழ்கள் ஆய்விதழ்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இவை பள்ளி நூலகங்களில் இடம்பெறுதல் வேண்டும். அவற்றையும் படித்துக் குறிப்புகள் எடுத்துப் பயன்படுத்தும்படி மாணவர்களை ஆசிரியர்கள் தூண்டுதல் வேண்டும்.

(எ.கா) தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வி, கலைக்கதிர் மற்றும் பல்வேறு கல்வி இதழ்கள்.

## கலைக்களஞ்சியங்கள் ஒலிசார் வளங்கள்

தமிழாசிரியருக்கு மிகச் சிறந்த செய்திகளைத் தரவல்ல பார்வை நூல்களுள் ஒன்று கலைக்களஞ்சியம். தமிழ்க் கலைக்களஞ்சியம், அபிதான சிந்தாமணி, அபிதான கோசம், தமிழ்மொழி அகராதி போன்றவை சொல் விளக்கும் பொருள்களைக் காரண காரியத் தொடர்புபடுத்தித் தொகுத்து அளிப்பவை கலைக்களஞ்சியங்கள். என்பன தமிழாசிரியருக்கும் பயன் தரக்கூடிய கலைக்களஞ்சியங்களாகும்.


Downloaded From www.nagaicollege.com

**ஒலிசார் வளங்கள்**

ஒலிசார் வளங்கள் என்பவை ஒலியை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றைக் காதால் மட்டுமே கேட்க முடியும்.கண்களால் சில நேரங்களில் காட்சிகள் ஒலி-ஒளி வாயிலாகக் காணலாம். வானொலிப் பேச்சுகள், ஒலிநாடாக்கள், குறுந்தகடுகள் போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை. இங்கு ஒலியே முதன்மைப் பெறுகிறது. கூர்மையான செவிப்புலன் சிறப்பானது.

**வானொலிப் பேச்சுகள்**

சுவைமிக்க நிகழ்ச்சிகளை மக்கள் பலரும் ஒரே நேரத்தில் கேட்டு மகிழ உதவுவது வானொலி. இது கல்வித் துறையில் மாணவர்களுக்கு அறிவு புகட்டவும்இ பொது அறிவு வளர்க்கவும் உதவுகிறது.

இதனை இருவகைகளாப் பிரிக்கலாம்

1. விளக்கப் பாடங்கள்
2. பின்னணிப் பாடங்கள்

**விளக்கப் பாடங்கள்**

அறிவியல், இலக்கியம், வரலாறு போன்ற பாடங்களில் சில குறிப்பிட்ட தலைப்புகளை விளக்குவதற்காக ஒலிபரப்பப் பெறும் நிகழ்ச்சிகளாகும்.

**பின்னணிப் பாடங்கள்**

பயணப் பேச்சுகள், வரலாற்றுக் கதைகளை நடித்துக் காட்டல், போன்ற கல்வி ஒலிபரப்பு இவ்வகையைச் சாரும். இவை பள்ளிப் பாடங்களின் பின்னணியாகும்.

**ஏற்பாடுகள்**

1. ஒவ்வொரு வகுப்பும் வானொலிப் பாடவேளைகளைத் திட்டமிடுதல் வேண்டும்.
2. கல்வி ஒலிபரப்பைக் கேட்கும் முன்னர் அப்பொருளைப் பற்றிய சில குறிப்புகளை முன்னதாக விளக்குதல் வேண்டும்.
3. வானொலி கேட்கும்போது குறிப்பு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**நன்மைகள்**

1. காலத்தாலும், தொலைவாலும் பிரிக்கப்பட்ட சிறந்த தலைவர்களின் ஒலியைக் கேட்கச் செய்கிறது.
2. மாணாக்கரின் ஆர்வத்தை தூண்டுகிறது.

**குறுந்தட்டுகள்**

கற்பிக்க வேண்டிய செய்திகளை வட்டமான மெல்லிய மின்தகட்டில் பதிவு செய்து வைத்துக் கொண்டு தேவையான நேரத்தில் அதனை ஓடச் செய்து செய்திகளை அறிந்து கொள்ளப் பயன்படுபவைக் குறுந்தட்டுகள். எத்தகைய செய்திகளையும், தகவல்களையும், இலக்கியங்களையும், இத்தட்டில் பதிவு செய்து வைத்துக் கொள்ளலாம். தம் குரலையே, பாட்டையோ இத்தட்டில் பதிவு செய்து கொண்டு மீண்டும் ஓடச் செய்து தம் குரலைத் தாமே கேட்டு நிறை குறைகளை அறிந்து கொள்ளலாம். தனக்கு விருப்பமான எதையும் பதிவு செய்து மீண்டும் கேட்கப் பயன்படுபவையே குறுந்தட்டுகள் ஆகும்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி ஆகியவற்றுக்குப் பயன்படும் வகையிலும் பயணியரின் தமிழ் உரையாடலுக்குப் பயன்படும் வகையிலும் குறுந்தட்டுகளை உருவாக்கி வருகிறது.


Downloaded From www.nagaicollege.com

**ஒலிப்பதிவு நாடாக்கள்**

பயிற்சியாளர் ஒவ்வொருவரும் தனித்தனியே பயிற்சி பெறுவதற்காக இக்கருவிகள் கூடத்தில் இருக்கும். ஆய்வுக் கூடத்தில் வசதிக்கேற்ப இக்கருவிகளின் எண்ணிக்கை அமைந்திருக்கும். பிற கருவிகளினின்றும் தடுப்புகளால் பிரிக்கப்பட்ட பகுதிகளில், ஏற்ற இருக்கை வசதிகளுடன் கூடியதாக இக்கருவிகள் வைக்கப்பட்டிருக்கும்.

**தலையணித் தொகுதிகள்**

பயிற்சியாளர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் சென்று அமர்ந்து ஒலிப்பதிவு நாடாக் கருவிகளுடன் இணைந்த தலையணித் தொகுதியை அணிந்த பின்னர் பயிற்சிக்கு ஆயத்தமாதல் வேண்டும்.

**நுண்ணொலிக் கருவிகள்**

பயிற்சியாளர்கள் பயற்சியின் போது தூண்டலுக்கு ஏற்ற துலங்களைச் செய்தால் அவற்றை ஒலிப்பதிவு நாடாக்களால் பதிய வைப்பதற்காக அமைந்த நுண்கருவி இதுவாகும்.

**காட்சியொளி வளங்கள்**

காட்சியொளி வளங்கள் என்பவை இருப்பவற்றை கண் எதிரே காணும் வகையில் ஒளிப்படமாக்கிக் காட்டுவதாக அமையும். இது வெறும் காட்சிப் பாடங்களாகவோ, ஒலி-ஒளி காட்சிப் படங்களாகவோ அமையும். இன்று நாம் காண்கின்ற சின்னத்திரை, வண்ணத்திரை, குறும்படங்கள் போன்றவை காட்சியொளி வளங்களே. இவை வண்ணமாகவும் இருக்கலாம், கருப்பு வெள்ளையாகவும் இருக்கலாம். படங்கள், ஒளிப்படங்கள், மின் அட்டைகள் எனப் பலவாக அது விரிந்து செல்லும்.

**படங்கள்**

படங்கள் கையால் வரையப்பட்டதாகவோ புகைப் படங்களாகவோ இருக்கலாம். இவை சுய விளக்கம் தருபவையாக இருக்க வேண்டும். சிறந்த படம் சிறந்த தரம், அமைப்பு, வேறுபாடு, குறிப்பான தன்மை, வண்ணம் ஆகியவற்றைப் பெற்றிருப்பதோடு சிறந்த முறையில் கருத்தை வெளியிடுவதாகவும் இருத்தல் வேண்டும்.

இவை விலை குறைவானது எளிதில் கிடைக்கக் கூடியது மேலும் சுலபமாக தயாரித்து பயன்படுத்த முடியும். ஆனால் சிறிய அளவிலானவை, கருத்தாழமற்றவை, இயங்காதவை என்ற குறைகளைக் கொண்டவை. பயனுள்ள படங்களை சிறந்த அட்டை மீது ஒட்டி வைத்து எதிர்காலத்தில் பயன்படுத்தலாம்.

**ஒளிப்படங்கள்**

காட்சியொளி வளங்களில் ஒளிப்படங்களுள் ஒன்று ஒளிக் காட்சிகளாகப் படங்கள் காட்டப்படும் நிலையை இவை விளங்குகின்றன.

**தலைமேல் பிம்பம் படம் வீழ்த்தி**

மாணவர்களுடைய கண்களையும் கவனத்தையும் ஈர்த்து அவர்களைக் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்யும் சாதனங்கள் ஒளிப்படங்கள் ஆகும். ஒலியும் ஒளியும் சார்ந்தவையாகவோ இருக்கும் அவை தலைமேல் பிம்பம் படம் வீழ்த்தி, திரவப் படிகைக் காட்சி வீழ்த்தி, தொலைக்காட்சி, நழுவப்பட வீழ்த்தி எனப் பலவகைகளில் உள்ளன.

**மின் அட்டைகள்**

மின்னட்டைகளை மூன்று விதமாக தயாரிக்கலாம். ஒருபுறம் படம் அதன் மற்றொருபுறம் விளக்கம். ஒருபுறம் சொல், அதன் மற்றொருபுறம் பொருள். இருபுறமும் படம் என்னும் முறையில் அமையலாம். மூன்று அட்டைகளில் முதலட்டை படமும் சொல்லும் இரண்டாவது அட்டையில் படம் மட்டும் மூன்றாவது அட்டையில் சொல் மட்டும் என்றவாறு தொகுப்பு மின்னட்டையைத் தயாரிக்கலாம். மின்னட்டையின் அளவு 18ஒ10 செ.மீ. மின்னட்டையின் ஓரப்பகுதிகள் வண்ணமிடப்பட வேண்டும். செய்திகள் அடர்வண்ணத்தில் எழுதப்பட வேண்டும்.



Downloaded From www.nagaicollege.com

மின்னல் வேகத்தில் மாணவர் படிக்கும் வண்ணம் செய்திகள் மிகப் பெரிய அளவில் எழுதப்பட வேண்டும்.

**வரைபடங்கள்**

கற்பித்தல் துணைக் கருவிகளில் வரைபடங்களும் ஒருவகை படங்களாக வரையப்பட்டு காட்சிப் படுத்தப்படுபவை. அவை விளக்கப் படங்கள், கணித வரைகோட்டுப் படங்கள், படவரைபடம் எனப் பலவகைப்படும். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

***விளக்கப்படங்கள்***

விளக்குவதற்குப் படங்களலால் கூறப்படும் கருத்துகளை எளிதாகப் புரிந்து கொள்ள உதவுபவையே விளக்கப்படங்களாகும்.

பாடக் கருத்துக்களின் தன்மை மற்றும் கற்றல்-கற்பித்தல் செயல்பாடுக்கேற்ப தயாரிக்கப்படும் விளக்கப்படங்களை பல வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன

1. எளிய விளக்கப் படம்
2. கிளை விளக்கப் படம்
3. தொடர் விளக்கப் படம்
4. தொகுப்பு விளக்கப் படம்
5. மேற்பொருத்து விளக்குப் படம்.

**விளம்பரத் தட்டிகள்**

ஒரே ஒரு செய்தியைப் பெரிய எழுத்துக்களில் எழுதி மாணவர்களுக்கு காண்பிப்பதற்கு விளம்பரத் தட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. விளம்பரத் தட்டிகள் சுய விளக்கத்தைத் தருகின்றன. ஆசிரியர்கள் விளக்கம் அளிக்கும் போது துணைச் செயலாக அவற்றைப் பயன்படுத்தலாம். பொதுவாக விளம்பர தட்டிகள் ஒரு சிறந்த மக்கள் தொடர்புச் சாதனமாகும். அவற்றின் பெருக்கமானது மக்களை எளிதில் அதன்பாலும் அது குறிப்பிடும் தகவல்களிலும் ஈர்ப்பினை உண்டாக்கிவிடும்.

**தகவல் தொடர்பு வளங்கள்**

தகவல் தொடர்பு என்பது ஒரு தகவலை அல்லது செய்தியை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கோ அல்லது ஒரு கூட்டத்திற்கோ தெரிவித்தல் ஆகும். தகவல் தொடர்பினைச் செயற்படுத்தும் வளங்கள் பல உள்ளன. எனினும் வானொலி, தொலைக்காட்சி, இணைய பல்லூடகம், இடைவினை, வெண் மென் பலகை ஆகியவற்றில் மூலம் நடைபெறும் தகவல் தொடர்புகளை இங்குக் காணலாம்.

**வானொலி**

சுவைமிக்க நிகழ்ச்சிகளை மக்கள் பலரும் ஒரே நேரத்தில் கேட்டு மகிழ உதவுவது வானொலி. இது கல்வித்துறையில் மாணவர்களுக்கு அறிவு புகட்டவும் பொது அறிவு வளர்க்கவும் உதவுகிறது. நாட்டு நடப்புகளை, விலைவாசி விவரங்களை, வானிலை விவரங்களை, பிறநாட்டுச் செய்திகளை, விளையாட்டுக் கட்டளைகளை வானொலி மூலம் தகவல்களைப் பெறலாம்.

பள்ளிகளில் மாணவர்களுக்கு வேண்டிய பாடங்களைக் கற்பதற்கும் வானொலி உதவுகிறது.

**தொலைக்காட்சி**

இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டுவரப்பட்டது இதில் கல்வி ஒளிபரப்பும் நடைபெறுகிறது. பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு, பல்கலைக்கழகப் பட்டப் படிப்புகளுக்கான பாடவகைகள் நடத்தப்படுகின்றன.

தொலைக்காட்சியை இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜான் பேயர்டு என்பவரும் ஐக்கிய நாட்டைச் சேர்ந்த ஜென்கின்ஸ் என்பவரும் கண்டுபிடித்தனர்.



Downloaded From www.nagaicollege.com

**இணையம்**

உலகெங்கும் கணினியில் உள் செய்திகளை இணைத்தலையே ‘இணையம’ என்கின்றனர். இதனை ஆங்கிலத்தில் இண்டர்நெட் என அழைக்கின்றனர். இலக்கியம், வரலாறு, புவியியல், வானவியல், அறிவியல், கணிதம், திரைப்படம், என எண்ணற்ற துறைகளில் பல்வேறு தலைப்புகளில் இணையத்தின் வழியாகச் செய்திகளைப் பெற முடிகின்றது.

உலகெங்கும் சிதறிக் கிடக்கும் செய்திகளை இருக்கும் இடத்திலிருந்து கொண்டே பெற இணைய இணைப்பு உதவுகின்றது. 1960-ல் ஒருகணினியிலிருந்து மற்றொருக் கணினிக்குச் செய்தியை மாற்ற மின்காந்த நாடாவைப் பயன்படுத்தினர். இது மிகுந்த கால விரயத்தை ஏற்படுத்தியதால் இதற்கு தீர்வு காணும் பொருட்டு ஒரு கட்டத்துக்குள் இருக்கும் கணினிகளையெல்லாம் கம்பிச் சுருளுடன் இணைப்பதில் கணினி வல்லுநர்கள் வெற்றி கண்டார்கள்.

**பல்லூடகம்**

பல்லூடகம், கணினி சார்ந்த தொழில்நுட்பமாகும். ஒலி, ஒளி,அசைவு, அட்டவணை முதலிய பல்வேறு ஊடகங்களை இணைத்துப் பயன்படுத்துவது பல்லூடகம் ஆகும். தமிழில் இதுவரை வெளிவந்துள்ள கற்றல், கற்பித்தல் சார்ந்த குறுவட்டுகள் பலவும் பல்லூடகத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வெளிவந்துள்ளன.

**பல்லூடத்தின் கூறுகள்**

1. **பனுவல்**

   எழுத்துக்களின் வாயிலாக உருவாக்கப்படும் ஆவணம் பனுவல் ஆகும். பல்லூடகம் மூலம் எழுத்துருக்களுக்குப் பல வகையான உத்திகளைக் கொடுக்க முடியும்.

2. **புகைப்படம்**

   தரமான புகைப்படங்களைப் பல வண்ணங்களில், வடிவங்களில் பல்லூடகத்தில் தர இயலும்.

3. **திரைப்படங்கள்**

   பல்வேறு நிகழ்ச்சிகள், விழாக்கள், திரைப்படங்கள், படங்கள் போன்றவற்றைப் பல்லூடகத்தின் வழி தேவைக்கேற்ப இடம் பெறச் செய்யலாம்.

4. **அசையும் படங்கள்**

   கார்ட்டூன் படங்கள், கற்பனையான உருவங்களுக்கு உயிரூட்டி அசையும் நடமாட வைக்க முப்பரிமாண காட்சிகளையும் உருவாக்க இயலும்.

5. **ஒலி**

   ஒலியைப் பதிவு செய்ய, தொகுக்க மென்பொருள்கள் உள்ளன. இதனைக் கொண்டு சிறப்புற ஒலி நுட்பங்களைத் தர முடியும்.

**பல்வகை ஊடக வழிக்கற்றல்**

கற்றல்-கற்பித்தல் செயல்முறைகளில் ஒன்றிற்கு மேற்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி விரும்பத் தகுந்த புதிய தொழில் நுட்பக் கற்றலே பல்வகை ஊடக வழிக்கற்றல் எனப்படுகிறது.

**பல்வகை ஊடக மையம்**

கல்வி நிலையங்களில் வெவ்வேறு நிலைக்கும் வெவ்வேறு பாடப் பொருள்களைக் கற்பிக்க ஏதுவாக ஒவ்வொரு பாடத்திற்கும் பொருத்தமான பல ஊடகங்கள் தெரிவு செய்யப்பட்டு திட்டமிப்படுகிறது. இது “பல்வகை ஊடக மையம்” எனப்படுகிறது.

**கணினி மூலம் பல்வகை ஊடகங்களின் வாயிலாகத் தகவல் அளித்தல்**

கற்றலுக்கான தகவல்களை, வண்ணக்காட்சிகளாகவும், (நிகழ்வு,செய்முறை) காட்சிகளில் இடம்பெறுபவை இயற்கையில் அமைவதைப்போன்றே அசைவுகளுடன் கூடியதாகவும், ஒவ்வொரு காட்சியிலும் தேவையான இடங்களில் பொருத்தமான ஒலியை இணைத்தும் கணினித் திரையில் தோன்றச் செய்தலேயே தகவல் தொழில் நுட்பவியல் பல் ஊடகவழி தகவலளித்தல் என்றழைக்கப்படுகிறது.



Downloaded From www.nagaicollege.com

**பல்வகை ஊடகங்கள் வாயிலாக தகவலளித்தலை நடைமுறைப்படுத்த தேவையான கருவிகள்**

1. கம்ப்யூட்டர்
2. டிஜிட்டல், கம்ப்யூட்டர், அனலாக் மாற்றியமைக்கும் கருவிகள்
3. பல்ஊடக வழியில் தகவல்களைப் பகுத்து ஆராயவும், முறைப்படுத்தவும் தேவையான கம்ப்யூட்டர் வன்கலன்கள்.
4. பல்வேறு தகவல்களை ஒருங்கிணைக்கும் மென்பொருள்கள் (எ.கா) னுசளைநசளஇ ிசழஉநளளளைபெ ளழகவறயசந.

**பல்வகை ஊடகங்கள் வாயிலாகத் தகவல் அளித்தலின் பயன்கள்**

1. மாணவர்களின் தேடிக்கண்டுபிடிக்கும் ஆர்வத்தை வளரச் செய்கிறது.
2. மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆசிரியர் வரைபடம், திரைபடம் துணைக்கொண்டு பதிலளிக்க முடியும்.
3. மாணவர்கள் கற்கும் பொருள்கள் தொடர்பான தகவல்களைத் எளிமையான வடிவத்தில் பெறலாம்.
4. மாணவர்கள் வீட்டிலிருக்கும்போதே கணினியைப் பயன்படுத்தி அறிவைப் பெருக்கி கொள்ள முடியும்.

**இடைவினை வெண்மென் பலகை**

இடைவினை புரியும் ஒளிப்பேழை என்பது தொலைக்காட்சி வழிக்கற்றல் மற்றும் கணினி துணைக் கொண்டு கற்றல் ஆகிய இரண்டு உயர் தொழில் நுட்ப சிறப்பம்சங்களையும் இணைத்து பல்ஊடகக் கற்றல் சூழ்நிலையை உருவாக்கிடுதலே இடைவினை புரியும் ஒளிப்பேழை அல்லது கருத்தளவு ஒலி ஒளிக் காட்சி என்றழைக்கப்படுகிறது.

இது தனியாள் கற்பித்தலுக்கான உயர் தொழில் நுட்பம் வாய்ந்த சாதனமாகும்.

இடைவினை புரியும் ஒளிப்பேழையின் மூலமாக ஏற்கனவே கோர்வையாக பதிவு செய்யப்பட்ட காட்சிகளின் தொகுப்புகள், கணினியின் கட்டுப்பாட்டின் கீழ்ப் படிப்படியாக குறிப்பிட்ட வேகத்தில் நகர்த்தப்படுகின்றன.

இக்காட்சித் தொகுப்பு ஒவ்வொன்றையும் பார்வையிடும் மாணவர், அதிலுள்ள படங்களையும், ஒலிகளைக் கண்டும், கேட்கும், புரிந்துகொள்வதோடு அதனைத் தொடர்ந்து எழுப்பப்படும் வினாக்களுக்குத் தனது பதிலையளித்து கணினியுடன் இடைவினை புரிய வேண்டியிருக்கும்.

**இடைவினை புரியும் ஒளிப்பேழையின் உட்கூறுகள்**

இடைவினை புரியும் ஒளிப்பேழையில் கீழ்க்காணும் மூன்று முக்கிய உட்கூறுகள் இடம் பெற்றுள்ளன. அவையாவன

இடைவினை புரியும் ஒளிப்பேழை

1. நுண்ணறிவு கணினி
2. ஒளிப்பேழை
3. தொலைக்காட்சி

**சமுதாய வளங்கள்**

மொழியை வளப்படுத்துவதில் சமுதாயம் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றது. சமுதாய வழக்குகள்நாளடைவில் இலக்கியங்களாக உருப்பெறுகின்றன. சமுதாயப் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் போன்ற வளரும் இலக்கியங்களின் கருவூலங்களாக அமைந்துள்ளன. நாட்டுப்புறக் கவிதைகளிலிருந்து தான் திருந்திய வடிவமுள்ள கவிதைகள் தோன்றின என்பர். எனவே கிராமங்களிலும்,நகரங்களிலும் உள்ள சமுதாய மக்களின் பங்களிப்பே சமுதாய வளங்கள்



Downloaded From www.nagaicollege.com

எனப்படுகின்றன.இதில் நாட்டுப்புற கலைஞர்கள், களப்பயணம் என இருநிலைகள் இடம் பெற்றுள்ளன.

**நாட்டுப்புற கலைஞர்கள்**

நாட்டுப் புறங்களில் வாழும் சமுதாய மக்களை அடிப்படையாகக் கொண்டே இலக்கியங்கள் தோன்றுகின்றன. கற்றறிந்தோரால் எழுதப் பட்டவை மட்டுமே இலக்கியமாகக் கருதப்பட்ட நிலையிலிருந்தது நாட்டுப்புற பாடல்களிலிருந்து தான் மேட்டுக் குடி மக்கள் போற்றும் இலக்கியங்கள் தோன்றின என்பது இன்றைய ஆய்வியல் முடிவு. நாட்டுப்புறப் பாடலைப் பாடி ஆடுபவர்களை நாட்டுப்புறக் கலைஞர்கள் என அழைப்பர். வில்லுப்பாட்டு, கும்மிப்பாட்டு, ஒயிலாட்டம், கரகாட்டம், கணியான் ஆட்டம்,மயிலாட்டம் எனக் கதைப் பாடல்களைத் தாமே எழுதிப் பாடி ஆடும் கலைஞர்களை நாட்டுப்புறக் கலைஞர்கள் என்பர்.

**களப்பயணம்**

சமுதாய வளங்களில் களப்பயணமும் ஒன்று. ஆய்வாளர்களுக்குக் களப்பயணம் மிகமிக முக்கியம்.

எந்த ஒரு படைப்பாக இருந்தாலும் அது தொடர்பான தகவல்களைத் திரட்டுவதுடன் தொடர்புடைய இடங்களுக்கு நேரில் சென்று உண்மைத் தகவல்களைத் திரட்டுதலே களப்பயணம்.பெரியபுராணத்தை எழுதிய சேக்கிழார் பெருமான் ஒவ்வொரு நாயன்மாரும் வாழ்ந்ததாகக் கூறப்பட்ட இடங்களுக்குச் சென்று விவரம் அறிந்தே நாயன்மார் வரலாற்றைப் பாடினார் என்பர்.

**மொழிவள மையங்கள்**

மொழியை வளமுடையதாக்கப் பிழையின்றி எழுதுதல், புதிய படைப்புகளை உருவாக்குதல், சரியான உச்சரிப்பை மேற் கொள்ளுதல், கலந்துரையாடல், பட்டிமன்றம்,பெரியபுராணத்தை எழுதிய சேக்கிழார் பெருமான் ஒவ்வொரு நாயன்மாரும் வாழ்ந்ததாகக் கூறப்பட்ட இடங்களுக்குச் சென்று விவரம் அறிந்தே நாயன்மார் வரலாற்றைப் பாடினார் என்பர்.பெரியபுராணத்தை எழுதிய சேக்கிழார் பெருமான் ஒவ்வொரு நாயன்மாரும் வாழ்ந்ததாகக் கூறப்பட்ட இடங்களுக்குச் சென்று விவரம் அறிந்தே நாயன்மார் வரலாற்றைப் பாடினார் என்பர். கருத்தரங்கம், இலக்கியமன்றம், ஆசிரியர் தூய்மையான பல புதிய சொற்களை பொருளறிந்து கற்பித்தல் எனப்பல முறைகள் உள்ளன. அவற்றுள் இலக்கிய மன்றம், ஆசிரியர் பண்பு ஆகியவற்றை இப்பகுதியில் கற்கலாம்.

**இலக்கிய மன்றம்**

மொழியை வளப்படுத்தும் மூலங்களில் இலக்கிய மன்றமும் ஒன்று. இலக்கிய மன்றங்கள் மூலம் மாணவர்கள் தாயரிப்புடன் வந்து கலந்து கொள்ளும் மொழிப் பேச்சுத்திறன் சிறப்பாக வெளிப்படும். எழுத்துக்களைச் சரியாகவும் பிழையின்றியும் அதிகமான சொற்களைக் கற்றுக் கொள்ளவும், பல்வேறு கருத்துக்களைச் சிந்தித்துப் பேசவும் இலக்கிய மன்றம் இடமளிப்பதால் அதுவும் ஒரு மொழிவள மையமாகக் கருதப்படுகிறது.

மக்களாட்சியில் ஏற்பட்ட பின்னர் எங்கும் அரசியல்பாதிகளும் பிறரும் தாய்மொழியில் பேசுவதைக் கேட்கும் மாணாக்கர்கள் தாமும் அவ்வாறு பேசி பழக



Downloaded From
www.nagaicollege.com

வேண்டும் என்று எண்ணுகின்றனர். தாய்மொழியில் பல செய்தித் தாள்களையும் படித்த மாணாக்கர் அதைப் பற்றிப் பேச விழைகின்றனர். இவ்விருப்பத்திற்கு ஆக்கமளிப்பவை இலக்கிய மன்றங்களாகும். சமூகவியல் மன்றம், கணிதவியல் மன்றம், அறிவியல் மன்றம் போன்றவை இன்றும் இருக்கின்றன.

**நன்மைகள்**

1. சிறந்த முறையில் சொற்பொழிவாற்றும் மாணாக்கர் பின்னர் தலை சிறந்த பேச்சாளர்களாக திகழ்கிறார்கள்.
2. மாணாக்கர்களிடம் உள்ள இந்த அரிய பேச்சுத்திறனை வெளிக் கொணர இம்மன்றங்கள் உதவுகின்றன. அவர்கள் இலக்கிய சொற்பொழிவு, கவிதை முற்றம் போன்ற கூட்டங்கள் கூட்டச் செய்யும் வல்லுநராகின்றனர்.

**தமிழாசிரியரின் பண்புகள்**

தமிழாசிரியர் என்பவர் தமிழ்மொழியின் மீது பற்றும் பாசமும் உடையவராக இருக்க வேண்டும். தமிழ் மொழியையும், இலக்கியங்களையும் அறிந்தவராக இருக்க வேண்டும். தமிழ் மொழித் திறன்களை அறிந்து அவற்றைத் தமது மாணவர்க்குக் கற்பிப்பதுடன் அவர்களைப் பின்பற்றச் செய்து அதனைக் கண்காணிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும். அவர் தம்முடைய சொல், செயல் மூலமாக மாணவர்களுக்கு மதிப்புணர்வினைக் கீழ் உள்ள வகைகளில் கற்பிக்கலாம்.

- தூய்மையான உடைகளை அணிந்து வரல்.
- மாணவர்களுக்கு ஆசிரியர் தாம் கூறும் அறிவுரைகளை நடைமுறையில் தாமும் பின்பற்ற வேண்டும்.
- பாடங்களை சுவைபடவும் பிழையின்றியும் தெளிவாக நடத்துதல்.
- அனைத்து மாணவர்களையும் சமமாக நடத்துதல்.
- மாணவர்களின் தனிப்பட்ட திறன்களைக் கண்டறிந்து ஊக்குவித்தல்.
- மாணவர்களின் உணர்வுகளுக்கு நியாயமான கருத்துகளுக்கு மதிப்பளித்தல்
- மாணவர்களின் மனம்நோகும்படியாகக் கண்டிக்காமல் இருத்தல்.
- மாணவர்களை உடல்ரீதியாக துன்புறுத்தக் கூடாது.
- மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்க வழி கூறுதல்.
- பிரச்சனைக்குரிய மாணவர்களின் பெற்றோர்களுக்குப் பக்குவமாக அதனைத் தெரிவித்தல், அதற்கான தீர்வினைக்கலந்து ஆலோசித்து செயல்படுத்துதல்.
- மாணவர்களின் திறன்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தல்.
- மாணவர்களின் அடைவுத் திறனுக்கும் பிற திறன்களுக்கும் முக்கியத்துவம் அளித்தல்.
- பிற ஆசிரியர்களைப் பற்றி மாணவர்களின் எதிரில் புறங் கூறாமல் இருத்தல்.
- தம்முடைய சொந்த பணிகளுக்கு மாணவர்களைப் பயன்படுத்தாமல் இருத்தல்.
- தவறான செயல்களில் ஈடுபடாமல் இருத்தல்.
- தாம் செய்கின்ற அனைத்து செயல்களையும் செவ்வனே செய்தல்.
- தாம் நடத்துகின்ற பாடங்களின் வழியே மதிப்புணர்வுகளைக் கற்பித்தல்.
- தாம் சொந்த விருப்பு விறுப்புகளை மாணவர்களின் மீது காட்டாமல் இருத்தல்.
- மாணவர்களிடம் கனிவுடனும், கண்டிப்புடனும் இருத்தல்.
- அரசியல், திரைப்படம் குறித்து எக்காரணம் கொண்டும் மாணவர்களிடையே பேசாமல் இருத்தல்.
- தம்முடைய கருத்துக்களை மாணவர்களின் மீது திணிக்காமல் இருத்தல்.



Downloaded From www.nagaicollege.com

**முடிவுரை**

மேற்கூறப்பட்டவாறு ஆசிரியர் மையக் கற்பித்தல்,மாணவர் மையக் கற்பித்தல், சக மாணவர் கற்பித்தல் ,அண்மைக்கால கற்பித்தல் போக்குகள்,அச்செழுத்து வளங்கள், ஒலிசார் வளங்கள் ,காட்சியொளி வளங்கள் ஆகியன அமைந்துள்ளன.

**பயிற்சி வினாக்கள்**

1.விரிவுரை முறை என்றால் என்ன?

2.ஆசிரியரணிக் கற்பித்தல் குறித்து எழுதுக.

3.மாணவர் மையக் கற்பித்தல் குறித்து விளக்குக.

4.மாணவர் கருத்தரங்கத்தின் இன்றியமையாமை குறித்து எழுதுக.

5.இ.கற்றல் என்றால் என்ன?

6.கல்வி கற்றலுக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் எங்ஙனம் துணைப்புரிகின்றன?

7.கற்றல்-கற்பித்தலில் பல்லூடகம் குறித்து விளக்குக.

8.சமுதாய வளங்கள் என்பன யாவை?

9.தமிழாசிரியரின் பண்பு நலன்கள் யாவை?

**பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்**

1. **பேரா.வி.கணபதி, பேரா.சந்திரிகா ராஜமோகன்,** சாந்தா பதிப்பகம், நற்றமிழ் கற்பிக்கும் முறைகள், சென்னை.
2. **இரத்தினசபாபதி.பி ரூ விஜயா.கு** (2016)*தமிழ் கற்பித்தல் முறைகள்-1.சென்னை: சாந்தா* வெளியீடு. **குமரிச்செழியன், பேரா.இ.ப.வேணுகோபால்** தமிழ்மொழி கற்பித்தல், சாரதா பதிப்பகம்.
3. **பேரா.இ.ப.வேணுகோபால், பேரா.க.சாந்தகுமரி** சாராதா பதிப்பகம் பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல் சென்னை.
4. **முனைவர் செ.சுமதி**, தமிழ் கற்பித்தல் பகுதி-ஐ விரிவுரையாளர் , கல்வியியல் பள்ளி, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம், சென்னை.



Downloaded From
www.nagaicollege.com

## அலகு - 6 சோதித்தலும் மதிப்பிடலும்

**நோக்கங்கள் :**

இப்பாடம் முடிவுறும் தருவாயில் மாணவஆசிரியர்கள்

1. சோதித்தலின் நோக்கங்களையும்,முக்கியத்துவத்தையும் பரிந்துகொள்வர்
2. மொழியறிவுச் சோதனையின் வகைகளை அறிந்துகொள்வர்
3. வினாத்தாள் திட்டவரைவு அட்டவணையை உணர்ந்து பயன்படுத்துவர்

**முன்னுரை:**

மாணவர்களுடைய கற்றல் திறனை மதிப்பீடு செய்து நேரத்தினை அறிந்துக்கொள்ளப் பின்பற்றப்படும் பல்வேறு வகையான மதிப்பீட்டுச் சோதனைகளை அறியும் பகுதியாக இது அமைகிறது. மாணவர்களை நல்ல பயனள்ள அர்த்தமுள்ள வாழ்விற்காகத் தயார்ப்படுத்துவதே கல்வியாகும். இப்படிப்பட்ட கல்வி எந்த வெற்றிகரமாக மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆக்கப்பூர்வமாக மதிப்பிடலே சோதனையாகும். ஒரு தனிப்பட்ட மாணவனின் முழுத்திறமைகளை மதிப்பிட அல்லது கல்வியின் நோக்கங்களை நிறைவுபடுத்தத் சோதனைகள் அமைதல் நல்லது. ஒரு குறிப்பிட்ட பாடத்தில் மாணவனின் திறமைகளைப் பரிசோதித்து அவனுக்குரிய படிக்கும் திறனை மதிப்பிட வேண்டும்.

**சோதித்தலின் நோக்கம்**

மதிப்பிடலும் தேர்வுகளும் மதிப்பு மிக்கவையாக கற்றலை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். தேர்வுகள் மாணவர்களின் கற்றலை மதிப்பீடு செய்து எந்த அளவிற்கு அவர்கள் கற்றல் இலக்கை அடைந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். இது நிறையறி சோதனையை ஒத்ததாகும்.

கற்றலுக்கான சோதனை என்பது மாணர்களின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து மதிப்பிடலும் கற்றலின் தேவைகளை அடையாளங்காண புரிந்து கொள்ளுதலும் அவற்றின் மூலம் கற்பித்தலைச் சரியாகத் தகவமைத்துக் கொள்ளுதலும் ஆகும்.

கற்றலுக்கான சோதனையின் மூலம் கிடைக்கும் சான்றுகள் (மதிப்பெண்கள், விவரங்கள்) மாணவர்கள் அவர்களது கற்றல் நிலையில் எந்த இடத்தில் இருக்கிறார்கள் கற்றல் இலக்கை எப்படி அடைகிறார்கள் என்பதை மாணவர்களும் ஆசிரியர்களும் அறிந்துகொள்ள உதவும். சூழ்நிலைக்கேற்ப தேவையான மாற்றங்களை ஏற்படுத்த உதவுகிறது.

மாணவர்கள் எந்த அளவுக்குக் கற்றலைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆசிரியர்கள் மதிப்பிட வேண்டும். பிறகு மாணவர்களின் அடுத்தகட்டக் கற்றல் முன்னேற்றத்திற்கு ஆசிரியர் துணைபுரிய வேண்டும்.

**முக்கியத்துவம்**

கற்பித்தலின் நிறைவுப் பகுதி சோதித்தறிதல். கற்றல் களங்கள் அனைத்திதலும் பெற்ற தேர்ச்சி, தேர்ச்சியால் பெற்ற வல்லமை, அதனை வெளிப்படுத்தும் போக்கு என எல்லாவற்றையும் உரிய ஊடகத்தல் அளந்து பெற்ற அளவைகளின் வழியே கற்போரின் தரம் பற்றிய முடிவுகளைக் கூறுவதால் அதன் முக்கியத்துவம் உணரப்படுகிறது. அதனைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.



Downloaded From www.nagaicollege.com

1. மாணவர்களின் அடைவுநிலையச் சோதிப்பதற்காக.
2. மாணவர்களின் ஆளுமையைத் தீர்மானிப்பதற்காக
3. பெற்றோருக்கும் மேலதிகாரிகளுக்கும் மாணவர் தேர்ச்சி பற்றிய அறிக்கை அளிப்பதற்காக.
4. ஆசிரியரது கற்பித்தல் திறனை மதிப்பிடுவதற்காக.
5. பள்ளியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக
6. எதிர்காலத் தேவையை அறிவதற்காக
7. குறைகளைக் களைவதற்காக .
8. பணி நியமனத்திற்காக.
9. போட்டித் தேர்வுகள் நடத்துவதற்காக
10. உயர்கல்விப் படிப்பிற்குத் தேர்ந்தெடுப்பதற்காக.

**உள்ளார்வ ஆற்றல் சோதனை**

தமிழ்ப்பாடம் கற்பித்தலில் மாணவனுடைய கவனத்தை ஈர்க்கும் பொருட்டு பல்வேறு உத்திகளைக் கையாள வேண்டும். மாணவர்களுடைய கவனம் சிதறாமல் ஆசிரியரைக் கவனித்துப் பாடத்தில் கருத்தைச் செலுத்துமாறு கற்பிக்க வேண்டும் அவ்வுத்திகளுள் சிலவற்றைத் தெரிந்துக் கொள்ளலாம்.

**1. ஆர்வமூட்டல்**

பாடநூல் முதன் முதலாகத் தொடங்கப் பெறுமாயின் தகுந்த செய்திகளைக் கூறி நூலைப் படிப்பதற்குரிய ஆர்வமூட்ட வேண்டும்.

**2. மாணவர் படித்தல்**

திட்டமிட்டபடி மாணவர்களை எந்தப் பக்கம் முதல், எந்தப் பக்கத்தில் எந்தப் பத்தி வரை படிக்க வேண்டுமெனக் கூறுதல் வேண்டுதல். எத்தனை நிமிடங்களில் படிக்க வேண்டுமெனக் கூறுதல் வேண்டும். ஆறாம் ஏழாம் வகுப்புகளில் மாணவர் ஒரு பக்கம் படிக்க 2 நிமிடம் முதல் 3 நிமிடம் வரை கொடுக்கலாம். மேல் வகுப்புகளுக்குச் செல்லசெல்ல நேரத்தைக் குறைக்கலாம். குறித்த கால அளவு மாணவரைப் படிக்கச் செய்தல் வேண்டும். மாணவரை அவர்கள் இல்லத்திலேயும் முன்னதாக ஒருமுறை படித்து வரச் செய்யலாம்.

**3. வினாக்கள் கேட்டு கருத்து எழுதுதல்**

குறிப்பிட்ட சிறிய பகுதியைப் படித்த பின்னர், அப்பகுதியின் தலைப்பையும், பத்திகளின் மையக் கருத்தையும் தகுந்த வினாக்கள் மூலம் வரவழைத்துக் கரும்பலகையில் முறையாக எழுதிவரல் வேண்டும். இறுதியில் இது கட்டுரை எழுதுவதற்கேற்ற குறிப்புச் சட்டமாக அமையும்.

**4. விளக்குதல்**

பொதுக்கருத்தை எழுதிய பின்னர், மேற்கோள் செய்யுள், பழமொழிகள், கதைக் குறிப்புகள் ஆகியவற்றை மாணவர் அறிந்துள்ளனரா எனத் தகுந்த வினாக்கள் மூலம் அறிதல் வேண்டும். மாணவர் அறிந்து கொள்ளவில்லையென அறிந்தால் ஆசிரியர் விளக்குதல் வேண்டும். இவ்வாறே குறிப்பிட்ட பகுதிகளைக் கற்பிக்க வேண்டும்.

**5. தொகுத்தல்**

மாணவர் கூறும் விடைகளை அவர்களையே தொகுத்துக் கூறச் செய்தல் வேண்டும். மாணவர் தொகுத்துக் கூறுவதற்கேற்ற வினாக்களை ஆசிரியர் கேட்கலாம். இல்லையேல் ஆசிரியரே செய்திகளைத் தொகுத்துக் கூறலாம்.



Downloaded From www.nagaicollege.com

**6. சுருக்குதல்**

அவ்வாறே தொகுத்த செய்திகளைக் குறிப்பிட்ட தலைப்பின் கீழ்ச் சுருக்கிக் கூறச் செய்தல் வேண்டும். இவ்வாறு பயிற்சியளிக்கும் பொழுது பத்தித் தலைப்பையும் , பத்தியில் இடம் பெறும் இன்றியமையாக் கருத்துக்களையும் மாணவர் அறிவர். இதுமுறையாக, கோவையாக அமையும்படி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

**7. சொற்கள்**

துணைப்பாட நூலில் வந்த புதிய சொற்களை ஆசிரியர் விளக்குதலின் போது மாணவர் அறிந்திருப்பர். அப்பொழுதே அவர் அவற்றைக் கரும்பலகையில் எழுதுதல் நன்று. மாணவரும் தம் குறிப்பேட்டில் எழுதி வைத்துக் கொண்டு வீட்டில் சென்று அகராதியைப் பார்த்து மீண்டும் பொருள் அறிதல் வேண்டும். அவ்வாறாயின் அவர்களது சொற்களஞ்சியம் பெருக வாய்ப்புண்டு.

**8. கட்டுரை எழுதுதல்**

வகுப்பில் தயாரிக்கப் பெற்ற குறிப்புச் சட்டகத்தை வைத்துக் கொண்டு மாணவரைக் கட்டுரை எழுதச் செய்தல் வேண்டும். இவ்வாறு நடுநிலைப் பள்ளி நிலையில் ஆசிரியர் வழிகாட்டியாக இருந்து குறிப்புச் சட்டகம் தயாரித்தால்தான் உயர் வகுப்புகளில் மாணவர்களே ஒரு நூலைப் படித்துக் குறிப்புத் தயாரிக்க முடியும். இம்முறையில் துணைப்பாட நூலைக் கற்பித்தால் மாணவர் மௌன வாசிப்புத் திறனில் வளர்ச்சி பெறுவர். துணைப்பாட நூல் கற்பித்தலின் நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**திறனறி சோதனை**

சோதனை ஒன்றின் அடைவைக் கொண்டு எதிர்காலத்தில் மாணவரின் அடைவ நிலை எவ்வாறு இருக்கும் என முன்கூட்டி அறியத்தக்கதான சோதனையை வருவதுரைக்கும் சோதனை அல்லது திறனறிச் சோதனை அல்லது முன்னறிச் சோதனை என்பர். குறிப்பிட்ட கல்விப் பகுதியில் மாணவன் ஒருவன் வெற்றி பெறும் நிலையை அறிய இத்தகைய சோதனையைத் தரலாம். ஒருவர் எந்த எந்தத் துறையில் என்ன என்ன திறன்கள் பெற்றுள்ளான் என்பதையும் சோதித்தறியலாம். இது நாட்டச் சோதனை, நுண்ணறிவுச் சோதனை போன்றதாகும். மாணவரின் ஆர்வம், நாட்டம், வேலைப் பழக்கம், படிப்புத் திறன்கள் போன்றவற்றை அளவிட இவ்வகைச் சோதனையைப் பயன்படுத்தலாம்.

**குறையறிதல் சோதனை**

மாணவர்கள் கற்றலில் அடைகின்ற அடைவுத் திறனை அறிவதற்கு ஆசிரியர்கள் அடைவுச் சோதனையைப் பயன்படுத்துகின்றனர். இதில் பாடப்பகுதி பரந்த அளவில் இருப்பதால் இதன் மூலம் மாணவர்களுடைய குறையை முழுவதும் அறிய முடியாது. எனவே மாணவர்கள் பாடப்பொருளில் எந்தப் பகுதியல் எவ்விதம் சிரமம் அடைகின்றனர் என்பதை அறிய ஆசிரியர்கள் தனிப்பட்ட தேர்வுகளை அமைக்க வேண்டும். பாடப்பகுதியின் அளவைக் குறைத்துக் கொண்டு மையப்பகுதி முழுமையையும் ஒன்று விடாமல் சோதித்தறிய வேண்டும். மாணவர்களின் குறைகளைக் கண்டறிய இத்தேர்வு பயன்படுவதால் இவை குறையறி சோதனைகள் எனப்படும்.

பாடப்பகுதியின் ஒவ்வொரு தலைப்பிலும் தனித்தனியாக இச்சோதனைகளை நடத்தலாம். மாணவர்கள் புரிந்து கொள்ளச் சிரமப்படும். திறனையே சோதிப்பதால் அவர்களுடைய குறைகளை அறிவதே முக்கிய நோக்கமாக இருப்பதால் இச்சோதனைகளுக்குக் கால நிர்ணயம் கிடையாது. தேர்வுகளில் மாணவர்கள் செய்யும் தவறுகள் ஆராயப்பட்டு அவற்றை நிவர்த்திச் செய்யும் வழிவகைகள் ஆலோசிக்கப்படுகின்றன.

**மொழியடைவுச் சோதனையின் வகைகள்**

மாணவர்கள் மொழிகற்றல் பாடத்தில் அடைந்துள்ள அடைவினை அளவிடுவதற்குப் பயன்படும் சோதனை மொழி அடைவுச் சோதனையாகும்.



Downloaded From
www.nagaicollege.com

டென்னிஸ்பேரன், ஹெரால்டு பெர்னால்டு குறிப்பிடுவது போல ஒரு மாணவனின் அடைவ அவன் கற்றலில் செலுத்திய நாட்டம், கற்றலுக்கான ஆயத்தநிலை, கற்றலுக்கான வாய்ப்புகள் இம்மூன்றின் விளைவால் ஏற்பட்டதனைக் குறிக்கும்.

பாடத்திட்டத்தில் உள்ள செய்திகளை மாணவர் அறிந்துள்ளனரா? வகுப்பறையில் கற்பித்ததையெல்லாம் மாணவர் அறிந்துள்ளனரா? என்பதை அறியவும் பயன்படும். குறிப்பாகச் சொன்னால், கற்பித்தல் செயலின் வெற்றியையும் கற்றல் செயல் நிகழ்ந்துள்ள அளவையும் அறிய மொழி அடைவுச் சோதனை தேர்வு உதவும்.

**மொழி அடைவுச்சோதனையின் நோக்கங்கள்**

1. மாணவரின் அடைவினை அறிதல்
2. நினைவாற்றலை அறிதல்
3. பொருளுணராற்றலை அறிதல்
4. கற்பித்தலிலுள்ள குறைகளைக் கண்டறிதல்

முதலியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

**ஒற்றை வினாவிடைச் சோதனை**

புறவயத்தேர்வு வினாக்களுக்கு ஒரே ஒரு விடை மட்டுமே உள்ளதால் **இ** சோதனையாளரின் சொந்த விருப்பு வெறுப்புகளோ**இ** மனநிலையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சோதனையாளர்கள் மதப்பீடு செய்தாலோ மதிப்பீடு மாறுவதில்லை. ஆகையால் **இ** இத்தகைய சோதனை நம்பகத்தன்மையும் ஏற்புடைமையும் கூடுதலாகக் கொண்டிருக்கிறது. எளிதாக மதிப்பீடு செய்யவும்**இ** பாடப்பகுதி முழுவதிலும் அதிகமான அளவில் நிறைய வினாக்கள் தயாரிக்கவும் இயலுவதால் இச்சோதனை முறை சிறப்புகிறது.

**பிழையறியும் சோதனை**

பலவற்றுள் தெரிவு வகை பல்வேறு கற்றல் விளைவுகளை அளந்தறியப் பயன்படினும் அதன் ஏற்புடைமையும், நம்பகத்னமையும் வினாவிலுள்ள திசை திருப்புவனவற்றைப் பொறுத்தே அமையும்.

திசை திருப்புவன உரிய எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்க இயலாத நிலையில் வேறு புறவய அமைப்புடைய வினாக்களை கையாள வேண்டும். திசை திருப்புவதாக ஒன்றே ஒன்று இருப்பின் ‘சரியா-தவறா’ அமைப்பே பொருத்தமானதாகும்.

சரியா- தவறா வினா அமைப்பை மேற்கொள்வதில் சில இடர்பாடுகள் உள்ளன. அவற்றைப் பற்றிய தெளிவு வினாத் தயாரிப்பாளர்களுக்குத் தேவை.

1. எல்லாக் கூற்றுகளும் அல்லது செய்திகளும் இருநிலைப் பட்டவாறு (சரி – தவறு, ஆம் - இல்லை) இருப்பதில்லை.
2. விடைத் தெரிவில் இரு மாற்று நிலைகளே உள்ளமையால் ஊகித்து எழுதும் வாய்ப்பு 50 விழுக்காடு ஆகும்.
3. பெரும்பாலான நிலையில் அறிதல் ஆற்றலை அளப்பறத்கே இவ்வினா அமைப்புப் பயனுடையதாகும்.

இவற்றைத் தயாரிப்பதற்காக வழிகாட்டும் சில இன்றியமையாத விதிகளை நோக்குவோம்.

**விதி-1**

வினாக் கூற்றில் ஒரே ஒரு கருத்தை நடுவணாக அமைக்கவும்.

சமய இலக்கியம் படைத்த புலவர்களுள் உவமைகளைக் கையாளுவதில் சிறந்தவர் சிவப்பிரகாசர் (சரி ∴ தவறு)



Downloaded From www.nagaicollege.com

இக்கூற்றில் , இரு தகவல்கள் உள்ளன. சமய இலக்கியம் படைத்த புலவர், சிவப்பிரகாசர். இதைச் சரி எனவும் கொள்ளலாம். தவறு என்றும் கொள்ள வாய்ப்புண்டு.

சிவப்பிரகாசர் உவமைக் களஞ்சியம் எனப் பாராட்டப்படுகிறார். (சரி ∴ தவறு).

'சரியா.'.தவறா' அமைப்புடைய வினாக்களுக்கு இயன்மைகளை வெளிப்படுத்தும் கூற்றுகளே மிகவும் பொருத்தமானதாக அமையும். இருப்பினும் உயர்நிலையில் முடிவு கூறும் கூற்றுகளையும் இவ்வமைப்பு எடுத்தாளலாம்.

## எழுத்துச் சோதனைகள்

இத்தேர்வில் கட்டுரைத்தேர்வு மற்றும் புறவயச்சோதனை இரண்டும் அடங்கும். கட்டுரைத் சோதனைகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கு மாணவர்கள் கட்டுரை வடிவில் பதில் அளிக்க வேண்டும். கட்டுரைசோதனை பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் பழைய முறைத் சோதனை என்றும் **இ** இதன் மதிப்பீடு திருத்துபவரின் மனநிலையைப் பொறுத்து அமைவதால் தன் மனவயப்படுகின்ற சோதனை என்றும் அழைக்கப்படுகின்றது.

புறவயச் சோதனையில் ஒரு வினாவிற்கு ஒரே விடை என்ற வகையில் மதிப்பீடாளரைப் பொறுத்து மதிப்பெண் மாறாத வகையில் அமையும். இவை கட்டுரை மற்றும் சிறு வினா விடை வகையை விட நம்பகத்தன்மை அதிகம் கொண்டது.

## குறுவினா விடைச் சோதனை

இவ்வவை வினாக்களுக்கு ஓரிரு வாக்கியத்தில் விடை எழுத வேண்டும். ஒரு கருத்தைப் பிழையின்றி ஒரு தொடரில் எழுதச் தெரிகின்றதா என்பதைத் தேர்ந்தறிய இது பயன்படுகிறது.
(எ.கா) சுட்டெழுத்து என்பது யாது?

## பத்திவினா விடைச் சோதனை

இவ்வகை வினாக்களுக்கு ஒரு பத்தியில் அதாவது ஒரு அல்லது ஏழு வாக்கியங்களில் விடை எழுத வேண்டும். ஒரு கருத்தை விளக்கப் பல வாக்கியங்கள் எழுதத் தெரிகின்றதா என்பதை தேர்ந்தறிய இது பயன்படுகிறது.

இவ்வகை வினாக்களைத் தயாரிப்பது மிகவும் எளிது. உண்மை தகவல்கள் கிடைக்கும். பாடப் பொருள் அனைத்தும் உள்ளடங்கும். நம்பகத்தன்மை குறையும். மொழிப்பிழையினால் மதிப்பீடு பாதிக்கப்படலாம்.

## கட்டுவரை வினாவிடைச் சோதனை

அகவயத் தன்மை உடையவை. இவ்வகையுள் கட்டுப்பாட்டுத் துலங்கல் (சுநளவசைஉவநன சுநளழடிளெந) வினா, வினா, விரிவுத் துலங்கல் வினா, குறுவிடை வினா, நெடுவிடை வினா ஆகியன அடங்கும். இப்பெயர்களெல்லாம் அவற்றிற்கு விடையளிக்கும் பான்மையால் ஏற்பட்டனவாகும். வினாவுக்கு உரிய விடையின் தன்மையினை வரையறுத்துக் கேட்கப்படும் வினாவாகும்.

கட்டுரை வகை வினாவைத் தயாரிப்பது எளிமையாகத் தோன்றினும் வரையறுத்த நோக்கங்களுக்கு ஏற்ப வினாக்களைத் தயாரிப்பது கடினமாகும். இவ்வகை வினாக்களின் மூலம் மொழிப்பாடத்தில் மொழிநடை, வளம், கருத்துகளின் வைப்புமுறை ஆகியவற்றை மதிப்பிட இயலும். ஒரு கருத்தை குறித்து முன்னுரை, பொருளுரை, முடிவுரை எனப் பிரித்து முறையாக எழுதுவரைத் தேர்ந்தெறியும் வினாக்களே கட்டுரை வினாக்கள் ஆகும். சிலபோது


Downloaded From www.nagaicollege.com

மூன்று அல்லது நான்கு பத்திகளில் விடையெழுத வேண்டியிருக்கும். இவற்றைத் தயாரிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய விதிகளை இனி நோக்குவோம்.

**விதி-1**

உயர்நிலை ஆற்றல்களை அளக்கப் பயன்படுகிறது.

அறிதல், புரிதல் ஆகிய ஆற்றல்களை அளக்கப் புறவய அமைப்பு வினாக்களே போதுமானவை. இவற்றை அளக்கக் கட்டுரை வினாக்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். பயன்படுத்துதல் ஆற்றலைக் கூடப் புறவய வினாக்களைத் தயாரிப்பதால் பெறக்கூடும். ஆனால், வினாக்களைத் தயாரிப்பதற்கு நேரச் செலவு ஆகும். எனவே, பயன்படுத்துதல, பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் போன்ற உயர்நிலை ஆற்றல்களை அளக்கக் கட்டுரை வினாக்களைப் பயன்படுத்துக. ஆற்றல்லகளின் நிலை உயர்வினைக் காட்டும், கீழ்வரும் வளர்வரைவு வினாத் தயாரிப்போருக்குப் பயனுடையதாக அமையும்.

**ஆசிரியர் தயாரிக்கும் கற்றலடைவுச் சோதனை**

கற்றலுக்குப் பின் மாணவர்களின் அடைவினைக் கண்டறிய ஆசிரியரே உருவாக்கும் தேர்வாகும். இது ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடும். கற்றலுக்கு முன்னும், கற்றலுக்குப் பின்னுமுள்ள மாற்றத்தை ஆசிரியரால் அளந்தறிய முடியும். கற்பித்தலில் தேவைப்படும் மாற்றங்களை உணர்த்தும் வழிகாட்டியாகவும் அமையும். இது வாய்மொழித் தேர்வு, எழுத்துத் தேர்வு என இருவகைப்படும்.

**தயாரித்தலில் உள்ள படிகள்**

கற்றலடைவுச் சோதனைத் தயாரித்தலில் இரு படிநிலைகள் உள்ளன. அவை வாய்மொழித் தேர்வு, எழுத்துத் தேர்வு என இருவகைப்படும். அவற்றை அறிந்து கொள்ளலாம்.

**வாய்மொழித் தேர்வு**

ஆசிரியர் மாணவனிடம் வாய்மொழியாக வினாக்களைக் கேட்டு விடை பெறுதலை வாய்மொழித் தேர்வு என்பர். மாணவர்களின் பேச்சில் காணப்படும் மொழிவளம், உச்சரிப்பு, மொழிநடை, குரல்வளம், உணர்வு வெளிப்படும் பாங்கு ஆகிய மொழிக் கூறுகளை வாய்மொழித் தேர்வின் மூலம் மதிப்பீடு செய்யலாம்.

**எழுத்துத் தேர்வு**

இத்தேர்வில் கட்டுரைத் தேர்வு மற்றும் புறவயச் சோதனை இரண்டும் அடங்கும். கட்டுரைத் தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கு மாணவர்கள் கட்டுரை வடிவில் பதில் அளிக்க வேண்டும். கட்டுரைத் தேர்வு பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் பழைய முறைத் தேர்வு என்றும், இதன்மதிப்பீடு திருத்துபவரின் மனநிலையைப் பொறுத்து அமைவதால் தன் மனவயப்படுகின்ற சோதனை என்றும் அழைக்கப்படுகின்றது.

புறவயச் சோதனையில் ஒரு வினாவிற்கு ஒரே விடை என்ற வகையில் மதிப்பீட்டாளரைப் பொறுத்து மதிப்பெண் மாறாக வகையில் அமையும். இவை கட்டுரை மற்றும் சிறுவினா விடை வகையை விட நம்பகத்தன்மை அதிகம் கொண்டவை.

**ஆசிரியர்களால் உருவாக்கப்படும் தேர்வுகளின் தன்மைகள்**

1. ஆசிரியரால் உருவாக்கப்பட்ட தேர்வுகள் குறிப்பிட்ட பள்ளித் தேவையினைக் கருத்தில் கொண்டு ஆசிரியரால் உருவாக்கப்பட்டவை.
2. இவற்றுள் வகுப்பறையில் கற்பிக்கப் பெற்ற விவரங்களைப் பற்றிய வினாக்கள் மட்டுமெ அடங்கும்.



Downloaded From
www.nagaicollege.com

3. நம்பகம், ஏற்புடைமை – ஆகியன உள்ளவையாகவோ இல்லாதவையாகவோ இருக்கக் கூடும். காலச்செலவும் பணச்செலவும் குறையும்.
4. கட்டுரை வகை அல்லது குறுவினா தேர்வுகளாகவோ இருக்கக் கூடும்.
5. மாணாக்கரது அடைவை ஒப்பிட்டு அவர்களது முன்னேற்றம் பள்ளி முடிவெடுக்க உதவும் தரங்கள் இல்லை.
6. பொதுவாக இவை தொகுதிச் சோதனைகளாக இருக்கும்.

**வினா வகைகளின் அட்டவணை தயாரிப்பு**

கற்றல் பொருளை ஊடகமாகக் கொண்டு, மாணவர் பெறும் ஆற்றல்களை அளந்து, கற்பித்தல் நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆற்றல்களை அளப்பது தேர்வு வினாத்தாள்.

எனவே வினாத்தாள் தயாரிப்பில் கற்றல் பொருள், கற்றல் நோக்கங்கள் கருதத்தக்க கூறுகளாகின்றன. தேர்வு வினாத்தாள், வினாக்களைக் கொண்டமைவதாகும். வினாக்கள் பல்வகைப்படும் என்றும், ஒவ்வொரு வகைக்கும் சில தனித்தன்மைகள் உண்டு என்றும் முன்பகுதியல் பார்த்தோம்.

எனவே, அளந்தறிய வேண்டிய நோக்கங்களுக்கு ஏற்ப வினா வகைகளும் மதிப்பெண்கள் அளவும் தேர்வுத்தாளைத் தயாரிக்கும் போது கருதத்தக்கனவாகின்றன. இப்போது, தேர்வுத்தாளைத் தயாரிப்பதற்குக் கருதத்தக்க கூறுகளைப் பட்டியலிட்டுப் பார்ப்போம்.

1.கற்பித்தல் நோக்கம் 2.கற்றல் பொருள்
3.வினாவகை 4.மதிப்பெண்கள் ஒதுக்கீடு

எனவே வினாத்தாள் திட்டவரையில் இந்நான்கும் காட்டப்பட வேண்டும்.

**கற்றல் நோக்கம்**

கற்பித்தல் நோக்கங்களைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்தலாம். எனிலும் கற்றல் நிகழ்வு அடிப்படையல், அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் எனும் ஆறு வளர்ச்சிப் படிநிலைகளைக் கொண்டது. இந்த ஆறு வளர்ச்சிப் படிநிலைகளும் அறிவுக்களம் சார்ந்தவை என அறிக. தேர்வில் அறிவுக்கள நோக்கமே அளக்கப்படுகிறதென்று அறிக. இவற்றிலுள்ள பகுத்தல், தொகுத்தல் , மதிப்பிடல் ஆகிய மூன்றினையும் 'திறன்' எனும் சொல்லால் குறிப்பர். எனவே, வினாத்தாள் திட்ட வரைவில் குறிக்கப்படும் நோக்கக்கூறுகள் அறிதல், புரிதல், திறன், பயன்படுத்துதல் ஆகிய நான்குமாகும்.

**கற்றல் பொருள்**

கற்றல் பொருளைத் தருவது பாடநூல். பாடநூலின் அனைத்துப் பகுதிகளிலும் கற்போரின் அடைவ அல்லது தேர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. தேர்வு வினாத்தாளில் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிகய வினாக்களை அமைத்தல் நடைமுறைச் சாத்தியமன்று. பாடப்பொருளின் பரவலான மாதிரிக் கூறுகளே போதும்.

அவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்றவாறு கற்பித்த அனைத்துப் பகுதிகளையும் நடைமுறைக்கு ஏற்ப அலகுகளாகப் பிரிக்க வேண்டும். அனைத்து அலகுகளையும் உள்ளடக்கியவாறு மாதிரிக் கூறுகள் அடங்கிய வினாக்களை வினாத்தாளில் அமைக்க வேண்டும். மேலும் பாட அலகின் தன்மைக்கேற்ப மதிப்பெண்கள் ஒதுக்குவதை விட அலகுகள் அடங்கும் பாடப்பொருள் தன்மைக்கேற்ப மதிப்பெண்களை ஒதுக்க வேண்டும்.


Downloaded From www.nagaicollege.com

**வினாவகை**

வினாதிட்ட வரைவில் கருதப்பட வேண்டிய பிறிதொன்று வினா வகையாகும். பல்வகைப்பட்டட வினாக்களை ஒரு தேர்வுத்தாளில் அமைத்தால் விடைத்தாள் திருத்தும்போது நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. மூன்று அல்லது நான்கு வகைப்பட்ட வினாக்களிருத்தல் சிறப்பு.

**மதிப்பெண்கள் ஒதுக்கீடு**

வினாத்தாளில் மதிப்பெண்கள் ஒதுக்கீடு செய்யும் போது கற்பித்தல் நோக்கங்கள் , பாடப்பகுதிகள், வினாக்கள் ஆகிய மூன்றும் தனித்தனியே கருதப்பட வேண்டும். அறிதல், புரிதல், பயன்படுத்துதல், திறன் ஆகியவற்றில் உயர்நிலை ஆற்றல்களுக்கு மிகுந்த மதிப்பபெண்களும் தாழ்நிலை ஆற்றல்களுக்குக் குறைந்த மதிப்பெண்களும் ஒதுக்கலாம்.

பாடப்பொருளுக்கு மதிப்பெண்கள் ஒதுக்கும் முறை பற்றி முன்னரே கூறப்பட்டது. வினாக்களைை மூன்று வகைக்குள் அடக்கினால், 1.புறவயவினா, 2.குறுவினா 3. கட்டுரை விடை என மூன்றாகக் கொண்டு, இவற்றிற்கு நிரலே 1,2,5 மதிப்பெண்களை ஒதுக்கீடு செய்யலாம்.

**வினாத்தாள் திட்ட வரைவின் மாதிரி**

தமிழ்ப்பாடத்திற்குப் பொருந்திய திட்ட வரைவின் மாதிரி இப்பகுதியிலும் அதன் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்ட வினாத்தாள் அடுத்த பகுதியிலும் தரப்படுகின்றன.
ஆறாம் வகுப்புத் தமிழ்

**வினாத்தாள் திட்ட வரைவு**

| கற்பித்தல் நோக்கம் | (10) அறிதல் | | | (10) புரிதல் | | | (15) பயன்படுத்துதல் | | | (15) திறன் | | | (50) மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாட அலகு | பு | கு | க | பு | கு | க | பு | கு | க | பு | கு | க | பு | கு | க |
| | 1 | 2 | 5 | 1 | 2 | 5 | 1 | 2 | 5 | 1 | 2 | 5 | 1 | 2 | 5 |
| செய்யுள்(15) | 2 | .. | .. | 1 | .. | .. | 3 | 1 | .. | .. | 1 | 1 | 5 | 2 | 1 |
| உரைநடை (15) | 2 | .. | .. | 1 | .. | .. | 3 | 1 | .. | .. | 1 | 1 | 5 | 2 | 1 |
| துணைப்பாடம் ∴ கட்டுரை ∴ கடித« (10) | .. | 2 | .. | .. | 2 | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 5 | .. |
| இலக்கணம் (10) | .. | 1 | .. | 4 | .. | .. | 3 | .. | .. | 1 | .. | .. | 8 | 1 | .. |
| மொத்தம் (50) | 4 | 3 | .. | 8 | 2 | .. | 9 | 2 | .. | 1 | 2 | 2 | 20 | 10 | 2 |

மொத்த மதிப்பெண்கள் 50, நேரம் 1 மணி


Downloaded From www.nagaicollege.com

குறிப்பு – ‘‘உள்நிலைத் தெரிவு கொண்ட வினாக்கள் மதிப்பெண் ஒதுக்கீடு ஜ ஸ சதுர அடைப்பிற்குள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவிற்குரிய மதிப்பெண் ∴ மதிப்பெண்கள் ‘()’ – பிறை அடைப்பிற்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

**தமிழ் - முதல்தாள்**

| வினாவகை | மதிப்பெண் | |
|---|---|---|
| | செய்யுள் | உரைநடை |
| புறவயவினா | 10 | 10 |
| குறுவினா | 10 | 10 |
| சிறுவினா | 17 | 17 |
| நெடுவினா | 8 | 8 |
| மனப்பாடப் பகுதி | 10 | - |
| மொத்தம் | 55 | 45 |

**தமிழ் - இரண்டாம்தாள்**

| பாடப்பகுதி | மதிப்பெண் |
|---|---|
| இலக்கணம | 30 |
| துணைப்பாடம் | 10 |
| கட்டுரை | 10 |
| கடிதம் | 10 |
| மொழிப்பயிற்சி | 20 |
| பா நயம் | 5 |
| படிவம் | 5 |
| படைப்பாற்றல் | 5 |
| வாழ்வியல் திறன் | 5 |
| மொத்தம் | 100 |

பிற எண்கள் வினா எண்ணிக்கையினைக் குறிக்கும்.

1. மதிப்பெண் கொண்டன புறவய வினாக்கள் (பு)
2. மதிப்பெண் கொண்டன குறுவிடை வினாக்கள் (கு)
3. மதிப்பெண் கொண்டன கட்டுரை வினாக்கள் (க)

## மதிப்பெண் வழங்கும் முறையும் மதிப்பிடுதலுக்கான விடைக்குறிப்புகளும்

தேர்வு எழுதுவோர் விடையளிக்கும் அடிப்படையில் வினாக்கள், தேர்ந்தெடுப்பு வகை என்றும் அளிப்பு வகை என்றும் வகைப்படுத்தப்பட்டன. விடைகளை அளவிடும் அடிப்படையில் புறவயம். அகவயம் என வினாக்கள் வகைப்படுவதையும் அறிவீர்கள். விடைகளைத் திருத்தும் நெறிமுறைகள் இந்த அடிப்படையில் பின்வரும் பகுதிகளில் விளக்கப்படுகிறது.

**புறவய வினாக்கள்**

பலவற்றுள் தெரிவு, சரியா, தவறா பொருத்துதல், கோடிட்ட இடம் நிரப்பல் ஒரு சொல்∴தொடர்விடை ஆகியன புறவய வினாக்கள். இவற்றுள் பலவுள் தெரிவு சரியா, தவறா,



Downloaded From www.nagaicollege.com

பொருத்துதல் ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்வு எழுதுவோரே கொடுக்கப்பட்ட தெரிவுகள் அல்லது நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். எனவே, இவற்றிற்குரிய விடை துல்லியத்தை உறுதிப்படுத்துவதில், அளவீட்டாளர்களுக்குச் சிக்கல் நேராது. பலவற்றுள் தெரிவு. பொருத்துதல் ஆகிய வினாக்களின் விடைகள் (அ), (ஆ) …….. என்க குறியீடுகளாகவே அமையும். ‘சரியா, தவறா’ அமைப்பிலுள்ள வினாக்களுக்கு விடைகள் சரி, தவறு, ஆம், இல்லை போன்று ஒரு சொல்லால் அமையும். இங்கும் விடைத் துல்லியத்தினை உறுதிப்படுத்துவதில் சிக்கல் ஏற்படாது. எனினும் இவ்வினாக்களில் தேர்வு எழுதுவோர் ஊகித்து விடை தரும் வாய்ப்பு உள்ளது. ஒரு சொல்∴தொடர் விடை வினாக்களின் விடைகளில் சொல், பிழை ஆகியனவற்றைக் கருதி அவற்றை அளவிட நெறிமுறைகள் தேவை.

**ஊகம் தவிர் திருத்தம்.**

பலவற்றுள் தெரிவு வினாக்களில் மூன்று, நான்கு அல்லது ஐந்து தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். தேர்வு எழுதுவோர் விடைகளை ஊகித்து எழுதும் வாய்ப்புண்டு.

1. ஐந்து தெரிவுகளாயின் ஊகிக்கும் வாய்ப்பு 1∴5 – 20மூ
2. நான்கு தெரிவுகளாயின் ஊகிக்கும் வாய்ப்பு 1∴4 – 25மூ
3. மூன்று தெரிவுகளாயின் ஊகிக்கும் வாய்ப்பு 1∴3 – 33 1∴3மூ
4. சரியா-தவறா அமைப்பில் ஊகிக்கும் வாய்ப்பு 1∴2 –50மூ

மேற்காட்டிய கணிப்பிலிருந்து, தெரிவுகளின் எண்ணிக்கை குறையக் குறைய ஊகித்து எழுதும் வாய்ப்பு மிகுதியாகிறது. ஊகிக்கும் வாய்ப்புகளுக்கு ஏற்பத் தேர்வர்கள் பெறும் மதிப்பெண்களின் நம்பகத் தன்மை குறைகிறது. எனவே, தேர்வர்கள் ஊகித்து விடை தருவதைத் தடுக்க ‘ஊகம் தவிர் திருத்தம்’ எனும் முறையைக் கல்வியாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

**எடுத்துக்காட்டு**

ஒவ்வொன்றிலும் நான்கு தெரிவுகள் கொண்ட 40 வினாக்களுக்குத் தேர்வு விடை தரும்போது 31 வினாக்களுக்கும் சரியாக விடையளித்து. 9 வினாக்களுக்குத் தவறாக விடையளித்திருப்பின்

உண்மை மதிப்பெண் - சரியான விடைகளின் எண்ணிக்கை -3
தவறான விடைகளின் எண்ணிக்கை – 9

தெரிவுகளின் எண்ணிக்கை – 1

மேற்காட்டிய எடுத்துக்காட்டில்

உண்மை மதிப்பெண் ஸ்ரீ 31 – 9∴4-1
ஸ்ரீ 31 – 9∴3
ஸ்ரீ 31 – 3 ஸ்ரீ 28

இம்முறை ஊகித்து எழுதுவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படுகிறது.

**சொல் ∴ தொடர் விடைகளில் பிழைகள்**

ஒரு சொல் அல்லது தொடர் விடை கொண்ட வினாக்களுக்குத் தேர்வர்கள் விடையளிக்கும்போது விடைகளில் எழுத்து,சொல், தொடர் பிழைகள் இருப்பின் அவற்றை எவ்வாறு அளவிடுவது? மதிப்பெண் வழங்குவதா வேண்டாமா?

இத்தகைய பிழை ஏற்பட்ட விடைகளை அளவிடும் போது வினாவின் நோக்கத்தைக் கருதுதல் வேண்டும்.



Downloaded From www.nagaicollege.com

எடுத்துக்காட்டாக, சிலப்பதிகாரத்தை எழுதிய புலவர் யார்? என்ற வினாவிற்கு இளங்கோவடிகள் என்பது விடை, இப்பெயரினைத் தேர்வு எழுதுவோர் இளங்கோ என்றோ, இளகோ என எழுத்துப் பிழையுடனோ தந்திருப்பினும் முழு மதிப்பெண் வழங்க வேண்டும். இந்த வினாவின் நோக்கம் பெயரைத் தேர்வர் வெளிப்படுத்துவதை அறிவதாகும்.

எனவே தகவலறி வினாக்களின் விடைகளில் எழுத்து, சொல், தொடர் பிழைகளைக் கொண்டு மதிப்பெண்களைக் குறைக்கக் கூடாது. மொழித் திறன் அளக்கும் வினாக்களில் எழுத்து, சொல் தொடர் பிழைகள் அளவீட்டில் கருதத் தக்கனவாகும். 'வா' எனும் வினையின் பெயரெச்ச வடிவம் யாது? எனும் வினாவிற்கு 'வந்த' என்பதுதான் விடை. வாந்த, வத்த, வந்தா என வடிவில் இருப்பினும் அது தவறே. மதிப்பெண் வழங்கக் கூடாது.

### புறவய வினாவிற்கான மதிப்பெண்

புறவய வினாக்களுக்கு மதிப்பெண், 'உண்டு - இல்லை' எனும் இரு நிலைப்பாற்பட்டெ அமைய வேண்டும். இவ்வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 1 மதிப்பெண்ணே ஒதுக்கப்படும். எனவே விடை சரியாக இருப்பின் மதிப்பெண் 1, தவறாயின் 0. 0க்கும் 1க்கும் இடையே ½இ ¼ போன்ற மதிப்பெண்கள் வழங்கக் கூடாது. ஊகம் தவிர் திருத்தத்தால் மதிப்பெண்கள் பின்ன எண்களாக இருப்பின் முழு எண்களை உரிய மதிப்பெண்களாகக் கொள்க.

½இ ஐயும் மேலுள்ள பின்னத்தையும் 1 எனக் கருதவும்.

### கட்டுரை அகவய வினாக்கள்

கட்டுரை வினாக்கள அகவயமை கொண்டிருப்பினும், மொழிப் பாடத்தில் அவற்றைத் தவிர்க்க இயலாது. சில நெறிமுறைகளைப் பின்பற்றி அகவயமை அளவினைக் குறைக்கலாம். அம்முறை அடுத்து வரும் பகுதிகளில் வளர்க்கப் படுகின்றன.

### கற்றல் விளைவுகளுக்கு ஏற்ப மதிப்பெண்கள் வழங்கல்

உயர்நிலை ஆற்றல்களில் பெற்ற திறனை அளப்பதற்குக் கட்டுரை வினாக்கள் கேட்கப்படுகின்றன. ஆற்றல் தன்மையினை வெளிப்படுத்தும் அளவிற்கேற்ப மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும்.

ஒரு வினாவில் ஏதுக்களும் விளைவுகளும் கேட்கப்படின் ஏதுக்களின் எண்ணிக்கை, விளைவுகள் பற்றிய விளக்கம் ஆகியனவற்றைப் பொறுத்து மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும். இவ்வகையாக மதிப்பெண்கள் வழங்கப்படுதல். 'பகுப்பு அளவீடு' எனப்படும். மொழிப்பிழைகளையும், பகுப்பு அளவீட்டின் கூறாக கொள்ள வேண்டும்.

### திருத்தல் குறிப்பைப் பின்பற்றல்

கட்டுரை வினாக்களுக்குச் சரியான விடை வினாத் தயாரிப்பவராலோ பிறராலோ கொடுக்க இயலாது. திருத்தற் குறிப்பினையே வழங்க இயலும். திருத்தற் குறிப்புகளுக்கு ஏற்ப, முன் பகுதியில் கூறப்பட்டது போலப் பகுப்பு அளவீட்டைக் கட்டுரை வினாக்களுக்கு மேற்கொள்ள வேண்டும்.

திருத்தல் குறிப்பினை அடிப்படையாகக் கொள்ளாமல் முழு நோக்குப் பார்வையில் கட்டுரை வினாக்களின் விடைகளைத் திருத்தக் கூடாது.



Downloaded From www.nagaicollege.com

**கட்டுரை வினாக்களை முதலில் அளவிடுதல்**

ஒவ்வொரு தேர்வு எழுதுவோரின் விடைத்தாளையும் முழுமையாக அளவிட்ட பின்னரே அடுத்தவரின் விடைத்தாளை அளவிடும் போக்கு நடைமுறையில் உள்ளது. இப்போக்கு, கட்டுரை விடைகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமானதன்று. ஏனெனில் பிறவகை வினாக்களின் விடைகளால் தேர்வாளர் அகவயப்படும் வாய்ப்பு நேரிடும். தேர்வு எழுதுபவர் ஒருவர், புறவய வினாக்களில் குறைந்த மதிப்பெண் பெற்றிருப்பதாகக் கொள்வோம். அவற்றை அளவிட்ட தேர்வாளர், தேர்வு எழுதுவோரின் அகவய கட்டுரை வினாக்களுக்குக் குறைந்த மதிப்பெண்களே வழங்க முற்படுபவர். இக்குறைபாடு ஈர்ப்பு விளைவு எனப்படும். எனவே ஒரு தேர்வரின் கட்டுரை விடையை அளவிட்டபின் அடுத்த தேர்வரின் கட்டுரை விடையை அளவிட வேண்டும். இம்முறையில் எல்லாக் கட்டுரை விடைகளையும் அளவிடுவதால், அளவிடுவதில் புறவயமையினை ஏற்படுத்தலாம்.

**தேர்வு எழுதுவோரை அறியா நிலையில் அளவிடுதல்**

ஈர்ப்பு விளைவால் அளவீட்டில் குறைபாடு ஏற்படும். கட்டுரை விடைகளை அளவிடும்போது இக்குறையினைப் பிறிதொரு முறையாலும் போக்கலாம். தேர்வர் எழுதுபவர் பெயர், எண் ஆகியவற்றை மறைத்து விடைகளை அளவிடலாம்.

**ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வாளர்களால் அளவிடப்படல்**

கட்டுரை வினாக்கள் பெருமளவில் உயர்கல்வியில் இடம் பெறுகின்றன. முதுகலை வகுப்புகளில் தேர்வு எழுதுபவர் ஒருவரின் கட்டுரை வினாக்களின் விடைகள் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வாளர்களால் அளவிடப்பட்டு, அவர்கள் வழங்கிய மதிப்பெண்களின் சராசரி, தேர்வு எழுதியவருக்குரிய மதிப்பெண்களாகக் கொள்ளப்படுகின்றன. இம்முறையினை எல்லா வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தலாம்.

## வினாக்களைப் பகுப்பாய்வு செய்தல்

கற்றல் கற்பித்தல் நிலையை அளவிடுதல் போல மாணவர்கள் எழுதிய விடைகளின் அடிப்படையில் வினாக்களின் நிறைகுறைகளைப் பகுப்பாய்வு செய்து அடுத்த நிலைக்குத் தயாராக வேண்டும்.

**வினாப்பகுப்பாய்வு**

தேர்வு எழுதுவோர் தேர்வினை எதிர்கொண்டு அளித்த விடைகள் அடிப்படையில் வினாக்களைப் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். பின்னர் வினாக்கள் தயாரிக்கும்பொழுது அவ்வினாக்களைச் செம்மமைப்படுத்த இப்பகுப்பாய்வு உதவும். இப்பகுப்பாய்வையும் பிற தகவல்களையும் பதித்தது வைக்கும் ஆவணம் வினாக்கோப்பு ஆகும். வினாக்கோப்பின் தொகுதியே வினா வங்கியானும். ஒவ்வொரு வினாவுக்கும் கீழ் உள்ள படிவத்தின்படி தகவல்களை எழுதுக.

**வினாக் கோப்பு**

1. வினா எண்
2. வினா
3. பாடப்பகுதி (வினாவை இங்கு எழுதுக) செய்யுள் ∴ உடைநடை ∴ துணைப்பாடம் இலக்கணம் ∴ கடிதம ∴ கட்டுரை (ஏதேனும் ஒன்றாக அமையும்)
4. நோக்க அடிப்படை அல்லது அறிதல் ∴ புரிதல் ∴ அளக்கப் படும் திறன் ∴


Downloaded From www.nagaicollege.com

பயன்படுத்துதல் ∴ திறன் (ஏதேனும் ஒன்றாக அமையும்)

5. கால அளவு. . . . . . . . நிமிடம்
6. மதிப்பெண் . . . . . .
7. வினாவகை புறவயப்பட்டது? - ஒரு சொல் கோடிட்ட இடம் நிரப்பல் பொருத்துதல் சரியா, தவறா பலவற்றுள் தெரிவு அகவயப்பட்டதா, குறுவிடை கட்டுரை
8. கடினத் தன்மை எளிமை ∴ சராசா ∴ கடினம்

**எடுத்துக்காட்டு-1**

வினா எண் : 1 வினா
நளவெண்பாவைப் பாடிய ஆசிரியர் பெயர் என்ன?
பாடப்பகுதி : செய்யுள்
நோக்க அடிப்படை அல்லது
அளிக்கப்படும் ஆற்றல் : அறிதல்
கால அளவு : 1 நிமிடம்
மதிப்பெண் : 1
வினாவகை : புறவயப்பட்டது. ஒரு சொல் விடை
கடினத்தன்மை : எளிமை

**எடுத்துக்காட்டு-2**

வினா எண் : 8
வினா : ‘இனியவை கூறல்’ என்பது குறித்து வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
பாடப்பகுதி : செய்யுள்
நோக்க அடிப்படை அல்லது
அளிக்கப்படும் ஆற்றல் : திறன்
கால அளவு : 10 நிமிடம்
மதிப்பெண் : 5
வினாவகை : அகவயப்பட்டது ∴ கட்டுரை
கடினத்தன்மை : சராசரி

**வினாவங்கி**

இவ்வாறு ஒவ்வொரு பாடத்துக்கும் தயாரிக்கக்கூடிய புறவயப்பட்ட வினாக்கள், அகவயப்பட்ட வினாக்கள் (குறும் விடை- கட்டுரை) அனைத்தையும் தயாரிக்க வேண்டும். அவ்வினாக்களின் தொகுப்பே வினா வங்கியாகும். வினாவங்கியிலிருந்து தேவைப்படும் வினாக்களைத் தேர்ந்தெடுத்து வினாத்தாள் தயாரிக்கலாம்.

**முடிவுரை:**

இவ்வியலில் சோதித்தலின் முக்கியத்துவம் மொழியறிவுச் சோதனையின் வகைகள் உள்ளார்வஆற்றல சோதனைதறனறிச் சோதனை, குறையறிதல் சோதனை மொழியறிவுச் சோதனையின் வகைகள் ஆசிரியர் தயாரிக்கும் கற்றலடைவுச் சோதனை தயாரித்தலிலுள்ளபடிகள்,வினாத்தாள்திட்டவரைவுஅட்டவணை,வினாக்களைப்பகுப்பாய்வு



Downloaded From www.nagaicollege.com

செய்யும்முறை ஆகியவற்றைபயிற்சி ஆசிரியர்கள் தெளிவாக கற்கும்பொழுது வருங்காலத்தில் மாணவர்களின் திறனைசோதிப்பதற்கு உதவியாக இருக்கும்.

**பயிற்சிவினாக்கள்:**
**குறிப்புவகை:**

1. (அ) திறனறிச் சோதனை

   (ஆ) குறையறிச் சோதனை
   (இ) மொழியறிவுச் சோதனை

2. ஆசிரியர் தயாரிக்கும் கற்றலடைவுச் சோதனைபற்றிஓர் கட்டுரைவரைக

3. ஒன்பதாம் வகுப்பு தமிழ்பாடம் ஒன்றிற்கு வினாத்தாள் திட்டவரைவுஅட்டவனை ஒன்று தயாரித்து, விடைக்குறிப்புகளும் தருக

**குறிப்புரை**


- **முனைவர். குமரிச்செழியன்,** நல்லாசிரியர் **டாக்டர் இ.பா. வேணுகோபால்** (2016) தமிழ்மொழிக் கற்பித்தல், சாரதா பதிப்பகம், சென்னை -14.
- **வேணுகோபால் இ.பா.** (2014), *பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள்*, சென்னை: சாரதா பதிப்பகம்.
- **வா.செ.குழந்தைசாமி**, இது கல்வி யுகம், சென்னை: பாரதி பதிப்பகம்.


**&&&&&&**



Downloaded From www.nagaicollege.com